தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை

இரண்டாம் தொகுதி

பதிப்பாசிரியர்

த.கோ.பரமசிவம்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை

இரண்டாம் தொகுதி

(501 முதல் 1000 நூல்கள் வரை)

பதிப்பாசிரியர்

முனைவர் த. கோ. பரமசிவம்

தலைவர், ஓலைச்சுவடித்துறை

தொகுப்பாசிரியர்

முனைவர் வே. இரா. மாதவன்

புலவர் ப. வெ. நாகராசன்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு :
79-2 ISBN 81-7090-090-5
திருவள்ளுவர் ஆண்டு 2018-கார்த்திகைத் திங்கள்-
நவம்பர் 1987

பதிப்பாசிரியர் : முனைவர் த. கோ. பரமசிவம்
பதிப்பு : முதற்பதிப்பு
விலை : உ. ரூ. 85-00
அச்சு : ஜெமினி அச்சகம், மேலவீதி, தஞ்சாவூர்.

இந்நூல் மைய அரசின் தில்லி, தேசிய ஆவணக்காப்பகம் வழங்கிய நல்கையின் வழி வெளியிடப் பெறுகிறது.

Published with the financial assistance of National Archives. Govt. of India, NewDelhi.

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

முனைவர் ச. அகத்தியலிங்கம்
எ்ம். ஏ., பிஎச்.டி. (கேரளா)
பிஎச். டி. (இந்தியானா, அமெரிக்கா)
துணைவேந்தர்

அணிந்துரை

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு பணிகளில் பண்டைத் தமிழ்ச் சான்றுகளைப் போற்றிப் பாதுகாப்பதும் அவற்றை வெளி உலகுக்குத் தெரியப் படுத்துவதும் ஒன்றாகும். தமிழகம் பழங்கால ஓலைச்சுவடிகளுக்குப் பெயர் பெற்ற ஒரு இடம் ஆகும். ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகள் தமிழகத்திலே இருப்பது வேறு எந்த நாட்டிலும் காணமுடியாத சிறப்பாகும். எனவே இவ்வோலைச் சுவடிகளைப் பாதுகாத்து அழியாத செல்வங்களாக வைப்பதும் அவற்றை அச்சில் வெளிக் கொணர்வதும் இன்றியமையாத ஒரு நல்ல தமிழ்ப் பணியாகும். இத் தமிழ்ப்பணியைக் கருத்தில் கொண்டுதான் தமிழ்ப் பல்கலைக் கழகம் இதற்கெனத் தனி ஒரு துறையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த ஒரு சில ஆண்டுகளாகத் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித் துறையின் வாயிலாக 3,000க்கும் அதிகமான சுவடிகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை நல்ல மனம் கொண்ட அன்பர்கள் பலரால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டவை. இவை அனைத்திற்கும் வி ள க் க

அட்டவணை ஒன்று தயாரித்து வெளியிடும் திட்டத்திற்குத் தில்லி தேசிய ஆவணக் காப்பகம் ரூ. 1,25,000 அளித்து உதவியது.

இத் திட்டத்தின் வாயிலாக் உருவாகியுள்ள நூல்களே இப்போது வெளிவருபவை. இரண்டாயிரம் சுவடிகளைப் பற்றிய விவரங்களை இந்நான்கு தொகுதிகளும் கொண்டுள்ளன. இது நிச்சயமாகத் தமிழ் ஓலைச்சுவடி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் பயன்படுவதாகும்.

இத் திட்டத்திற்கு நல்கை வழங்கிய தில்லி தேசிய ஆவணக் காப்பகத்தார்க்கும் இத்திட்டத்தில் இயக்குநராகவும், பதிப்பாசிரியராகவும் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்களுக்கும் அதன்பின்னர் இத் திட்டத்தை நிறைவேற்றிய முனைவர் த. கோ. பரமசிவத்திற்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

தொகுப்புப்பணியில் ஈடுபட்ட முனைவர் வே. இரா. மாதவன், புலவர் ப. வெ. நாகராசன் மற்றும் இத் திட்டம் நிறைவேற ஒத்துழைப்பு நல்கிய அலுவலர் அனைவர்க்கும் என் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரியன.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
நவம்பர் 13, 1987.

ச. அகத்தியலிங்கம்

உள்ளுறை

1.	அணிந்துரை	
2.	பதிப்புரை	க — ஙசூ
3.	மாற்றுச்சுவடிகள் காணுமிடங்கள்	உ.ஙி — உ.ஙக
4.	தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை (501 முதல் 1000 நூல்கள் வரை)	1 — 627
5.	நூலாசிரியர் அகர வரிசை	629 — 632
6.	நூற்பெயர் அகர வரிசை	633 — 645
7.	பொருட்பகுப்பு வரிசை	646 — 648
8.	பிழை திருத்தம்	649 — 651

தில்லி, தேசிய ஆவணக் காப்பக நல்கைத் திட்டம் — 1986-87

இத்திட்டத்தில் பணியாற்றியோர்

1. **பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை,**
   முன்னாள் சுவடிப்புலத் தலைவர்
2. **முனைவர் த. கோ. பரமசிவம்,**
   தலைவர், ஓலைச்சுவடித்துறை
3. **முனைவர் வே. இரா. மாதவன்,**
   விரிவுரையாளர், ஓலைச்சுவடித்துறை
4. **புலவர் ப. வெ. நாகராசன்,**
   தொழில்நுட்ப உதவியாளர், ஓலைச்சுவடித்துறை
6. **திரு. சி. இலட்சுமணன்,**
   தொழில்நுட்ப உதவியாளர், ஓலைச்சுவடித்துறை

பதிப்புரை

இந்நூல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓலைச்சுவடித் துறையிலுள்ள தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணையின் இரண்டாம் தொகுதியாகும். இதன்கண் 501 முதல் 1000 வரையுள்ள நூல்களின் விரிவான விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணையின் முதல் தொகுதியில் 1 முதல் 500 வரையிலான நூல்களின் விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. அத் தொகுதியின் முகவுரையில் பேரா. மு. சண்முகம்பிள்ளையவர்கள் (முன்னாள் சுவடிப்புலத் தலைவர்) சுவடிகளின் வரலாறு, அவற்றின் தன்மை, சுவடி நிலையங்கள், பதிப்பாசிரியர் முதலியோர் பயன்படுத்திய சுவடிகள், சுவடிகளின் இன்றைய நிலை, சுவடி நிலையங்கள் முதலியன குறித்து விரிவான செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார்கள். அஃது ஓர் அரிய ஆய்வு முகவுரையாகும்.

இவ்விரண்டாம் தொகுதியில் சுவடி விளக்க முறை முதலியன எல்லாம் முதல் தொகுதியிற் போலவே அமைக்கப் பெற்றுள்ளன. இத் தொகுதியின் தொகுப்புப் பணியினை முனைவர் வே. இரா. மாதவன் அவர்களும், புலவர் ப. வெ. நாகராசன் அவர்களும் மேற்கொண்டிருந்தனர். இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள சுவடிகளுள் பெரும்பாலன அன்பர்களின் அன்பளிப்பாகப் பெறப்பட்டனவேயாம். சுவடிகளை வழங்கிய அப்பெரியோர்களின் பெயர் முதலியன இப் பதிப்புரையின் இணைப்பில் காணலாகும்.

சுவடி விளக்கமும் சுவடிப்பதிப்பும், ஆய்வும் அறிவும் பெருகப் பெருக, கூர்ந்து காணக்காண மாற்றங்கள் தருதல் இயல்பேயாகும். காலவரையறைக்குள் வெளிப்படுத்தவேண்டும் என்ற சீரிய கட்டுப்பாட்டின் காரணமாக முதற்கட்ட ஆய்வாக இவ் விளக்க அட்டவணை வெளியிடப்படுகிறது. நூல்களை நுணுகி ஆராயும் போது, பதிப்புக்குத் தலியே எடுத்துக் கூர்ந்துகாணும்போது இங்குக் குறிக்கப் பெற்ற பொருள்கள் மாறலாம்; வகை மாறலாம்; ஏன் ஆசிரியர் பெயர்கள் கூட அகச்சான்றுகளால் மாற்றங் காணலாகும். அவற்றை அறிஞர் உலகு எடுத்துக்காட்டிச் செம்மை செய்வதாக.

இரண்டாம் தொகுதியின் சுவடிகள்

இத்தொகுதியில் பல்வேறு பொருள்களைப் பற்றிய சுவடிகள்-முழுமையான நிலையிலும் குறை நிலையிலும்-அச்சான நூல்களும், அச்சாகாத நூல்களும் எனப் பல வகையில் இடம் பெற்றுள்ளன. திருவாசகம்-595, சூடாமணி நிகண்டு-602, 603, 604, உரிச்சொல் நிகண்டு-605, நைடதம்-649, திருக்குறள்-768, சௌந்தரிய லகரி-664, சித்தாந்த சிகாமணி-501, அரிச்சந்திர புராணம்-517, காசி காண்டம்-522, திருவிரட்டை மணிமாலை-618, அற்புதத் திருவந்தாதி-617, பொன்வண்ணத் தந்தாதி-619, திருவாரூர் மும்மணிக்கோவை-620 போன்ற அச்சான நூல்கள் நல்ல நிலையிலும் முழுமையாகவும் காணப்படுகின்றன.

இத் தொகுதியில் உள்ள சுவடிகள் பல அளவுகளில் காணப் படுகின்றன. ஞானப்பிராது-506 என்னும் நூல் 2 ஏடுகளைக் கொண்டது. கெவுளி தும்மலுக்குச் சரம் பார்க்கிறது-819 என்னும் நூல் ஓர் ஏடு இரண்டு பக்கங்களைக் கொண்டது. அகத்தியர் ஞானம்-575, நஞ்சு முறிவு நூல்-942 என்பன ஒரு பக்கத்தை மட்டுமே கொண்ட மிகச் சிறிய நூல்களாம். இப்படி ஒரு பக்கமே கொண்ட நூல்கள் முதலாக 384 ஏடுகளைக் கொண்ட வில்லிபாரதம்-624, 387 ஏடுகளைக் கொண்ட சாந்தாதி அசுவ மகம்-914 போன்ற பெரிய அளவிலான நூல்கள் வரை இத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்கள், திருக்குறள், கம்பராமாயணம் போன்ற இலக்கிய நூல்கள், அகத்தியர் ரணவாகடம், கொங்கணர் கடைக்காண்டம் போன்ற மருத்துவ நூல்கள், வருட பலன், இராமர் சக்கரம், வால்மீகர் நாடி சூத்திரம் போன்ற சோதிட நூல்கள், ரிபு கீதை, சிவகீதை போன்ற தத்துவ நூல்கள், பெரியதிருமொழி, தேவாரம், திருவாசகம் முதலிய சமய நூல்கள் எனப் பல பொருள்களையும் தழுவிய சுவடிகள் இத்தொகுதியை அணி செய்தல் காணலாம்.

தொல்காப்பியம் மரபியல் உரை-796, புறநானூறு-792 ஆகிய பழைய நூல்களின் சுவடிகள் இத் தொகுதியில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

வெளிநாட்டில் காணப்படும் சுவடிகள்

இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள சுவடிகள்-நூல்கள் சிலவற்றுக்கு மாற்றுச் சுவடிகள் காணும் இடங்களும் சுட்டப்

பெற்றுள்ளன. குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் இத் தொகுதியை முடிக்க வேண்டிய கடப்பாடு கருதிப் பல சுவடிகளுக்கு இவ் விவரத்தை இணைக்க முடியவில்லை என்பதை இங்கு வருத்தத்துடன் குறிப்பிடுகிறேன். பாட்லியன் லைப்ரரி என்னும் நூலகம் ஆக்ஸ்போர்டு-இங்கிலாந்தில் உள்ளது. இங்கு உபதேச காண்டம்-523, திருவிளையாடற் புராணம்-626, கூர்மபுராணம்-629 ஆகிய நூல்களின் சுவடிகள் உள்ளன. பிப்பிளியோதிக் நேஷனல், பாரிஸ் - பிரான்ஸ் என்னும் நூலகத்தில் உபதேச காண்டம்-523, அகத்தியர் குழம்பு-566, சிதம்பரபுராணம்-616, திருவிளையாடற்புராணம்-626, கூர்மபுராணம்-629, வில்லிபாரதம்-635, நாநா சீவ வாதக் கட்டளை-668, பிரபுலிங்க லீலை-856, திருவருட்பயன்-883 ஆகிய நூல்கள் காணப்படுகின்றன.

தொகுப்புப் பணியைச் சிறப்பாக மேற்கொண்டு ஆய்வு செய்யும்போது இவ்வகை விவரம் மேலும் பலவாகக் கிடைக்கும் என்று தோன்றுகிறது.

அச்சு விவரம்

இத் தொகுதியில் அச்சான சுவடிகளின் விவரமும் அச்சாகாத சுவடிகளின் விவரமும் தரப்பட்டுள்ளன. ஆயின் அனைத்துச் சுவடிகளுக்கும் அச்சான விவரம் தரக்கூடவில்லை. அச்சுநூல் விவர அட்டவணை ஒருசேரக் கிடைக்காமையும், காலக் கட்டுப்பாடும் அதற்குக் காரணங்களாம். எனினும் இயன்ற அளவில் அச்சு விவரம் தரப்பட்டுள்ளது. பலரும் அறிந்த பல பதிப்புகள் கண்ட திருக்குறள், தேவாரம் போன்ற நூல்களுக்கு அச்சுவிவரம் தேவையற்றது. ஆயின் பலரும் அறியாத-ஒரு பதிப்பு மட்டுமே கண்டு அருகிவிட்ட நூல்கள் சிலவற்றுக்கு அச்சு விவரம் தரப்பட்டுள்ளது. சித்தாந்த சிகாமணி-501, காசி காண்டம்-522, உபதேச காண்டம்-523, அகத்தியர் குழம்பு-566, மாவிந்தம்-621, சானந்த கணேசர் புராணம்-648, நாநா சீவவாதக் கட்டளை-668, கூர்மபுராணம்-629, அந்தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி-822, ரிபுகீதை-842, பிரமகீதை-889, மகாராசா துறவு-873, சீவன் முக்திப் பிரகரணம்-843, இலட்சணாவிருத்தி-890, சூத சங்கிதை-900 போன்ற நூல்களுக்கு அச்சு விவரம் தரப்பட்டுள்ளது.

அச்சாகாத நூல்களாகச் சில சுவடிகள் இத் தொகுதியில் இடம் பெற்றிருப்பதும் சுட்டத்தக்க சிறப்பினதாம். இசுலாமியப்

புலவர் மதுரகவி செய்யிதுமுகமது அண்ணாவியார் பாடிய சாந்தாதி அசுவமகம்-914 என்னும் பெரியநூல் (4104 பாடல்), திருமணபவனி-916, நாவான் சாத்திரம்-918, மனையலங்கார சாத்திரம்-919, தருமர் அசுவமேதயாகம் உரைநடை-835, முத்தையநாயகர் பிள்ளைத்தமிழ்-961, பாரதக் குறவஞ்சி-581, மார்க்கண்ட நாடகம்-586 போன்ற நூல்கள் அச்சாகாத நூல்களாகக் குறிக்கத்தக்கன. மருத்துவச் சுவடிகளில் பலவும் அச்சாகாத நூல்களாகக் குறிக்கத் தக்கனவேயாம்.

பிறமொழிச் சுவடிகள்

பிறமொழியில் அமைந்த நூல்களைத் தமிழ் மொழியில் பெயர்த்து எழுதிய சுவடிகள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. இத்தொகுதியிலும் இரண்டு சுவடிகள் அவ்வாறு பெயர்த்தெழுதப் பட்ட சுவடிகளாகக் காட்சியளிக்கின்றன.

பாகவத புராண வசனம்-516 என்னும் நூல் தெலுங்கிலிருந்து தமிழ் மொழியில் பெயர்த்து எழுதப் பெற்றதாம்.

'இந்தப் பாகவதபுராணம் 12 ஸ்கந்தமும் கவி திம்மப்பன் தெலுங்கிலே யிருந்ததை எம்மார் வாத்தியார் சின்னையன் தமிழினாலே உண்டாக்கினான்' என்ற பிற்குறிப்பால் அச்சுவடி இச்செய்தியைத் தெளிவுபடுத்துகிறது.

வர்மநூல் -636 என்னும் சுவடி நரம்புகளைத் தாக்கி எதிரியை வீழ்த்தும் முறையைக் கூறுவதாகும். இது இன்றும் மலையாளப் பகுதிகளில் பயிற்சியில் உள்ள முறை. இச்சுவடியின் வாசகங்கள், இது மலையாள மொழியிலிருந்து எழுதப்பட்டது என்பதை நிறுவுவதாகக் காணப்படுகின்றன. 'ஈ லட்சணம் கண்டில் நேரே மறுவசம் தட்டியில் ஆளு இளகிப் போகும். ஈ வர்மத்தினும் இருவிரல் ..... மேல் அதிகாந்த வர்மம் உண்டறிக. ஈ வர்மத்தினு கொள்ளும் .. அடிச்சவன்றே அடித்தடுத்து இடது கால் கொத்தி வலது கை குரல் பெருக்கிக் கொள்ளுக-ஆள் விழும்' எனத் தொடர்கின்ற அந்நூலின் மொழி நடையே இதற்குச் சான்றாக அமைதல் காணத்தகும்.

காப்பிய நூல்கள்

இத் தொகுதியில் கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகியவற்றின் பகுதிகள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கம்பராமாயணம் பாலகாண்டம் - 800, அயோத்தியர் காண்டம்-801, ஆரணிய காண்டம் - 802, கிட்கிந்தாகாண்டம்-803, சுந்தர காண்டம் - 804, யுத்த காண்டம்-805, பால காண்டம்-806, அயோத்தியா காண்டம்-807, ஆரணியகாண்டம் 808, கிட்கிந்தா காண்டம்-809, சுந்தர காண்டம்-810 என்பன கம்பராமாயணப் பகுதிகளாம். இவ்வாறே வில்லிபாரதத்திலும் ஆதிபருவம் - 831, சபாபருவம்-832, ஆரணிய பருவம் - 833, 834, 624 போன்ற பகுதிகள் உள்ளன. இவை உரையுடன் காணப்படுவது சுட்டத்தக்கதாம்.

சோதிட நூல்கள்

இவ்விரண்டாம் தொகுதியில் சோதிட நூல்கள் கணிசமான அளவில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பெரும்பாலன அச்சாகாத நூல்களாகத் தோன்றுகின்றன. பெயர் ராசி பார்த்தல், சாதகப் பொருத்தம் காண்டல், கோள் நிலையறிதல், கனாப்பயன் காண்டல், தொடுகுறி சாத்திரம், இரேகை சாத்திரம் எனப் பல பொருள்களில் இச்சோதிட நூல்கள் காணப்படுகின்றன. சுரசாத்திரம் - 642, சங்கராச்சாரியார் நூல் - 643, சோதிட நூல் - 645, 647, நவக்கிரக சிந்தாமணி -748 போன்றன உரைநடை நூல்களாகக் காணப்படுகின்றன. சோதிட சிகாமணி - 640, கும்பமுனி சோதிடம் - 639, ஆரூட நூல் - 674, ருது சாத்திரம் - 686, இரேகை சாத்திரம் - 767, கனவின் நூல் - 780, வால்மீகர் சாத்திரம் - 818, தொடுகுறி சாத்திரம் - 646, 650, மணிக்கயிறு சூத்திரம் - 995, வால்மீகர் தீப சூத்திரம் - 996, வால்மீகர் நாடி சூத்திரம் - 997, இராமர் சக்கரம் - 1000 போன்றன செய்யுள் நடையில் அமைந்த நூல்களாம்.

இவற்றுள் வால்மீகர் தீபசூத்திரம் என்னும் நூல் ஒரு விளக்கை ஏற்றி வைத்துவிட்டு அதன் சுடர் ஒளியமைப்பைக் கொண்டு பலன் கூறும் சிறப்பை எடுத்துக் காட்டுவதாம். வால்மீகர் நாடி சூத்திரம் என்னும் நூல் நாடியைப் பார்த்து ஒருவரின் மரணநேரத்தைக் கணக்கிடும் விந்தையைக் காட்டுவதாகக் காணப்படுகிறது.

வருட பலன்களைக் கூறும் சோதிட நூல்கள் இரண்டு முழுமையானதாகக் காணப்படுகின்றன. ஒன்று பா வடிவில் அமைந்தது. வருடாதி நூல்-644 எனப்படும் அந்நூல்,

'ஆதிப் பிலவத்தில் அம்புவியில் மானிடர்க்குச்
சோதனையாய்ச் சாவுதுன்பம் தோணுமே-நீதி
தருபசுக்கள் மேயத் தலைமழை யுண்டாம்
பருத்திஉப்பு ஆமணக்கு பாழ்'

என்ற நிலையில் சுருக்கமாக 60 வருடங்களின் பலன்களையும் ஒவ்வொரு பாட்டால் கூறுவதாக உள்ளது. மற்றொன்று உரை நடையில் 60 வருடங்களின் பலன்களையும் தொகுத்துச் சொல்வதாகக் காணப்படுகிறது. வருட பலன்-955 ல்,

'பிரபவ வருடத்துப் பலன் : பங்குனி அமாவாசை கழித்து மறுநாள் யுகாதி என்று பேர்பெற்று அதுமுதலாக 12 மாதத் திற்கும் பலன் இல்லை என்று சொல்வான். எப்படி என்றால் அற்பமழை பெய்யும், விளைவு அற்பமாக விளையும், ராஜா வியாதியாகி மரணமாவான். தேசத்துக்கும் வியாதி உண்டு. விலை அதிகரிக்கும். ஐப்பசி கார்த்திகையில் மழை இல்லாததால் கொட்டை பருத்தி, உப்பு இம்மூன்றும் அற்பம். பிசானம் குறையும். மற்ற பயிர் எல்லாம் நன்றாய் விளையும்' என்று உரைநடையில் பலன் காணப்படுகிறது.

இவ்வாறு எளியோர்க்கும் புரியத்தக்க வகையில் அமைந்த நூல்களும் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இத்தகு சோதிட நூல்களை ஆய்ந்து வெளியிடுவதும் பெரும்பயன் விளைப்பதாம்.

மருத்துவ நூல்கள்

இவ்விரண்டாம் தொகுதியில் கணிசமான அளவுக்கு மருத்துவ நூல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பெரும் பாலன செய்யுள் வடிவில் அமைந்த முறையான நூல்களாம். உரைநடையில் அமைந்த - அனுபவக் குறிப்புகளை எழுதி வைத்த சுவடிகளாகத் தோன்றுவன சிலவேயாம். பெரும் பாலன அச்சுருக்காணாதனவாகத் தோன்றுகின்றன. உரை நடையில் அமைந்த நூல்கள் நோய்க்கு மருந்து, மருத்துவச் செய்திகள், மருத்துவக் குறிப்புகள், மருந்துசெய்முறைகள் என்ற பெயரில் அமைந்துள்ளன. இவ்வகைப் பெயர்கள் ஏட்டில் காணப் பெறாதன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல்களில் சட்டைமுனி கற்பம்-670, அகத்தியர் பூரணம்-671, அகத்தியர் கருக்கிடை நிகண்டு-672, சட்டை முனி சூத்திரம்-675, பிரமமுனி-100, கொங்கணர் சரக்கு வைப்பு-678, சட்டைமுனி பிற்காண்டம்-687, அகத்தியர் வாத சுருக்கம்-690, அகத்தியர் செந்தூரம்-691, அகத்தியர் பஞ்சகாவிய நிகண்டு-692, தட்சிணாமூர்த்தி காவிய நிகண்டு-694, தன்வந்திரி வைத்திய சிந்தாமணி-749, அகத்தியர் குணவாகடம்-816, அகத்தியர் வைத்திய காவியம் 1500-940, மகாசந்தனாதித் தைலம்-568, மச்சமுனிநிகண்டு-579, மச்சமுனி சூத்திரம் முப்பூ-684, புலிப்பாணி வைத்தியமுறை-529 புலிப்பாணி பலதிரட்டு-524 போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

உரைநடையில் அமைந்த மருத்துவ நூல்களில் எளிய நடையிலான வைத்திய முறைகள் சொல்லப்பட்டுள்ளன. அவை பல நூல்களிலிருந்து திரட்டப் பெற்றதாக இருக்கலாம். அல்லது அனுபவக் குறிப்புகளாகவும் இருக்கலாம். எவ்வகையா னாலும் அவை பயனுள்ள குறிப்புகளாகத் திகழ்தல் நோக்குதற் குரியதாம்.

சரீரம் எரிவுக்கான மருந்தொன்றை, மருந்து செய்முறை-536 என்னும் சுவடி பின்வருமாறு தெரிவிக்கிறது. 'வல்லாரை கொண்டுவந்து ஒரு சட்டியில் போட்டு இரண்டுபடி தண்ணீர் வார்த்து இதில் கொத்து மல்லிகை சுக்கு ஒரு சீலையில் போட்டு அண்டங்கட்டி கூடப் போட்டு வேகவைத்து வெந்தபின்பு இறுத்துக் குடிக்கவும். இதுக்குச் சரீரம் எரிவு நிற்கும். கருப்புப் புளி விடவும்' என்று விவரமாகக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே அரையாப்பு என்னும் கொடிய நோய்க்கும் எளிய லேகியம் ஒன்றை, நோய்க்கு மருந்து-606 என்னும் சுவடி குறிப்பிடுகிறது.

'கொடிவேலி, சீரகம், களிப்பாக்கு வகைக்கு ஒரு பலம் வீதம் தண்ணீர் வார்த்து அரைத்து, மாகாணி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் ஒரு பலம் வெல்லம் போட்டு முள்ளிக்காய் அளவு உண்டை பண்ணிக்கொண்டு சாப்பிடவும்' என்பதே அச்சுவடி குறிப்பிடும் மருந்தாகும். இவ்வாறே எளிய பாமர மக்களும் புரிந்து தயாரிக்க முடிந்த மருத்துவக் குறிப்பு களை-மருந்து செய்முறைகளை விளக்குவனவாக அவை விளங்கு கின்றன. அவற்றையெல்லாம் ஆய்வு செய்து வெளிப்படுத்துதல் அறிஞர் தம் கடமையாகும்.

சித்த மருத்துவ முறைகள் எளிமையானதாகத் தோன்றினாலும், பலரும் அறிந்து பயன்படுத்த முடியாதபடி மறை பொருளாகவே இருந்து அழிந்து வருவதற்கு நூலாசிரியர்களும் காரணமாக இருந்தனர் என்று நினைக்குமாறு சில குறிப்புகள் காணப்படுகின்றன. இராமதேவர் சூத்திரம்-611 என்னும் நூலில் அமைந்த இறுதிப்பாட்டு இவ்வாறு காணப்படுகிறது.

'வணக்கமுள்ள இந்நூலை வெளிவி டாதே
வஞ்சருடன் பேசாதே வாயா டாதே
இணக்கமில்லா மாந்தருடன் கூட வேண்டாம்
இனமுள்ள வைத்தியநூல் ஈய வேண்டாம்
மணக்கமலா மதிதனிலே மனத்தை வைத்து
வயித்தியநூல் எண்பதுவும் வகையாய்ப் பார்த்துத்
தனக்கும்இது பொருள்எனவே வணங்கிப் போற்றி
சதாகாலம் குருபதத்தில் சார்வாய் முற்றே'.

இப் பாடலில் 'இந்நூலை வெளிவிடாதே' 'வைத்தியநூல் ஈய வேண்டாம்' என்று வருகின்ற தொடர்கள் சிந்தித்தற்குரியன.

நாட்டுப்பாடல்கள்-கதைகள்

நாட்டுப்புற இலக்கியங்களாக அமைந்த நூல்கள் சில இத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. விக்கிரமாதித்தன் கதை-820, மகாபாரதப் போர் அம்மானை - 821, இராமர் காதை - 637, துரௌபதை அம்மானை - 766, தேசிங்குராஜன் கதை - 572, பாரதக் குறவஞ்சி - 581, மார்க்கண்ட நாடகம்-586 ஆகியன அவற்றுள் குறிக்கத்தக்கன.

இவற்றுள் பாரதக் குறவஞ்சி என்னும் நூல் நூற்பொருள் அமைப்பை ஒட்டிப் பெயர் சூட்டப் பெற்றதாகும். திரௌபதி குறத்தியாக வந்து துரியோதனன் மனைவிக்குக் குறி சொல்கிறாள். பாரதப்போர் மூண்டு கவுரவர் மடிவர் என்கிறாள். வீமன் குறச்சிங்கன் வேடத்தில் குறத்தியைத் தேடிக்கொண்டு வருவதாக அமைந்தது.

'கொஞ்சியிருந்து நடைநடந்து குழந்தை முகத்தில் வெயிலுறைக்க
வச்ச காலடி நோகாமல் மயில்அன்னம் போலே நடந்தாள்

பச்சை மா முகில் மேனியனைச் செறுபாலகனைக்
கையிலேந்திக்கொண்டு
அஸ்தினா புரத்து அதிசயம் பார்க்கவே அதிசெயக்குறத்தியும்
வாராளே'

எனத் தொடர்கின்ற இவ்விலக்கியநூல் உரைநடையும் இடையிடையே கலந்துவரும் இனிய அமைப்பைக் கொண்டது. இச்சுவடி குறைச்சுவடியாக இருப்பது வருத்தந்தரும் செய்தியே; நிறைச்சுவடியாக இல்லாதது நம் தவக்குறையே.

கதைப்பாடல்களாக அமைந்த இலக்கியவடிவங்களைத் தத்துவ விளக்கத்திற்கும் பயன்படுத்திய நிலையைச் சில நாட்டுப்பாடல்கள் சுட்டுகின்றன. 148 கண்ணிகளால் அமைந்த அருளானந்த கும்மி - 786, 169 கண்ணிகளால் அமைந்த வாலைக்கும்மி - 993 ஆகியன இவ்வகையைச் சார்ந்தனவாகக் கருதலாம்.

இவ்வாறு அமைந்த சுவடிகளில் இலக்கணம் 11, உரை நடை 6, காப்பியம் 33, சிற்றிலக்கியம் 22, சைவத்திருமுறை 12, சோதிடம் 27, தத்துவம் 94, தலபுராணம் 12, திவ்வியபிரபந்தம் 2, நாட்டுப்பாடல் 4, நீதிநூல் 4, பதினெண்கீழ்க்கணக்கு 7, பல்வகை 28, மருத்துவம் 132, மாந்திரீகம் 19, மெய்கண்ட சாத்திரம் 5 என்ற அளவில் இத்தொகுதியில் சுவடிகள் இடம் பெற்றுள்ளன.

பிற்குறிப்புகள் தரும் சிறப்புச் செய்திகள்

சுவடி நூல்களில் நூல் முடிந்த இறுதி ஏட்டில் பிற்குறிப்புகள் காணப்படும். சில சுவடிகளில் நூல் தொடங்கு முன்பும் சில குறிப்புகள் இடம் பெற்றிருக்கும். இக்குறிப்புகளில் பெரும்பாலும் அச் சுவடி எழுதப்பெற்ற காலம், எழுதியவர் பெயர், சுவடி உரிமையாளர் பெயர் போன்ற விவரங்கள் இடம் பெற்றிருக்கும்.

'ஏவிளம்பி வருடம் புரட்டாசி மாதம் 6 ஆம் தேதி புதன் கிழமை பகல் மூணு மணிக்கு ரோகணி நட்சத்திரத்தில் இராமதேவர் அருளிச் செய்த சூத்திரம் எழுதி நிறைந்தது. முற்றும்' - 888.

'சுப்பராய முதலியார் படிக்கின்ற தொட்டியம் - 679, 'வைத்திய ஏகாம்பர முதலி வைப்புச் சுவடி' - 678, 'கந்தசாமியின் சிஷ்யன் ராமசாமிக்கு அளித்துவிட்ட புத்தகம் - 719'.

'சாலிவாகன சகாப்தம் 1761க்குக் கலியுக சகாப்தம் 4941க்குப் பிரபவாதிசகாப்தம் 33க்கு மேல் செல்லாநின்ற சனவரி மாதம் மார்கழி 6ஆம் தேதி புலிமேடு மணியம் தாண்டவ கவுண்டர் குமாரன் ஆண்டி கவுண்டர் வில்லிபுத்தூராழ்வார் பாடல் பாரதம் உரையுடன் எழுதத் தொடங்கினது'-834 என முற்குறிப்புடன் தொடங்கும் சுவடி ஒன்று,

'சார்வரி வருஷம் பங்குனி மாதம் 10ஆ'ந் தேதி ஆதிவார நாள் திதி சதுர்த்தசி, பூரட்டாதி நட்சத்திரம், இந்த சுப தினத்தில் புலிமேடுமணியம் தாண்டவக் கவுண்டர் குமாரன் ஆண்டிக் கவுண்டர் வில்லிபுத்தூராழ்வார் பாடல் பாரதம் உரையுடன் முதல்நாள் முதல் பதினாலாம் நாள் யுத்தம் வரைக்கும் மேற்படி ஆண்டி கவுண்டர் கையெழுத்துப்பட எழுதி நிறைந்தது முற்றும்' என்ற பிற்குறிப்புடன் முடிகிறது.

ஆங்கில ஆண்டு

சுவடிகளின் ஆண்டுக்கணக்குப் பெரும்பாலும் சகவருடம், கொல்லம் ஆண்டு ஆகியனவாகவே காணப்படும். சில சுவடிகளில் கலியுக ஆண்டும் குறிக்கப்பெறும். பெரும் பாலானவற்றில் இவை குறிக்கப் பெறாமலேயே தமிழ் ஆண்டு, நாள், திதி, நட்சத்திரம், யோகம் போன்ற பஞ்சாங்கமே குறிக்கப் பெற்றிருக்கும். ஆங்கிலேயர் வருகைக்குப்பின்பும் இவ்வழக்கமே பின்பற்றப்பெற்றது. ஆயின் சில ஏடுகளில் ஆங்கில ஆண்டும் தெளிவாகக் குறிக்கப் பெற்றமை புலப்படுகிறது.

அகத்தியர் ரணவாகடம்-758 என்னும் சுவடியில் ஆங்கில ஆண்டு, மாதம், நாள் குறிக்கப் பெறுதல் காணலாம். '1889ஆம் வருடம் அக்டோபர் மாதம் 26ந் தேதிக்குச் சரியான தமிழ் சாலிவாகன சகாப்தம் வருஷம் 812 நிகழும் விக்குரோதி வருஷம் ஐப்பசி மாதம் 12ஆம் தேதி ஆதிவாரம், திரிதிகை அனுஷ நட்சத்திரம் திரிலோச்சன கௌரிவிரதம் பகல் 2 மணிக்கு பெங்களூர் சிவிலின் மில்டோரிடேசன் பிளாக்கிப்பள்ளி சாத்தினி சவுக் ரோட்டில் அபினி கஞ்சா குத்தகை வியாபாரம் செய்யும்

திருச்சிராப்பள்ளி தி. ஷ. பெருமாள் நாயக்கரவர்களுக்கு சேஷூர் தருமலிங்க உபாத்தியாயர் எழுதிய ரணவாகடம் 100 எழுதி முடிந்தது'.

அச்சு நூல்களுக்குப் பின்பும் சுவடிகள்

அச்சுநூல்கள் தோன்றிய பின்னும் ஓலையில் எழுதுவதும், நூல்களை ஓலைச் சுவடியில் எழுதிப்படிப்பதும், காப்பதுமாகிய வழக்கங்களும் காணப்படுகின்றன. இதனை இத்தொகுதியிலுள்ள சுவடிகள் சில நிறுவுகின்றன.

திருக்குறள் (அறத்துப் பால்) நூலும் உரையும் கொண்ட சுவடி ஒன்று (860) மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிட்டும் இரட்டை ஒற்றைக் கொம்புகளிடையே மாற்றம் காட்டியும், பகர வளைவு, பிறை வளைவு, உடுக்குறி, புள்ளடிக்குறி போன்ற குறியீடுகளைப் பயன்படுத்தியும் எழுதப் பெற்றுள்ளது. இது பெரும்பாலும் அச்சு நூலொன்றைப் பார்த்து எழுதியதாகத் தோன்றுகிறது. சில சுவடிகளில் அச்சுநூலைப் பார்த்து எழுதிய குறிப்பும் காணப் படுகிறது. 'இந்த ஏடு அச்சுப் புத்தகத்தைப் பார்த்து எழுதிய தாகும்' (அமிர்தவாசகம்-723) என்ற குறிப்பைக் கொடுத்துவிட்டு கீழ்க்காணும் விளம்பரத்தையும் சேர்த்து எழுதி இருக்கின்றனர்.

'விளம்பரம். இந்த சாத்திரம் செலவான பிறகும் இந்நூலாசிரியர் உத்தரவின்றி யாராவது அச்சிட்டாலும் அப்படி அச்சிட்டதை விலைவைத்து விற்பனை செய்தாலும் அவர்கள் மேற்சொல்லிய ஆசிரியர் முதலியவர்கள் சாபத்திற்குள்ளா காமற் போகார்களென்று உறுதியாய்க் கூறலாகின்றது. இப்படிக்கு ஸ்ரீரங்கம் வீரராகவ கிருஷ்ணதாசன். இந்த புத்தகம் பெருமாள் பேட்டை கோவிந்தராஜ நாயகரால் அச்சடுக்கி பிரசுரஞ் செய்ய லாயிற்று'. இச்சுவடி தரும் இவ்விளக்கம் அச்சுநூல்கள் தோன்றிய பிற்பாடும் ஓலையில் எழுதிப் படிக்கும் பழக்கத்தைத் தமிழர் கொண்டிருந்தனர் என்பதைத் தெளிவாக்குகின்றது. வீரமா முனிவரின் சதுரகராதி முதலியனவும் இவ்வாறே எழுதிக் கற்கப் பெற்றன என்பதற்குச் சுவடிகள் சான்றாக உள்ளன.

படிஎடுத்தலும் பிழை திருத்தலும்

ஓலைச்சுவடிகள் பெரும்பாலும் 300, 400 ஆண்டுக்காலமே வாழும் தகுதி படைத்தன. சுவடிகளின் ஆயுட்காலம் முடியுந்

தறுவாயில் அவற்றைப் புதிய சுவடிகளில் படிஎடுத்து எழுதிக் காப்பாற்றும் வழக்கம் உலகெங்கும் காணப்பட்ட முறையாம். காலங்காலமாகப் படி எடுத்துப் படி எடுத்துக் காப்பாற்றிய காரணத்தால்தான் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் போன்ற 2000 ஆண்டுகளுக்கு முந்திய நூல்களையும் நாம் பெறமுடிந்தது. படிஎடுத்த விவரத்தைக் குறிப்பதும் பிற்குறிப்பில் அடங்குவதாகும். இத்தொகுதியில் உள்ள சில சுவடிகளில் படி எடுத்தெழுதிய வழக்கை நாம் தெளிவாகக் காணமுடிகிறது.

'பழைய புஸ்தகத்திலிருந்து எடுத்து எழுதினது'-மருந்து செய்முறை-558.

இவ்வாறெல்லாம் படி எடுத்தும், புதிதாக எழுதியும் நிறைவேறிய சுவடிகளில் பிழையிருப்பதைக் களைந்து நூல்களைச் செம்மை செய்து காப்பாற்ற விழைந்த செய்தியைப் பல சுவடிகளில் நாம் காணலாம்.

'இந்த மதியுள்ளான் கதையை எழுதினவர் பெருங்களத்தூர் ராமாரெட்டி. எடுத்துப் படித்தவர் தப்பிதமிருந்தால் அருளவும்'-745.

'திரௌபதை அம்மானை. இதை ஆருவொருவர் எடுத்துப் படித்த பேரும் இந்தச் சுவடியிலே பிழைகள் இருந்த விடத்திலே திருத்தவும்'-766.

'இவர்கள் கைப்பட எழுதியபடியால் இந்தப் புஸ்தகத்தில் என்ன தப்பு, பிழை இருந்த போதிலும் பெரியோர்கள் அங்கீகரிக்க வேண்டியது'-835.

'இந்தப் புராணத்திலே எழுத்துப் பிழைகள் இருந்த போதைக்கும் பெரியோர்களாகியவர்கள் கொண்டு பொறுத்து தீர்ப்பாடு பண்ணிக் கொள்ள வேண்டியது. -863.

இவ்வகைக் குறிப்புகள் சுவடி நூற் செம்மையில் தமிழர் கொண்டிருந்த வேட்கையைப் பறைசாற்றுவன எனலாம்.

அம்மை அந்தாதி

காரைக்கால் அம்மையார் இயற்றிய அற்புதத் திருவந்தாதிக்கு 'அம்மை அந்தாதி' என மாற்றுப் பெயர் ஒன்று

இருப்பதை ஒரு சுவடியின் குறிப்பு சுட்டுதல் நோக்கத்தகுவதாம்.

'உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரையினால் காரைக்கால் பேய்ச்சொல் - பரவுவார்
ஆராத அன்பினோடு அண்ணச்சென்று ஏத்துவார்
பேராத காதல் பிறந்து
திருச்சிற்றம்பல'ம் அம்மை அந்தாதி முற்றும்' - 617

இக்குறிப்பில் 'அம்மை அந்தாதி முற்றும்' என்னும் தொடர் மேற் சுட்டிய செய்தியை உறுதி செய்தல் காணலாம்.

நூற்பயனும் தண்டனையும்

இவ்வகைப் பிற்குறிப்புகளில் நூலைப்படிப்பதால் வரும் பயனும், அந்நூலைத் திருப்பிக் கொடுக்காததால் நேரும் பழி பாவத்தையும் கூட நாம் காண முடிகிறது.

'இந்த அருணாசல புராணம் ஆதி அந்தமாய்ப் படித்த பேரும் கேட்ட பேரும், எழுதின பேரும், எழுதி வைத்த பேரும், மைக்கடலாகிய சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகம் முழுவதும் ஒரு குடைக் கீழே அரசாட்சியாகி ஆண்டு, சந்தான பாக்கியமுங் கனியும்படி வாழ்ந்திருந்து பின்பு திக்காகிய ரட்சகர்த்தனாகிய அருணாசல ஈஸ்வரருட அன்பினாலே சிவபதவி பெறுவார்க ளென்றவாறு'-883. இக்குறிப்பு நூற்பயனைத் தெளிவாகச் சுட்டுதல் காணத்தகுவதாம்.

தாமே எழுதியும் பிறரைக் கொண்டுஎழுதுவித்தும் போற்றிப் பாதுகாத்து வருகின்ற சுவடிகளைப் பலர் இரவல் பெற்றுச் சென்று படித்தும் எழுதியும் வருதல் இயல்பு. பெற்றுச் சென்றவர் மறதியாகவோ வேண்டுமென்றோ சுவடிக்காரரிடம் திருப்பக் கொடாதிருப்பதும் உண்டு. கிட்டத்தட்ட சுவடித்திருட்டு போன்றது இது. இதைத் தடுக்கச் சுவடிகளின் பிற்குறிப்புகளில் சில எச்சரிக்கை மொழிகளை எழுதி வைப்பதுண்டு.

'சுப்பராய முதலியார் படிக்கின்ற தொட்டியர். எடுத்தவன் படித்துக் கொடுக்கவும்'-679

'வைத்திய ஏகாம்பர முதலி வைப்புச் சுவடி. எடுத்தவர்கள் படித்துக் கொடுத்துவிடவும்' - 678

'இந்தச் சுவடி படித்தபேரும் சுவடிக்காரன் கையிலே ஒப்புவிக்கவும். கொடுக்காமல் போனால் கர்ப்பத்திலே இருக்கிற சிசுவைக் கொன்ற தோஷத்திலே போவானென்றவாறு' - 766

'இந்தப் புஸ்தகத்தை எடுத்தவர்கள் படித்து சுவடிக்காரர் வசத்தில் சேர்க்கவும். சேராமல் அபகரிக்க நினைத்தால் துரியோதனனாதியர்கள் பெற்ற பலன் பெறுவார்கள் என்றவாறு' - 831.

'இந்தப் பாரதக் கதையை எடுத்துப் படித்தவர்கள் சுவடிக் காரர் வசத்தில் ஒப்புவிக்கவும். ஒப்புவிக்காமல் அபகரித்தால் காசியிலே கோவத்தி பண்ண தோஷத்திலே போவார்கள். இது அறிந்து உடமைக்காரன் வசத்திலே சேர்க்க வேண்டியது' -834.

'இதையாராகிலும் பார்த்து எடுத்தவர்கள் சுவாமி முகத்தைப் பார்த்துக் கொடுத்து விடவும்'-187

என வருகின்ற குறிப்புகளைக் காணும் போது தமிழ் மக்களின் நூலுடைமைப் பற்றும், சுவடிக் காதலும் எத்துணை சிறந்ததாக இருந்தன என்பது தெரியவரும். வாங்கிய நூல்களைத் திரும்பக் கொடுக்காத நண்பர்கள் எக்காலத்தும் இருப்பர் போலும்.

பெயர் தெரியா நூல்களும் பிழைதிருத்தமும்

இத்தொகுதியில் நூற்பெயர் தெரியாத நூல்களும் ஆசிரியர் பெயர் தெரியாத நூல்களும் கணிசமான அளவில் இடம் பெற்றுள்ளன. அவற்றை இனங்காட்ட வேண்டி அந்நூற்பொதி செய்திகளை - பொருள்களை உட்கொண்ட தலைப்புகளைத் தொகுப்பாசிரியர் வழங்கியுள்ளனர். மருத்துவச் செய்திகள், மருத்துவக் குறிப்புகள், நோயும் மருந்தும், சோதிட நூல், சோதிடக் குறிப்புகள் எனப் பொதுப்பட அத்தலைப்புகள் இலங்குவதைக் காணலாம். ஆசிரியர் பெயர் தெரியாத நூல்களுக்கு ஆசிரியர் பெயர் குறிப்பிடப் பெறவில்லை.

எவ்வளவு நுட்பமாக ஆழ்ந்து கவனித்து வந்த போதும் அச்சுப் பிழைகள் ஏற்பட்டிருப்பது தவிர்க்க இயலாததாகி விட்டது. அப்பிழைகளைச் சுட்டிக் காட்டத் தவறினால் நூற் பாடங்களிலும், எண் குழப்பங்களிலும் ஆய்வாளர் சிக்கித் தவிப்பர். எனவே அவற்றை முறையாக எடுத்துக் காட்ட வேண்டுவதைப்

பெருங் கடமையாகக் கருதி இத்தொகுதியின் இறுதியில் பிழை திருத்தப்பட்டியல் ஒன்றும் இணைக்கப் பெற்றது. ஆய்வாளர் இதனைப் பயன்படுத்தி நூலைச் செப்பமாக்கிக் கொள்ள அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றியுரை

ஓலைச்சுவடித்துறையின் நூலக வளர்ச்சிக்கும் சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகளுக்கும் மூலகாரணமாக விளங்குவது தமிழன்பர்களின் நல்லெண்ணமே ஆகும். இத்துறைக்கு அவர்கள் தமிழ்ச் சுவடிகளை அன்பளிப்பாக-நன்கொடையாக வழங்கா திருப்பின் சுவடி நூலகம் ஏது? சுவடி அட்டவணைதான் ஏது? எனவே அவர்களுக்கு முதற்கண் நன்றி செலுத்துவதே சிறப்பாகக் குறிக்கத்தக்கதாம்.

தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித் துறைக்குத் தமிழ்ச் சுவடிகளை அன்பளிப்பாக வழங்கியவர் பலராவர். திருக் கோயில்கள், திருமடங்கள் போன்ற சமய நிறுவனங்கள் முதலாகத் தனிப்பட்ட புலவர் குடும்பத்தினர் வரை இக் கொடையில் இடம் பெற்றுள்ளனர். ஓலைச்சுவடிகளுக்காகத் தனிப்பட்ட ஒரு துறையை உருவாக்கிச் சிறப்பித்திருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பால் அவர்கள் நம்பிக்கை கொண்டு தங்களிடமிருந்த சுவடிகளின் பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியவற்றுடன் அவை வெளிவரவேண்டுமே என்ற அக்கறையில் அவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். அவர்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் வண்ணம் இத்துறை அவர்களிடமிருந்து பெற்ற தமிழ்ச் சுவடிகளை அறிவியல் முறைப்படி தூய்மை செய்து, பூச்சி நீக்கம் செய்து, காப்பு எண்ணெய் பூசிப் பாதுகாப்பதுடன், இன்று அவற்றின் விளக்க அட்டவணையையும் வெளியிட்டு மகிழ்கின்றது. பின்வரும் அன்பர்கள் இத்தொகுதியிலுள்ள சுவடிகளை அன்பளிப்பாக வழங்கியவர்களாவர். அவர்கள் அனைவருக்கும் ஓலைச்சுவடித் துறை நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதோடு அவர்கள் பெயரை இங்குச் சுட்டுவதில் பெருமையும் பூரிப்பும் கொள்கிறது.

சுவடி நன்கொடையாளர் பட்டியல்

(எண்கள் : சுவடிகளின் தொடர் எண்களைக் குறிக்கின்றன)

அடிகளாசிரியர், திரு., சித்தநாதர் ஆதீனம், குகையூர், தெ. ஆ. மாவட்டம். 635

அய்யாசாமிக் கவுண்டர், ஒடுக்கத்தூர், வ. ஆ. மாவட்டம். 752
அரங்கநாதன், எஸ். புலிமேடு, வேலூர், வ. ஆ. மாவட்டம்.
644-649
அரிகிருட்டினன், ஈசன்தங்கு, நாகர்கோவில். 465, 475, 476, 485, 486, 735-737
அருணாசலம், எம். ஏ., எல். ஐ. சி காலனி, தஞ்சாவூர்.
460-463
அறுபத்துமூவர் திருமடம், திருவையாறு, தஞ்சை மாவட்டம்.
495-497
இராசாராமன், நா., தாண்டவன்குளம், சீர்காழிவட்டம். 450-454
இராமச்சந்திரன், பி., பேராசிரியர். இந்துக் கல்லூரி, நாகர்கோவில்
466, 467
இராமராசன், எஸ். கே., வேலூர், சேலம் மாவட்டம். 583-585, 770-777
இராமானுஜ அய்யங்கார், ஆர்., இராமநாதபுரம், முசவைமாவட்டம்.
586-629
இராமையா, சங்கரன் கோவில், நெல்லை மாவட்டம். 636
இராஜன் பாபு, ஆர். எஸ்., வடக்குச் சித்திரைவீதி, ஸ்ரீரங்கர்.
362-426
இளவரசு, பேராசிரியர், மாநிலக்கல்லூரி, சென்னை. 642, 643
ஈசான ஞான தேசிகர் திருமடம், திருவண்ணாமலை. 651-713
கணபதி, கே. எஸ்., திருநெல்வேலி. 767-769
கணேச பிள்ளை, பூதப்பாண்டி, நாகர்கோவில். 468-474
கணேசன், சு., கணக்கன்பட்டி, பழநி வட்டம். 740-750
கந்தசாமி, து., சின்னசேலம். 477-484
கந்தசாமி, பெ., கடலூர், திருச்சி மாவட்டம், 754-758
கவுதமன், டி., சின்னம்ம சமுத்திரம், சேலம் மாவட்டம். 487-491
கனகசபைப் பிள்ளை, நெய்தவாசல், மயிலாடுதுறை வட்டம்.
493 - 494
குமாரசாமி அய்யர். வீ., மயிலம், தெ. ஆ. மாவட்டம் 765, 766
கோவிந்தராசன், எம்., வலங்கைமான், தஞ்சை மாவட்டம்,
639-641
கோவிந்தராஜன், வி. ஆர்., கரந்தை, தஞ்சாவூர். 427-430
கோவிந்தராஜுலு, ஆர்., மானோஜியப்பா வீதி, தஞ்சாவூர்.
360, 361, 438 - 443
சிவப்பிரகாசம் பிள்ளை, ஆச்சாள்புரம், சீர்காழி வட்டம் 492
சிவபெருமான், அ., சித்தநாதர் ஆதீனம், குகையூர், தெ. ஆ. மாவட்டம். 350 - 353 637, 638.
செல்லம், சி., தென்னை வளர்ச்சிக் கழகம், திருவையாறு. 634

சையது முகம்மது அண்ணாவியார், கே. எஸ்., அதிராம்பட்டினம். 714 - 719, 751

சோணாசலம், திரிபுரசுந்தரிநகர், தஞ்சாவூர். 484 - 487

துரைப்பாண்டியன், தஞ்சாவூர் 354-358

நடராசன், பெ., நத்தமாங்குடி, திருச்சி மாவட்டம். 347-349

நந்தகுமார், ஜி. ஜி., அண்ணாசாலை, சென்னை. 498-582

நந்தனம் கணேசன், அய்யனாபுரம், தஞ்சை மாவட்டம். 464

பால சுந்தரம், இரா., பேராசிரியர், நேரு நினைவுக் கல்லூரி, திருச்சி. 630-633

பானுமதி, ஆர்., பெரியபுத்தூர், அன்னூர், கோவை மாவட்டம். 727-732,

முத்தையன், இரா., அண்டூர், தரங்கம்பாடி வட்டம். 650

முத்தையாபிள்ளை, கே., திருக்கருகாவூர், சீர்காழி வட்டம். 455-459

வளர்தமிழ்ப்புலத்தினர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 759 - 764

வீராசாமிப்பிள்ளை, கே., கீழவயலூர். 720-726

வேங்கடராமையா, கே. எம்., திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம். 359, 733, 734, 738, 753

ஸ்ரீகாசி மடம், திருப்பனந்தாள். 431 - 433, 444 - 449, 739.

தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணையின் தொகுப்புப் பணி மற்றும் பொருளடக்க அமைப்பினைத் துறையினருடன் விவாதித்து இந்த வகையில் உருவாக்க, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் பெரிதும் துணைநின்றார்கள். அடிப்படை நிலைகளை அமைத்துத் தந்ததோடு அவ்வப்போது ஊக்கிவந்த அப் பெருந்தகையார்க்கு ஓலைச்சுவடித் துறையின் நன்றி என்றும் உரியதாகும்.

தாம் பொறுப்பேற்றுக்கொண்ட நாள் முதலாக இத்திட்டத்தின் வளர்ச்சி சிறப்பாக அமைய வேண்டி, அவ்வப்போது ஊக்கியும் ஆணை வழங்கியும், பாராட்டியும் துணைநின்றவர் மாண்புறுறை துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் ஆவார்கள். தம் பல்வேறு பொறுப்புகளுக்கிடையே இத் தொகுதிகளை உற்று நோக்கி ஆழகிய அணிந்துரை ஒன்றையும் வழங்கி இருக்கிறார்கள். அவர்களின் அயராத அன்புக்கும் ஆக்கத்திற்கும் இத்துறை பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையதாகும்.

தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகளின் வெளியீட்டுப்பணி, தில்லி தேசிய ஆவணக்காப்பக நல்கைத்

திட்டமாக நடைபெற்றுவருகிறது இத்திட்டத்திற்காக ஆவணக் காப்பகம் ரூ. 1, 25, 000/- நல்கை வழங்கி ஊக்குவித்தது எஞ்சிய செலவைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டது. நல்கை வழங்கிச் சிறப்பித்த தில்லி தேசிய ஆவணக்காப்பக இயக்குநர் அவர்களுக்கு ஓலைச்சுவடித்துறை நன்றி பாராட்டும் கடமையுடையதாம்.

நல்கை பெறுவதற்காகத் திட்டவரைவினை முறைப்படி அமைக்க ஆணை வழங்கியும், உடனிருந்து ஊக்கியும், திருத்தியும், தொகுப்புப் பணியினைத் திறம்படக் கண்காணித்தும் வந்தவர் முன்னாள் சுவடிப்புலத் தலைவர் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையவர்கள் ஆவார். அவர்தம் சுவடிக்காதலும் பயிற்சியுமே இத்தொகுதிகளுக்கு மூலமாக அமைந்தன. தம் பொறுப்பில் இருந்த காலம்வரை, ஏன் அதற்குப் பின்பும் இத்தொகுதி வெளி வருவதில் ஆக்கமும் ஊக்கமும் அளித்து அச்சுப் பணியை உற்று நோக்கி உயர்த்தியவர் அவரே என்றால் அது மிகையாகாது. அவர்தம் இனிய வழிகாட்டலுக்கு என் நன்றியும் வணக்கமும் என்றும் உரியன.

முன்பே குறித்தவண்ணம், இத்தொகுதியின் தொகுப்புப் பணியை மேற்கொண்டும் இடையிடையே என்னுடன் அச்சுப் படிவங்களைத் திருத்தி உதவியும் சிறக்கப் பணி புரிந்தவர்கள் இத்துறையின் விரிவுரையாளர் முனைவர் வே. இரா. மாதவனும், தொழில்நுட்பஉதவியாளர் புலவர் ப. வெ. நாகராசனும் ஆவர். அவர்தம் தொடர்ந்த உழைப்பு என்றும் பாராட்டும் சிறப்புடையதாம். குறிப்பாக முனைவர் வே. இரா. மாதவன் அவர்கள் தாம் நியமனம் பெற்று இத்துறையில் சேர்ந்த நாள் முதலாக இப்பணியில் கண்ணுங்கருத்துமாக உழைத்தமை பெரிதும் பாராட்டற்குரியதாம். இவர் தொகுப்புப் பணியில் ஈடுபட்டதுடன் அட்டவணைகள் இணைப்புள் ஆகியவற்றை உருவாக்கியும் திருத்தியும் பெரிதும் உதவினார்.

இவ்விரண்டாம் தொகுதியின் அச்சுப்பணியினை அச்சகத்திற்கு நேரில் சென்று கவனித்துவரும் பொறுப்பை இத்துறையின் தொழில்நுட்ப உதவியாளர் திரு. சி. இலட்சுமணன் கவனித்து வந்தார். இம்மூவரின் அயராத உழைப்பிற்கும் ஊக்கத்திற்கும் நான் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இத் தொகுதியை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்தவர்கள் தஞ்சாவூர் மேலவீதியிலுள்ள ஜெமினி அச்சுக் கூடத்தார் ஆவர். அச்சகத்தாரின் ஒத்துழைப்புக்கு என் நன்றியும் பாராட்டும் உரியன.

இந்தத் தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை தொடரும் பணியாகும். இத்துடன் மூன்றாம் தொகுதியும் நான்காம் தொகுதியும் வெளிவந்திருக்கின்றன. இத்தொகுதிகள் தமிழாய்வாளர்க்கும், மொழிநூல் வரலாறு முதலியவற்றை ஆராய்வோருக்கும், குறிப்பாகச் சுவடி ஆய்வோருக்கும் பெரிதும் பயன்படவிருக்கின்றன. இத் தொகுதியின்கண் காணப்பெறும் பிழைகளை - மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை அறிஞர் உலகு சுட்டிக் காட்டுமேல் அவர்களுக்குப் பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன் ஆவேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
நவம்பர் 13, 1987,

த. கோ. பரமசிவம்

மாற்றுச் சுவடிகள் காணுமிடங்கள்

1. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
2. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.
3. மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.
4. திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி
5. பிற பல்கலைக் கழகங்கள்
6. ,, ,,
7. ,, ,,
8. தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை
9. பிற கல்லூரிகள்
10. ,, ,,
11. ,, ,,
12. கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.
13. பிற கல்வி நிலையங்கள்
14. ,, ,,
15. ,, ,,
16. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.
17. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
18. கீழ்த்திசைச் சுவடி நூலகம், காரியவட்டம், திருவனந்தபுரம்.
19. இந்திய தேசிய நூலகம், கல்கத்தா.
20. பிற அரசு நிறுவனங்கள்
21. ,, ,,
22. ,, ,,
23. ,, ,,
24. ,, ,,
25. டாக்டர் உ வே சாமிநாதையர் நூலகம், திருவான்மியூர், சென்னை
26. தமிழ்ச் சங்கம், மதுரை
27. மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
28. பிரஞ்சு இந்திய நிறுவனம், பாண்டிச்சேரி
29. பிற சுவடி நூலகங்கள்
30. ,, ,,
31. திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை
32. மௌன சுவாமிகள் திருமடம், சிதம்பரம்
33. சௌமார மடாலயம், திருவாமாத்தூர், விழுப்புரம்.
34. முதல் } பிற மடங்கள்
45. வரை }

46. இந்தியா ஆபீஸ் லைப்ரரி, லண்டன்.
47. வெல்கம் மெடிகல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், லண்டன்.
48. பிரிட்டிஷ் மியூசியம், லண்டன்.
49 தி லைப்ரரி ஆப் தி ராயல் ஏசியாடிக் சொசைட்டி, லண்டன்
50. தி லைப்ரரி ஆப் தி ஈடன்பர்க் யுனிவர்சிடி, லண்டன்.
51 நேஷனல் லைப்ரரி ஆப் ஸ்காட்லாண்ட், எடின்பரோ, ஸ்காட்லண்ட்.
52 தி ன்ஹடேரியன் லைப்ரரி ஆப் தி க்ளாஸ்கோ யூனிவர்சிடி, க்ளாஸ்கோ, ஸ்காட்லாண்ட்.
53. ஜான் ரைலாட்ஸ் லைப்ரரி, மான்செஸ்டர், இங்லான்ட்.
54 தி லைப்ரரி ஆப் தி கேம்பிரிட்ஜ் யூனிவர்சிடி, கேம்பிரிட்ஜ்.
55 பாட்லியன் லைப்ரரி, ஆக்ஸ்போர்டு.
56. தி லைப்ரரி ஆப் தி ஸ்கூல் ஆப் ஓரியண்டல் அண்டு ஆப்பிரிக்கன் ஸ்டடீஸ் ஆப் தி லண்டன் யூனிவர்சிடி, லண்டன்.
57. தி லைப்ரரி ஆப் தி ட்ரினிடி காலேஜ், பாப்ளின், அயர்லாண்ட்.
58. ஃபிரான்க் ஸ்டேட் ஆர்க்கிவ்ஸ், ஹாலே, ஈஸ்ட்ஜெர்மனி.
59. தி லைப்ரரிஸ் அட்டாபூபிங்கன் அண்டு மார்பர்க், பாரிஸ், வெஸ்ட் ஜெர்மனி.
60 பிப்பிளியோதிக் நேஷனல். பாரிஸ், பிரான்ஸ்
61. நேஷனல் மியூசியம், கோபன்ஹேகன், டென்மார்க்
62. தி ராயல் லைப்ரரி, கோபன்ஹேகன், டென்மார்க்.
63. பிப்பிளியோதிகா அபோஸ்லிகா வேடிகானா, வாடிகன் சிடி, ரோம்.
64. தி லைப்ரரி ஆப் தி ஜெர்மன் ஓரியண்டல் சொசைடி, ஹாலோ, ஈஸட்ஜெர்மினி.
65. லுதரன் மிஷன் சர்ச் மியூசியம் லிப்சிக், ஈஸ்ட்ஜெர்மனி.
66. ஸ்டேட் அண்டு யூனிவர்சிடி லைப்ரரி, ஹம்பர்க், வெஸ்ட் ஜெர்மனி.
67. அப்சாலா யூனிவர்சிடி லைப்ரரி, அப்சாலா, ஸ்வீடன்.
68. எதினோகிராபிகல் மியூசியம், ஸ்டாக்ஹோம், ஸ்வீடன்.
69. தி லெனின் ஸ்டேட் லைப்ரரி, மாஸ்கோ, யு. எஸ். எஸ். ஆர்.
70. தி லைப்ரரி ஆப் தி லெனின்கிராட் யூனிவர்சிடி. லெனின்கிராட்.
71. தி லைப்ரரி ஆப் தி ஓரியண்டல் இன்ஸ்டிட்யூட் ஆப் தி யு. எஸ்.எஸ். ஆர். அகாடமி ஆப் சைன்சஸ், லெனின் கிராட்.

குறிப்பு :

சுவடி விவர அட்டவணையில், ஒவ்வொரு நூலின் கீழேயுள்ள **6. மாற்றுச்சுவடிகள் காணுமிடம்** - என்னும் பகுதியில், முதலில் மேற் காணும் நூலக வரிசை எண்ணும், பின்னர் அந்நூலகத்தில் அதே பெயரில் காணப்பெறும் நூல்களுக்கான எண்களும் கொடுக்கப்பட்டுள்ளமை காண்க.

தமிழ்ச்சுவடி
விளக்க அட்டவணை

இரண்டாம் தொகுதி

தமிழ சுவடி விளக்க அட்டவணை

501. சித்தாந்த சிகாமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. தொடர் எண் : 847

ஆ. பொருட் பகுப்பு எண் : ட/65

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. நூலாசிரியர் : சிவப்பிரகாசர்-துறைமங்கலம்

ஆ. நூற்பெயர் : சித்தாந்த சிகாமணி

இ. பொருள் : தத்துவம்

ஈ. வடிவமும் அளவும் : செய்யுள் 880

3. தோற்றக் கூறுகள்

அ. ஏடுகளின் எண்ணிக்கை : 107 ஏடு ; 202 பக்கம்.

ஆ. ஏடுகளின் நீளம், அகலம் : நீளம் 36.5 செ மீ. ; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளதா : இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு எழுதப்பட்ட வரி : ஒரு பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. எழுத்து நிலை : தெளிவான கையெழுத்து.

ஊ. சுவடியின் நிலைமை : சில ஏடுகள் ஆங்காங்கு ஓரளவு சிதைவு. ஈற்றில் 10 ஏடுகள் மிகவும் பழுது. சுமாரான நிலை.

எ. முழுமையா அல்லது குறையா : முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. நூலின் தொடக்கம்

மனவ னத்தின் மதம்எனும் யானையைச்
சினவி நிற்கும் திகழ்இள வெண்மதி
புனைநு தற்கட் புராரி அளித்தருள்
நனைக வுட்கனி நாகுஇள வேழமே.

ஆ. நூலின் முடிவு

மாரி பெய்க மநுநெறி ஓங்குக
பாரில் ஒண்சிவ பத்தர்கள் மல்குக
சீ .... சிவன்புகழ் வெல்லுக
வீர சைவம் விளங்குக எங்குமே. (29)

ஆக மெங்கத் தல விருத்தம் 350. ஆக அங்கத்தலம், இலிங்கத்தலம் இரண்டு வகைத் தலங்களுக்குக் கூடின விருத்தம் 880. சித்தாந்த சிகாமணி முற்றும்.

5. பிற செய்திகள்

....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

....

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

குறிப்பு : தொடர் எண்: 348 முதல் வரும் நூல் வரிசை ஒவ்வொன்றிலும் உள்ள 7 பகுதிகளுக்கான உட்தலைப்புகள் விளக்கமாக கொடுக்கப்படவில்லை. மாதிரிப் படிவத்திற்குத் தொடர் எண் : 347 காண்க.

502. திருவாசகத் திரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 348
ஆ. ண/22

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மாணிக்கவாசகர்
ஆ. திருவாசகத் திரட்டு
இ. சைவத் திருமுறை
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 39 ஏடு ; 78 பக்கம்.
ஆ. நீளம் 21 செ.மீ ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுவடியின் ஈற்றில் வலப்புறம் சற்றே சிதைவு. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க

கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
... ...

ஆ. முடிவு
உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத்து அமர்ந்துஉறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுனே. (3
திருச்சிற்றம்பலம்

இ. முற்குறிப்பு
பிரமோதூத வருஷம் ஆவணி மாதம் 17 ஆம் தேதி உ. சண்முகம் செட்டி

பிற்குறிப்பு
பிரமோதூத வருஷம் ஆணி மாதம் 22 ஆம் தேதி உளுர்தூர்ட்டேட்டை சண்முகம் செட்டி.

503. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 349-1
ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. நமச்சிவாயர் — குரு
ஆ. தனிப்பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
FF. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தாதுவாய் மூன்றெழுத்தை இடத்தில் ஓது
சமரசமாய் அஞ்செழுத்தை வலத்தில் வைத்து ஓது
ஓதுவான் சுழி முனையில் எட்டும் சேர்த்து
ஓகோகோ ஓதிடவே தாயைப் போல
மாதுஅவள் ஆத் தாள்தான் கன்னி கன்னி
மயக்கறுத்து கறுப்பமுன்று அமுதம் ஈவாள்
கோதுபழு திஸ்லாத குறியை கானயாயி
குமரகுரு பரனையும் பெற்ற தேவி
காதில்உப தேசத்தைக் கருத்தால் சொல்வாள்
கருவுடைய அஞ்செழுத்தால் காட்டு வாளே.
(இப்பாடலின் யாப்பமைதி சரியாக விளங்க வில்லை)

ஆ. முடிவு

திரிபுர சுந்தரிநின் சீராரும் வேதப்
பரிபுரம் நின்றிலங்கும் பாதக் — கரிபுரக்கும்
இச்சகத்திற் பேர்அன்பு எனக்களித்துப் பேரின்பம்
நிச்சயமாய்த் தந்தருள்வாய் நீ. (10)

504. அடுக்குநிலைப் போதகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 349-2

ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. அடுக்குநிலைப் போதகம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 11

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 8 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 8 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சொல்லிறந்த இடம்எங்கே முப்பாழ் எங்கே
துவாரபா லகர்எங்கே முதல்பாழ் எங்கே
நல்லசங்க தந்திஎங்கே வைகுந்தம் எங்கே
நாரணனும் ஆலிலையில் துயின்றது எங்கே
அல்லல் செய்யும் நாம்பூதம் ஒடுக்கம் எங்கே
ஆறைந்து இதழிரண்டு முளைத்தது எங்கே
சொல்லவல்லார் உண்டானால் அவரை நாமும்
தொழுதுகூ வெனப்பணிந்து வணங்க லாமே. (1)

ஆ. முடிவு

அவ்வெழுத்து நின்ற இடம் தெளிந்து கண்டோர்
அறுஷ்டானம் பூசைமந் திரத்தை உன்னார்
உவ்வெழுத்து நின்ற இடம் தெளிந்து கண்டோர்
உடலுயிர் என்று எணிப்பிரித்து உரைக்க மாட்டார்
ஒவ்வெழுத்து நின்ற இடம் தெளிந்து கண்டோர்
ஒருவருடன் வாய்திறந்து பேச மாட்டார்
சிவ்வெழுத்து நின்ற இடம் தெளிந்து கண்டோர்
திருவாக்கால் சீயென்ற சொல்வா ராதே. (11)

திருச்சிற்றம்பலம்

505. மகா காரண பஞ்சாட்சரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 349-3
ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. மகா காரண பஞ்சாட்சரம்
இ. தத்துவம்
ஈ உரைநடை. அச்சில் ஏறத்தாழ 3 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8, 9, 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்தில்
வண்ணாக்கி வைத்த பழம்பொருள்ஒன்று உண்டுண்டு
அண்ணாக்கி னூடே யமர்ந்த வெளிகாட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே. (1)

ஆ. முடிவு

நாதஓசை அதிகமாய்க் கேட்கும் பிள்ளை ஒன்றும் தோன்றாது. தினம் இராத்திரி காலத்திலே யாரும் தூங்கும் காலத்திலே பார்க்க வேணும். எப்போதும் சிவமென்றிருக்க வேணும். அதிக நித்திரை ஆகாது. இது சிவயோகத்துக்குச் சரிப்படாது. இந்தபடி இருந்தால் சிவனுடைய யோகம் ஈது. திருச்சிற்றம்பலம்.

506. ஞானப்பிராது

1. நூலகக் குறிப்புகள்

அ. 349-4
ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ...
ஆ. ஞானப்பிராது
இ. தத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 2 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 8 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சகல உலகங்களுக்கும் நியாயாதிபதி என்ற பெருமையையுடையவராகிய தர்மதுரை அவர்கள் சமூகத்திற்குக் காயாபுரிக் கோட்டையைச் சேர்ந்த சேரமங்கலம் தாலுக்கா மண்டலமாகாணத்தைச் சேர்ந்த காறு ஊரிலே இருக்கும் பரநாதன் குமாரன் ஆத்துமநாதன் சாதியோ சுக்குலம் மதமோ சத்திமதம் ஒரே வயதுள்ளவனாகிய நான் எழுதிக் கொடுத்த பிராது வாக்கு மூலம் என்னவென்றால் ... ...

ஆ. முடிவு

எதிரிகளுடைய துர்நடத்தைகளையும் விசாரணை செய்து ஏக அகண்ட பரிபூரண நீதிகர்த்தராகிய தர்மதுரைகளவர்கள் என்

பூர்வீக ஞ ா ன க் க ண வ ா ய் ஞான ...ழல் நிலமும் எனக்குக் கிடைக்கும்படியாய் ரட்சித்துக் காப்பாற்ற வேணும் என்று மனுவும் பண்ணிக் கேட்டுக் கொள்ளுகிறேன். திருச்சிற்றம்பலம்.

507. கைவல்யநவநீதத் திரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 349-5
ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தாண்டவராய சுவாமி
ஆ. கைவல்யநவநீதத் திரட்டு
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 22

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 8 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8, 9 வரி.
உ. தெளிவான கையெழுத்து பிழைகள் மிகுதி.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்
தொடர் எண் : 311 காண்க.

ஆ. முடிவு
தேகம் அல் லாமல் வேறே தேகியார் காணேன் என்றாய்
மோகமாம் கனவில் வந்து முளைத்திடும் அவன் ஆர்
சொல்லாய்

போகமாம் கனவு தோன்றச் சுழுத்திகண் டவன்ஆர்
சொல்லாய்
ஆகநின் நனவில் எண்ணும் அறிவுதான் ஏது
சொல்லாய் (22)

508. அகத்தியர் உண்மை ஞானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 349 - 6.
ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் உண்மை ஞானம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 11

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 21 செ.மீ. ; அகலம் 3 செ.மீ .
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பூத்த கரிமுகமோர் மருப்பும் சீதச்
செழுங்கமலப் பதம்இரண்டும் செவியும் நால்வாய்ப்
பார்பூத்த இருள் இரியும் கரப் ஓர் ஐந்தும்
பருத்ததொந்தி வயிறும் முன்நூல் மார்பும் தோளும்

தார்பூத்த பொன்னடியும் செம்பட்டு ஆடை
தரிஇடையும் அரைஞாணும் சிவப்பா மொளியும்
கார்பூத்த மூலவட்டத் தோளி வோங்கார்
கமப்பமத குஞ்சரம்எந் நாளும் சாப்போம். (1)

ஆ. முடிவு

அண்டமுதல் பிண்டமென்றது எட்டி னாலே
ஆத்தாளும் அப்பனுமே எட்டி னாலே
கண்டதொழில் ஆடுவதும் எட்டி னாலே
கரைகாணா நாட்டம்எல்லாம் எட்டி னாலே
....
சொல்லாத உபதேசம் எட்டி னாலே
பண்டுறுதி விதியமைப்பும் எட்டி னாலே
பார்பரமாய் வெளியானா யெட்டுந் தானே.

(மூன்றாவது அடியின் முற்பாதி எழுதப்படவில்லை. பிழைகள் மிகுதி.)

509. அகத்தியர் சூட்சுமம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 349-7
ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூட்சுமம் 9
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 9

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 8 செ மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சத்தியமே பரப்பிரமம் ஒன்றே தெய்வம்
சகலருக்கும் சிவன் உயிராம் அதுதா னாச்சி
புத்தியினால் அறிந்தோர்க்குப் புண்யம் ஏற்கும்
பூவுலகில் கோடியினில் ஒருவன் உண்டு
பத்தியினால் மனம் ஒடுங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனதைவிடார் பரம ஞானி
சுத்தியே அறிவதில்லை சூபாஞ் சூடம்
சுறுக்கிலே நிலை அறிந்தால் மோட்சம் தானே. (1)

ஆ. முடிவு

சத்தியமே வேணுமடா மனதில் ஆனால்
சண்டாளர் ..... தவறா காது
நித்தம்நெறி மறவாதே நேமம்மற வாதே
நிட்டையொடு சமாதிலிட்டு நிலைபே றாதே
புத்திகெட்டுத் திரியாதே பொய்சொல் லாதே
புண்ணியத்தை மறவாதே பூசைமற வாதே
கத்தியே தர்க்கமிட்டுக் ... ள்ளி டாதே
கர்மிஎன்று நடவாதே ... ... காலே (2)
திருச்சிற்றம்பலம்

510. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 349-8
ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. தனிப்பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 8 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. நல்ல நிலை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மதுரை நகரில்..... பதியாய்ப் பாம்பை அணிந்தோனே
மதியும் நதியும் தரித்தோனே நமனைக் காலால்
உதைத்தோனே
அதிக தேசம் பறவைக்கு ஆடல் பாடல் தரவேணும்
பதிசேர் சொக்க நாதர் என்பாடல் ..... (1)

ஆ. முடிவு

ஆலயம் விளங்கி வாழ்க ஆடலும் பாடல் வாழ்க
சாலவும் வருமா னங்கள் தழைத்துமென் மேலே வாழ்க
சீலமா மதுரை வாழ்க செயச்சொக்க நாதர் வாழ்க
சாலவும் ஆறு மாதம் தாழ்த்தபின் வருவோம்
என்றார். (10)

511. குரு தோத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 349-9
ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. குரு தோத்திரம்
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள் 20

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு ; 10 பக்கம்.
ஆ. நீளம் 21 மீ ; அகலம் 8 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8, 9 வரி.
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மெய்யான குருபரனே பூசை பண்ணி
வேதாந்தச் சற்குருவை நித்தம் போற்றி
கையார மனதார ஞானம் சொன்ன
கர்த்தனையும் அந்திசந்தி உச்சி மூன்றும்
அய்யாவே பரமகுரு சாமி நாதா
அத்வைதம் ஆனந்தம் ... ...
மெய்யான பூசைசெய்து பேறு பெற்று
மெய்யினால் உனைத்தொழுது விளங்கி னேனே.

ஆ. முடிவு

உள்நாக்கு மத்தியிலே உமிழ்நீர் விழுங்கிடத்தில்
ஒண்ணாக்கும் மனதைக்கட்டி உறுதியாய் உள்ளிருத்தி
எந்நாளும் இப்படியே இருந்துநீ மனதையுள்ளே
பன்னாக்கி வைத்துப் பழம்பொருளி னொன்றும்
புன்னாக்கி நீசரங்கே பிழைபொறுத் திருந்தார்
அங்கே. (20)

குருபாதம் துணை உண்டாகவும்.

(பாடலடிகளில் பிழைகள் மிகுதி)

512. ஏற்றச் சித்தர் பாடல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 349 - 10
ஆ. ற/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. ஏற்றச் சித்தர் பாடல்
இ. தத்துவம்
ஈ. செய்யுள். ஏறத்தாழ அச்சில் 6 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 21 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கம் இருபத்தியாகப் பிரித்துக் கொள்ளப் பட்டுள்ளது. பத்திக்கு 7, 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஒன்றே கலப்பை உழவெருது அஞ்சுண்டு
ஒன்றை விட்டொன்று உழன்று திரியுதுகாண்
ஒன்றை விட்டொன்றைச் சமுதுண்ண வல்லார்க்கு
அன்றுநட்டு அன்று அருத்தும் காலமே.

ஆ. முடிவு
வாமனேரி சீவன் ஓம வழியால்
தாசன் அருளாலே பீசமறச் சொன்னேன்

பருவம் அல்லோ அத்தான் இன்னம்
ஒருநூறு மொள்ள வார வேணும்.

513. அட்டக வர்க்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 350
ஆ. வ/15

2. உள்ளீடு : நூல் விவரம்

அ ... ...
ஆ. அட்டக வர்க்கம்
இ சோதிடம்
ஈ. உரை நடை. அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு ; 14 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பலவித வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

3. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இராசி குண காரகம், திரக்குண காரகம், குண சமூகம், சுத்த பிண்டம். ஏக சமூகம்.

திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் செய்ததின் பேரில் இராசி குண காரகம் செய்யும்படி.

இடப சிங்கத்திற்கு 10; மிதுனத்திற்கு 8; மேடத்திற்கு 7; கன்னிமகரத்திற்கு 5; கடகத்திற்கு 4; துலாத்திற்கு 8; தனுசிற்கு 9; கும்பத்திற்கு 11; மீனத்திற்கு 122 ஆகிய இத் தொகையை வைத்து ... ...

ஆ. முடிவு

அந்தந்தக் கோணம் மூன்றில் வீட்டிலிருந்த பரல் ஒன்றுக்கொன்று அசமமாகில் குறைந்தபடி சரி பண்ணுக. சமமாகில் முழுவதும் வாங்கிப் போடுக. மூன்றிலொன்று சூனியமாகில் மற்ற இரண்டு ... ...

5. ....

6. *மீற்றுச் சுவடிகள் காணுமிடம்*

1 : 205 ; 16: ஆர். 2160

514. மருந்து செய்முறை

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 35I
ஆ. ல/60

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. .....
ஆ. மருத்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும் .அச்சில் ஏறத்தாழ 6 பக்கம் வரும்.

3. *தோற்றக் கூறுகள்*

அ. 9 ஏடு; 18 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்
தானத்தோம் தானத்தோம் தானந்தம் தான

அந்தமுள்ள கந்தகத் தைலம்
சொல்லுகிறேன் திருமூலர் அங் கொங்கணவர் சொல்லை
... ...

ஆ. முடிவு

சாரம் சேர் 2 ; வெங்காரம் சேர் 1 ; கல்லுப்பு பலம் 2 ; மிளகாய் டலம் 2 ; எள்ளு டலம் 2 சேர்த்து வறுத்து அரைத்துக் கொள்ளவும். வயிற்று வலிக்குக் கொடுக்கவும், தேனில்.

515. அகத்தியர் சூட்சுமம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 352-1
ஆ. ட/66

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூட்சுமம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்

3. *தோற்றக் கூறுகள்*

அ. 6 ஏடு ; 12 பக்கம்.
ஆ. நீளம் 20.5 செ.மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5, 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. பழுதுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எங்கும்நிறைந்த உயிர்க்குயி ராகிளம்பிரான்
இருபாதம் இஃது
தங்குமிடமும் தரித்திடமும் தாண்டவச்
சிலம்பொலியும்
பொங்கும்அமு தறலாசலும் புணிந்தளர தவமும்
பொருந்தியதும்
அங்குமதனில் அருள்சேர்வையும் அறியஉபாயம்
சொல்லிரே. (1)

ஆ. முடிவு

சொன்னதொரு பதினொன்றுக்கு அப்பால் கேளு
சூழாதே வாமம ... ...
பின்னுமவர் இப்புவியில் பிறப்பது இல்லை
பிரகாச ... ...
எந்நாளும் ... ... உள் ஆக
ஏகாந்த நடம்புரிவர் இந்த
... .

516. அரி விளக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 352-2

ஆ. ட/66

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. அரி விளக்கம்

இ. தத்துவம்
ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 6 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 16 பக்கம்.
ஆ. நீளம் 20. 5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5 வரி.
உ. தெளிவான எழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. மிகமிகப் பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரியெழுத்தே அரிஅரனும் அயனும் ஆகும்
அண்டபிண்டம் தானாகும் அனைத்தும் ஆகும்
அரியெழுத்தே மெஞ்ஞான வித்தாய் நின்று
ஆனந்த நடனவெளிக்கு அப்பால் ஆகும்
அரியெழுத்தே பேரொளியின் வடிவாய் நின்று
.... மாகும்
அரியெழுத்தே ....
அநாதியாம் பராபரத்தி ....

ஆ. முடிவு

ஏமனுக்கும் நமனளவாய் இருத்தாள் ஆத்தாள்
... பார்க்கு ..... இவள்தான் ஆச்சு
காமனைக்கண் ணால்எரித்த கதைபோல் ஆச்சு
கருவியெல்லாம் மாண்டதுவும் கசடு போச்சு
பூவதுபோல் இருந்த உப்பு மயம னாச்சு
பொன்மேரு கிரிஇவட்கும் அணுவது ஆச்சு
வீமனுக்கு ..... போலத் தேகம் ஆச்சு
வெகுசுருக்கு மெத்தநன்று ....

517. அரிச்சந்திர புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 353
ஆ. ந/51

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஆசுகவிராயர்
வந்தவாறு இந்தவகை நோய்கட்கு எல்லாம்
.... மொரு வருசத் துக்குச்
சந்தேகம் இல்லாமல் முழுகும் போது
சகலநோய் தீர்ந்துபோம் சரீரம் பொன்னாம்
அந்தமட்டுஞ் சொல்லிவிட்டோம் சந்த னாதி
ஆரறிவார் பெரியோர்கள் அறிவார் பாரே
....
மதிகெட்ட சிறியோருக்கு உரைத்தி டாதே. (701)

5. பிற செய்திகள்

ஒரு பெரிய நூலின் 679-701 ஆம் பாடல்களில் கூறப்பட்டுள்ள மகா சந்தனாதி தைலத்தைப் பற்றிய பகுதி மட்டும் இதில் அடங்கியுள்ளது.

569. அகத்தியர் தீட்சை நிதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 404

ஆ. ற/22

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் தீட்சை நிதி

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 202

3. தோற்றக் கூறுகள்

அ. 65 ஏடு ; 130 பக்கம்.

ஆ. நீளம் 24. 5 செ. மீ ; அகலம் 2 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 5, 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 19, 20, 27, 34, 59, 60, 66, 68, 69, 70, 72, 73, 77 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. பல ஏடுகள் சிதைந்துள்ளன. மிக பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வானைத் தாவிய பொதிகை மகத்தான
ரிஷியுடைய வாக்கு நேர்மை
பானைத் தாவிய பூசை பரிவான
சிவயோகம் பண்பே கேளிர்
மீனைத் தாவிய ராசி விளங்கியே
நின்றகன்னி வில்லும் மேஷச்
சேனைத் தாவிய துலாவாம் சென்மரா
சிக்கருவைச் செப்பினேனே.

ஆ. முடிவு

மவுனம்வைத்தே கறிகரணம் பண……

வளமான அபிஷேகம் எல்லாம் பண்ணும்

மவுனம் வைத்தே … … … … … … …

… … … … … … … … …

… … … … … … … … …

… … … … … … … … …

… … … … … … … … …

… … … … … விதிப் பூசை முற்றே.

அகத்தியர் தீட்சை நிதி எழுதி முகிந்தது. தேவி சகாயம். முற்றும்.

570. பன்னிரண்டு பாவபலன்

1. நூலகக் குறிப்புகள்

அ. 405

ஆ. வ/17

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. … …..

ஆ. பன்னிரண்டு பாவபலன்

இ. சோதிடம்

ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு ; 60 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. முதல் 10 ஏடுகள் காணப்படவில்லை மிகப்பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நான்காம் பாவகம் :

வெய்யவன் நாலில் ..... டை செய்தல் பேதம்
வெந்து சேதமுள வெகு விசார
...ய்யும்வா கனத்துக் ..... ம்
பிதிர் தன்கிரகச் சேதம்
பொய்யில் மன்னர் சேவை.....
.... உளவே. (1)

(ஏடு மிகச் சிதைந்திருப்பதால் பாடலின் தெளிவான வடிவம் விளங்கவில்லை)

ஆ. முடிவு

குத்தலா குள்ளோன் சுபனே யாகில் இனிய சப்பிரமஞ்சம் உண்டாம். அதற்கும் ஈராறோன் உச்சமேவில் அஞ்சுடையோன் பார்க்கில் சுதப்படுசப்பிரமஞ்சந் தூளிமெத்தையும் உண்டாமே. (11)

பனிரெண்டாமிடப்பலன் முற்றும்.

இ. பிற்குறிப்பு

அட்சய வருஷம் ஆவணி மாதம் 22 -ம் தேதி எழுதி முகிந்தது. முற்றும். இராமச்சந்திர ராஜஸ்ரவுதி புஸ்தகம். எடுத்தவர்கள் தயவு செய்து கொடுக்க வேண்டியது.

571. தன்வந்திரி சிந்தாமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 406

ஆ ல/87

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தன்வந்திரி

ஆ. தன்வந்திரி சிந்தாமணி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 41

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 16 பக்கம்.
ஆ. நீளம் 41 செ மீ. ; அகலம் 3 செ மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. 3, 9 ஆம் ஏடுகள் இல்லை. மிகப்பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தண்ணீர் சயித்தியமும் தையலார் சங்கமும்
எண்ணீர் வழிநடையோடு எட்டிசைத்தல் — கண்ணீர்
வரவே அழுதல் மகாதோஷம் ஆம்என்று
உரவோர் உரைத்தார் உகந்து. (1)

ஆ. முடிவு

தேர்ந்துசுண்டைக் காய்போலச் ..... உருட்டியே
பூர்ந்திரவி வீழுமுன்னே பூண்டுகொள்ள —
ஏந்திழையே
வீரியமும் விருத்தியாம் விழாமல் இந்திரியம்
மாரிமெய்யில் கட்டிடுமா மலாகும். (4)

(இவ்வெண்பாவின் தெளிவான வடிவமோ பொருளோ விளங்கவில்லை.)

572. தேசிங்குராஜன் கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 407
ஆ. ர/5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. தேசிங்குராஜன் கதை

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 45 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 88 ஏடு ; 176 பக்கம்.

ஆ. நீளம் 28 செ. மீ.; அகலம் 2. 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. 1 — 14, 16, 18, 25, 37, 66, 67, 75, 78 — 80, 82 — 84, 89 — 92, 101, 109 — 111, 116, 118, 122, 124 125. 127 க்கு மேல் இருக்க வேண்டியவை ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. பல ஏடுகள் முறிவு. மிகப் பழுது.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

அத்திக் கொலுவில் உட்கார்ந் திருக்கும் பாபு சையதுல்லா
அல்லாஹு சலாம் உறப்பயாத பாபு சாயப்புவே
பைட்டோ ஜீரே உட்காருமய்யா தோண்ட்ரமல்லனே
போன காரியம் கைகூடி வந்துதோ தோண்ட்ரமல்லனே.

ஆ. முடிவு

ஆர்க்காட்டுக்கு வந்தாரய்யா நவாப்பு செயதுல்லா
இந்தக் கதையை எழுதிக் கொண்டார்கள் நவாப்பு பாளமும்
சீமைப் பிரபஞ்சம் எல்லாம் சந்தோஷப்பட்டார்கள்
மனுஷரெல்லோரும் தரிசனம்பண்ணி வாழ்ந்திருந்தார்கள்.

573. பிரம்மானந்த சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 408—1
ஆ. ட/78

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஏலேலசிங்கர்
ஆ பிரம்மானந்த சூத்திரம் 51
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 51

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு ; 32 பக்கம்.
ஆ. நீளம் 25 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. 3, 14 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. மிகமிகச் சிதைவுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆடியதோர் நடன... .. மூலத் தாலே
ஆட்டான சிதம்பரத்தின் ஆட்டம் எல்லாம்
கூடியதோர் பெரியோர்கள் பதினெண் பேரை
குலாவியே தெண்டனிட்டுப் பாதம் போற்றி
நீடியதோர் திருவளுவர் பாதங் காத்து
நினைத்தபடி பாடுகிறேன் முத்தி தானும்
தேடியதோர் தேட்டெல்லாம் இதனுக் குள்ளே
திரமாகும் ஐம்பத்தோர் அட்சரமும் காப்பே. (1)

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம் ஆ. முடிவு
உண்ணும்போது ஓர்எழுத்தை உயர ஏத்தி
உறங்கும்போது அப்படியே உணர்வீ ராகில்
பெண்ணின்பால் இந்திரியம் விழுகும் போது
பேசாமல் மேனோக்கி அதைஇ ழுத்து
திண்ணுங்காய் இலைஅதுவே அதுவே யாகித்
தினந்தோறும் இப்படியே செலுத்த வல்லாய்
மண்ணுழிக் காலம்எல்லாம் இருந்து வாழ்ந்து
மறஸிகை(க்குள் அ)கப்படாத மாந்தர் ஆவார். (1)

575. அகத்தியர் ஞானம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 408 - 3
ஆ. ட/78

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞானம் 1
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 1

3. *தோற்றக் கூறுகள்*

அ. ஓர் ஏட்டின் ஒரு பக்கம் மட்டும். (ஏட்டெண் 18)
ஆ. நீளம் 25 செ. மீ.; அகலம் 3 செ. மீ
இ. நூல் ஒரு பக்கத்தில் முற்றுப்பெற்றுவிடுகிறது.
ஈ. பக்கத்திற்கு 5 வரி,

உ. தெளிவான கையெழுத்து.
ஊ. பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

ஒன்னான உச்சிவெளி தாண்டி நின்று
உமையவளும் வான்பதியும் ... ...
விண்ணினொளி அப்பரமாம் ஓம் அவ்வும் உவ்வும்
விதித்தபடி (ஒ)ருவருக்கும் எட்டா தப்பா
பண்ணான உன்உயிர்தான் சீவன் ஆச்சு
பாற்கடலில் பள்ளிகொண்டார் விழியும் ஆச்சு
கண்ணான கணபதியைக் கண்ணால் கண்டால்
கலந்துருகி ஆடுமடா ஞானம் முற்றே. (1)

576. அகத்தியர் பூசாவிதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 409
ஆ. ற/23

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பூசா விதி
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 13 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 2ஆம் ஏடும் 4 க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப் படவில்லை 4 ஆம் ஏட்டின் வலப்புற மேல்பாகம் சிதைவு.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூசையெனச் சொல்வார்கள் செய்ய மாட்டார்
பூரணமாம் சிற்மயத்தைக் காண மாட்டார்
நாசமென்ற கோபத்தை விடுக்க மாட்டார்
நலமான சமாதியுந்தான் உணர மாட்டார்
ஆசையெனும் திரதத்தை உண்ண மாட்டார்
ஆகியதோர் அரன் அறிவை அறிந்து பாரு
நீசமென்ற போகத்தை ஒளிக்க மாட்டார்
நிச்சயமாய்த் தேவிபதம் துதிக்க மாட்டார்
காசையெனும் சண்டாளர் இப்படியே செய்வார்
கனியான மார்க்கம்இது கருதிக் கேளே. (1)

ஆ. முடிவு

கூட்டியல்லோ சவ்வாது நன்றாய்ப் பூசு
கோகனக கும்பத்தி... அஞ்சு ...த்து
நீட்டமுடன் பொற்பதக்கம் முதலா யுள்ள
நிறமான ஆபரணம் எல்லாம் பூண்டு
வாட்டமில்லா வடமாலை அதன்மேல் பூட்டு
மகத்தான கழுத்துக்குக் காரை பூட்டு
....
.... (10)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

577. சாத்திரக்கும்மி

1. நூலகக் குறிப்புகள்

அ. 410

ஆ. ட/79

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. சாத்திரக்கும்மி
இ. தத்துவம்
ஈ. செய்யுள். 39 கண்ணிகள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.
ஆ. நீளம் 14 செ மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்கொண்ட ஞானத் திறமாக
சிறந்த சாத்திரக் கும்மிசொல்லப்
பார்கொண்ட வேதத்துக்கு எட்டாநின்ற
... பரம்பொருள் காப்பாமே.

ஆ. முடிவு

தீட்டுத்தான் அல்ல திரண்டு உருண்டது அல்லவோ
செக முழுதும் பிறந்தார்கள் தீட்டுத்தான் அல்லவோ
வேதியர் தாதியர் சேனை பேர்களும்
ஞானப்பெண்ணே. (39)

(இக் கண்ணியின் தெளிவான வடிவம் விளங்கவில்லை.)

578. நேமிநாதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 411
ஆ. ச/21

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. குணவீர பண்டிதர்

ஆ. நேமிநாதம் : எழுத்ததிகாரம் : மூலமும் உரையும்

இ. இலக்கணம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 45 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு ; 46 பக்கம்.

ஆ. நீளம் 43. 5 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சுவடியின் வலது மேற்புறம் சிதைந்துள்ளது. சுமாரான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

பூவின்மேல் வந்தருளும் புங்கவன்தன் பொற்பாதம்
நாவினால் நாளும் நவின்றேத்தி—மேவும்முடிவு
எல்லாம் உரை எழுத்தின் இலக்கணத்தைச்
சொல்லால் உரைப்பன் தொகுத்து.

என் என்னின் எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்தே நூல் உரைக்க என்பது மரபு ஆகலின் பாயிரம் உரைத்தே நூல் உரைக்கப்படும் என்க.

ஆ. முடிவு

எல்லாம் முடியும் என்பதனால் முன் என நிறுத்தி இல் என வருவித்து, நடுவு றகரவொற்றை மிகுத்து முன்றில் என முடிக்க. பொன்னந்தார், பொலந்தார் என்பதும் நலங்கிள்ளி என்பதும் அது. பிறவும் அன்ன. (25)

எழுத்ததிகாரம் முற்றும்.

5. பிற செய்திகள்

சுவடியின் காப்பேட்டில் குழந்தை செட்டி, உமாபதி என்ற பெயர்கள் நான்கு முறை எழுதப்பட்டுள்ளன.

6. .....

7. *வெளியீட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

579. மச்சமுனி நிகண்டு

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 412

ஆ. ல/88

2. *உள்ளீடு: நூல் விவரம்*

அ. மச்சமுனி

ஆ மச்சமுனி நிகண்டு

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 38

3. *தோற்றக் கூறுகள்*

அ. 5 ஏடு ; 10 பக்கம்.

ஆ. நீளம் 27. 5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மூன்றாம் ஏடு முறிவு. ஆறாம் ஏட்டுக்குமேல் இருக்க வேண்டியவை காணப்பட வில்லை. உள்ளவை சுமாரான நிலை.

எ. குறை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

பூரணத் தெய்வம் புகழ்பெற்ற தெய்வம்
காரணத் தெய்வம் கருத்தஞ்சு பூதம்
வாரணத் தெய்வம் வழங்கும் கரமூலத்து
ஆரணம் தொண்ணூற் றாறும் சடலற்கே. (1)

ஆ முடிவு

கற்சுண்ண மானது கங்கைக் குளத்திலே
கற்சுண்ண மானது கடிய கிளிஞ்சல்தான்
கற்சுண்ண மானது கங்கை கருரியே
கற்சுண்ண மானது கண்டது ஏரியில். (38)

ஏரி குளங்கரைக்கு உள்ளான சிப்பிதான்
தாரி உடல்இரண்டு தா ... ...

580. சிதம்பர சக்கரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 413
ஆ. ழ/13

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. சிதம்பர சக்கரம்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 11

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. மிகப் பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சொல்லுகிறேன் சிதம்பரமாம் சக்கரத்தின் போக்கு
சுகமாகப் பானுவைப்போல் விருத்துகம் ஒன்று இட்டு
மல்லுகிறேன் அதுமேலே விருத்துகம் ஒன்று இட்டு
வாகாக அதன்மேலே விருத்துகம் ஒன்று இட்டு

அல்லுகிறேன் இப்படியே வளையம் எட்டு
அப்பனே சக்கரம்போல் வரைந்து கொண்டு
நல்லுகிறேன் நடுமையம் அறிந்துஅத் துள்ளே
நலமான சிவமீறாம் அம்மென்று போடே. (1)

ஆ. முடிவு

பேரான ஆவரண தேவதைகள் எல்லாம்
பேரறிந்து பீசமிட்டுச் சூழ நீயும்
வாறான சக்கரத்தி பண்ணி நீயும்
சாதகமாய் வடமுகமாய் இருந்து கொண்டு
நேரான மாத்துருகா நியாசம் பண்ணி
நிர்மலமாம் அஞ்செழுத்தின் நியாசம் பண்ணே. (11)

(இப்பாடல் மூன்றடிகளைப் பெற்ற வடிவிலேயே காணப்படுகிறது)

581. பாரதக் குறவஞ்சி

1. நூலகக் குறிப்புகள்

அ. 414
ஆ. ய/29

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .. ..
ஆ. பாரதக் குறவஞ்சி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு ; 40 பக்கம்.
ஆ. நீளம் 45. 5 செ. மீ.; அகலம் 2 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 4, 5 வரி..
உ. மிகத் தெளிவான கையெழுத்து.

ஊ. 1 - 5, 7, 13, 15, 24, 26, 28, 29, 32 ஆகிய ஏடுகளும் 33க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. மிகமிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மஞ்சனாகவே படியில் வ ... ன திலககு ... ல்லவருந்
தெய்வமே
கொஞ்சியிருந்து நடைநடந்து குழந்தை முகத்தில்
வெயிலுறைக்க
வச்ச காலடி நோகாமல் மயில் அன்னம் போலே
நடந்தாள்
பச்சை மாமுகில் மேனியனைச் செறுபாலகனைக்
கையிலேந்திக்கொண்டு
அஸ்தினா புரத்து அதிசயம் பார்க்கவே
அதிசெயக் குறத்தியும் வாராளே.
... ...

ஆ. முடிவு

வீமசேனனாகிறவன் தினை விதைத்துக் களை பிடுங்கிக் கதிரா கிருஷ்ணதேவர் சித்தத்திலே எண்ணின காரியம் நிறைவேற வேணுமென்று துரோபதை குறத்தியானதும் தாம் குழந்தை யானதும் தினை வாங்கினதும் ... யிதுவெல்லாம் தெய்வச் செயலினாலே விளைந்ததும் பின்னும் நடக்க வேண்டியதும் பின்னாலே இருக்குது. ஆனபடியினாலே இந்த .....

5. பிற செய்திகள்

சுவடியில் எங்கும் பாரதக் குறவஞ்சி என்னும் பெயர் குறிக்கப் பெறவில்லை. திரௌபதி குறத்தியாக வந்து துரியோதன் மனைவிக்குக் குறிசொல்கிறாள். பாரதப்போர் மூண்டு கவுரவர் மடிவர் என்கிறாள். வீமன் குறச்சிங்கன் வேடத்தில் குறத்தியைத் தேடிக்கொண்டு வருகிறான். இப்பாணியில் செல்லும் இந்நூலில் நாட்டுவளம், வாசல்வளம் முதலியன இடம் பெற்றுள்ளன. இடையிடையே உரைநடை பயின்று வருகிறது.

582. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 415
ஆ. ற/24

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. தனிப்பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 9

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம்.
ஆ நீளம் 24 செ மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. மிகமிகப் பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
செந்தா மரையில்வளர் செல்வியும்தன் பங்கிருந்து
சந்தான வாழ்வு ... — நந்தாத
மார்க்கண்டர் போலமால் ஆதிநா ராயணா
ஏற்கைஎன் றென்றும் இரு.

ஆ. முடிவு
வண்டுகள் முகர்ந்த மலர்க்குழல் மங்கையர்க்கு
அதிமோகச் சஞ்சீவியை
செண்டுபோல் முலைக்கண் நெருடியே...ஹி லீலைகள்
செய்யாதது ஏதையா ?

மிண்டுதன் னைப்புகந் தொன்னலார் கள்...
வினையட... முலைதன செலீத்திய
பண்டு பாண்டவர் தூதனைப் போல்புகழ்
...ஆதிநா ராயண தீரனே. (9)

(இப்பாடலின் தெளிவான யாப்பு வடிவம் விளங்கவில்லை.)

5. *பிற செய்திகள்*

இச்சுவடியில் உள்ளவை முத்துகிருஷ்ண நரேந்திரன் குமாரன் ஆதிநாராயணன் மீது பாடப்பட்ட இன்பத்துறைத் தனிப்பாடல்களாகும்.

6. ....

7. *வெளியீட்டுச் செய்திகள்*

இதுவரை அச்சேறியதாகத் தெரியவில்லை.

583. சுப்பிரமணியர் பதிகம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 416
ஆ. ய/30

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. ஔவையார்
ஆ. சுப்பிரமணியர் பதிகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 10

3. *தோற்றக் கூறுகள்*

அ. 2 ஏடு ; 4 பக்கம்.
ஆ. நீளம் 28 செ.மீ. ; அகலம் 3 செ மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ பக்கத்திற்கு 9 வரி.
உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குருமுகமாய் வாலையாய்க் குமரன் ஆகிக்
குறைவில்லா அறுமுகமாய் வடிவும் ஆகிக்
அருள் ... ஓங்கார அகாரம் ஆகி
ஆதெழுத்தாய் அழல்மந்திரம்மும் ஆகி
வருமுகமாய் மாணிக்க வொளியா னந்த
வன்னியாய் மலர்க்கமல நடுவே நின்ற
திருமுகமும் பன்னிரண்டு கையும் வேலும்
திருவடிவும் அடியேற்குத் தரிசிப் பாயே. (1)

ஆ. முடிவு

மலைவேடன் ஆகிவந்து வெருவப் பார்த்து
வலியவே சருவியாட் கொள்ள வந்தாய்
தலைமீதில் எழுதியநாள் நல்ல நாள்என்
தாய்தெய்வ மானையம்மை தனக்குஎந் நாளும்
பலகாலும் பணிவிடையே செய்ய வேணும்
பராபரனே கயிலாய புரியே சுவாமி
சிலைவேடன் வடிவு அகற்றி ... ங்க ளாறும்
திருவடியும் அடியேற்குத் தரிசிப் பாயே. (10)

5. பிற செய்திகள்

இப்பதிகத்தின் மகுடம் சிலபாடல்களில் ''திருவடிவும் அடியேற்குத் தரிசிப்பாயே'' எனவும் காணப்படுகிறது.

584. பூசை விதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 417—1

ஆ. ற/25

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. பூசைவிதி

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 31

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 16 பக்கம்.

ஆ. நீளம் 28 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. ஈற்றில் நான்கு ஏடுகள் மிகப்பழுது. சுமாரான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பராபரத்தில் அடைந்துநின்ற மூல நாயன்
பதம்இறைஞ்சி முக்காலும் தொழுது போற்றி
நிராமயத்தில் உணர்ந்துநின்ற பெரியோர்ப் பாதம்
நீங்காமல் தொழுதிறைஞ்சி நெஞ்சில் வைத்து
தராதரமாய் எனையாண்ட போகர் பாதம்
சதாநித்தம் பணிந்துணர்ந்து தாசன் ஆகி
துராதுரைச்சி சிவன்பதமும் போற்றி போற்றி
சொல்லுகிறேன் ஏழுலட்சம் சுருக்கித் தானே. (1)

ஆ. முடிவு

நேராத பாவிக்கு வாதம் ஏது
நிலையாத மனத்தோர்க்கு ... ஏது
பாராத மோசருக்கு ஞானம் ஏது
பராபரையை அறியார்க்குப் பலன்தான் ஏது
காராத சீஷனுக்குக் குருதான் ஏது
கைகாட்டா தொழில்முறைக்குக் கரைதான் ஏது
தீராத கர்மிகட்கு அறிவு .. ஏது
செகச்சாலம் ஆடுதற்கு லவணம் கேளே. (31)

585. தத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 417 – 2

ஆ. ற/25

2 உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. பெயர் தெரியாத ஒரு தத்துவ நூல்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம். (ஏட்டெண் 8 முதல் 11 முடிய)

ஆ. நீளம் 28 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வையகம் வாழ்க வென்று வாதகா வியமாம் நூலை
அய்யன் அன்று உரைக்க நந்தி அஞ்சலி பண்ணிக் கேட்க
மையுறு குழலாள் ஞானம் ... திட வாழ்வுஉண் டாகும்
கையுளே கோட்டை ஏந்தும் கணபதி காப்புத் தானே.

ஆ. முடிவு

அறிவு பிறக்கும் அருள்தோன் றும்
அடங்காக் கவனம் கொடுபோகும்
அறிவு பிறக்கும் மனப் செயிக்கும்
மகத்தாம் போதம் தனில்சேர்க்கும்

அறிவு பிறக்கும் வெகுகோடி
பெருத்த வாதம் சீத்தியுமாம்
நெறிவு பிறக்கும் ஆயிபதம்
நிலைக்கப் பூசிக் காப்பு முற்றே.
பாயிரம் முற்றும் (12)

5. பிற செய்திகள்

நூலின் தலைப்பில் ஞானம் என்று மட்டும் உள்ளது. இறுதியில் பாயிரம் முற்றும் என்ற குறிப்பு உள்ளது. நூலில் இரசவாதத்தைப் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. எனவே இது இரசவாதம் பற்றிய ஒரு பெரிய நூலின் பாயிரம் மட்டும் போலும்.

586. மார்க்கண்ட நாடகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 418
ஆ. ற/26

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .. ..
ஆ. மார்க்கண்ட நாடகம் : காசிபூசை
இ. பல்வகை நூல்கள்.
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு ; 44 பக்கம்.
ஆ. நீளம் 32. 5 செ. மீ.; அகலம் 2. 5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 4, 5 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. அனைத்தேடுகளிலும் தொளைகள், பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சதுர்முகனார் உபதேசம் செய்த பின்பு
சங்கரரைப் பூசைசெய்ய மார்க்கண் டேயன்
விதிமுறையாய் அந்திகளில் ...தானம் பண்ணி
விநாயகனை அர்ச்சித்துச் சிவபூசை செய்யப்
பதியைவிட்டுக் கதிபெறவே பண்ப தான
பாரிலுள்ள மகாதலங்கள் பார்க்க வேண்டி.
அதிவேக முடன்மறையோன் அன்பாய் நாளும்
மனம்மகிழ்ந்து செகம்புகழ வருகின் றானே.

ஆ. முடிவு

திங்கள் நீர் சடையாய் போற்றி
திரிபுரம் எரித்தாய் போற்றி
அங்கைமான் மழுவும் ஏந்தும்
அண்ணலே அரனே போற்றி
பொங்கரவு அணிந்தாய் போற்றி
பூதங்கட்கு இறையாய் போற்றி
சங்கரா கடையூர் வாழும்
சதாசிவப் பொருளே போற்றி.

5. பிற செய்திகள்

இந்நூல் விருத்தம், வசனம், இசைப்பாடல் வகைகள் முதலியன விரவிக் காணப்படுகின்றன. நாடகம் என இருப்பினும் நாடக அமைப்பு தெரியவில்லை. கதாப்பிரசங்கம் செய்வதற்குரிய நூலாக இருக்கலாம்.

587. தன்வந்திரி சிமிட்டு இரத்தினச் சுருக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 419
ஆ. ல/89

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தன்வந்திரி
ஆ. தன்வந்திரியார் சிமிட்டு இரத்தினச் சுருக்கம் 361
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 361

3. தோற்றக் கூறுகள்

அ. 38 ஏடு ; 76 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 2, 3, 4, 20, 21, 25, 26, 36, 44, 47 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவையும் பழுதுற்றநிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கசமுகன் அடிவ ணங்கிக் கேசரப் பொருளே கண்டு
வசமெனும் அறிவில் பூண்டு வகையுறச் சிசுவின் ரோகம்
கசவற கனி...துவரக் கண்டுநீர் உரைக்க வேண்டி
திசைமுனி அருளை நோக்கி திகைமலர்
போற்றி னேனே. (1

ஆ. முடிவு

சத்திய மாகநான் சாற்றிய முன்னூல்
சத்தியம் என்னச் சஞ்சலம் அற்றிடும்
சத்தியம் இந்நூல் சமுசயம் இல்லைதான்
சத்திய வைத்திய ரத்தினம் முற்றே. (361)

தன்வந்திரியார் வைத்திய ரத்தினச் சுருக்கம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

துர்மதி வருஷம் மார்கழி மாதம் 11 -ம் தேதிமுற்றுப் பெற்றது தேவிசகாயம்.

588. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 420

ஆ. ல/90

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... .

ஆ. தோய்க்குரிய மருந்து

இ. மருந்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 12 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு ; 30 பக்கம்.

ஆ. நீளம் 28 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. ஆங்காங்கே தொளைகள். சுமாரான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டவாயுவிற்கு மருந்து :

சுக்கு பலம் 2, கழற்சிப்பருப்பு பலம் 2, எட்டிக்கொட்டை பலம் 2 இதுவெல்லாம் பொன்னிறமாக (வறுத்துப்) பொடி பண்ணி வைத்துக் கொண்டு கோழிமுட்டை வெள்ளைக் கரு எடுத்துச் சுட்டியில் விட்டுக் கொதிக்கச்சே இந்தப்பொடி மூவிரல் கொண்டது அதில் போட்டுக் கிளறி வறுத்துப் புட்டுபோலச் செய்து கொடுத்து ஒரு முன்று வெந்நீர் சாப்பிடவும். மருந்து சாப்பிடச்சே ரசபஸ்பமாகிலும் பிரவாளமாகிலும் சேர்த்துச்சாப்பிட வேண்டியது. இந்தப்படி ஆறுநாள் கடும் பத்தியம். மூன்றுநாள் உப்பு புளியில்லாமல் இச்சாபத்தியம். நாலாநாள் உப்பு வறுத்துக் கூட்டிக் கொள்ளவும். கைகண்ட முறை

ஆ. முடிவு

நீரிழிவிற்கு மருந்து :

ஆவாரை கடலுறிஞ்சி அடுத்தசெங் கிளுவைதானும்
மேவிய கொன்னை நெல்லை மெ...க்கதோர் மரமஞ்சள்
பாவிடை மறவார் தங்கள் பாவியே நீரிழிவு
காவேரி ஆறும் வற்றி கடலக—ம் சுவறும் அன்றே.

இந்தப்படி வகையொன்றுக்கு 2 வராகன் விதம் சேர்த்துக் கஷாயம் வைத்து அரைமண்டலம் கொண்டால் நீரிழிவு தீரும்.

589. அகத்தியர் கர்ம காண்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 421
ஆ. ல/91

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் கர்ம காண்டம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 105

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு ; 40 பக்கம்.
ஆ. 33.5 செ.மீ. ; அகலம் 3.5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6, 7, வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. 3, 6, 18, 22, 24க்குமேல் இருக்கவேண்டியவை ஆகிய ஏடுகள் காணப்படவில்லை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் உள் மூலப் பொறியில் சூடாய்ப்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில் சூடாய்க்
காரணமாய் நீரெழுப்பிப் பீனசம்போல் கொள்ளும்
கனலெழுந்த வாயுவதாங் கபாலம் எல்லாம்
சீரணமாய்ப் போகாது வாத பித்தச்
சிலேத்துமம்இம் மூன்றாலே நோய்கள் எல்லாம்
தாரணையாம் தசவாய்வில் மூன்று வாயு
சமானனொடு பிராணனுடன் அபானன் தானே. (1)

ஆ. முடிவு

தின்னவே மண்டலம்தான் சென்ற பின்பு
திறமாக உரைத்திருந்த மூலம் எல்லாம்
என்னவே அபானனைவிட்டு எங்கே போச்சு
இணை'பான சமானனுமோ பிரிய லாச்சு
அன்னமே மூலமெல்லாம் எங்கே போச்சு
அஸ்திமுதல் தசைவரைக்கும் ....
... ...
... ... (106)

590. தட்சிணாமூர்த்தி நருக்கு சல்லியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 422
ஆ. ழ/14

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தட்சிணாமூர்த்தி
ஆ. தட்சிணாமூர்த்தி நருக்கு சல்லியம்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 31

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம். (ஏட்டெண் 32 முதல் 38 முடிய)
ஆ. நீளம் 30 செ. மீ. அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5, 6 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. ஆங்காங்கு தொளைகள். சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓதிய குருவாய் உந்தி ஒளிமலர்ச் சுழியாய் நின்ற
போதிய பொதிகை வாழும் புரிந்ததோர் நருக்கு நூலை
நீதிசொல் தமிழி னாலே நின்னய மாகச் சொல்ல
நாதனுக்கு உபதே சித்த நாயகன் காப்ப தாமே. (1)

ஆ. முடிவு

ஒவ்வொரு மூலிக் காலி வேந்தனைக் காப்புக் கட்டி
சவ்வொடு கிலியா வென்று தாக்குவாய் அஞ்சு லட்சம்
பூவையும் பலிகொ டுத்துப் பிடுங்கிநீ வைத்துக்
கொள்வாய்
ஆவிநெய்நத்தைவேரில் சாப்பிடும் மாசம் மூன்றில்
தேவதை சிக்கிக் கொள்ளும் ம ... லஞ்சிரியான கொள்ளு
சவ்வொடு கிலியா வென்று சொல்லிப்பார் மறந்திரிக்கும்
31.25 = 52000.

(இப்பாடலில் யாப்பும், செய்யுளெண்ணை அடுத்துள்ள 25 = 52000 என்னும் எண்களும் விளங்கவில்லை)

591. சிதம்பர சக்கரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 423
ஆ. ழ/15

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. சிதம்பர சக்கரம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 12 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு ; 18 பக்கம்.
ஆ. நீளம் 29. 5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5, 6 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. அனைத்தேடுகளிலும் தொளைகள். சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நடுவ...யில் ஓங்காரம் இதுமேல் பிறந்தது உறம் உளம் உளம் உறம் ஓங்காரம் இதின்மேல் பிறந்தது. முதல் மந்திரம். ஓம் ஆம் சிவாய நம. இனிச் சக்கரம் எழுத்தின் இருபத்தஞ்சு அறைக்குள் சிகார வகாரமாய் நிற்கும். இந்தச் சக்கரத்தின் மேல் சுவாமி திருக்கூத்து.

அ. முடிவு

மாகாளி யெந்தகாளி...காளி பாணி குமரகாளி சண்டாளி அந்த அந்த நாநாபதப் பிறந்தரசு என் வசமாக சுவாகா. உ. சரவண பவாயா சக்கரத்தை அர்ச்சிக்கிறது. ஓம்ஹரி...ங் கண்டுகொள் சண்முகாய சுப்பிரமணியாய நம.

592. சமாதி தீட்சை

1. நூலகக் குறிப்புகள்

அ. 424
ஆ. ழ/16

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. புலிப்பாணி
ஆ. சமாதி தீட்சை 16
இ. மோந்திரிகம்
ஈ. செய்யுள் 17
சு. வி. 8

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 16 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ.; அகலம் 2. 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 4, 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதி ..... கணபதியைப் போற்றி
அருள்பெருகும் சமாதினுட தீட்சை சொல்ல
நீதியுள்ள நந்தீசர் மூல நாயன்
நிலையறிந்த காலாங்கி போகர் மூர்த்தி
சோதியெனும் பூரணதே சிகனாய் நின்ற
துணையான கொங்கணவர் பாதங் காப்பு
ஓதியதோர் மந்திரகலை சமாதி தீட்சை
உண்மையுள்ள கணபதிதாள் சரணம் தானே.

ஆ. முடிவு

முத்தியுள்ள சமாதினுட தீட்சை தன்னை
மூதண்ட யோகசிவ ஞானிக்கு ஈவாய்
சித்தமுள்ள சிவயோக முத்தர்க்கு ஈவாய்
சிவஞான குருதேசி கனுக்கும் ஈவாய்
சுத்தமுள்ள சமாதினுட தீட்சை மார்க்கம்
சோடசமாய்ச் சொன்னதைநீ பதனம் பண்ணிச்
சத்தமது தான்பிறந்து இடத்தில் நின்று
சதாகாலம் பூரணத்தில் சார்வாய் முற்றே. (17)

இ. பிற்குறிப்பு

கோனா ... தாலுகா புத்தூரிலிருக்கும் முத்துக்கருப்பப் பிள்ளை மகன் கந்தசாமி வாத்தியாருடைய புலிப்பாணி சமாதி தீட்சை 16, விரோதிகிருது வருஷம் ஐப்பசி மாதம் 12 -ம் தேதி திங்கள் அனுச நட்சத்திரத்தில் எழுதியது. தேவி சகாயம்.

593. அகத்தியர் நட்டாமுட்டி

1. நூலகக் குறிப்புகள்

அ. 425
ஆ. ழ/17

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் நட்டாமுட்டி 30
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 31

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 22 பக்கம்.
ஆ. நீளம் 31 செ. மீ.: அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 4, 5, 6 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. அனைத்தேடுகளிலும் தொளைகள். பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாந்திரீகம் இனிநட்டா முட்டி தானும்
மாநிலத்தில் கருவாதி ... ஞ் சொல்வேன்
ஆந்தரிகம் இனிவேறே ஒன்றுநினை யாதே
ஆதித்த நாள்பிறந்த தலைச்சன் மண்டை
சாந்தகமாய் ஆள்பார்த்து மயான பூமி
தான்செய்தால் நடுச்சாமம் தன்னி லேதான்
வாந்தகமாய் மந்திரந்தான் நங்நங் லங்லங்
மங்மங்சிங் லங்லங்லங் யங்யங் ஓம்ஆம்
லாஎல்லோஉம் சுவாஹா வென்றே. (1)

ஆ. முடிவு

பாரிலே மாந்திரீகம் அநேகம் சொல்வார்
பலன்என்ன இதுபோலே கிடையாது அப்பா
கூரான கருமானச் சுருக்கம் எல்லாம்
கூறினேன் ஆதியந்தம் கூறு பார்த்து
வேரான மதிபார்த்து நிதியும் பார்த்து
விழுங்குகின்ற ... ணத்தின் மேன்மேல் பார்த்துக்
தாரணியில் இனிநட்டா முட்டி தானும்
சாற்றினேன் முப்பதிலே தானும் முற்றே. (31)

இ பிற்குறிப்பு

1855 ஆம் வருடம் மே மாதம் ... தேதி வெள்ளிக்கிழமை தினம் இராட்சச வருஷம் சித்திரை மாதம் 23 ஆம் தேதி புத்தூரிலிருக்கும் முத்துக்கருப்பப்பிள்ளை குமாரன் கந்தசாமிப் பிள்ளையது.

594. அகத்தியர் புன்சுருட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 426
ஆ. ழ/18

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் புன்சுருட்டு 16
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 18

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு ; 14 பக்கம்;
ஆ. நீளம் 31 செ. மீ. ; அகலம் 2. 5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 4, 5, 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.
ஊ. பல ஏடுகளில் தொளைகள். சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீருலவும் அட்டகர்மம் எட்டுவகைத் தொழிலும்
தெரிந்தெடுத்த புன்சுருட்டுத் தெளிவுதனைக் கூற
காருலவும் ஐங்கரற்கும் சரற் குமாரன்
காப்புமலர்ப் பூந்தொடையாள் சிவனயன்மால் காப்பு
வாருலவும் வனசமலர் மாதுதிரு மாதே
வாழ்த்திமனந் தேத்திரகள் சித்தறிவார் கேளீர்
ஓருலவு தானதவ சிவயோகி பெரிய
வருக்காகும் இதில்பேசும் ...ருத் தானே. (1)

ஆ. முடிவு

வைத்தந்த திருநீறும் மாரணச்சக் கரமும்
மந்திரமும் சொல்லிஅவன் பேரும்அது கூட
சுத்துமடா நிசம்இதுதான் மாரணமே ஆகும்
சுருக்குஇதுபோல் ஒன்றும்இல்லை தொல்உலகில் தானும்
கத்தியென்ன முணுமுணென்று செபித்தால் என்ன
காசினியில் கருவோடச் செய்தாலல்லோ பலிக்கும்
எத்தொழிலு மாகுமிது புன்சுருட்டுக் கருத்தான்
இந்நூலே மெய்யான யிந்நூல்சத் தியமா முற்றே. (38

595. திருவாசகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 427
ஆ ண/23

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. மாணிக்கவாசகர்
ஆ. திருவாசகம்
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள் 656

3. *தோற்றக் கூறுகள்*

அ. 55 ஏடு ; 110 பக்கம்.
ஆ. நீளம் 12.5 செ.மீ ; அகலம் 5.5 செ மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 28 வரி.
உ. தெளிவான மிகச் சிறிய கையெழுத்து.
ஊ. பல ஏடுகளில் தொளைகள். சுமாரான நிலை.
எ. முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

தொல்லை இருப்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

ஆ. முடிவு

செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவாறு ஆர்பெறுவார்
அச்சோவே. (9)

596. மீனாட்சியம்மை கலிவெண்பா

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 428
ஆ. ய/31

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சிதம்பர சுவாமிகள் - திருப்போரூர்
ஆ. மீனாட்சியம்மை கலிவெண்பா
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்; 91 கண்ணிகள்.

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 12. 5 செ. மீ.; அகலம் 5. 5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 26, 27 வரி.
உ. தெளிவான சிறிய கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரும் மேனிக் கனங்குழலே — ஆராயும்
வேதமுத லாகநின்ற மெய்ப்பொருளே மின்னொளியே
ஆதி பராபரையே அம்பிகையே — சோதியே
... ...

ஆ. முடிவு

ஆசுமது ரம்சித்ர விஸ்தார மென்று
பேசுகின்ற உண்மை பெருவாக்கு — நேசமுடன்
தந்தென்னை யாட்கொண்டு சற்குருவாய் என்னகத்தில்
வந்திருந்து புத்தி மதிகொடுத்துச் — சந்ததமும்
நீயே துணையாகி நின்று இரட்சி ; அங்கயற்கண்
தாயே சரணம் சரண்.

597. மங்களநாயகி போற்றிப்பத்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 429
ஆ. ய/32

2. *உள்ளீடு: நூல் விவரம்*

அ. ....
ஆ. மங்கள நாயகி போற்றிப்பத்து
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 12

3. *தோற்றக் கூறுகள்*

அ. 1 ஏடு ; 2 பக்கம்.
ஆ. நீளம் 12.5 செ.மீ ; 5.5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 24, 26 வரி
உ. தெளிவான மிகச் சிறிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

பருதி மதியுலவு பார்மிசையோர்க் கெல்லாம்தாம்
கருதி மனமகிழக் கடவுளே காப்பதாமே

ஆ. முடிவு

அரகரா தேவா போற்றி அரனுடை மைந்தா போற்றி
இரவலர்க்கு அருள்வாய் போற்றி ஏழைபங் காளா போற்றி
பரவேக பரனே போற்றி பார்வதா தேவி போற்றி
வரவர தாயே போற்றி மங்களம் போற்று வாயே. (12)

மகாலட்சுமி நம. மங்களம் நம.

598. வழிபாட்டு யந்திரங்கள்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 430
ஆ. ழ/19

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. வழிபாட்டு யந்திரங்கள் (சக்கரங்கள்)

இ. மாந்திரீகம்

ஈ. வெறும் யந்திரங்கள் மட்டும் 19 உள்ளன. அச்சில் 5 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.

ஆ. நீளம் 12. 5 செ. மீ.; அகலம் 5. 5 செ. மீ.

இ. இருபக்கமும் வரையப்பட்டுள்ளது.

ஈ. புக்கத்திற்குப் பெரும்பாலும் 3 சக்கரங்கள்.

உ. கையெழுத்தே இல்லை. யந்திரங்கள் அழுத்தமாக இல்லை.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

(வழிபாட்டிற்குரிய சக்கரங்கள் மட்டுமே உள்ளன. பூசாவிதி பயன் முதலியன காணப்படவில்லை.)

599. திருப்புகழ்

1. நூலகக் குறிப்புகள்

அ. 431

ஆ. த/11

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அருணகிரிநாதர்

ஆ. திருப்புகழ்

இ. பிறதோத்திரங்கள்

ஈ. செய்யுள் 5

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.

ஆ. நீளம் 20.5 செ.மீ. ; அகலம் 3.5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. மிகமிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அலைகடலும் சோலைகளும் ... ..கும் செந்தூர்
நிலைகட... ஆறுமுக நேசா — மலைகடலும்
கீழாகி எங்கும் கிளரொளியா நின்றோனே
கோள்நீக்கி நின்இருதாள் கூட்டு.

(இவ்வெண்பா அருணகிரியாரின் திருவாக்கன்று.)

ஆ. முடிவு

அருமறைகள் ஈட்டம் உரைசெய்தமிழ் .....
அட அடவு கேட்ட முருகோனே
அலைகடலில் ஈட்ட அவுணர்தமை ஓட்டி
அமரர்சீறை மீட்ட பெருமாளே.

5. பிற செய்திகள்

இச்சுவடியில் "முத்தைத்தரு பத்திக்திரு நகை", "அணிச்சங் கார்முகம் வீசிட", "கருவினுருவாகி வந்து" "இருவினையில் மதிமயங்கித் திரியாதே", "இருவினைகளீட்டும் இழிவுபடு கூட்டை" ஆகிய 5 திருப்புகழ்ப்பாக்கள் உள்ளன.

600. சேத்திரத் திருவெண்பா

1. நூலகக் குறிப்புகள்

அ. 432

ஆ. ண/24

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஐய்டிகள் காடவர்கோன் நாயனார்
ஆ. சேத்திரத் திருவெண்பா
இ. சைவத் திருமுறை
ஈ. செய்யுள் 24

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 20. 5 செ. மீ.; அகலம் 3. 5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகப் பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்.

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்பும் குறுகிற்று — நாடுகின்ற
நல்அச்சு இற்று அம்பலமே நண்ணாமுன் நல்நெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். (1)

ஆ. முடிவு

உய்யும் மருந்துஇதனை உண்மின் எனஉற்றார்
கையைப் பிடித்துஎதிரே காட்டியக்கால் — பையஎழுந்து
இருமி யாஎன்வேண் டேன் என்னாமுன் நெஞ்சே
செழுந்திரும யானமே சேர். (24)

காடவர்கோன் வெண்பா முற்றும்.

601. கருணைத் திருவிருத்தம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 433
ஆ. ய/33

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. கருணைத் திருவிருத்தம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 13

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 20.5 செ.மீ ; அகலம் 3.5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8, 9, 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மீகப்பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவால வாயர் ..... நாதர்
அங்கயற்கண் தேவி பாகர்
விரிவாகச் செய்தஎண்ணெண் விளையாடல்
தனைச்சுருக்கி விருத்தப் பாவால்
பரிவாகச் செய்வதற்கு பொற்பதும
...லாக்க... ... பண்பால் வைகும்
மருவார்ந்த பிறைமவுலிச் சித்திவிநா
யகன்மலர்த்தாள் மனத்துள் வைப்பாம். (1)

ஆ. முடிவு

இத்தகைய லீலைதனை அடியருக்காய்ச்
செய்தருளும் இறைவா யாங்கள்
முத்தநகை மீனவிலோ சனையாள்பொற்
பாதமலர் முழுதும் நம்பும்

கொத்தடிமைப் பரம்பரையாம் அடிச்சேரி
ஆதலினால் கருணை கூர்ந்து
சித்தம்இரங் கிக்காத்தல் கடன்ஆகும்
தென்மதுரைத் தேவ தேவே. (13)

கருணைத் திருவிருத்தம் முற்றும்.

5. பிற செய்திகள்

நூல் தொடக்கத்தில், "திருவாலவாயுடையய் தம்பிரானார் திருவிளையாடல் திருவிருத்தம்" எனப் பெயர் சுட்டப்பட்டுள்ளது. 2 முதல் 12 முடிய உள்ள விருத்தங்கள் "கருணை வாழ்வே" என நிறைவேறுகின்றன.

602. சூடாமணி நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 434
ஆ. ச/22

2 உள்ளீடு : நூல் விவரம்

அ. மண்டல புருடர்
ஆ. சூடாமணி நிகண்டு. மூன்றாந் தொகுதி
இ. இலக்கணம்
ஈ. செய்யுள் 78

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 22 பக்கம் (ஏட்டெண் 31 முதல் 41 முடிய)
ஆ. நீளம் 38. 5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சற்றே பழுதடைந்துள்ள நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

துலங்குமுக் குடைநி ழற்றத் துந்துபி முழங்கத் தேவர்
நலம்பெறு கவரி வீச நன்மலர் மாரி தூவ
அலங்குளை அரிய ணைக்குள் அமர்ந்தநான் முகனை ஏத்தி
விலங்கின்பேர்த் தொகுதி தன்னை இற்றென விளம்பல் உற்றாம். (1)

ஆ. முடிவு

கிருமியே புழுப்பொட் டின்பேர் கீடப்கோற் புழுவின் பேரே
பிரசம்கோற் றேன்இ றாலே பேசிய தேனின் கூடாம்
மிருகமோ ரெழுபத் தெட்டும் விருத்தம்செய் தான்த ருப்போல்
வருகுண பத்தி ரன்தாள் வணங்குமண் டலவன் தானே. (78)

603. சூடாமணி நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 435
ஆ. ச/23

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மண்டல புருடர்
ஆ. சூடாமணி நிகண்டு: தொகுதிகள் 5-9
இ. இலக்கணம்
ஈ. செய்யுள் 330

3. தோற்றக் கூறுகள்

அ. 46 ஏடு ; 92 பக்கம்.
ஆ. நீளம் 38.5 செ.மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கடல்எழும் இரவி கோடி கால்சீத்துப் பொடித்தது என்ன
மடல்அவிழ் கமல ஊர்தி வந்தவா மனனைப் போற்றி
அடைவுள திணைதே மூர்வான் அகம்புறம் ஆதி யாக
இடனுடைத் தாக வைத்த இடப்பெயர்த் தொகுதி
சொல்வாம். (1)

ஆ. முடிவு

விம்மியே உமிழ்தல் கான்றல் மேவுமுற் காரம் சத்தி
தும்மலே சுவாசம் மூச்சாங் கொட்டரவி யேயா வித்தல்
அம்மஇச் செயல்பத் துப்பேர்க்கு அறுபத்தேழ் விருத்தம்
செய்தான்
மைம்முகில் குணபத் திரன்தாள் வணங்குமண் டலவன்
தானே. (67)

ஒன்பதாவது முற்றும். சிவமயம்.

604. சூடாமணி நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 436
ஆ. ச/24

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மண்டல புருடர்

ஆ. சூடாமணி நிகண்டு : தொகுதி : 11, 12

இ. இலக்கணம்

ஈ. செய்யுள் 412

3. தோற்றக் கூறுகள்

அ. 56 ஏடு ; 112 பக்கம்.

ஆ. நீளம் 38.5. ; அகலம் 3 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முடிவில்இன் பத்து மூவா முதல்வனைப் போற்றி
செய்தே
அடிதொறும் இரண்டும் ஒன்றும் ஆதியில்
பொருள்அ டக்கி
நடைபெறு ககர மாதி னகரஈறு எதுகை ஆகப்
படியுமோர் சொற்பொ ருட்பல் விதத்தொகை
பகர லுற்றாம். (1)

ஆ. முடிவு

உரைத்தஇப் பல்பேர் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி
தன்னில்
விருத்தம்மூ வைம்ப தின்மேல் மிகுதிபன் னிரண்டும்
செய்தான்
செருக்கிலா ஞான சீலந் தெரிசனம் இவையே
பூண்டோன்
மருக்கிளர் பொழில்சூழ் வீரை மன்னன்மண் டலவன்
தானே. (163)

பன்னிரண்டாவது பல்பெயர்க் கூட்டத் தொருபெயர்த் தொகுதி முற்றும்.

இ. பிற்குறிப்பு

சீனக்குடைய சாமியப் பிள்ளை குமாரன் தாண்டவராயன் படிக்கின்ற நிகண்டு. படித்து முகிந்தது முற்றும். குருபாதமே கதியாக வேண்டியது.

605. உரிச்சொல் நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 437
ஆ. ச/25

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. காங்கேயன்
ஆ. உரிச்சொல் நிகண்டு : முதல் 6 தொகுதிகள்
இ. இலக்கணம்
ஈ. செய்யுள் 138

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு ; 14 பக்கம்.
ஆ. நீளம் 38. 5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10, 11 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நடையூறு சொன்மடந்தை நல்குவது நன்மேல்
இடையூறு நீங்குவதும் இன்றிப் — புடையூறு
சேனைமுகத் தான்அறியச் சீறுமுகத் தூறுதமதத்து
ஆனைமுகத் தானைநினைத் தால்.

ஆ. முடிவு

மதிலே யிலஞ்சி அரண்புரிசை யாரல்
புதவுயர் கோபுர வாயில் - கதவாம்
அரணம் கபாட நகர் நகரி புறநகரா (5)
... ...

(இது ஏழாம் தொகுதியின் 5 ஆம் பாடலாகும். முழுமை கருதி ஆறு தொகுதிகள் எனக் கூறப்பட்டது இதற்குமேல் எழுதப்படவே இல்லை.)

606. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 438

ஆ. ல/92

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 92 ஏடு ; 184 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3. 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 33 - 38, 78 - 90, 98, 99, 113 க்கு மேல் இருக்க வேண்டியவை ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. சுவடியில் இடப்பகுதி ஓரளவு பழுது. எனினும் சுமாரான நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரையாப்புக்கு லேகியம் :

கொடிவேலி, சீரகம், களிப்பாக்கு வகைக்கு ஒரு பலம் வீதம் தண்ணீர் வார்த்து அரைத்து, மாகாணி நல் லெண் ணெயிற் போட்டுக் காய்ச்சி, மெழுகு பதத்தில் ஒரு பலம் வெல்லம் போட்டு முள்ளிக்காய் அளவு உண்டை பண்ணிக் கொண்டு சாப்பிடவும்.

ஆ. முடிவு

விரோசனத்திற்கு மருந்து :

வெள்ளைச் சாரணைவேர், இந்துப்பு இவை வெந்நீரில் அரைத்துச் சாப்பிடவும். மலசுத்தியாம்.

607. வால்மீகர் நாடி சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 439

ஆ. ல/93

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வால்மீகர்

ஆ. வால்மீகர் நாடி சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 72

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு ; 18 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ. ; அகலம் 3. 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சுவடியின் வலப்பக்க ஓரம் சற்றே பழுது. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கரிமுகன் அடியை வாழ்த்திக் கைதனில் நாடி பார்க்கப்
பெருவிரல் அங்கு லத்தின் பிடித்துஉடன் நடுவே தோட்டால்
ஒருவிரல் ஓடில் வாதம் இருவிரல் ஓடில் பித்தம்
செருவிரல் மூன்றில் ஓடில் சேத்துமம நாடி ஆமே. (1)

ஆ. முடிவு

அன்னநடை மாதேகேள் ஆலிநடை யேயானால்
துன்னுகர்ப்ப ரோகமொடு சுணங்கு மயில்சூலை
சன்னமுலை மாதேகேள் தாரிநடை யானால்
கன்னல்கரு வாய்க்குழியில் கண்டிடதோய் என்னே. (72)

வால்மீகர் நாடி முற்றும்.

608. குருநாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 440

ஆ. ல/94

அ. .....

ஆ. குருநாடி சாத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 103

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. 17 ஏடு ; 34 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3. 5. செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவளரும் பொதிகைமலை சிறந்து மேவும்
சிவஞான தேசிஅகஸ் தீசர் பாடல்
குருநாடி நேர்மைதனை உரைக்க வேண்டிக்
குருநமசி வாயமனோன் மணித்தாய் ஈன்ற
முருகசர வணபவன்றன் துணைவன் ஆன
மும்முதமும் இருகுழையும் சிறுகண் ஐந்து
கரமுடனே அடியவர்கள் கருத்தில் மேவும்
கணபதிதாள் அநுதினமும் காப்ப தாமே. (1)

ஆ. முடிவு

விதமுடைய வன்னியொடு காலும் கூடி
வீறான இடைநாடி தனையும் பற்றி
பதமுடனே சுழிமுனையில் தீயும் காற்றும்
பத்திடுகில் தொந்தத்தில் பதிக்கும் நோய்கள்
இதமுடனே சீழ்இரத்தம் சலமும் வீழும்
இருகண்ணில் பீளையது இசைந்துஇருக்கும்
நோய்கள்
குதமுடனே குடோரங்கள் செய்யும் சூலைக்
குறிஇதுகாண் மண்மிசையில் கூறி னோமே. (103)

குருநாடி முற்றும். ஸ்ரீராமஜெயம்.

609. அகத்தியர் பலதிரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 441

ஆ. ல/95

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பல திரட்டு 100
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 64

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு ; 44 பக்கம்.
ஆ. நீளம் 27.5 செ.மீ. ; அகலம் 3 செ மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்தம் இல்லாத பொருளைப் போற்றி
அறைகூறேன் பலதிரட்டை அப்பா கேளு
வேதையுடன் வைத்தியமும் மறப்பு நீக்கி
விள்ளாத கருவையெல்லாம் விளக்க மாக
நாதமென்று பெருவெளியில் விந்துஉண் டாகி
நாலாறு ஆதாரம் அதிலுண் டாகி
சாதியென்ற சாதியெல்லாம் அதிலுண் டாகித்
தத்துவங்கள் ஆகிநின்ற தனைத்தும் பாரே. (1)

ஆ. முடிவு

கொடுத்திட்ட நிலக்கோவைக் கிழங்கு தானும்
கொடியதொரு முள்ளங்கிக் கிழங்கு போலே
கிடக்கும்அதைத் துவைத்துநன்றாய்ச் சாறு வாங்கி
கீர்த்தியுள்ள வெள்ளீயம் உருக்கிச் சாய்ப்பாய்

நடத்திடுவாய் இருபத்தோர் தரமே சாய்ப்பாய்
நல்லவெள்ளி போலங்கே நீரை வாங்கும்
புடந்தனிலே போகாது வெள்ளி மார்க்கம்
பொய்யல்ல சொன்னதெல்லாம்
நிசம்தப் பாதே. (64)

610. அகத்தியர் பின்னூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 442
ஆ. ல/96

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பின்னூல் 80
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 84

3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு ; 60 பக்கம்.
ஆ. நீளம் 27.5 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. சற்றுக்கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
முன்னூல்எண் பதுசொன்னேன் முதலே காப்பு
மூலத்தில் நின்றகண பதியே போற்றி
பின்னூல்எண் பதுசொல்ல ஆயி காப்பு
பேறான என்குருமா முகனே காப்பு

அன்னாரின் ஈசர்உப தேசத் தாலே
அகஸ்தியனாம் என்றனக்குஇப் பேரும் ஆச்சு
பொன்னான வாதத்தில் லெட்சங் காப்பு
பூட்டினது பூரணசூத் திரத்தைப் பாரே. (1)

ஆ. முடிவு
ஞானம்என்ன யோகம்விட்டால் அதுவும் ஞானம்
நாவவிட்ட யோகம்என்ன மரண யோகம்
பானம்என்ன ரசத்தைவிட்டால் சுராபா னம்தான்
பரிகாரம் நூல்விட்டால் பலகா ரம்தான்
கோணம்என்ன வழலைவிட்டால் ரசவா தம்தான்
குடல்வாத பேதமல்லால் குணம்ஆ காது
கானம்என்ன இந்நூல்எண் பதையும் விட்டால்
காசினியில் இவன்யோகி கடைந்தான் முற்றே. (83)

611. இராமதேவர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 443
ஆ. ல/97

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் சூத்திரம் 81
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 83

3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு ; 50 பக்கம்.
ஆ. நீளம் 27.5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

1. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

ஆதியிலே அமைத்தவிதி எழுத்தைக் காண
அருளான நந்திபதம் அன்பாய்க் கொண்டு
சோதியாய் நின்றிலங்கும் நாத ரூபி
சுருதியுள்ள வாரமனோன் மணியைப் போற்றி
நீதியுடன் சஞ்சாரச் சமாதி செய்து
நின்றண்டா ஆதியந்தம் நிலைக்க வேதான்
வாதியென வந்ததொரு குருவாய் இந்நூல்
வசனித்தேன் எண்பத்தி யொன்றும் ஆச்சே. (1)

ஆ. முடிவு

வணக்கமுள்ள இந்நூலை வெளிவிடாதே
வஞ்சருடன் பேசாதே வாயாடாதே
இணக்கமில்லா மாந்தருடன் கூட வேண்டாம்
இனமுள்ள வைத்தியநூல் ஈய வேண்டாம்
மணக்கமலா மதிதனிலே மனத்தை வைத்து
வயித்தியநூல் எண்பதுவும் வகையாய்ப் பார்த்துத்
தனக்கும்இது பொருள்எனவே வணங்கிப் போற்றி
சதாகாலம் குருபதத்தில் சார்வாய் முற்றே. (83)

சற்குரு துணை ஆக வேணும்.

612. திருவிசைப்பா

1. நூலகக் குறிப்புகள்

அ. 444

ஆ. ண/25

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருமாளிகைத்தேவர் முதலியோர்
ஆ. திருவிசைப்பா
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள் 287

3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு ; 72 பக்கம்.
ஆ. நீளம் 20 செ. மீ. ; அகலம் 3. 5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 12, 13 வரி.
உ. தெளிவான அழகிய கையெழுத்து.
ஊ. மிகப்பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒளிவளர் விளக்கே ஒப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பரம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. (1)

ஆ. முடிவு

ஏயு மாறெழிற் சேதிபர் கோன ...
நாய னாரைந யந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
ஆய இன்பமெய் தியிருப் பார்களே. (10)

திருச்சிற்றம்பலம். திருவிசைப்பா முற்றும்.

ஆகப்பதிகம் 28 க்கு விருத்தம் 287. திருச்சிற்றம்பலம்.

613. திருவாளொளிபுற்றூர்ப் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 445
ஆ. ப/26

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
ஆ. திருவாளொளிபுற்றூர்ப் புராணம்
இ. தலபுராணம்
ஈ. செய்யுள் 525

3. தோற்றக் கூறுகள்

அ. 129 ஏடு ; 258 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. பல ஏடுகள் முறிந்துள்ளன. மிகமிகப் பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூமேவு புழைக்கையகத்து ஒழுகும்மதம்
விளர்த்திருக்கும் புதுமை யாதென்
ஆமேவு நிலவுலகும் பொலவுலகும்
இறும்பூதுற்று ஐயம் மேவத்
தாமேவு நீராட நயந்தநாட்
பாற்கடலுள் தாங்கிய வாங்கி
மாமேவு வெளிடுஞ் சித்திவிநா
யகர்மலர்த்தாள் வணக்கம் செய்வாம்.

ஆ. முடிவு

மருவி நீபுரி பூசைம கிழ்ந்தனம்
வெருவி னம்பத மேவுக விவ்வுரு
வொருவி நம்மிடம் வாழ்பவட்கு உன்பெயர்
இருவி னோம்என்று இசைத்தனன் எம்பிரான். (20)

இது வண்டு பூசித்த படலத்தின் 20 ஆம் பாடல். இதனை யடுத்த ஏடு முறிந்துள்ளது. அதில் 6 பாடல்கள் இருக்கலாம். அத்துடன் நூல் நிறைவேறுகிறது.

614. சிவப்பிரகாசப்பெருந்திரட்டுச் சங்கிரகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 446
ஆ. ற/27

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. சிவப்பிரகாசப்பெருந்திரட்டுச் சங்கிரகம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 800

3. தோற்றக் கூறுகள்

அ. 116 ஏடு ; 232 பக்கம்.
ஆ நீளம் 19.5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9 வரி.
உ. தெளிவான அழகிய கையெழுத்து.
ஊ. அனைத்தேடுகளிலும் தொளைகள். மிகமிகப் பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத் தானைக்
காதலால் கூப்புவர்தம் கை. (1)

ஆ. முடிவு

எண்பொருளை நாடி இந்த நிலம் வாழ
வெண்தரளம் வாரி எங்கணும் தண்பொருநை
வீசும் வண்கு ... கை ... ந்த தமிழ் ..... வாழி. முற்றும்.
ஆக 800. பெருந்திரட்டுச் சங்கிரகம் முற்றும்

(ஏடு மிகப் பழுதடைந்துள்ளதால் ஈற்றுப் பாடலின் வடிவம் விளங்கவில்லை.)

615. திருஅம்பர்ப் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 447
ஆ. ப/27

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை
ஆ. திருஅம்பரீப் புராணம்
இ. தலபுராணம்
ஈ. செய்யுள் 1005

3. தோற்றக் கூறுகள்

அ. 126 ஏடு ; 252 பக்கம்.
ஆ. நீளம் 23. 5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பல விதவரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிக மிகப் பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

சீர்பூத்த மணங்கவரும் பொறிதனைச்சார்ந்து
ஒன்றியமர் திறமும் நாளும்
ஏர்பூத்த விடுதல்பிறி தொன்றனுக்கு
இன்மையும் இதயத்து எண்ணிஅந்த
நீர்பூத்த பொறியுவப்ப வுரிவிடய
மிடமணங்கூர் நிலந்து ழாவும்
வார்பூத்த புழைத்தடக்கை ஒருகோட்டு
வாரணத்தை வணங்கி வாழ்வாம். (1)

ஆ. முடிவு

சீர்பூத்த அம்பர்ந கர்வாழ்க
அருட்சைவர்குழாம் செழித்து வாழ்க !
வார்பூத்த பொம்மன்முலை வம்புவனப்
பூங்குழலாள் வாழ்க ! கொன்றைத்
தார்பூத்த தடநெடுந்தோட் பிரமபுரீச்
சுரர்வாழ்க தாவா அன்னார்
ஏர்பூத்த மன்றுள்நடம் செயவெடுத்த
குஞ்சிதத்தாள் என்றும் வாழ்க. (150)

திருச்சிற்றம்பலம். ஆகப்பாயிரம் உள்படப்படலம் 15 க்குக் கூடிய திருவிருத்தம் 1005. அம்பர்ப் புராணம் முற்றுப் பெற்றது.

616. சிதம்பர புராணம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 448
ஆ. ப/28

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. திருமலைநாதர் - புராண
ஆ. சிதம்பர புராணம்
இ. தலபுராணம்
ஈ. செய்யுள் 813

3. தோற்றக் கூறுகள்

அ. 57 ஏடு ; 114 பக்கம்.
ஆ. நீளம் 14. 5 செ. மீ. ; அகலம் 6 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 22, 23, 24 வரி.
உ. அழகிய தெளிவான சிறிய கையெழுத்து.
ஊ. பல ஏடுகள் பழுதுடைந்துள்ளன. சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

4 சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வான நாடரும் மாதவ நாடரும்
மோன ஞானம் முழுதும்உ ணர்ந்திடத்
தானம் மேவு தடவிக டாசலத்து
ஆனை மாமுகத்து அண்ணலை ஏத்துவாம்.

ஆ. முடிவு

தாவி லாமறைச் சைவம் தழைத்திடக்
காவல் வேந்துடன் காசினி வாழ்ந்திடத்
தேவ தேவன் திருவுரு ஆகிய
மூவர் பாடல்இம் மூதுலகு ஓங்கவே. (97)

துர்த்தெரிசனச் சருக்கம் முற்றும். ஆகச் சருக்கம் 9க்குத் திருவிருத்தம் 813. சிதம்பர புராணம் முற்றும். திருச்சிற்றம்பலம்.

5. ....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

1: 448, 814 ; 2 : வ. 147 ; 16 : 576, 577, ஆர். 2579 ; 18 : 11444 ; 25 : 535 – 542 ; 27 : 287 – 289 ; 291ஏ, 534 ; 31 : 4 ; 32 : 51, 111 ; 60 : 303, 304.

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

617. அற்புதத் திருவந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 449—1
ஆ. ண/26

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. காரைக்காலம்மையார்
ஆ. அற்புதத் திருவந்தாதி
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 12 பக்கம்.
ஆ. நீளம் 14.5 செ. மீ. ; அகலம் 6 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 21, 22 வரி.
உ. தெளிவான அழகிய சிறிய கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிறந்து மொழிபயின்ற பின்எல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியைச் சேர்ந்தேன் — நிறம்திகழும்
ம்மைஞ்ஞான்ற கண்டத்துஎம் வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர். (1)

ஆ. முடிவு

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரையினால் காரைக்கால் பேய்ச்சொல் — பரவுவார்

ஆராத அன்பினோடு அண்ணச்சென்று ஏத்துவார்
பேராத காதல் பிறந்து. (101)

திருச்சிற்றம்பலம். அம்மையந்தாதி முற்றும்.

5. பிற செய்திகள்

இந்நூலுக்கு 'அம்மையந்தாதி' என்றும் ஒரு பெயர் உள்ளமை முடிவுக் குறிப்பினால் தெரிய வருகிறது. இச்சுவடியில் மேலும் திருவிரட்டைமணிமாலை, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை ஆகிய நூல்கள் உள்ளன.

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

1:120; 16: 1193; 25: 1469; 31: 182டி.

7. வெளியிட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

618. திருவிரட்டை மணிமாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 449-2
ஆ. ண/26

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. காரைக்காலம்மையார்
ஆ. திருவிரட்டை மணிமாலை
இ. சைவத் திருமுறை
ஈ. செய்யுள் 20

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம். (7, 8 ஆம் ஏடுகள்)
ஆ. நீளம் 14·5 செ. மீ.; அகலம் 6 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 21, 22 வரி.
உ. தெளிவான அழகிய சிறிய கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கிளர்ந்து வெந்துயர் வந்திடும் போதஞ்சி
நெஞ்சம் என்பாய்
தளர்ந்துஇங்கு இருத்தல் தவிர்த்திகன் டாய்நள
ராதுவந்தி
வளந்துந்து கங்கையும் வானத் திடைவளர்
கோட்டுவெள்ளை
இளத்திங் களும்எருக் கும்இருக் கும்சென்னி
ஈசனுக்கே. (1)

ஆ. முடிவு

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரம்அடுக்கித் தீயாமுன் — உத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. (20)

திருச்சிற்றம்பலம், இரட்டைமணிமாலை முற்றும்.

619. பொன்வண்ணத்தந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 449 - 3
ஆ. ண/26

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சேரமான் பெருமாள் நாயனார்
ஆ. பொன்வண்ணத்தந்தாதி
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 16 பக்கம்.
ஆ. நீளம் 14. 5 செ. மீ. ; அகலம் 6 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 21, 22 வரி.
உ. அழகிய தெளிவான சிறிய கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்து இலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே.

ஆ. முடிவு

மாயன் நன் மாமணி கண்டன் வளர்சடை யாற்கடிமை
ஆயின தொண்டர் துறக்கம் பெறுவது சொல்லுடைத்தே
காய்சின ஆனை வளரும் கனக மலையருகே
போயின காக்கையும் அன்றே படைத்தது
பொன்வண்ணமே. (100)

பொன்வண்ணத்தந்தாதி முற்றும்.

620. திருவாரூர் மும்மணிக்கோவை

1. நூலகக் குறிப்புகள்

அ. 449-4
ஆ. ண/26

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சேரமான் பெருமாள் நாயனார்

ஆ. திருவாரூர் மும்மணிக்கோவை

இ. சைவத் திருமுறை

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.

ஆ. நீளம் 14·5 செ. மீ ; அகலம் 6 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 21, 22 வரி.

உ. அழகிய சிறிய தெளிவான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விரிகடல் பருகி அளறுபட் டன்ன
கருநிற மேகம் கல்முகடு ஏறி
நுண்துளி பொழிய நோக்கி ஒண்தொடி
பொலங்குழை மின்னப் புருவில் இட்டு
... ...

முடிவு

தாழ்ந்து கிடந்த சடைமுடிச் சங்கரன் தாள்பணியா
தாழ்ந்து கிடந்துறை வார்கிளை போல்அயர்
வேற்குஇரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல் திரைஎன்னும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்துஅல றித்துயி லாதுஇவ் விரிகடலே.

மும்மணிக்கோவை முற்றும். (30)

621. மாவிந்தம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 450

ஆ. ந/53

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. மாவிந்தம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 115 ஏடு ; 230 பக்கம்.

ஆ. நீளம் 36·5 செ. மீ ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 19 – 22, 31 - 35, 48, 49, 85 - 121, 159 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. 12 என்னும் ஏட்டெண் தவறுதலாக இருமுறை எழுதப்பட்டுள்ளது. சுவடியின் தொடக்கத்தில் இடப்பக்கம் பழுதடைந்துள்ளது. பொதுவாகச் சுமாரான நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

பாண்டவர் ஐவரும் பாரை ஆண்டிடில்
ஈண்டிய கலியுகம் எய்த காலையில்
பூண்டிடு மகாவிந்தம் போக என்றனர்
... ... கன்னடி வணங்குமால். (1)

ஆ முடிவு

பாண்டவர் மகாவிந் தத்தைப்
பரிவுடன் போன சொல்லை
ஈண்டியே கற்றோர் கேட்டோர்
எழுதினோர் எழுதி வைத்தோர்
பூண்டதோர் பாவம் நீங்கிப்
புத்திரசம் பத்தும் உண்டாய்
ஆண்டதோர் கரிய மால்தன்
அருள் தனைப் போற்றி வாழ்வார். (64)

இ. பிற்குறிப்பு

விசுவாவசு வருடம் ஆனி மாதம் 2 ஆம் தேதி குருவார நாள் திரயோதசி 24-3. விசாகம் 7-37 போக அனுஷ நட்சத்திரத்தில் ஆதியந்தம் பரம நாழிகை ..... க்குச் சிம்ம லக்கினத்தில் எழுதி நிறைவேறியது. முகிந்தது. முற்றும்.

சிதம்பரம் தாலுக்கா புவனகிரி இலாக்கா மஞ்சக்கொல்லை உபாத்தியாயர் வடமலைப்பிள்ளை திருவெழுத்து. குருவே துணை திருச்சிற்றம்பலம்.

5. .....

6. .....

7. *வெளியீட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

622. வில்லிபாரதம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 451

ஆ. ந/54

2. *உள்ளீடு: நூல் விவரம்*

அ. வில்லிபுத்தூரர்

ஆ. வில்லிபாரதம் : ஆதிபருவம், சபாபருவம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 461

3. *தோற்றக் கூறுகள்*

அ. 78 ஏடு ; 156 பக்கம் (ஏட்டெண் 70 முதல் 147 வரை)

ஆ. நீளம் 36·5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன. பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

முத்தநகைப் பவளவிதழ்க் குளிர்வெண் திங்கள்
முகத்தாளைக் கைந்தாயர் மொழிந்த காலைச்
சித்திரமொத்து உணர்வழிந்து தத்தம் பைம்பொன்
திகழ்அரியா சனத்திருந்தார் சிற்சில் வேந்தர்
அத்தனுவின் பெருமையையும் இலக்கத் துள்ள
அருமையையும் கருதாமல் ஆண்மை கூறி
எத்தனைஎத் தனைவேந்தர் ஆசை கூர
யான்யான்என்று எழுந்திருந்தார் யானை
போல்வார். (48)

(இது திரௌபதி மாலையிட்ட சருக்கத்தின் 48 ஆம் பாடல்)

ஆ. முடிவு

தந்தைதன் ஏவ லாலே தருமனும் தம்பி மாரும்
இந்தமண் நாடல் கைவிட்டு எரிகெழு கானஞ் சேர்வர்
முந்துற நுமதே யாகும் முழுதும்வாழ்வெழுதும் செம்பூம்
பைந்தொடை அரசர் கேட்டால் பாவமும் பழியும்
ஆகா. (33)

(இது சூதுபோர்ச் சருக்கத்தின் 33 வது பாடல். இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

623. வில்லிபாரதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 452

ஆ. ந/55

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரர்

ஆ. வில்லிபாரதம் : சபாபருவம், ஆரணிய பருவம்.

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 724

3. தோற்றக் கூறுகள்

அ. 104 ஏடு ; 208 பக்கம் (ஏட்டெண் 176 முதல் 280 முடிய)

ஆ. நீளம் 36·5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. ஓரளவு சுமாரான நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

என்னா மன்னர் முகநோக்கி
எல்லார் இதயங் களும்மகிழச்
சொன்னான் எவரும் தக்கோன்என்று
அவனுக்கு ஒருபேர் சூட்டிபின்
நன்னா மனத்தோ டழன்மூள
தயனம் சிவக்க நஞ்சின்வடிவு
அன்னான் இளவல் முகநோக்கி
அருக்கன் குமரன் அறைகின்றான். (240)

(இது சூதுபோர்ச் சருக்கத்தின் 240 ஆவது பாடல்)

ஆ. முடிவு

பின்னவர் மூவர் சேரப்
பிணங்களாய்க் கிடத்தல் கண்ட
மன்னவன் தனக்குத் தாகம்
மாறுமோ வளர்ந்து மேன்மேல்
அன்னவன் பட்டான் என்பது
இயம்புதல் கேட்டு மோமுன்
சொன்னவன் தானும் இந்தச்
சோகமோ தொடுக்க மாட்டான். (27)

(இது நச்சுப்பொய்கைச் சருக்கத்தின் 27 ஆவது பாடல். இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

624. வில்லிபாரதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 483
ஆ. ந/56

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வில்லிபுத்தூர்
ஆ. வில்லிபாரதம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 2793

3. தோற்றக் கூறுகள்

அ. 384 ஏடு ; 768 பக்கம்.
ஆ. நீளம் 31·5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகப் பழுதுற்ற நிலை. 1 - 6, 117, 297, 349 - 351 வரை ஆகிய ஏடுகள் காணப்படவில்லை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

புரந்த ரன்பதம் பெற்றபின் புலோமசை முயக்கிற்கு
இரந்து மற்றவள் ஏவலின் யானம்உற்று ஏறி
வரந்த ருங்குறு முனிமுனி வாய்மையான் ...
நிரந்த ரம்பெரும் புயங்கமா னவனும்அந் நிருபனும். (21)

(இது சம்பவச் சருக்கத்தின் முதல் சருக்கத்தில் 21 ஆம் பாடல்)

ஆ. முடிவு

இனியூழி வாழ்திரென இளைஞரொரு நால்வருடன்
அறத்தின் மைந்தன்
தனையிருத்தி மீள்வல்லாச் சாத்தகி ... ...

வினையகற்றும் பசுந்துளவோன் துவரைநகர்த்
திசைநோக்கி மீண்டான் சீர்த்திக்
கனைகடற்பார் அளித்தவரும் அந்நகரின் அறநெறியே
கருதி வாழ்ந்தார். (250)

பதினெட்டாம் போர்ச் சருக்கம் முற்றும். சௌப்திக பருவம் (முற்றும்) ஆகப்பருவம் 10 க்குச் சருக்கம் 49 க்குத் திருவிருத்தம் 4349.

இ. பிற்குறிப்பு

குரோதன வருஷம் தை மாதம் 12 ஆம் தேதி மங்கள வாரமும் சப்தமியும் அசுபதி நட்சத்திரமும் ரிஷப லக்கினமும் கூடின சுபதினத்தில் பு ..... தென்பாதியில் இருக்கும் நாராயண நாயகன் குமாரன் முத்துகிருஷ்ண நாயகனுக்கு ஸ்ரீமகாபாரதம் எழுதி நிறைவேறியது. முகிந்தது.

625. நைடதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 454
ஆ. ந/57

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அதிவீரராம பாண்டியன்
ஆ. நைடதம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 1163

3. தோற்றக் கூறுகள்

அ. 148 ஏடு ; 296 பக்கம்.
ஆ. நீளம் 37 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 7, 12, 116, 123, 124, 127, 130, 134, 154 ஆகிய எண்ணிட்ட ஏடுகளும், 156 க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. மிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தழைவிரி கடுக்கை மாலை தனிமுதற் சடையில் சூடும்
குழவிவெண் திங்கள் இற்ற கோட்டது குறைஎன்று எண்ணிப்
புழை நெடுங் கரத்தால் பற்றிப் பொற்புற இணைத்து நோக்கும்
மழைமத களிற்றின் செய்ய மலரடி சென்னி வைப்பாம்.

ஆ. முடிவு

வயிர வாட்படை மன்னவர் மன்னநீ தோற்பின்
முயல்இ லாமதி பூக்திடும் முழுநெறிக் குவளை
அயர நீண்டகட் டேவியை அளித்தியான் தோற்பின்
உயிரி னோடும்நின் உலகெலாம் தருவன் என்று உரைத்தான். (6)

(இது அரசாட்சிப்படலத்தின் 6 ஆம் பாடல். இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை.)

626. திருவிளையாடற் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 455

ஆ. ப/29

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. பரஞ்சோதி முனிவர்

ஆ. திருவிளையாடற் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 209 ஏடு ; 418 பக்கம்.

ஆ. நீளம் 41. 5 செ. மீ. ; அகலம் 3. 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 10, 11, 12 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1 — 22, 24, 25, 41, 42, 54, 55, 195, 200, 207, 215, 218 ஆகிய ஏடுகளும் 229 க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. 91 என்னும் ஏட்டெண் தவறுதலாக இருமுறை எழுதப்பட்டுள்ளது. அனைத்தேடுகளிலும் தொளைகள். மிகப்பழுதுற்ற நிலை.

எ. குறை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அனையதொல் பதியில் என்றும்
வைகுவோர்க் அடைவர் என்றால்
இணையதொல் பதிக்கு நேர்வேறு
இல்லையிப் பதியின் மேன்மை
தனை ... ...
... யெய்த லாலே
வினையைவெல் பவன்அங்கு எய்தி
வதிவதே வேண்டும் மாதோ. (19)

(இது தல விசேடத்தின் 19 ஆம் பாடல்.)

ஆ. முடிவு

ஏட நாங்கள் எழுதி யிட்ட பச்சை ஏடுஎண் ணாயிரம்
வீட வந்த நீவ ரைந்து விட்ட வோலை
யொன் றுமேன்
வாட வின்றி நீரி லிட்ட வண்ண மான தால்இதுஉன்
பாட லஞ்செய் விச்சை கொண்டு பாவ
கற்பி ணித்தமே. (43)

(இது 63 ஆவது சமணரைக் கழுவேற்றின படலத்தின் 43 ஆம் பாடல். இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை.)

5. ....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

1 : 291, 455, 903, 904; 4 : 10151, 10152, ; 16 : 605 - 607 ; 17 : 149, 185 ; 18 : 6589 ; 19 : 3027, 3084 ; 25 : 600 – 605 ; 27 : 901 ; 28 : 10875 ஏ ; 31, 47, 49 ; 55 : பி 23 ; 60 : 289-291.

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

627. காசி காண்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 456
ஆ. ப/30

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அதிவீரராமபாண்டியன்
ஆ. காசி காண்டம்
இ. தல புராணம்
ஈ. செய்யுள் 1960

3. தோற்றக் கூறுகள்

அ. 143 ஏடு ; 286 பக்கம்.
ஆ. நீளம் 34 செ. மீ. ; அகலம் 4 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. தெளிவான அழகிய கையெழுத்து.
ஊ. 2, 3, 11, 48, 59, 108, 109, 122 - 127, 133 - 136 ஆகிய ஏடுகளும் 159 க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப் படவில்லை. மிகமிகப்பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பூத்த செழுந்தரங்கத் தீப்புனல்மந்
தாகினிதண் தேனார் கொன்றைத்
தார்பூத்த செஞ்சடையில் அணி ... .
... ...
கார்பூத்த விருவிசும்பிற் கங்கைநதி
சூழ்கிடந்த காசி வாழும்
ஏர் பூத்த தனிமுதலின் இணையடிப்பூங்
கமலமலர் ஏத்து வாமே. (1)

ஆ. முடிவு

குரைதி ரைக்கடல் குடங்கையின் ஏந்துபு குடித்த
அரும றைப்பொருள் தெரிந்தருள் அகத்திய முனிவ
தரும தீர்த்தநன் கதையினைச் சாற்றுவல் என்னப்
பொருவின் மாமுதல் தடிந்தவேல் புங்கவன் புகலும். (1)

(இது 81 ஆவது அத்தியாயத்தின் முதற்பாடல். இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

628. திருக்குறள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 457
ஆ. ங/8

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருவள்ளுவர்
ஆ. திருக்குறள்: பரிமேலழகர் உரையுடன்
இ. பதினெண்கீழ்க்கணக்கு
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 400 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 184 ஏடு ; 368 பக்கம்.
ஆ. நீளம் 33·5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகமிகப்பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரசனால் யாம் நன்கு மதிக்கப்பட்டோமென்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யார்; துளக்கு அற்ற காட்சியவர் — நிலைபெற்ற அறிவினையுடையார்.

கொள்ளாதன செய்து அழிவெய்துவார் கொளப்பாட்டிற்குப் பின் தம்மை வேறொருவராகக் கருதுவராகலின் முன்னையராகவே கருதி அஞ்சியொழுகுவாரைத் துளக்கு அற்ற காட்சியவர் என்றார். (9)

(இது 699 ஆம் குறளின் உரை)

ஆ. முடிவு

நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்
காணார்கொல் இவ்வூரவர்.

எ...து இதுவுமது.

இவ்வூர் மகளிர் நனவின்கண் நம்மை நீத்தாரென்று நம் காதலரைக் கொடுமை கூறா நிற்பர். அவர் கனவின் கண் நீங்காது வருதல் கண்டறியாரோ எ...று.

என்னொடு தன்னிடை வேற்றுமை இன்றாயின் யான் கண்டதுதானும் கண்டமையும். அது காணாது அவரைக் கொடுமை கூறுகின்றமையின் அயலாரேயாம் என்னும் கருத்தால் இவ்வூரவள் என்றார். (10)

(இது 1220 ஆவது குறளும் உரையும்.)

629. கூர்ம புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 458
ஆ. ந/58

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. கூர்ம புராணம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 155 ஏடு; 310 பக்கம். (ஏடு 91 முதல் 245 வரை)

ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. மிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சேதுவி னேயதி வரிசிலை ராமன்
சினகா மணிபெறக் கோவி
யாதியு முடிவும றிவுறா விலிங்கந்
தன்பெயர் ரவினித மைத்துக்
கூதுலீங் கனிவா யணங்கொடு மிளவா
னோடுஞ் சூழ்ந்துநின் றிறைஞ்சித்
தாதவிழ் மலர்தூய நெஞ்சங் குழைந்து
தடங்கணீ ரொழுகிடத் துதிப்பான். (1)

ஆ. முடிவு

பங்கமில் சிறப்பு வாய்ந்த
பாரத வருடந் தன்னில்
துங்கநீண் மலையஞ் சையஞ்
சுத்திமா னிருக்க மவிந்த
மங்குல் கண்படுக்கும் பாரி
யாத்திர மயே ... ...
... ...

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. ....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

1 : 104, 136, 458 ; 8 : உஏ ; 16 : 548, 549, 2267, 2470, ஆர். 2660, ஆர். 5283, ஆர். 5494 ; 18 : 3871, 3901 பி, 3977 ; 19 : 2988 ; 25 : 460, 461 ; 26 : 37 ; 27 : 265-267 ; 28 : 15398 ; 45998 ; 31 : 59, 66 ; 55 : கியூ 2, பி 24 ; 60 : 318–320.

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

630. கந்தபுராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 459

ஆ. ந/59

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கச்சியப்பசிவாசாரியர்

ஆ. கந்தபுராணம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 1600

3. தோற்றக் கூறுகள்

அ. 136 ஏடு ; 272 பக்கம்.

ஆ. நீளம் 43 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 முதல் 11 வரை ; பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1 - 25, 32 - 41, 49, 50, 52, 61, 62, 66, 81 - 95, 149, 150, 159, 162, 163, 186, 187 ஆகிய ஏடுகளும் 199-க்கு மேல் இருக்கவேண்டியனவும் காணப்படவில்லை. மிகமிகப்பழுதுற்ற நிலை.

எ. குறை

சு. வி. 11

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பெருமைகொள் குலத்தனில் பிறந்து செய்திடும்
விரதமும் சீலமும் வினைகள் மாற்றிட
வருதலும் பிறக்குமால் அங்கம் விட்டுஉயிர்
பரவுதல் விடெனப் பகரு வார்சிலர். (26)

(இது பாயிரப்படலத்தின் 26 ஆம் பாடல்)

ஆ. முடிவு

வானவர் தன்னையும் வன்னி தன்னையும்
ஏனையர் தன்னையும் முடிப்பன் இன்றுஎனாத்
தேனி ... இதழியத் தேவன் மாப்படை
ஆனதை எடுத்தனன் ... ... தியே. (48)

(இது திக்குவிசயப்படலத்தின் 46 ஆம் பாடல். இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை.)

631. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 460

ஆ. ல/98

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 166 ஏடு ; 332 பக்கம்.

ஆ. நீளம் 23·5 செ.மீ. ; அகலம் 3·5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 106, 107, 109, 110, 112, 113 ஆகிய ஏடுகள் காணப்பட வில்லை. உள்ளவை பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(முதலில் "வெள்ளைக் கலையுடுத்து" எனத் தொடங்கும் கலைமகள் வாழ்த்து.)

சீரகாதி சூரணம் : ஈரச் சீரகம், கருஞ்சீரகம், கொடுவேலி வேர்ப்பட்டை, தேவதாரம், சடைச்சி, வெள்கடுக்காய், மஞ்சள், மரமஞ்சள், கோட்டம், சிவதைவேர், திப்பிலி, இந்துப்பு, வசம்பு, நேர்வளம், பெருங்காயம், வாய்விளங்கம் இது சமனாகக் கூட்டிச் சூரணம் பண்ணி, இந்த நிறைக்கு வடக்குப் போன இலைக்கள்ளி வேர்ப்பட்டை உலர்த்திச் சூரணம் பண்ணி இரண்டு சூரணமும் கூட்டிக் கலந்து புதுக்கலசத்திலிட்டு. ஒரு காசெடை ஒன்றரைக் காசெடை ஆள் பலம் அறிந்து, தேன், நெய், வெந்நீரில் கொள்ள பெருவயிறு, சலோதரம்,..... அகுவை இதுவெல்லாம் தீரும்.

ஆ. முடிவு

கந்தக ரசாயனம் பண்ணும்படி : கந்தகம் ... 6, திரிகடுகு, திரி...ணம், வாய்விளங்கம், திரிபலை, ஏலம், இலவங்கம், இலவங்கப் பத்திரி, கிராம்பு, சணல் விரை, சேங்கொட்டை, இது ஓரொன்று ஒரு பலமாகக் கூட்டிச் சேரச் சூரணம் பண்ணித் தினம் ஒரு காசெடை நெய்யிற் கொள்ளவும். குட்டம் பதினெட்டு, கிராணி பதினாலு, பயித்தியம் முப்பத்து நாலு, பஞ்ச குன்மம், மந்தாக்கினி, தாதுவீரியம், ஆயிசு, வாததினை, தேக காந்தி, பலம் இவை எல்லாம் உண்டாம். வியாதி நன்றாய்த் தீரும். வங்காளச் சீனி இந்தச் சூரணம் பாதிக்கு இடவும்.

632. இராமதேவர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 461

ஆ. p/28

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் சூத்திரம் 10
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 28 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காணப்பா ஏரியிலே வளர்ந்து பிண்டம்
கடிதான மாமிசத்தோடு எடுத்து வந்து
பூணப்பா பொரிகாரம் பொரித்துக் கொண்டு
பிண்டத்தின் வாய்பிளந்து அதனில் போடு
ஆணப்பா பெண்ணோடே கூடி னாற்போல்
அப்பனே நாதம்அங்கே இறங்கும் பாரு
தோணப்பா லோகத்தால் சட்டி ஒன்றில்
சுகமாக யெணங்கணையும் அதனுள் போடு. (1)

ஆ. முடிவு

ஆடலாம் இதனாலே கோடா கோடி
அளவற்ற வித்தையெல்லா மிதுக்கு ரைச்சு
ஓடலாம் இதனாலே குளிகை செய்து
உசத்தியுள்ள மலைகளெல்லாம் ஏறப் பார்க்க

நாடெல்லாம் திரிந்தாலும் இந்தப் போக்கு
நல்லமுறை இதுபோலே எங்கும் இல்லை
பாடல்பெறச் சொன்னதென்று எண்ணி டாதே
பற்றமே சூத்திரந்தான் பாடல் முற்றே. (10)

5. பிற செய்திகள்

இந்நூலில் இரசவாதம் கூறப்பட்டுள்ளது.

633. மருத்துவக் குறிப்புகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 462
ஆ ல/99

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. மருத்துவக் குறிப்புகள்
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு ; 34 பக்கம்.
ஆ நீளம் 26 செ. மீ. ; அகலம் 4·5 செ. மீ
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பலவித வரி.
உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து.
ஊ. 11 ஆம் ஏடு காணப்படவில்லை. பல ஏடுகள் பழுதடைந்துள்ளன.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ரச கற்பூரத்தைச் செம்பருத்தித் தழையை இடித்து, பெரிய பானையிலே போட்டு,குறுணித்தண்ணீர் விட்டு ... கட்டி ... இட்டு

ஆறினதின் பிறகு தண்ணீர் ... ஒரு சாண் குழி தோண்டி பாதிக் குழிக்கு மணல் போட்டு மேலே ... பச்சிலைக்குள்ளே கற்பூரத்தை வைத்துக் குழியில் வைத்து, மேலே மணல் போட்டு, நாலு எருவை வைத்துப் புடம் போடவும். ஆறினதின் பிறகு எடுத்துக் கொள்ளவும். ரச கற்பூரம் சுத்தியாச்சு.

ஆ. முடிவு

தாளக சிந்தூரம் : தாளகத்துக்கு மயூர சிகையை அரைத்து வெங்காரம் வெடியுப்பும் அரைத்து கவசங் கொடுத்து, பச்சை, இலையில் பொதிந்து, மூன்று சீலை மண்செய்து, காடைப்புடம் போடச் சிந்தூரம் ஆகும்.

634. ஆரூட நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 463

ஆ. வ/18

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. ஆரூட நூல்

இ. சோதிடம்

ஈ. உரைநடை. அச்சில் சுமார் 25 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 64 ஏடு ; 128 பக்கம்.

ஆ. நீளம் 17 செ. மீ. ; அகலம் 2. 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 45 - 47, 50, 57, 61, 63 - 65, 68 -70, 73 - 80, 83 ஆகிய ஏடுகளும் 84க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தேவர்கள் சகாயத்தினாலே சகாதேவர் பொய்யாமொழி உரைத்தது எப்படி என்னில் நூற்றெட்டுக்குள்ளே மூன்று இலக்கம் சொல்லச் சொல்லி, எட்டிலே கழித்துக் கொண்டு, மிச்சம் இவ்வளவு என்று பார்த்து, எட்டுக்கு உட்பட்டது ஒன்று மிஞ்சினால் முதல் ஏடு முதல்வரி, ரெண்டு மிஞ்சினால் இரண்டாம் ஏடு இரண்டாம் வரி, மூன்று மிஞ்சினால் மூன்றாம் ஏடு மூன்றாம் வரி, ... இந்தப் படி இலக்கம் பார்த்துக் கொள்ளவும்.

ஆ. முடிவு

கடைச்சரக்கு கொள்ள விற்க முதலாய்ப் பலிக்கும்.
புடவை கொள்ள நன்றாய் ஆதாயம்
புதைத்த உடைமை வருத்தத்தினாலே காணும்
நாலுகால் சீவன் கெட்டது காணும்.

635. வில்லிபாரதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 464

ஆ. ந/60

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரர்

ஆ. வில்லிபாரதம் : மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 250 ஏடு ; 500 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. 93 என்னும் ஏட்டெண் தவறுதலாக இரு முறை எழுதப் பட்டுள்ளது. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

படர்ந்த கானகம் திரிந்துமீண்டு
அன்புடன் பணிந்த பஞ்சவர்க்காக
கடந்த ஞானியர் கடவுளர்
காண்கிலாக் கழல்இணை சிவப்பேற்
தொடர்ந்து நான்மறை பின்செலப்
பன்னகர துவசன்மா நகர்தூது
நடந்த நாயகன் கருமுகில்
வண்ணனை நயனம்விட்டு அகலாதே.

(இது யுத்தச் சருக்கத்தின் முதல் பாடல்)

ஆ. முடிவு

கடோர்க்கச சேனன் இரத்தினங்களும் விசங்களும் கக்கப்பட்ட சர்ப்ப தேதனனான துரியோதனன் அண்டையில் போனதும் தருமபுத்திரர் சொன்னபடி சொன்னதும் அவ்விடத்திலிருந்த ராசாக்கள் சொன்னதும் துரியோதனன் சொன்ன உதாசீனத்துக்குத் தான் சொன்ன பிரதியுதாசீனமும் அடைவுடனே ஸ்ரீ கிருஷ்ண தேவருடனும் அருச்சுனனுடனும் தருமராசனுடனும் சிங்கக்கொடி படைத்த வீமசேனனுடனும் சொன்னான் கடோர்க்கசன் என்றவாறு. (257) பதின்மூன்றாம் நாள் யுத்தம் முற்றும்.

5. .....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

18 : 6324, 8821, 8887, 10360, 10375, 10384 ; 27 : 64, 84, 86-94, 699 ; 28 : 10659 ; 60 : 269, 270.

636. வர்மநூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 465
ஆ. ற/29

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. பெயர் தெரியாத ஒரு வர்ம நூல்
இ. பல்வகை நூல்கள்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 35 ஏடு ; 70 பக்கம்.
ஆ. நீளம் 17 செ. மீ ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ பக்கத்திற்கு 5 வரி.
உ. மிகமிகக் கிறுக்கலான கையெழுத்து.
ஊ முதல் 10 ஏடுகள் காணப்படவில்லை. ஏடுகள் ஆங்காங்கு பழுதடைந்துள்ளன.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஈலட்சணம் கண்டில் நேரே மறுவசம் தட்டியால் ஆஞ இளகிப் போகும். ஈ வர்மத்தினும் இருவிரல் ...மேல் அதிகாந்த வர்மம் உண்டறிக. ஈ வர்மத்தினு கொள்ளும் ..... அடிச்சவனே அடுத்தடுத்து இடதுகால் கொத்தி வலதுகை குரல் பெருக்கிக் கொள்ளுக. ஆள் விழும்.

ஆ. முடிவு

.....வெட்டு தீர்த்துக் கொள்ளுக. ஆஞ பேர் நட்சயம் தீரும். 5 மாத்திரை அறியாதே செய்து போயங்கில் அனர்த்தம் புலிக்கும்.

5. பிற செய்திகள்

இது தமிழ் எழுத்தில் உள்ள மலையாள மொழி நூலாகத் தோன்றுகிறது.

637. இராமர் கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 466
ஆ. ர/6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. இராமர் கதை
இ. நாட்டுப்பாடல்
ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 232 ஏடு ; 464 பக்கம்.
ஆ. நீளம் 42·5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கம் இரு பத்தியாகப் பிரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. பத்திக்கு 6, 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முதலில் "நாடிய பொருள் கை கூடும்" என்னும் செய்யுளும், தொடர்ந்து ஒரு விநாயகர் காப்பும் எழுதப்பட்டுள்ளது.

சீர்மேவு தென்சுசீந்தை புரிசிவதா ணுமாலயனார்
தினம்மேவு மையபிராமி சிவகாமி யேசரணம்
தார்மேவிய அரிராகவன் தாமோதர ராமன்
தனைப்பாடவும் எனைக்காத்தருள் தந்திமா
முகத்தோனே.

முடிவு

மாதவர் கொற்றவர் நீதம்பி குத்தவர் வாழ்க நீடூழிக்கு
மங்களம்

மன்னவர் தென்னவர் ஏறுஎன் உயர்தேசிகர் நீடூழிக்கு
மங்களம்

தேசிகன் செயலிதுமை ..... பொருள் செப்பென்று
உரைப்பவர்க்கும் மங்களம் மங்களம்.

ஸ்ரீராமஜெயம். இராமர் கதை முகிந்தது. முற்றும்.

638. காளிநாடகம்

1 நூலகக் குறிப்புகள்

அ. 467
ஆ. ற/30

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ காளி நாடகம்
இ. பல்வகை நூல்கள்
ஈ செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு ; 44 பக்கம்.
ஆ. நீளம் 34 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பலவிதவரி.

உ. படிக்கவே இயலாதபடி மிகமிகக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. வாரிப்பதப் படுத்தப்படாத இரட்டை ஓலைகளாலான சுவடி: மிகச் சிதைந்த நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

..... அரனாருட திருநயனம் தன்னில் உக்கிரதயோடு பிற... காளிவாக வாளோடு ..... சூலம் வலிதட ..... கழுத்தில் கன்னல்கதிகமால சூல மக்கித மொள்ள தோராயுத மெல்லாம் காலாயித்திரனு.....

ஆ. முடிவு

... மேல் எழுந்தருள்க, ஸ்ரீ பத்திரகாளி உன் திருப்பாதம் நமோ நமோ நமோ நமஹ:

5. பிற செய்திகள்

இச் சுவடியின் தலைப்பில் காளி நாடகம் என எழுதப் பட்டிருப்பினும் இது நாடகம் அன்று. காளியின் வழிபாட்டுப் பாடல்களும் மந்திரங்களும் உள்ளன. கையெழுத்து சற்றும் தெளிவாக இல்லை. ஏடுகளும் சிதைந்துள்ளன. அதனால் நூலின் வடிவம் விளங்க வில்லை.

639. கும்பமுனி சோதிடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 468

ஆ. வ/19

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. குப்டமுனி

ஆ. கும்பமுனி சோதிடம்-சாந்தி தீபம்

இ. சோதிடம்
ஈ. செய்யுள் 52

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 22 பக்கம்.
ஆ. நீளம் 23 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பராபரியாய் நின்றபரி பூரணம் காப்பு
பரவெளியாம் நித்தவெளி ஞானம் காப்பு
நிராதார மாயமய தீபம் காப்பு
நிஷ்களா னந்தத்தின் பொருளே காப்பு. (1)

ஆ. முடிவு

ஆரப்பா இந்தநூல் கொடுக்கப் போறார்
அவனியிலே கிடையாது அரிதாம் அப்பா
சீரப்பா மெஞ்ஞானி ஆனோர் முன்பும்
தெய்வபக்தி மிகஇருந்தோர் முன்பில் காணும்
நேரப்பா அவர்களுட பாதம் போற்றி
நீமறவாது இருந்தக்கால் உனக்குக் கிட்டும்
தேரப்பா இதையறிந்து உலகில் சொன்னால்
தேவரினும் உனைப்பெரிதாய்த் தேடு வாரே. (52)

640. சோதிட சிகாமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 469
ஆ. வ/20

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. சோதிட சிகாமணி

இ. சோதிடம்

ஈ. செய்யுள் 133

3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு ; 62 பக்கம்.

ஆ. நீளம் 23 செ.மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இலக்கினம் உதயம் சீர்த்தி மூர்த்திமான் என்ப தாகும்
இலக்கினத் ததிபன் ஆட்சி உச்சம்நட்பு ஏறி நிற்க
இலக்கினத் ததிபன் ஆனோன் கேந்திரத்ரி கோணம்
எய்த
இலக்கினம் தன்னை அந்த அதிபனை ஏழின்கோன்
நோக்க. (1)

ஆ. முடிவு

திண்ணமாம் கர்ம நாதன் வியனுடன் கூடப் பார்க்க
வண்ணமாம் சுபரே பார்க்கில் சொர்க்கமே வாய்க்கும்
கர்மன்
கண்ணதாம் வியனைக் கூட அன்றியும் பார்வை
கண்டால்
எண்ணிலாச் சொர்க்க லோகம் இயற்கையாய் வாய்க்கும்
தானே. (133)

5. பிற செய்திகள்

சோதிட சிகாமணி என்ற நூலிலிருந்து 12 பாவபலன்கள் மட்டிலும் எடுத்து எழுதப்பட்டுள்ளது போலும்.

641. மயன் நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 470

ஆ. ற/31

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. மயன் நூல்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு ; 14 பக்கம்.

ஆ. நீளம் 23 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பலவிதவரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அயனார் விதியின் முறைப்படிக்கு
ஆயும் தமிழ்கள் தெரிந்து
மயனால் வேத சாத்திரங்கள்
மனுஷர் தேவர் சகலருக்கும்
பயனாய்ப் பொருத்தம் சிற்பமுறை
பதினான் கதனில் பதினொன்றும்
சியமாய்ப் பார்க்கும் குறுக்குவழி
செகத்தில் உரைத்த வகை இதுவே

ஆ. முடிவு

97 க்கு 19 ; 98 க்கு 46 ; 99 க்கு 73 ; 100 க்கு 100. ஆக வயது சரி. குறுக்குவழி ஆயாதி முற்றிற்று.

642. சுர சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 471
ஆ. வ/21

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. சுர சாத்திரம் (சோதிடப்படி)
இ. சோதிடம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 23 செ. மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5, 6 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்...

அசுபதியில் வந்த சுரம் நாலு நாளையில் விடும் ;
விடாதாகில் பன்னிரண்டாம் நாளையில் விடும்.
பரணியில் வந்த சுரம் ஐந்தாம் நாளில் விடாதாகில்
பதினைந்தாம் நாளில் மரணம்.

ஆ. முடிவு

உத்திரட்டாதியில் வந்த சுரம் எட்டாம் நாளில் விடும் ;
விடாதாகில் இருபதாம் நாளில் விடும்.

ரேவதியில் வந்த சுரம் ஆறாம் நாளில் விடும் ;
விடாதாகில் பதினெட்டாம் நாளில் மரணம்.

643. சங்கராசாரியர் நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 472

ஆ. வ/22

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. சங்கராசாரியர் நூல்

இ. சோதிடம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு ; 54 பக்கம்.

ஆ. நீளம் 23 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சாதகபலன் அறியும்படி :

இலக்கினத்திற்கு மூன்றாமிடத்துக் குடையவனும் ராசிக்கு உடையவனும் ஒரு ராசியிலே கூடியவரை ராகுவாவது

கேதுவாவது பார்க்க அவர்களுடனே கூடித்தானிருக்க ஒரு இலக்கினத்திலே இரட்டைப் பிள்ளை பிறக்கும். அந்த இலக்கினத்திற் குடையவனும் ராசிக்குடையவனும் ஆண்கிரகமாகில் ஆண்பிள்ளை இரண்டு; பெண்கிரகமாகில் பெண்பிள்ளை இரண்டு; ஒன்று ஆண் ஒன்று பெண் ஆகில் அப்படியே.

ஆ. முடிவு

வலவோட்டு அசுபதி முதற்காலுக்கு வருஷம் 100. 2 ஆம் காலுக்கு வருஷம் 85. மூன்றாம் காலுக்கு வருஷம் 83. 4 ஆம் காலுக்கு வருஷம் 86.

சங்கராசாரியர் நூல் முற்றிற்று.

644. வருடாதி நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 473

ஆ. வ/23

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. இடைக்காடர்

ஆ. வருடாதி நூல் (வருட பலன்)

இ. சோதிடம்

ஈ. செய்யுள் 60

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்.

ஆ. நீளம் 23 செ. மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இருபக்கம் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிப் பிலவத்தில் அம்புவியில் மானிடர்க்குச்
சோதனையாய்ச் சாவுதுன்பம் தோணுமே — நீதி
தருபசுக்கள் மேயத் தலைமழை உண்டாம்
பருத்திஉப்பு ஆமணக்கு பாழ். (1)

ஆ. முடிவு

அட்சயத்தில் மாரிவிளைவு அற்பம்எனச் சொன்னாலும்
நற்செயல்கள் மேவும் நலமுண்டாம் — இப்புவியில்
மாரியுண்டு வெள்ளாண்மை வாவுறவே தான்விளையும்
சீரணங் வொருந்தீரும். (60)

இடைக்காட்டார் சாத்திரம் முற்றிற்று.

(ஈற்றடி தவறாக எழுதப்பட்டுள்ளது.)

645. சோதிட நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 474

ஆ. வ/24

2. உள்ளீடு: நூல் விவரம்

அ .....

ஆ. பெயர் தெரியாத ஒரு சோதிட நூல்

இ. சோதிடம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு ; 72 பக்கம்.

ஆ. நீளம் 23 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நட்சத்திரம் மிருகம் பட்சி விருட்சம் கணம்
அகபதி குதிரை ராசாளி எட்டி தேவகணம்
பரணி குலயானை காக்கை நெல்லி மனுஷகணம்
கார்த்திகை வெள்ளாடு மயில் அத்தி ராட்சதகணம்
ரோகணி நல்லபாம்பு ஆந்தை நவ்வல் மனுஷகணம்.

ஆ. முடிவு

கால் நீளம் இரு நாலு செய்து கதவின் படிக்கு நிலை ஆறரை செய்து பாகம் நவபாகமிட்டுக் கீழு நாலுமேலஞ்சுமே அதி அதிமம் ஒன்பது செய்து அஞ்சில் எட்டில் கண்டு காண ஏறும் விரல் ஒன்றும் ஒன்றரை உண்மையானபடி ஒக்குமே.

(இது வீடு கட்டுவதற்குரிய சோதிடக் குறிப்பு)

646. தொடுகுறி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 475

ஆ. வ/25

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....

ஆ. தொடுகுறி சாத்திரம் - சீதா சக்கரம்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு ; 62 பக்கம்.

ஆ. நீளம் 18 செ. மீ. ; அகலம் 2· 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பலவித வரி.

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

எட்டுடன் மூன்று நாலு ஏகமொன் றைந்தோன் பஃது
சட்டமாய் ஆறும் ஏழு தன்னுடன் இரண்டும் கூட்டி
இட்டமாய் நிலத்தில் கீறி எழுதிய லக்கம் பார்க்கில்
தொட்டது குறி தன்னைச் சுகப்பட அறிந்து சொல்லே,

ஆ. முடிவு

மாடு போனது வடதிசையில் காணும்; களவு போனது காணும்; பூமி பலிக்கும்; இராச பலன் உண்டு; புத்திர பலன் உண்டு, ஆண் பெறுவாள்; போனார் ஒன்பது நாளையிலே வருவார்; சோபனம் கலியாணம் முடியும்; வழக்கு வெல்லும்; சிறைவிடுதியாகும்; வந்த இடைஞ்சல் ஐந்துநாளிலே தீரும்; மனை எடுக்க நன்று; மழை பெய்யும்; உத்தமம் நன்று.

647. சோதிட நூல்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 476

ஆ. வ/26

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. .....

ஆ. பெயர் தெரியாத ஒரு சோதிட நூல்.

இ. சோதிடம்.

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ10 பக்கம் வரும்.

3. *தோற்றக் கூறுகள்*

அ. 11 ஏடு; 22 பக்கம் (ஏட்டெண் 25 முதல் 35 முடிய)

ஆ. நீளம் 23 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மேடம் $4\frac{1}{4}$ இடபம் $4\frac{3}{4}$ மிதுனம் $5\frac{1}{4}$ கடகம் $5\frac{1}{2}$ சிங்கம் $5\frac{1}{4}$ கன்னி 5 துலாம் 5 விருச்சிகம் $5\frac{1}{4}$ தனுசு $5\frac{1}{2}$ மகரம் $5\frac{1}{4}$ கும்பம் $4\frac{3}{4}$ மீனம் $4\frac{1}{4}$.

ஆ. முடிவு

அரவொடு சனியே திங்கள் அருக்கனே உறவு ஆகும்
பரவிய குருவே ஆட்சி பார்க்கவன் உச்சன் ஆகும்
தரைமகிழ் புதனே நீசம் தரைமகன் பகைஅது ஆகும்
கரவு இலாக் கயஎனோர்க்கே கனங்குழை மடந்தை
கேண்மோ. (12)

648. சானந்தகணேசர் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 477

ஆ. ந/61

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. பவழப்பாடிப் புலவர்

ஆ. சானந்தகணேசர் புராணம் : மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும் அச்சில் ஏறத்தாழ 275 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 233 ஏடு ; 466 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ. ; அகலம் 2· 5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 5, 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பருதி மதிதீ எனும் மூன்றும்
பார்வை யாகத் திகழ்ந்திடினும்
கருகு திமிரம் புலராத
களத்துளம் பெருமான் மலைவில்லோன்
சுருதி பரவும் இமயமகள்
துணைவன் நாமப் புணைபற்றிப்
பெருகு துயரத் திரையொழியப்
பிறவிக் கடலை அகற்றுவாம்.

ஆ. முடிவு

நிருமலம் உடையவெண் ணீறு வாழ்கவே
வரம்அருள் கண்டிகை மாலை வாழ்கவே
ஒருதிரு வஞ்செழுத்து ஓங்கி வாழ்கவே
அரனருள் பெற்றபேர் அன்பர் வாழ்கவே.

(எ-து) பரிசுத்தமான வெண்ணீறு வாழ்ந்திருக்கவும், வரந்தரப் பட்ட உருத்திராட்சமும் வாழ்கவும், ஒருமைப்பாட்டாகிய திருமந்திரம் என்னும் பஞ்சாட்சரமும் வாழ்க, சிவனடியார்களும் பெருமையுடனே வாழ்ந்திருக்கச் சொல்லியதென்றவாறு. (45)

கயிலைச் சருக்கம் முற்றும். ஆகச் சருக்கம் 7 க்குத் திருவிருத்தம் 497.

சானந்த கணேசர் புராணம் எழுதி முகிந்தது. முற்றும்.

5. .....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

1 : 338, 477 ; 16 : 574, 575 ; 17 : 190 ; 25 : 473-475 ; 32 : 109 ஏ.

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

649. நைடதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 478
ஆ. ந/62

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அதிவீரராம பாண்டியன்
ஆ. நைடதம் : மூலமும் உரையும்
இ. காப்பியம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 700 பக்கம். வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 311 ஏடு ; 622 பக்கம்.
ஆ. நீளம் 44 செ. மீ. ; அகலம் 3· 5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 12 என்னும் ஏட்டெண் தவறாக இருமுறை எழுதப் பட்டுள்ளது. பொதுவாக நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தழைவிரி கடுக்கை மாலை
தனிமுதற் சடையில் சூடும்
குழவிவெண் திங்கள் இற்ற
கோட்டது குறை என்று எண்ணிப்
புழைநெடுங் கரத்தாற் பற்றிப்
பொற்புற இணைத்து நோக்கும்
மழைமத களிற்றின் செய்ய
மலரடி சென்னி சேர்ப்பாம்.

ஆ. முடிவு

ஆழி சூழ்புவி முழுவதும் ஆழி ஒன்று உருட்டி
வாழி நல்லறம் புரிதரு ... ...
சூழி மால்வரைப் பிடர்உறு சுமை ஒழித்து ஆற்றிப்
பாழி அம்புயத்து உலகுஎலாம் பரித்துஇனிது இருந்தான்.

(எ - து) சமுத்திரஞ் சூழ்ந்த பூலோக ..... சக்கிரம் செலுத்தி, நல்ல தர்மங்களைக் கொடுக்கின்ற அளவற்ற யாகங்கள் செய்து, முகபடமான வஸ்திரமணிந்து பருவதம் போலிருக்கிற அஷ்டக கஜங்களுடைய பிடரியிலிருக்கிற சுமையான பூலோகங் கமை எல்லாம் நீதியுடனே மலைபோன்ற தன்னுட புசங்களிலே தாங்கி மகா அதிக நீதியுடனே ராசரீகம் செய்துகொண்டிருந்தான் நளச்சக்ரவர்த்தி மகாராசன் வாழி என்றவாறு (15)

அரசாட்சிப்படலம் முற்றும். ஆகப்படலம் 28க்குத்திருவிருத்தம் காப்பு உள்பட 1175.

இ. பிற்குறிப்பு

விசைய வருஷம் பங்குனி மாதம் 24 -ம் தேதி சுக்கிரவார நாள் ஏகாதசியும் திருவோணை நட்சத்திரமும் அமர பட்ச மும் சிங்க லக்கினமும் கூடிய சுபதினத்திலே பெரும்புலியூரிலிருக்கும் ராமு ரெட்டியார் மருமகன் வரகுப்பை ராமு ரெட்டியார் நைடதம் எழுதி நிறைவேறினது முற்றும்..

5. பிற செய்திகள்

இவ்வுரையாசிரியர் சிதம்பரத்தில் வாழ்ந்திருந்த சிவப்பிரகாசர் என்னும் சைவ ஆசாரியர் என்பதும், அவருடைய தந்தையாரின் பெயர் ஆயுடைநாயகன் என்பதும் இச் சுவடியிலுள்ள பின்வரும் பாடலால் அறிய வருகின்றது.

இதம்தரும்இந் நளன்சரிதைக்கு உரைசெய்தான்
அம்பலத்தில் நித்தன் ஆடும்
சிதம்பரத்தில் கீழக்கோபுரம் அதனில்
செயக்கொடியைச் சேர்த்து அன்பாக
நிதம்பரனைப் பணிந்துசைவ சித்தாந்த
சாஸ்திரம்சொல் நியம வாசன்
விதம்பெறும் ஆவுடைநாதன் தரும் சிவப்பிர
காசன்என விள பு வாரால்.

இவ்வுரையை ஆக்குவித்தவன் ஆறுநாட்டு வேளாளரில் ஓமாந்தூரில் இருக்கும் வினை தீர்த்தான் பூசாரியாரின் மகனான தெய்வராய பூசாரி என்ற ஒரு குறிப்பும் இச்சுவடியில் உள்ளது.

650. தொடுகுறி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 479
ஆ. வ/27

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...
ஆ. தொடு குறி சாத்திரம் - சீதா சக்கரம்
இ. சோதிடம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு ; 18 பக்கம்.
ஆ நீளம் 23 செ. செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. முதல் ஏடு காணப்படவில்லை. ஏட்டின் இடப்பாகம் சற்றுச் சிதைந்துள்ளது. பொதுவாக நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒன்றதைத் தொட்டு நின்று
உன்னிய கருமம் கேட்கில்
நன்றதாய்ப் பொருள்வந்து எய்தும்
நலமுடன் வரவு சொல்லும்
கன்றிய கல(க)ம் தீரும்
கனமழை மிகஉண் டாகும்
சென்றிடம் எல்லாம் வெற்றி
சீதையின் அருளி னாலே. (1)

ஆ. முடிவு

இதற்குத் தெய்வம் ஈசுபரன், பெருமாள், கந்தசுவாமி, பெண் தேவதை உண்டு. பயிர் வாடாது. செட்டுப் பிலிக்கும். அவிழ்தங் கொள்ள நன்று. வழக்கு வெல்லும். நினைத்த காரியம் கைகூடும். நன்று. உத்தமம்

சீதா சக்கரம் முற்றும்.

651. சூடாமணி நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 480

ஆ. ச/26

2. உள்ளீடு : நூல் விவரம்

அ மண்டல புருடர்

ஆ. சூடாமணி நிகண்டு 11 ஆம் தொகுதி : மூலமும் உரையும்

இ இலக்கணம்

ஈ செய்யுளு ம் உரை நடையும். அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 65 ஏடு ; 130 பக்கம்.

ஆ. நீளம் 45 செ. மீ ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1 - 28, 30 - 33, 39, 40. 79, 100-க்கு மேல் இருக்க வேண்டியவை ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீதையே பொன்னாங் காணி
படைச்சால்சீ ராமன் தேவி
மேதைதோல் பதன்இ றைச்சி
மிக்கபேர் அறிவு கள்ளாம்
கோதைமுன் கைத்தோற் கட்டே
குழல்தார்காற்று ஓழுங்கு சேரன்
ஓதைபேர் ஒலிம திற்பேர்
ஊக்கம் தீ இடைஆன் ஏறு. (10)

(இது பதினொன்றாவது தொகுதி.)

ஆ. முடிவு

சானகி என்பது சீதை ; மூங்கிலுக்கும் பெயர். தனு என்பது உடம்பு, வில், சிறுமைக்கும் பெயர். சானு என்பது மலை, முழங்கால், மலைச்சாரலுக்கும் பெயர். சோனை என்பது திருவோண நாள், விடாது பெய்யும் மழைக்கும் பெயர். கானல் என்பது மலைச்சார் சோலை, கடற்கரைச்சோலை, கானலுக்கும் பெயர் என்றவாறு. (11)

652. பாரத வசனம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 481

ஆ. ம/6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. பாரத வசனம்

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 70 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 138 ஏடு ; 276 பக்கம்.

ஆ. நீளம் 43 செ.மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 15, 22–27, 47-58, 102, 107, 115-117, 126-129, 133-135, 142, 144, 146-173, 183, 187, 188, 190, 191 195, 197, 204, 206 க்கு மேல் இருக்கவேண்டியவை ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. பல ஏடுகள் முறிந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாரதக் கதையின் றன்னைப் பரிச்சித்து ராசன் கேட்கச்
சாரமு மாக வேவை சம்பாயன் தான்உ ரைத்த
சீரதைத் தெளிந்து சொல்லச் சிவனருள் பாலன் என்னும்
கார்முகம் பொழிதல் போலக் கரடமா முகன்காப் பாமே.

ஆ. முடிவு

அப்போது கர்ணராசனுக்கு அங்க தேசத்துக்கு அதிபதியாகப் பட்டம் கட்டி கிரீடமும் தரித்து சகல வெகு மதியுங் கொடுத்து தான் இருந்த சிங்காசனத்திலே வைத்துக் கொண்டு சந்தோஷத்தை யடைந்தான் துரியோதனராசன். குபேரனுடனே சிவன் நண்பு கொண்டது போலே இருந்தார்கள். இப்படி இருக்கச்சே அர்ச்சுனராசனும் பயப்படத்தக்கதாகவும் பூலோகமெல்லாம் நம்முதென்று பெருமிதம் கொண்டான். துரியோதன ராசன்.

5. பிற செய்திகள்

இதில் இடையிடையே சில விருத்தங்களும் உள்ளன.

653. கந்தபுராண வசனம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 482

ஆ. ம/7

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. கந்தபுராண வசனம்

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 101 ஏடு ; 202 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6 வரி.

உ. கிறுக்கலகல கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. 1-40, 42, 43, 51, 57-59, 77-80, 102-107, 109, 112, 119-141, 170-177, 181-202, 212 க்கு மேல் இருக்க வேண்டியவை ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. பல ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

... ... திருக்க வேணுமென்று தாமசம் பண்ணினால் நீ இப்படிச் செய்வாயோ என்று அகஸ்திய மாமுனியும் விசுவகர்மனைப் பார்த்து நீர் அரிய தொழில் செய்து எளியதுக்கு ஏமாந்திருக்கக் கடவதென்று சாபமிட்டார். என்னை இப்படிச் சாபமிட்டீரே என்று அகஸ்தியரைப் பார்த்து நீர் இருந்த கோவில் எல்லாம் வெளவால் புழுதியடைந்து போகக் கடவதென்று விசுவகர்மனும் சாபமிட்டான்.

ஆ. முடிவு

சதகோடி மாதர்கள் சூழ தெய்வயானையம்மனை அழைத்துக் கொண்டு மணவறையிலே வைத்தார்கள். அதன்பிறகு நாரதரும் தேவேந்திரனும் மகாதேவர் மகாதேவி பக்கத்திலே சென்று வாய் புதைத்து முந்தாணியொதுக்கி சுவாமி .....

654. சுப்பிரமணியர் சுத்தஞானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 483
ஆ. ல/100

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. சுப்பிரமணியர் சுத்தஞானம் 100
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு ; 56 பக்கம்.
ஆ. நீளம் 38 செ. மீ , அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ பக்கத்திற்கு 4, 5 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. 2, 7, 11, 15, 20. 28, 29, 31 ஆகிய ஏடுகள் காணப்பட வில்லை. உள்ளலவு நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரப்பா ஆகாயப் பெருமை சொல்வேன்
சேர்ப்பார்கள் யுகந்தனிலே சித்த ரையா
ஆரப்பா எனைப்போலச் சொன்னார் ? இல்லை
ஆதிஅந்தம் இரண்டும் ஒன்றாய் அறிந்து சொன்னேன்

பேரப்பா கங்குல்பகல் திடமாய் ஆச்சு
பேராக வந்ததுவே அகாரம் ஆச்சு
சேரப்பா இதுவல்லோ ஞானம் ஆச்சு
செப்பாமல் சித்தரெல்லாம் மறைத்திட் டாரே. (1)

ஆ. முடிவு

அரியெழுத்தின் விபரமதை அறிய மாட்டார்
அவனிதனில் என்நூற்குச் சரிநூல் இல்லை
பரமதிலே கடந்தவர்க்குப் பயனும் விள்ளும்
... ...
வெறிகொண்ட மூடருக்குத் தெரியா தப்பா
விரைந்தோடி கூடினாற்போல் வெக்களஞ் செய்வான்
குறியென்ற ஞானமது நூற்றொன் றுள்ளே
குருசொன்ன விபரமெல்லாம் கூறி னேனே. (101)

முற்றிற்று.

(இப்பாடலின் இரண்டாமடியின் பிற்பாதி எழுதப்படவில்லை.)

5. பிற செய்திகள்

சுவடியின் காப்பேட்டில் "முத்துசாமி அய்யர் புஸ்தகம்" என உள்ளது.

655. திருப்புகழ்

1. நூலகக் குறிப்புகள்

அ. 484
ஆ. த/12

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அருணகிரிநாதர்
ஆ. திருப்புகழ்
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள் 50

3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு ; 58 பக்கம்.
ஆ. நீளம் 42 செ. மீ. ; அகலம் 2·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1-8, 16-18, 22–27, 46 க்கு மேல் இருக்க வேண்டியவை ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. பல ஏடுகள் முறிந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முருகு காள விடம யின்ற
இருகண் வேலி னுள்ம யங்கி
முளரி வேரி முகைய டர்ந்த முலைமீதே
முழுகு காதல் தனைம றந்து
பரம ஞான ஒளிநி றைந்த
முகமொ ராறு மிகவி ரும்பி அயராதே
... ...

முடிவு
மருவுறா வெத்தி மலரிடா வெற்கை
வலிசையா லிக்கும் மதனாலும்
மதிகெடா வுத்த கலைபடா வட்ட
மதிசுடா நிற்கும் அதனாலும்
இருகணா முத்தம் உதிரமா மத்...
...னியழா நித்தம் மெலியாதே
இடருறா மெத்த மயல்கொளா நித்தம்
இவளைவாழ் விக்க வரவேணும்.
கரி ... ...

656. தசவாயு நிலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 485

ஆ. ல/101

சு. வி. 13

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. தசவாயு நிலை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 54

3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு ; 54 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 4 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ 11 ஆம் ஏடும், 27க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. சுவடியின் இடப்புறம் முறிந்துள்ளது.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாம் ஆதாரம் தன்னில் நின்ற
புரிஅஷ்ட தசவாயு வின்பேர் தா(ன்)கே ...
வாரணமாம் பிராணனொடு அபானன் தானும்
மகத்தான உதானனு ... ...யானன்
காரணமாம் நாகனொடு கூர்மன் தானும்
கனமான கிரிக்கரசன் கே ... ...
ஆரணமாம் தனஞ்சயனும் பத்தும் ஆச்சு
அப்பனே அசைவைஇனி அறையி றேனே.

ஆ. முடிவு

காணப்பா குருவான பெரியோர் தன்னைக்
ணகுவித்துத் தெண்டனிட்டுக் கருத்துஒன் றாகி
பூணப்பா கோபம்என்ற மூலனையைத் தள்ளி
புகழான பெரியோர்கட்கு உதவி செய்து
வீணப்பா பெண்டாசை பிள்ளை ஆசை
விளைந்தாலும் தவறாமல் மேலே நோக்கி
தோணப்பா தோணுமட்டும் இருந்தார் ஆகில்
சொல்லேது பொருளேது ... யாமே. (1112)

657. சுப்பிரமணியர் அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 486-1

ஆ. ய/34

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. சுப்பிரமணியர் அகவல்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 72

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு ; 10 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கம் இருபத்தியாகப் பிரித்துக்கொள்ளப்பட்டுள்ளது. பத்திக்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீந்தையில் எழுந்த செழுஞ்சுடர் வெள்ளம்
செங்கம லத்துளச் செம்பொற் பதியில்
உந்தியி லுத்தி ஓங்கா ரத்துள்
அந்தம் இலாத அகார முதலாய்.

ஆ. முடிவு

உலாவு கண்டதோர் ஒருவன் பெருமையை
அலகு சோதியுள் அமைந்தாய் சரணம்
திலதம் என்றாரல நீத்தியென் றேரி
திருச்செங் காட்டுறை செல்வா போற்றி.

சுப்பிரமணியர் அகவல் முற்றும்

658. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 486 - 2

ஆ. ய/34

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 5

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ. ; 2· 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நந்தி அகஸ்தியர் போகர் அழுகண்ணர் நற்கமலர்
சுந்தரர் புண்ணாக்கீ சர்சொல் பிரமர் .....
வந்த இடையர் கருவூரார் வாசமைச்சர்
சந்தயர் சட்டைமுனி ரோமர் கோரக்கர்
தாள் துணையே. (1)

ஆ. முடிவு

பாடினார் நவசித்தாள் அனந்தம் கோடி
பண்பாக நாதரிஷி சொன்ன தாலே
நாடியே நாதரிஷி தன்னைனக் கூவி
தான்கொடுத்த காண்டமதை வெளியில் போட்டார்

பேடிஎன்ன காரியத்தைச் செய்தான் என்று
பெருமையுடன் நூல்வாங்கிக் குகைக்குள் வைத்து
நாடியே அனைவோர்க்கும் சாபம் ஈந்தேன்
சமுசயங்கள் தீராமல் சபிச்சேன் பாரே. (5)

5. பிற செய்திகள்

இதிலுள்ள 5 பாடல்களும் சித்தர்களைப்பற்றியதாகவும், ஒன்றற்கொன்று தொடர்பு உடையனவாகவும் தோன்றுகின்றன.

659. சூரியபூசை அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 487
ஆ. ற/32

2. உள்ளீடு : நூல் விவரம்

அ .....
ஆ. சூரியபூசை அகவல்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 120

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு ; 10 பக்கம்.
ஆ. நீளம் 28 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கம் இரு பத்திகளாகப் பிரித்துக் கொள்ளப் பட்டுள்ளது. பத்திக்குப் பலவித வரி.
உ. ஓரளவு தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவும் செல்வமும் சிறந்தமுப் புகழும்
பெருகுமெஞ் ஞானமும் பெற்றிட வேண்டும்
உத்திசேர் சூரியன் பூசனை புரிவோர்
அத்திர பஞ்சாத் தகத்தின தாகி

ஆ. முடிவு

பன்னிரு காலும் பணிந்துடன் எழுந்தே
மாசறு கஷோக்கில மந்திரம் அதனால்
ஆசறு பராமுக அருக்கியம் கொடுத்து
தேவனே சிறியேன் செய்திடு பிழைகள்
ஏவையும் ... ...

5. பிற செய்திகள்

இவ்வகவலை அடுத்து தந்தகாஷ்ட விதி, ஸ்நான விதி என இரண்டு ஏடுகள் உள்ளன.

660. வாதுளாகமம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 488

ஆ. ட/80

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. வாதுளாகமம் : உத்தர காண்டம்

இ. தத்துவம்.

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு ; 24 பக்கம். (ஏட்டெண் 44 முதல் 55 முடிய)

ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 3 செ மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

தந்திரரோக்த ப்ரதீஷை சிவ சித்தாந்த தந்திரமும் அதர்வண வேதத்தில் எடுத்து பரமேசுபரன் பரமேசுவரிக்கு உபதேசம் பண்ணினபடி - விஷ்ணுவுக்கு ஆசாரியரான அயம்புரி சோமேசுபரர் அவராலே உற்பனமான உபமன்னிய சிவாசாரியர் - இவருடைய சீஷர் நாகராசப்பிரபு - இவருடைய சீஷர் சங்கமேசுவரர் - இவருடைய சீஷர் கலியாண மாயா தேவப்பிரபு.

ஆ. முடிவு

இஷ்டலிங்கத்துக்குத் நூலமென்கிற ரூப பதார்த்தம் அற்புதம். பிராணலிங்கத்துக்கு அவ்யக்தமென்கிற ருசி பதார்த்தம் அற்புதம். பாவ லிங்கத்துக்கு ஆனந்தமென்கிற திருப்திப்பான பதார்த்தம் அற்புதம் என்றவாறு.

வாதுளாகமம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

கீலக வருஷம் ஐப்பசி மாதம் 29 ஆம் தேதி ஆதிவாரமும் பிரதமையும் ரோகணி நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் வீரசைவ ஷட்விதலிங்கத்துப் பிரிவணையும் பிரதியும் அடையாளங்களுக்கு பெருவளப்பூர் குமார வீரையரிடத்தில் மேல்பிரதி வாங்கியெழுதினது. மாங்குடி கந்தசாமி ஐயர் கையெழுத்து.

661. அறுமுகவர் திருவெண்ணீற்றுப் பதிகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 489

ஆ. ய/35

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. அறுமுகவர் திருவெண்ணீற்றுப் பதிகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு ; 20 பக்கம்.
ஆ. நீளம் 33·5 செ மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 4 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கொண்டுகொண் டிட்டவெகு ரூபம்த னக்குஅழகு
கோலம்ச மைந்தநீறு
கொடியவெண் ணாயிரம் சமணரைக் கழுவினில்
குலைகளவு கண்டநீறு
துண்டகண் டப்படக் கொடுவலிய சூரரைத்
துணிக்கவேல் தொட்டநீறு
சொல்லரிய பூதப்பி ரேவதஞ் சனைகளைச்
சுடரிட்டு எரித்தநீறு
செண்டுகைப் பிடித்தவன் கூன்முதுகு தன்னையும்
செம்மையாய் நிமிர்த்த நீறு
சிவனன்பு இலாதமுழு மூடர்தம் நெஞ்சகம்
திடுக்கிட அடித்தநீறு
அண்டபகி ரண்டமும் நவகண்டம் முதலாக
ஆதியாய் வந்தநீறு
அடியவர்க்கு அருளுதவு கிருபைதரு பழனிமலை
அறுமுகவர் திருவெண்ணீறே (1)

ஆ. முடிவு

பத்துநல் கவிதைதனை நித்தம்து திப்பவர்கள்
பாவங்கள் தீர்த்தநீறு
பதிவாக எந்நாளும் முருகருட பாதங்கள்
பணிந்தவர்க் கருளுநீறு
கத்தூரி குங்குமம் புனைவள்ளி நாயகன்
காங்கயன் தந்தநீறு
கார்த்திகையன் ஆனதோர் வெற்றிவே லாயுதன்
கடம்பன் அருள் பெற்றநீறு
முத்துமணி ரத்தினத் தண்டையணி பாதம்என்
முன்புதுணை தந்தநீறு
முழுநீல மயிலேறி வந்துகாத் திடுமாறு
முருகனருள் தந்தநீறு
அத்தனார் பங்கினில் நித்தம்மகிழ் கலியாணி
அம்பிகைஅ ளித்தநீறு
அடியவர்க்கு அருளுதவு கிருபைதரு பழனிமலை
அறுமுகவர் திருவெண்ணீறே. (10)

5. பிற செய்திகள்

இப்பதிகம் பழனிமலைக் குரியது.

662. வீரசைவ தீட்சா விதி

1. நூலகக் குறிப்புகள்

அ 490

ஆ. ற/33

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ வீரசைவ தீட்சாவிதி

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ 28 ஏடு ; 56 பக்கம்.

ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 3· 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 5, 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. இறுதியில் எட்டு ஏடுகள் வலப்புறம் சிதைந்துள்ளன. சுமாரான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தீட்சைக்குச் சொல்லப்பட்ட உத்தராயணம் முதலான புண்ணிய காலங்களிலே மடம் முதலான ஸ்தானங்களிலே பக்து முழத்தில் அஞ்சு முழம் ஈறாகக் கூடின இடத்திலே தீட்சாமண்டபம் பதினாறு காலிலே உண்டாக்கி, அத்தை எண்பத்தொரு பதமாக்கி அதிலே ஒன்பது பதம் வேதிகையாக நன்றாகச் செய்து .....

ஆ. முடிவு

பிராணாய சுவாகா என்று இந்த மந்திரத்தினாலே வாயும் பிராண..... போக்கி லிங்கப் பிராணனாகவும், பின்பு தூபதீபம் கொடுத்து சர்வ உபசாரமும் செய்து, பின்பு விபூதி தரித்து, சாஷ்டாங்கமாக, புஷ்பாஞ்சலியுடனே.. ..... பண்ணி வைத்துக் கொள்ளவும். தீட்சா பத்ததி முற்றும்.

663. அட்டகர்ம மந்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 491

ஆ. மு/20

2. உள்ளீடு : நூல் விபரம்

அ. .....

ஆ. அஷ்ட கர்ம மந்திரம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 35 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு ; 62 பக்கம்.
ஆ. நீளம் 13 செ. மீ. ; அகலம் 6 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பலவித வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சூத்திரப்படியே சூட்சமெழுதி பூசை பண்ணவும். பூசை பண்ணுவதற்கு மூல மந்திரம் : ஓம் மனோமணி ரீம் டம் நீலகண்டாய மகாதேவாய நம எஎன்று தியானம் பண்ணி வந்தால் சகல சித்தியும் உண்டாகும்.

ஆ. முடிவு

சிதம்பர உச்சாடனம் : ஓம் வவு நமவசிவ விஷ்ணு எந்திரி, பிரமா எந்திரி, பிரியாவைச்சாடு வைச்சாடு வசீ சத்துரு விலக்கு.
(இதனையடுத்து இரு யந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.)

664. சௌந்தரியலகரி

1 நூலகக் குறிப்புகள்

அ. 492
ஆ. ய/36

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கவிராச பண்டிதர்
ஆ. சௌந்தரியலகரி ; மூலமும் உரையும்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 80 ஏடு ; 160 பக்கம்.

ஆ. நீளம் 19 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 11, 12, 13 வரி.

உ. தெளிவான கைபெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உரைபாடம். பாயிரம் :

மொழிந்தமறை நூலியற்று முகபடாம்
அணிந்துமுது ஞான தானம்
பொழிந்துதன தி...மணியென்று இருசுடரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்
வழிந்துபெரும் புனல்பரந்து வடவரையிற்று
உலகுஏழும் ஏழும் ஒக்க
அழிந்திடினும் அழியாத அபிராமி
பாடல்வளம் அளிக்க என்றே.

ஆ முடிவு

தானே விளங்கின பிறை புனைந்தருளும் சிவன் தனது உவகைப் பெருக்கு என வடமொழியான் முன் அறை சவுந்தரியலகிரியைத் தமிழால் அருளக் கவிராச பண்டிதனின் நிறைமனங் கருதித் தாழைமா நகரில் நிலைபெற வாழ்கவியெல்லாம் நிறையளவு எனினும் தவறிடாது உரை தேர்ந்து எழுதினன் இருள்விளக்கெனவே. (104)

சவுந்தரியலகிரி முற்றும்.

இ. பிற்குறிப்பு

வருடம் செய. மாதம் விருச்சிகம். தேதி 28. வாரம் குருவாரம். நட்சத்திரம் அசுபதியும் கூடின சுபதினத்திலே நல்லூர்ப் பெருமணத்தின் மேலத்தெருவில் ஆனையப் பிள்ளை குமாரன் தம்பாச்சியா பிள்ளை கைப்பட ஆனந்த லகிரி சவுந்திரிய லகிரி எழுதி நிறைவேறினது. சிவலோகத்தியாகர் திருவெண்ணீற்றுமை யம்மை பாதம் நீடுழி வாழ்க.

5. பிற செய்திகள்

முதல் 4 ஏடுகளில் உரைப்பாயிரமும், அடுத்த 12 ஏடுகளில் மூலமும், அடுத்த 62 ஏடுகளில் உரையும் இடம் பெற்றுள்ளன. கடைசி இரண்டு ஏடுகளில் முதற்குறிப்பு அட்டவணை இடம் பெற்றுள்ளது. காப்பேட்டில், ஆச்சாள்புரம் மேலத்திரு சி. வை. சிவசிதம்பரம் பிள்ளை என்ற குறிப்பு உள்ளது.

665. திருக்குறள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 493
ஆ. ங/9

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருவள்ளுவர்
ஆ. திருக்குறள்
இ. பதினெண்கீழ்க்கணக்கு
ஈ. செய்யுள் 561

3. தோற்றக் கூறுகள்

அ. 300 ஏடு ; 600 பக்கம்.
ஆ. நீளம் 14·5 செ. மீ. ; அகலம் 2 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 3 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாயிரம் :

ஆயிரத்து முந்நூற்று முப்பதருங் குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் — போய்ஒருத்தர்
வாய்கேட்க நூல்உளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

ஆ. முடிவு

வெருவந்த செய்யாமை :
தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்து ஆங்கு ஒறுப்பது வேந்து. (1)

பிற செய்திகள்

இச்சுவடி ஓலையில் எழுதிப் பழகுவதற்காக எழுதப் பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

666. திருவெண்காட்டுப் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 494

ஆ. ப/31

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. திருவெண்காட்டுப் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 39 ஏடு ; 78 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 5, 6, 8, 14, 16, 24 - 27, 29, 35, 36, 43 - 46 ஆகிய ஏடுகளும் 55 க்கு மேல் இருக்கவேண்டியனவும் காணப்படவில்லை. மிகப்பழுதுற்ற நிலை.

எ. குறை

அ. தொடக்கம்

சூதன் ஓது சுவேதவ னப்பெரும்
காத ..... கட்டுரை செய்திட
மோத கத்தை விரும்பிய மும்மத
போத கத்தின் புனைகழல் போற்றுவோம்.

ஆ. முடிவு

கன்னியொரு புறத்திருந்தும் சீலைவேளை
எரித்தநுதற் கண்ணா போற்றி
வன்னிவடிவு எனப்பொலிந்தும் கங்கைமங்கை
புணரும்மண வாளா போற்றி
அன்னமிகும் சாய்க்காட்டில் வெண்காட்டில்
அகலாத அமலா போற்றி
பொன்னிநதி உடையானே சென்னிநதி
முடியானே போற்றி போற்றி. (38)

667. தட்சிணாமூர்த்தி அட்டகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 495
ஆ. ய/37

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. நித்தியானந்த சுவாமிகள்
ஆ. தட்சிணாமூர்த்தி அட்டகம் : மூலமும் உரையும்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறக்குறைய 25 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு ; 48 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ. ; அகலம் 3·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 14 ஆம் ஏடு காணப்படவில்லை. மிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

1. அவதாரினக : உலகத்தின்கண் சர்வக்ஞராகவும், ... குண வைஸ்வரிய சம்பன்னராகவும், பாஷியகாரராகவும் இருக்கின்ற ஸ்ரீ பரமேஸ்வராவதார சொரூபரான சங்கராசாரிய சுவாமிகள் விடையமென்னும் விடத்தை அருந்தி அனர்த்தம் என்னும் அஞ்ஞானத்தில் அகப்பட்டு அம்ஃதை அகற்ற எத்தனிக்கும் அதிகாரிகள் அனைவர்க்கும் ... ...

ஆ. முடிவு

பருடார்த்தம் நான்கினுள்ளும் வீடு பரமபுருடார்த்தம் ஆகையாலும் இத்தோத்திரச் சிரவணாதியால் வீடு கை கூடுதலாலும், சிரவணாதி தொடர்ந்து உளற்றுவதுவே ... ... நலமெனத் தேறி என்றார். அன்றியும் தருமாதி கட்குள்ள இலக்கணங்களும் வீட்டிற்கே உள்ள ஆகையாலும் அம்ஃது ஒக்கும்.

இ. பிற்குறிப்பு

விஷு வருஷம் ஆடி மாதம் 17 ஆம் தேதி புதன் கிழமை எழுதி முடிந்தது.

668. நாநாசீவ வாதக்கட்டளை

1. நூலகக் குறிப்புகள்

அ. 496

ஆ. ட/81

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சேஷாத்திரி சிவனார்

ஆ. நாநாசீவ வாதக்கட்டளை

இ. தத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் சுமார் 70 பக்கம் வரும்.

3. *தோற்றக் கூறுகள்*

அ. 98 ஏடு ; 196 பக்கம்.

ஆ. நீளம் 20 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மிகப்பழுதுற்ற நிலை.

எ. முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

சுத்தம் — அசுத்தம் இல்லாதது சுத்தம். அசுத்தமாவது வெளுத்த படத்திலே கஞ்சி பூசினால் பசைப்படம். கரியாலே சந்திர அச்சுக் கூட்டினால் இலாஞ்சினப்படம். வர்ணம் அடைந்து தீர்ந்தால் குஞ்சிதபடம். இம்மூன்று உபாதயுடனே கூடும்போது அசுத்த படமும் கூடாதபோது சுத்த படமுமாக இருக்கின்றதைப் போல .....

ஆ. முடிவு

(ஏடு மிகவும் சிதிலமடைந்து விட்டதால் படிக்க இயலவில்லை)

5. .....

6. *மாற்றுச் சுவடிகள் காணுமிடம்*

1 : 292, 293, 496, 679, 914, 932 ; 16 : ஆர். 2699, 4705, 5011 ; 19 : 3113, 25 : 1424, 31 : 126டி, 32 : 5, 77, 206 ; 60 : 43 எஃப், 44 சி.

7. *வெளியீட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

669. வேதாந்த சூளாமணி

1 *நூலகக் குறிப்புகள்*

அ. 497

ஆ. டி/82

சு. வி. 14

2. உள்ளீடு : நூல் விவரம்

சுருக்குவது மயிற்பால் மீதிற் தானும்
தூண்டாத தீபம்போ லிருக்க வேணும்
பருக்கச்சே தெரியுமல்லோ காயின் போக்கு
பலவிதமா மில்லையென்று அறிந்து கொள்ளு
பெருக்காகப் போசனமும் நீரு முண்டால்
பேதைகளாம் நீசனுக்குச் சாவு முண்டோ
உருக்கலந்தப் போதேதா னெல்லா மாச்சு
உள்அக்கச் சுருக்கமதை ஊணிப் பாரே. (13)

இ. பிற்குறிப்பு

இவை நூல் சென்னப்பட்டணம் நரசிங்கபுரத்தில் வசிக்கும் பண்டித சின்னையன் வாசிக்கின்றது. இஃது சே. சி. வா. ராமசாமி கையெழுத்து.

717. மருத்துவநூல்

1 நூலகக் குறிப்புகள்

அ. 545
ஆ. ல/132

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. வாகட நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரையும்

3. தோற்றக் கூறுகள்

அ. 203 ஏடு ; 406 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 10, 11 வரி.
உ. பலவகையான எழுத்து.
ஊ. 25, 44, 67, 68, 86, 87, 149 ஆகிய ஏடுகள் இல்லை. 34, 97, 134, 166, 187 ஆகிய ஏடுகள் முறிந்துள்ளன. மிகச் சிதிலமான சுவடி..
எ. குறை

4· சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வேக மா நெறி சேரும் வினைகளுத்
தாக போகம் விடாத தழற்சியுஞ்
சோக வாரியி னால்வரு துன்பமும்
போக யானை முகத்தனைப் போற்றுவாம்.

ஆ. முடிவு

குழந்தை காதில் சீழ் விழுகிறதுக்கு வசம்பு பிடித்திருக்க ஆவரை பிடித்திருக்க முடம் தீரும். சாரைப்பாம்புக் கொழுப்பு எடுத்து, பசுவின்பால் படி நாலுவுடனே போட்டுக் காய்ச்சி, உறை

குத்திக் கடைந்து, வெண்ணெயெடுத்து உருக்கித் தடவ முடம் தீரும். சாயுங்காலம் பிண்ணாக்குத் தேய்த்து வெந்நீர் விடத் தீரும். மயிலெண்ணெய் இடவும் தீரும்.

இ. முற்குறிப்பு

முதல் ஏட்டில், 'வாக்குண்டாம்' எனத் தொடங்கும் பாடலை எழுதிய பின், பின்வரும் குறிப்பு உள்ளது :

கொல்லம் 878 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 12 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, அசுபதி நட்சத்திரமும் பஞ்சமியுமானதில் எழுதின ஏடு.

718. சட்டைமுனி வாதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 546
ஆ. ல/133

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி வாதம் 1000
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 139 ஏடு ; 278 பக்கம்.
ஆ. நீளம் 37 செ. மீ. ; அகலம் 3 செ. மீ. (ஏடு 125 முதல் 157 வரை நீளம் குறைந்தவை)
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு பலவித வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. 2, 3, 18, 37, 55, 56, 74, 97 - 101, 103, 104, 127, 130, 140, 143, 144 ஆகிய 17 ஏடுகள் இல்லை. மிகச் சிதிலமாயுள்ளது.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அகண்டபரி பூரணமா முமையாள் பாதம்
அப்புறம் நின்றதொரு அய்யர் பாதம்
புகண்டுநின்ற கணேசனொடு நாதாக்கள் பாதம்
புகழான வாக்குடைய வாணி பாதம்
நிகண்டுடன் யெனையாண்ட குருவின் பாதம்
நிறைநிறையாய்ச் சுருபத்தில் நின்றோன் பாதம்
முகண்டுயெனை யின்றெடுத்த சித்பரன் பாதம்
மூவுலகு மெச்சுதற்குக் காப்பு காப்பே. (1)

ஆ. முடிவு

வெள்ளியின்ன மாகுதற்கு வரிசை கேளு
மேவியதோர் சவ்வீரம் வங்கத்தி லிட்டு
தெள்ளியிதை உடைத்தெடுத்து யிந்தயெடைக்குச் சூதம்
திறமாக அப்பிரகச் சத்துங் கூட்டி
ஒள்ளியதோர் தாளகமும் பாஷாணங் கூட்டி
உத்தமனே காரமொடு அரைத்து நன்றாய்
வள்ளியதோர் யெருக்கொடுசதி ரக்கள்ளிப் பாலும்
வார்த்தல்லோ நாளொன்று ஆட்டி டாயே. (83)

719. கொங்கணர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 547
ஆ. ல/134

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் சூத்திரம் 31
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 31

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.
ஆ. நீளம் 32 செ. மீ. ; அகலம் 2·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலையிலுள்ளது.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாவான முக்காண்டம் ஞானத்தி னோடு
பரவிநின்ற களையெல்லாஞ் சூத்திரமாய்ச்
சொல்வேன்
மாவான வெவ்வுயிர்க்கும் புறம்புள் ளான
மன்னிநின்ற பூரணமே காப்புக் காப்பு
காவான மனமுடைத்தாய் சூரியனைப் போற்றிக்
காத்திரத்திற் சூத்திரத்தைக் கையி லீவார்
தாவான யோகத்தில் ஞான சித்தி
தயங்காது யோகசித்தி பலிக்குந் தானே. (1)

ஆ. முடிவு

காணப்பா யிந்தநீர் பூரத்தி லாட்டி
கைமுறையாய் ரவியில்வைக்க கடினகைக்குள் சாம
பூணப்பா பூரத்தைக் குகையிலிட்டு வூதப்
பொருமியது வெந்நீராய்ப் பொலியுஞ் சுண்ணம்
ஊணப்பா பூரநீறு தாளகத்துக் கப்பி
உத்தமனே யூதிடவே சுண்ண மாகுந்
தோணப்பா தாளகத்தை வங்கத்தி லப்பி
துடியாகப் புடம்போடச் சுண்ண மாமே. (31)

இ. முற்குறிப்பு

மீ.கந்தசாமியின் சிஷியன் ராமசாமிக்கு அளித்துவிட்ட புத்தகம்.

720. கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 548
ஆ. ல/135

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம் : தீட்சை விபரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 61

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு ; 38 பக்கம்.
ஆ. நீளம் 29 செ. மீ. ; அகலம் 2· 5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5, 6 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலையிலுள்ளது.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்தங் கடந்து நின்ற பூரணந்தான் போற்றி
அம்மனொடு மூலத்தில் கணேசன் காப்பு
பாதியிந்து மலர்க்கடந்த மூவர் காப்பு
பரமாகி யடியிருந்த போகர் காப்பு
சோதியாய் நின்றதொரு பெரியோர் காப்பு
துரிய வெளிக் குண்டான ரிஷிகள் காப்பு
நீதிபெறு அறுபதுக்குட் தீட்சை மார்க்கம்
நெறியாக யுள்ளபடி நிலைக்கின் றேனே. (1)

ஆ முடிவு

கள்ளமென் றுந் தெரியாதே தீட்சை மார்க்கம்
கயிலாசத் தேகுடி யிந்தகப் பண்ணும்
வெள்ளனென் ற மனங்கண்டால் விழுவா ரன்பாய்
வெறுவீணர் போற் திரிந்தா லேது மில்லை
உள்ளபடி முப்பரமுக் கப்பால் நின்ற
ஓகோகோ சுருதிமுடிந் திட்டவாறு
வள்ளலே பூரணத்தின் தீட்சை சொன்ன
வளமான கனியொன் றாய்க் கனிந்த முத்தே. (61)

இ. பிற்குறிப்பு

கொங்கண சுவாமியார் பிற்காண்ட சூத்திரம், தீட்சா விதி எழுதி முகிந்தது. முற்றும்.

721. கொங்கணர் பட்சணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 549
ஆ. ல/136

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் பட்சணி
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 56

3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு ; 34 பக்கம். (ஏடு 34 முதல் 50 வரை)
ஆ. நீளம் 29 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலையிலுள்ளது.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாம் நந்திகுரு முனிவர் மூலர்
ஆச்சரியம் நீலகண்டர் தண்ட கத்தில்
நீதியாய்க் கருவுருவாய்ச் சொன்னார் நாமும்
நிலவாமாய்க் கருச்சொல்லி அறியச் சொன்னோர்
சோதியாய்ப் பொருளைச் சோதித் தாக்கால்
சூசமென்றச் சூட்சமது தோணுந் தோணும்
பாதியா முப்பொருளு மொன்றாய் நின்ற
பட்சணியை நிச்சயமாய்ப் பாடுறேனே.

ஆ. முடிவு

பாரிந்தப் படியேநீ பூசைப் பண்ணிப்
பார்த்தாக்காந் பகையெல்லாந் தீர்ந்து போகும்
ஆரிந்தப் படிப்பார்க்கப் போறா ரப்பா
ஆச்சரியங் கண்டறிவோ ராருமில்லை
கூறிந்தப் படிசொன்னோம் அறிவுள் ளோர்க்குக்
கூறறிந்து கண்டுகொண்டோ ரவனே சித்தன்
நேரிந்தப் படிபார்த்து நிறையில் நின்றால்
நேசம் வைத்து சித்தரெல்லாம் பேசுவாரே. (56)

722. இராமதேவர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 550
ஆ. ல/137

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் சூத்திரம் 30
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 29

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 11 பக்கம்.
ஆ. நீளம் 27 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. சிறிய அளவிலான கையெழுத்து.
ஊ. நல்லநிலையிலுள்ளது.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிகுரு வானதொரு பிரமன் பாதம்
அனுதினமும் நெஞ்சினில்வைத் தருளை நோக்கி
சோதிவெளிக் கப்பாலே துலங்குஞ் சத்தி
துணையெனவே கருமானஞ் சுருக்கஞ் சொல்வேன்
நீதியுள்ள வாலைமனோண் மணிதான் வந்து
நிலைத்தபொருள் கருமறைப்பை நிலத்துள் ளார்க்கு
சோதனையாய்ச் சொல்லுவையோ ராமா வென்று
சொல்லி மனக் கசடகற்றித் துதித்தாள் பாரே. (1)

ஆ. முடிவு

உரைத்ததொரு சந்தனத்தைத் திலதம் போட்டு
உடற்பெல்லாந் தான்பூசி யுண்மைதனைப் போற்றி
தரைக்குள்மன் னரிரணகளத்தில் செல்லும் போது
தரிக்காது குண்டுமுத லப்புபகை யெல்லாம்
மரைக்குமடா சந்தனத்தின் வாசம் நின்று
மனங்குளிரக் கண்டவர்கள் வசிய மாவார்
உரைக்குமொழி தவறாம லுள்ளடங்கி நின்றால்
உயிர்முதலாய்ப் பயிர்வரைக்கு
முன்வசிய மாமே. (29)

723. அமிர்த வாசகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 551
ஆ. ட/91

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. அமிர்த வாசகம் : ஞானயோக சாதன நாதாந்த மாலை
இ. தத்துவம்
ஈ. செய்யுளும் உரையும்

3. தோற்றக் கூறுகள்

அ. 42 ஏடு ; 84 பக்கம்.
ஆ. நீளம் 33 செ. மீ. ; அகலம் 3· 5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.
உ. கிறுக்கலான எழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கீதையில் சொன்னது கன்ம யோகம், ஞான யோகம், பத்தியோகம் ஆகிய மூன்றனுள் முதலாவது கன்ம யோகம், காயா கற்பம், ரேசக, பூரக, கும்பகஞ் செய்து, வாயுவைக் கொண்டு மனதை நிறுத்துகிறது. இது பிரயாசத்தில்பிக்க வேண்டியது மூன்றாவது பக்தியோகம் பிரகலாதன், பெரியாழ்வார், மார்க்கண்டேயர் இவாள்சீவ உற்பத்தி முதல் மனோவாக்காய கர்மங்களினாலும் ஈசுவர பக்தி செய்து வந்தது போலச் செய்து வருகிறது. சென்மாந்தர சுகிர்தத்தினாலே லபிக்க வேண்டியது.

ஆ. முடிவு

சுவாமி நினைக்கிறதற்கு விஷயமில்லாமல் சத்தங்களுக்கு அகோசரமாயிருக்கப்பட்ட பிரமத்தை யோகீஸ்வராள் எப்படித்

தியானம் பண்ணுவார்களென்றதற்கு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சொன்னது இக முத்திரராத்தபல போக விராகனான ஞான யோகீஸ்வரனுடைய பாவனா தயாளமேவ பிரமமென்று சொல்லப் படும். மோக்ஷம் எந்த உபாயத்தினாலே ஆமென்றதற்குச் சற்குரு கடாக்ஷ ஞான யோகானுபவத்தினாலே ஆகுமாம். முற்றிற்று.

இந்த ஏடு அச்சுப்புத்தகத்தைப் பார்த்து எழுதியதாகும்.

இ. முற்குறிப்பு

விளம்பரம்

இந்த சாத்திரம் செலவான பிறகும் இந்நூலாசிரியர் உத்தர வின்றி யாராவது அச்சிட்டாலும் அப்படி அச்சிட்டதை விலை வைத்து விற்பனை செய்தாலும் அவர்கள் மேற் சொல்லிய ஆசிரியர் முதலியவர்கள் சாபத்திற்குள்ளாகாமற் போகார்களென்று உறுதியாய்க் கூறலாகின்றது.

நின்னய மாஞான நெறிநிஷ்டை கூர்ந்து
நேசித்து நின்மலமா நிலையிற் றோன்றி
முன்வினையின் கருவறுத்து முகிவைப் பெற்று
முனிஞான பரகாச னெனும் பேரும் பெற்று
சின்மயனாய்ச் செகத்தின் கண்ணவ தரித்து
செகஜால சேடிடைக்கட் சீறிப் போந்த
சன்குரு வாயான விரும்பந்தப் பதத்தை
இன்பமுட னருளுமென வியம்பி னேனே.

இப்படிக்கு ஸ்ரீரங்கம் வீரராகவ கிருஷ்ணதாசன். இந்த புத்தகம் பெருமாள் பேட்டை கோவிந்தராஜ நாயகரால் அச்சடுக்கி பிரசுரஞ் செய்யலாயிற்று.

724. தட்சிணாமூர்த்தி பரிபாஷை

1. நூலகக் குறிப்புகள்

அ. 552
ஆ. ல/138

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தட்சிணாமூர்த்தி
ஆ தட்சிணாமூர்த்தி பரிபாஷை

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு ; 44 பக்கம்.
ஆ. நீளம் 33 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. சுமாரான எழுத்துகள்.
ஊ. பொதுவாக நல்ல நிலை. ஏடுகளின் அடிப்பகுதி சற்றே சிதைந்துள்ளது.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பரமஞான உதயத்தின்
பரஞ்சுட ருலகுக் கெல்லாம்
சிரமென வுதித்த ஞானம்
தெய்வநா யகன்றாள் போற்றி
வரமென வகார யோக
மறைப்புநூல் பாழை யெல்லாங்
குருமுனி தமிழாற் செய்ய
குமரனைக் காத்தாள் காப்பே. (1)

ஆ. முடிவு

தாக்கிப்பா ரிந்தநூ லஞ்சு காண்டம்
தான்பார்க்கில் சமுசயங்கள் தட்டுண் டேபோம்
நோக்கிப்பா ரிந்தநூல் தனக்குச் சாட்சி
ரோமரிஷி ஐந்நூறும் நந்தி நூலும்
நோக்கிப்பா ரிதனாலே தெளியா துண்டோ
சிவசிவா குருதேடி அலைய வேண்டாம்
பாக்கியமாம் நூலினிலே ரெண்டாங் காண்டம்
பகருகிறேன் முதற்காண்டம் பரமா முற்றே. (101)

725. அகத்தியர் ஞானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 553
ஆ. ட/92

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ, அகத்தியர்ஞானம் 9
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 9

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளன.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சத்தியமே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலருக்கும் சீவனுயி ரதுதா னாச்சு
புத்தியினா லறிந்தோர்கள் புண்ணி யோர்கள்
பூதலத்தில் கோடியிலே ஒருவ னுண்டு
பத்தியினால் மனமொடுங்கி நிலையில் நிற்பான்
பாழிலே மனதைவிட்டார் பரம ஞானி
சுத்தியே அலைவதில்லை சூட்சம் சூட்சம்
சுழிதனிலே நிலையறிந்தால் மோட்சந் தானே. (1)

ஆ. முடிவு

சத்தியமே வேணுமடா மனுஷ னானால்
சண்டாள னாகாது தவறா காது
நித்தியநெறி தவறாதே நேரம் மற வாதே
நிட்டையுடன் சமாதிவிட்டு நிலைபெற் றேதான்
புத்திகெட்டுத் திரியாதே பூசைமறக் காதே
பொய்சொல் லாதே ... ...
சத்தியைநீ தள்ளிவிட்டு தற்கமி டாதே
சாமியென்று நடவாதே கதிவென்றுங் காலே. (9)

726. நந்திதேவர் சென்ன சக்கரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 554
ஆ. ட/93

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. நந்தி தேவர்
ஆ. நந்திதேவர் சென்ன சக்கரம்
இ. தத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு ; 44 பக்கம்
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சதம் 5, பொரி 5, புலன் 5, காமயிந்திரியம் 5,தொழில் 5, குணம் 4, அறிவு 1, நாடி 10, வாய்வு 10, சயம் 5, கோசம் 5, ஆதாரம் 6.....

ஆ. முடிவு

..... குருவென்னும் கலப்பை கொண்டு உழுது, சமன் பண்ணி, மோகமென்னும் எருவைப் போட்டு, முளையிலில்லாத விதையைத் தெளித்து, அறிவென்னும், வாய்க்கால் கட்டி, சாந்தமென்னும் மதகு திறந்து, சாத்வீக நீரைப் பாய்ச்சி, மெய்ஞ்ஞான மென்றொரு தானியம் விளைந்து, மீளர வழி பரவிக் குருவின் நிலையில் நின்ற பேருக்கு ஆறாதார மென்றவாறு. ஆறாதாரமுங் கடந்து தரிசினை திருவருளால் தரிசிப்பான்.

727. அகத்தியர் பரிபாஷை

1. நூலகக் குறிப்புகள்

அ. 555

ஆ. ட/94

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ அகத்தியர் பரிபாஷை 500 : முதலாவது காண்டம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு ; 44 பக்கம்.

ஆ. நீளம் 28 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ சுமாரான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பரமெனும் ஞானோ தயத்தில்
பரஞ்சுட ருலகுக் கெல்லாம்
சிரமென வுதித்த ஞான
தெய்வதா யகன்றாள் காப்பு
வரமென வகார யோக
மறைப்புநூல் பாதை யெல்லாம்
குருமுனி தமிழாற் செய்யக்
குமரனைங் கரன்றான் காப்பே. (1)

ஆ. முடிவு

தாக்கிப்பா ரிந்தநூ லஞ்சு காண்டம்
தான்பார்க்கச் சமுசயங்கள் தட்டுண் டேபோம்
நோக்கிப்பா ரிந்தநூல் தனக்குச் சாட்சி
ரோமரிஷி ஐந்நூறும் நந்தி நாலும்
தாக்கிப்பா ரிதனாலே தெளியா துண்டோ
சிவசிவா குருதேடித் திரிய வேண்டாம்
பாக்கியமாம் நூலினிலோ ரெண்டாங் காண்டம்
பாடுகிறேன் முதற்காண்டம் பரமா முற்றே. (101)

5. பிற செய்திகள்

தொடர் எண் : 552 இல் உள்ள தட்சிணாமூர்த்தி யருளிச் செய்த பரிபாஷை என்ற நூலிலும் இதே பாடல்கள் உள்ளன. காண்க.

728. அகத்தியர் பரிபாஷை

1. நூலகக் குறிப்புகள்

அ. 556
ஆ. ட/95

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பரிபாஷை: இரண்டாவது காண்டம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு ; 64 பக்கம். (ஏடு 14 முதல் 45 வரை)
ஆ. நீளம் 27 செ. மீ, ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து. ஒற்றெழுத்துக்குப் புள்ளிகளும் எழுதப்பட்டுள்ளன.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

முத்தணி நங்கையாள் வேத
முதலியைப் பாகம் வைத்த
சுத்தமெஞ் ஞான தீபச்
சுடரெனுஞ் சோதி பாதம்
நித்தமுந் தொழுது போற்றி
நீதிசொற் பாஷை நூலின்
புத்தமும் ரெண்டாங் காண்டப்
பொருளினைப் புகலு வோமே. (1)

ஆ. முடிவு

வாறான யிக்காண்ட மிரண்டுக் குள்ளே
வழலைகுரு செப்புகின்ற மார்க்கஞ் சொன்னேன்
கூறான மூன்றிலே கற்ப மூலங்
குணமான யிடைபஞ்சீ கரணஞ் சொல்லும்

தூறான நாவிலே யோகஞ் சொன்னேன்
சுத்தவுப்பை யெடுக்கும்வகை அஞ்சி சொல்லும்
சீரான வுப்பெடுக்கும் வகையைப் பாரு
தெளிவான ரெண்டாங்காண்டச்
சீவநூல் முற்றே. (100)

729. அகத்தியர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 557 — 1
ஆ. ல/139

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூத்திரம் 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு ; 9 பக்கம். (ஏடு 7 முதல் 11 வரை)
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற மூலகண பதியின் பாதம்
ஆடியதோர் சூத்திரம் பதினா றப்பா
தேடியே அண்டபிண்ட மெல்லாஞ் சேர்த்து
சீராகப் பாடியதோ ரிந்நூ லப்பா

பாடினேன் பூரணசூத் திரத்துக் காகப்
பதிவாகப் பாடிவிட்டேன் சாத்திர நூலை
நாடியே நந்தீசர் சொன்ன வாக்கியம்
நன்றான மூலகண பதியே காப்பு. (1)

ஆ. முடிவு

காணேதா னூற்றிலே மெய்ய தாகும்
கருவதுதான் ஐம்பதிலே மெய்ய தாகும்
பூணேதா னிந்தநூல் துறைகாண் பிக்கும்
பூட்டினதோர் பூட்டெல்லாம் அஞ்சில் காணும்
தோணவே வழிதுறையும் கருக்குருவும் தோணும்
வேதவெளி யோடேறும் பெண் .....
... பதினாறும் யிதுவே யாகும். (16)

(இப்பாடலின் ஈற்றடிகள் சரியாக எழுதப் பெறவில்லை)

730. கொங்கணர் 23

1. நூலகக் குறிப்புகள்

அ. 557-2
ஆ. ல/139

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் 23
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 23

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு ; 9 பக்கம். (ஏடு 11 முதல் 15 வரை)
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.

சு. வி. 19

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆமிது முத்தா னென்று அறைந்திடும் நாமம் கேளீர்
தாமிதை உண்ட உப்புத் தினிப் புளி ரெண்டுஞ் சென்று
காமிது நீரி வுப்பாய்க் கடுவலம் புளியே யாச்சு
வேமிது முலத் தீயின் விதத்தினாற் பிரிந்த வாறே. (1)

ஆ. முடிவு

வாறுகே ளுப்பு நீரும்
வளம்பெறச் சார நீரும்
தாறுகேள் சரியாய்க் கூட்டி
சாய்த்திடத் தயிரே யாகும்
வாறுகேள் கார மொன்று
விளங்கிய சாரம் ரெண்டு
ஆறுகே ளுப்பு ரெண்டும்
அதிலொன்று காணப் போடே. (23)

731. துருசு சுண்ண விபரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 557-3
ஆ. ல/139

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. துருசு சுண்ண விபரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 10 பக்கம். (ஏடு 15 முதல் 20 வரை)
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கூவிளையினிலை கொண்டு வந்து அரைத்து, தாளமே போட்டு, பித்தளைத் தகட்டிற் பூசி, உண்டை செய்து, சீலைமண் செய்து, கனத்த புடம் 10 புடம் போட நாகம் கட்டும். கூவிளையின் பழச்சாற்றில் தாளகம் அரைத்துக் கவசம் பண்ணி, மூன்று சிலை செய்து, புடம் போட 7 காணும். விஷ்ணு கிரந்திச் சாற்றில் தோய்த்து, ரவியில் துருசி போடச் சுண்ணமாம். பாடல் 16.

கூடுமப்பா கட்டிடுமோ கார சாரம்
குலாவியதோர் சுண்ணாம்புக் கார சாரம்
ஆடுமப்பா ஆட்டெல்லாம் கார சாரம்
அப்பனே வாதமெல்லாம் கார சாரம்
நீடுமப்பா குளிகையெல்லாம் கார சாரம்
நேரானது துறையெல்லாம் கார சாரம்
ஓடுமப்பா காயசித்திக் கார சாரம்
ஓகோகோ தொழிலெல்லாம் சாரந்தானே. (1)

ஆ. முடிவு

கூட்டியதோர் வீரத்தை தங்கத் தப்பி
கூசாமற் புடம் போடத் தங்கச் சுண்ணம்
ஆட்டியதோர் பரிச்சுண்ணம் சூதத்தில் மூட்ட
ஆகாகா மணியாகும் அதுக்கு மேலே
நீட்டியதோர் வீரமொடு பூரச் சுண்ணம்
நேராகப் பூசிபதைக் குகையி லூது
மூட்டியதோர் கடுஞ்சுண்ணம் சூத மாகும்
முகிழ்விரிந்து பூப்போலே விரியும் பாரே. (16)

732. கொங்கணர் 16

1. நூலகக் குறிப்புகள்

அ. 557 – 4
ஆ. ல/139

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 5 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்லநிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிரளாமல் லகுவிலே சொல்லக் கேளு
பேரான வெண்காரம் பலந்தா னொன்று
.... மாட்டி
யரைசதிரக் கள்ளிப் பாலா லாட்டி
திரளாமல் திரண்டுநின்ற பூநீறு பலந்தான்
சேரதிலே சாரமொரு பலந்தா நீறும்
அரளாமல் அரைக்கையிலே மெழுகு மாகும்
அப்பனே நாதமொரு பலந்தான் ரெண்டே. (1)

ஆ. முடிவு

தானென்ற பலமொன்று பூர மொன்று
சாதகமா யிந்நீரில் வைத்துக் கொண்டு
கானென்ற வெண்காரப் பலகை பத்தில்
கலந்தப்பூ கலந்தம்பூ கலரக் காய
கானென்ற நாவியுவே காரங் கட்டும்
மகத்தான முன்கட்டு மைந்தா பாரு
கேனென்ற வெண்காரச் செந்தூரம் பின்பு
கூறுகிறே னியொருதிருச் சொல்லு வேனே. (10)

733. துருசுநீறு

1. நூலகக் குறிப்புகள்

அ. 58 — 1

ஆ. ல/140

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .. ..

ஆ. துருசுநீறு

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 63

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு ; 18 பக்கம். (ஏடு 24 முதல் 33 வரை.)

ஆ. நீளம் 31 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

சுண்ணாம் பறியாதார் சூட்சமறி யாரே
வண்ணான் துறையி லழுக்கு அல்லோ

சுண்ணாப்பி னோடே சேருந் துறைகண்டு
சுண்ணாம்பு செய்வார்க்குச் சொர்ணம் வருமே (1)

ஆ. முடிவு

ஆகுந் தைலத்தில் அளவற்ற வேதைதான்
போகும் வெகுதூரம் போற்றிடும் திசைக்கெல்லாம்
வாகுடன் சூதமும் வளமான நாகமும்
காகுமிப் பாகுதப் பாதுவே தையே. (63)

734. அகத்தியர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 558-2
ஆ. ல/140

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூத்திரம் 7
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 7

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 3 பக்கம். (ஏடு 33 முதல் 34 வரை)
ஆ. நீளம் 31 செ.மீ ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிவ யவ சிங் அங் வுங் தென்றா திருப்பவே
அரிகிலியுமங்கென் றோது சரிதை யோடு
கிரிகையது ஞான மப்பா தப்பாது
அய்யுங் கிலியும் சவ்வென் றோது பாசமோ

பூரணத்தி லியங்கும் வாய்வு பார்க்கையிலே
ஓம் சிவயவசி யென்றோது தரியமடா துரியத்தி
லப்பு முப்புஞ் சூட்டுறேன் பாறையுப்பைச் சூட்டுறேனே
(பாடலின் யாப்பமைதி முறையாக இல்லை) (1)

ஆ. முடிவு
நாட்டடா சித்திரையை கீழே ... ...
நலமாகப் பிள்ளிவரை சுழியும் போட்டு
ஊட்டடா பாணமங்கே யிறங்கும் பாரு
வண்டுகொண்டு யோகத்தில் பணிந்து போற்று
கூட்டடா யோக சித்தி யுரைத்துப் போற்று
ஓகோகோ நாக் கிதழாம் சிங்கெங்கேது. (7)
(பாடலின் ஈற்றில் சீர்கள் குறைந்துள்ளன)

735. கொங்கணர் பாடல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 558 - 3
ஆ ல / 140

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ கொங்கணர் பாடல் 80
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 80

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம், (ஏடு 35 முதல் 43 வரை)
ஆ. நீளம் 31 செ.மீ; அகலம் 3 செ. மீ.
இ இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து
ஊ. பொதுவாக நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கட்டுமப்பா யிந்தவகை மாங்கிசத்தி லெல்லாம்
காணயின்னு மெத்தவுண்டு கண்டுசொல்ல மாட்டேன்
கொட்டுமப்பா ஈத்தேன்போற்கார சாரம்
திமிளியிட்டுச் சூதமங்கே யிரிசிச் சாகும்
வெட்டுமப்பா தாதுவேன் தளத்தை யெல்லாம்
மிசிக்கியென்ற வானதுதான் உப்பு உப்பு
ஒட்டுமப்பா யிதைவிட்டால் பலமுங் காணேன்
உற்றவுப்பு கடுங்காரச் சாரந் தானே. (1)

ஆ. முடிவு

காணப்பா சாரமுதற் துருசு நீறு
கைகடந்த வுப் போடு காரம் நீறும்
பூணப்பா யிதைவிட்டாற் சுண்ணாம் பில்லை
புகழாக முந்தியிந்தக் குகையைப் பண்ணும்
வீணப்பாச் சுடுகாதே சுண்ணா பாகா
வேறு வினா வார்த்தையிலே விரைந்திடாதே
தோணப்பா தோணமட்டும் சொன்னேன் சொன்னேன்
சொல்குற்ற மென்நூற் கட்டி னேனே. (30)
முற்றும்

736. மச்சமுனி தீட்சைவிதி

1 நூலகக் குறிப்புகள்

அ. 559
ஆ. ட/96

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மச்சமுனி
ஆ. மச்சமுனி தீட்சைவிதி 100
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 101 (71 முதல் 97 வரையான பாடல்கள் இல்லை)

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு ; 14 பக்கம். (ஏடு 254 முதல் 259 பிறகு 262 வரை)
ஆ. நீளம் 32 செ. மீ. ; அகலம் 3 செ. மீ. ;
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒருபக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. சற்றுச் சிதிலமான சுவடி.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்
மூலத் துதித்தெழுந்த முக்கோண சக்கரத்துட்
காலச் சிகாரக் கடவுளே - வாலை
கணபதியே நந்தியுறுங் குண்டலீ ...
கணபதியே தீட்சைவிதி காப்பு.

ஆ முடிவு
எரியுமொளி கண்டால் ஏகவெளி யாச்சு
பிரியாது பின்பு பூரணம் பேசிடும்
தரியாது நோய்கள் சகலவித ... ... பமுந்
துரிய்மாந் தீட்சை சொல்லொரு நூறுமுற்றே (101)
ம்ச்சமுனியார் தீட்சை விதி முற்றும்.

737. அகத்தியர் 50

1. நூலகக் குறிப்புகள்

அ. 560
ஆ. ல / 141

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் 50
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 50

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்.
ஆ. நீளம் 34 செ. மீ. ; அகலம் 8 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாடியதோ ரகண்டபரி பூரணமா தின்ற
நாதமுற்ற கணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனாரு மென்னைப் பெற்ற
ஆத்தாளு நாவுதனில் குடிகொண் டேதான்
பாடியதோர் வைத்தியமைம் பதுந்தான் சொல்வேன்
பண்பான புலத்தியனே யிற்நூ லோடே
தேடியதோர் பூரணசூத் திரத்தில் நன்றாய்
தீட்சையொடு கருக்கருவும் திறமீ தாமே: (1)

ஆ. முடிவு

கண்டாக்கால் வாதடமெல்லா மடிக்கின்பம் போற்று
கருவான சனகரனா மகிமை தன்னை
விண்டாக்கால் நசித்திடுவாய் நூல்கொ டாதே
வேதாந்த ஞானியென்றா லீவாய்ப் பாரு
தொண்டுசெய்து பனிரெண்டு வருஷங் காத்தால்
சோதித்துப் பின்பவர்க்கு யீவா யப்பா
சண்டமா ருதம் போலே வெளியாய தாக
சாற்றினதோ வைத் தியமைம் பதுந்தான்
முற்றே (50)

738. அகத்தியர் நாடி

1. நூலகக் குறிப்புகள்

அ. 561
ஆ. ல/142

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் நாடி 100
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு ; 26 பக்கம்.
ஆ. நீளம் 21 செ.மீ. ; அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5 வரி
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. 7ஆம் ஏடு இல்லை. முதல் மூன்று ஏடுகள் சற்றே சிதைந்துள்ளன.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாகுடன் கணேசர் பாதம்
பணிந்து முக்குணங் காய
வரகடச் சுவடி யெல்லாம்
வகை வகை தொகுக்குங் காலை
ஆகிட வியாதி யேங்க
அடைந்திடு நோய்கட் கெல்லாம்
போகிட மருந்து சொல்வோம்.
புலத்தியா பிரித்துப் பாரே.

புரிந்தெழு உந்திக் கீழே
புகரேழு சுழியைப் பற்றி
இருந்ததோர் நாடி தானும்
எழுபத்தீ ரரயி ரத்தில்
தெரிந்ததோ ரிவசத்தில் பத்து
தசநாடி யிவற்றில் மூன்று
அறிந்ததோர் வாத பித்தம்
ஐயமு மறிந்து கொள்ளே. (1)

ஆ. முடிவு

பாரப்பா மந்த முண்டாஈம்
பரிசின முரைக்கக் கேளு
காரப்பா மிகுந்து மெத்த
கபளிக்கும் அன்னந் தானும்
வாரப்பா இறைச்சி யாலும்
மாப்பண்டத் தாலும் மெத்த
சேரப்பா மேதிப் பாலால்
சேர்ந்திடு மந்தந் தானே (33)

739. தன்வந்திரி கருக்கிடை

1. நூலகக் குறிப்புகள்

அ. 562
ஆ. ல/143

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தன்வந்திரி
ஆ. தன்வந்திரி வைத்திய கருக்கிடை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 15

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 12 பக்கம்
ஆ. நீளம் 29 செ.மீ. ; அகலம் 2·5 செ மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்லநிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதி யந்த மல்லாமல்
அகண்டபரி பூரண மாயி
சோதி யந்த வாழ்மயிலே
சோர்பெரிய வாதி யேகேள்
நாதி யந்த மான
நல்லதொரு சாலை பதியை
வாதி யெந்தன் ...
... பங்கிலுறை வாழ்வே. (1)

ஆ. முடிவு

சித்தென்ன வுலகமெலனைத் தேர்ந்து சொன்னேன்
சிறப்பான வழலையுட மார்க்கங் கேளு
அத்தென்ன லைத்தியத்தின் வழலை சொல்வேன்
அன்பான பூமியுட நாத மப்பா
சுத்தனாயி ருந்தாக்காற் சொல்வேன் பாரு
சொற்பெரிய வுவாப்பூலைக் கொண்டு வந்து
நத்தென்ன படிவொன்று அளந்து கொண்டு
நலமான யெட்டாந் திங்கள் பாரே (15)

740. பகவத்கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 583
ஆ. ட / 97

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பட்டர்

ஆ. பகவத்கீதை : விருத்த மொழிபெயர்ப்பு

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 599

3. தோற்றக் கூறுகள்

அ. 80 ஏடு ; 160 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.

ஊ. மிகச் சிதிலமான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஐவகைப் பொருளும் நான்கு கரணமுங்
குணங்கள் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி
யாவரும் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப்
பொருட்கதிர் விரித்துப் தேள்
கைவள ராழிச் செங்கட்
கண்ணனைக் கண்ணுள் வைப்போம். (1)

ஆ. முடிவு

... ... மாமதுரை ... ...
செம்மையாய்ப் பாடி தேடி
ஆயனா ... ... மாயனார்தாம்
அவதரித்தருளி னாலே
போயநால் ... ... பொழிந்த கீதை
புலன் ... ... டலடைத் தார்க்கன்றி
தூயமா தவர்க்க ளித்தச்
சுருதிநூல் கருத்தொ ணாதே. (71)

இ. பிற்குறிப்பு

..... நிஷித்துப் பிரதிவாதன மோட்ச யோக அத்தியாயம் முற்றும். ஆக அத்தியாயம் 85. விருத்தம் 599 சம்பூரணம்.

741. ரோமரிஷி 51

1. நூலகக் குறிப்புகள்

அ. 564
ஆ. ல/144

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ரோமரிஷி
ஆ. ரோமரிஷி 51
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 51

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு ; 24 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ. ;
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலாதா ரத்தொளியாய் வெளியா யருபாய
முக்கோண வட்டமதில் முளைத்த தேவி
மேலான பாதமது போற்றி மேரு
ஞான சித்திமுதல் வாதஞ் சொல்வேன்

ஆலால முண்டதொரு அய்யர் பாதம்
அழகான பார்வதித்தா யருளைப் போற்றி
சலோக சாரூப சாமிபந் தான்
சாயுச்சிய பதங்கடந்த பதந்தானே காப்பு. (1)

ஆ. முடிவு

வழந்ததொரு ரோமர் சொன்ன ஐம்பத் தொன்றும்
வகையோடே படிப்பவர்கள் யோகி யாவார்
அழந்ததொரு ரிஷியாவார் சித்த ராவார்
அழகான ஞானியு மீசனு மாவார்
பொழந்ததொரு மாணாக்கள் சொன்ன நூலை
புகழ் பொதிகை தமிழ்முனிவன் திருத்திக் கொண்டு
எழுந்ததொரு உலகுக்கு வேணு மென்று
இப்படியினு ... ... யே யின்று முற்றே. (51)

742. அகத்தியர் வைத்தியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 565
ஆ. ல/145

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வைத்திய சூத்திரம் 50
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 50

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 22 பக்கம்.
ஆ. நீளம் 29 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. மிகச்சிதிலமான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாடியதோ ரகண்டபரி பூரணமாய்நின்ற
நாதன்முதற் கணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனாரு மென்னைப் போற்றி
ஆத்தாளும் நாவதனில் ஆடிக்கொண் டேதான்
பாடியதோ ரன்பது வைத்தியஞ் சொல்வேன்
பண்பான புலத்தியனே யிந்நூ லோடே
தேடியதோர் பூரணசூத் திரத்தில் நன்றாய்
தீட்சையொடு ...ருவும் திறமி தாமே. (1)

ஆ. முடிவு

கண்டாக்கால் பாதமெல்லாங் கால்கீழ்ப் போட்டு
கருவான சவுக் ... .. கிமை தன்னை ..
வண்டாக்கால் சி ... டுவாய் நூல்தொ டாதே
வேதாந்த ஞானி என்றால் யலைவான் பாரு
தொண்டு செய்வான் பதினான்கு வருஷத்துக்குச்
சோதியின் பவர்க்கு ஈவா யப்பா
சண்டமா ருதப்போலே வெளிய தாக
சாத்திரத்தோர் வைத்தியமைம் பதுதான்
முற்றே. (50)

அகத்தியர் வைத்திய சூத்திரம் ஐம்பது
எழுதி முடிந்தது.

743. அகத்தியர் பச்சை

I நூலகக் குறிப்புகள்

அ. 566

ஆ. ல / 146

சு. வி. 20

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்தியம் பச்சை 16

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 6 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 8 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. மிகச்சிதிலமான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரிதாரம் பிருதிவியே யாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கவுரியது தேயு வாகும்
பின்னையொரு வெள்ளையது வாயு வாகும்
அரிதான லிங்கமது மாகாச மாகும்
அருந்தியே பச்சயுடன் மாட்டலாகும்
தெரியாதோ வைத்தியரே யீந்நூ லப்பா
சித்தராய்ச் சொன்னவித்தை செகத்தில் பாரே. (1)

ஆ. முடிவு

சொன்னதோர் சூத்தி ரத்தின்
சூட்சமாம் யிந்த நூல்தான்
முன்னமே சொன்ன நூலில்
முக்கியமாய் யிந்த நூல்தான்
அன்னமே பதினா றென்று
அருள்சொன்ன பதினாறு முற்றே.
(பாடலில் மூன்று அடிகளே உள்ளன)

744. அகத்தியர் வைத்தியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 567
ஆ. ல/147

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வைத்தியம் 8
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 8

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரான பூரணத்துள் தேவிபாதம் போற்றி
செகத்திலுள்ள பெரியோர்கள் பாதம் போற்றி
வாரணியு முலை மடந்தை தையல் முன்னாள்
வைத்தியத்தி லதனை வளமாய்ச் சொன்னார்
காரணியு மகத்தாலள ....
கங்கைபிறை திங்களணி ....
ஆரணியு ..... அகத்தியன் ஓது மிந்நூல்
ஐங்கரன்முன் பாதமுதல் காப்ப தாமே. (1)

ஆ. முடிவு

போகுமே குன்மமென்ற தெல்லாம் போகும்
பொல்லாத நீரழிவு கிரந்தி சூலை
தாமடா தலைசுழற்றல் ... ரோகம்
தருவான உள்வீசன் குமர கண்டன்
சேமடா பவுத்திரமும் மூல ரோகம்
செங்குட்டம் கருங்குட்டம் சோகை போகும்
நாமடா சொல்லிவிட்டோம் யெட்டி னுள்ளே
நலமான பூரண சூத்திரம் முற்றே. (8)

745. மதியுள்ளான் கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 568
ஆ. ற/34

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ராமாரெட்டி
ஆ. மதியுள்ளான் கதை
இ. பல் வகை (நாடகம்)
ஈ. செய்யுளும் உரையும், அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 57 ஏடு ; 114 பக்கம்.
ஆ. நீளம் 29 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6, 7, 8 வரி
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரிவிந்து நாத முற்றும்
ஆனந்திப தத்தைப் போற்றி
பரிமுந்து பத்தர் சித்தர்
பரிவுள்ளோர் தன்னை வாழ்த்தி
உரிமுந்து உழக்கு ரெண்டு
ஒன்றென்றப் பொருளி னாலே
கரிவந்து மதியுள் ளாட
கணபதி காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

குருநெறி யருளி னாலே
கொந்திமா தேசத் துள்ளே
அருள்நெறி யருளுஞ் சோதி
அல்லிமா நகரில் வந்து
வருநெறி யறிவு நன்மை
வகுத்தொரு வயண மாகத்
திருநெறி மதிநூற் சொன்னான்
சித்தரா னந்த முற்றே.

இ. முற்குறிப்பு

வைத்தியம் புருஷோத்தம செட்டி மதியுள்ளான் கதை. அனுமந்தன் துணை புண்டாகவும்.

பிற் குறிப்பு

இந்த மதியுள்ளான் கதையை எழுதினவர் பெருங்களத்தூர் ராமா ரெட்டி எடுத்துப் படித்தவர் தப்பிதமிருந்தால் அருளவும்.

746. இராமதேவர் பரிபாஷை

1. நூலகக் குறிப்புகள்

அ. 569
ஆ. ல/148

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்

ஆ. இராமதேவர் பரிபாஷை 18

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 27

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு ; 18 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

4 சிறப்புச் செய்திகள்

அண்டரண்டந் திரிபுவன மெட்டுக் குந்தான்
அதிகசெயம் பெற்றகண பதியே போற்றி
மண்டலங்கள் மூன்றுரவி மதியாய் நின்ற
மதியிரவி ரவியொளியின் கமலம் போற்றி
குண்டலந்தான் பூண்டபுலத் தியர்தன் பாதம்
குருமொழிதா னாயிரத் தின்பீடம் போற்றி
கண்டபொருள் பாஷைபரி பாஷை பீடங்
கருங்குருவாங் கணபதியின் கமலங் காப்பே. (1)

ஆ. முடிவு

சொன்னோமே யிம்முறையை முடித்துக் கொண்டு
சுத்தபரி சுத்தமதாய்க் கண்ணோட்டம் பார்த்தால்
அன்னோமே கோடா கோடி ...
அளவில்லா சதாகோடி காலம் வாழ்வாய்
முன்னோமே மோட்சசித்தி யெய்து மெய்தும்
மூதண்ட சாயுச்சிய பதத்தில் வாழ்வாய்
நன்னோமே ராமனப்பா யிந்நூல் பாடி
நவகோடி கோடாகோடி வாழ்ந்தோர் முற்றே (27)

747. ரோமரிஷி குருநூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 570
ஆ. ல/149

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ரோமரிஷி
ஆ. ரோமரிஷி குருநூல் 50
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 22 பக்கம்.
ஆ. நீளம் 33 செ. மீ. ; அகலம் 3· 5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

வாரணமா முகத்தோனும் வல்லபையுங் காப்பு
வாக்கிலிருந்து ஓதுகின்ற வாணி காப்பு
பூரணமாய் நிறைந்தகுரு நாதன் காப்பு
புகழ்பெரிய சித்தருட பாதங் காப்பு
தாரணிக்குள் குருநூல் அப்ப துக்குள்
சகலசித்தும் கைவசமாய்த் தானே சிக்கும்
காரணமாய்ச் சொல்லிவிட்டேன் வழலை யாதிக்
கருத்தெரிந்தால் ரசவாதம் கைக்கு ளாச்சே (1)

ஆ. முடிவு

பாரய்யா முடியைவிட்டு அடியைத் தொட்ட
பாதகரே நீங்களேஈன வாதம் பாரீர்
ஊரய்யா சுடுகாடு சுத்தப் போட்டால்
உள்ளிருக்கு மடிமுடியை யுற்றுப் பாரு
சாரய்யா அடிமுடிக்கு மூல விந்து
கண்டீரோ கடல்நீரின் கருவைத் தானும்
ஆரய்யா காண்பதுவும் யோகி காண்பான்
அப்பனே குருநூலன் பதுதான் முற்றும்.

ரோமரிஷி நாயன் குருநூல் 51 முடிந்தது

748. நவக்கிரக சிந்தாமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 571
ஆ. வ/30

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. நவக்கிரக சிந்தாமணி
இ. சோதிடம் (ஆருடம்)
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 87 ஏடு ; 174 பக்கம்.
ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5, 6 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. பொதுவாக 108 ஏடுகள் இருக்கும். இதில் 87 ஏடுகளே உள்ளன.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நினைத்த காரியம் ஒருத்தரால் கூடும்.
இவனுடனே வழக்குப் போனால் கெலியாது.
இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணினால்
ரோகியாய்ப் புருஷன் வேறே கலியாணம் பண்ணுவான்
இந்தப் பட்சி வாங்கினால் துரைகளகப்படும்.
இந்தக் கோயில் கட்டினால் வைபோக முண்டு.
இந்தக் கோபுரம் கட்டினால் தனக்குக் கலியாணம் கூடும்.

ஆ. முடிவு

இந்தக் கோளனாலே மாண்டு போய்க் கெடுவார்கள்.
இந்த உறவினாலே நஷ்டியாய் பிச்சைக்காரராய்க் கனமாவார்கள்.
இந்தப் பிணக்கினாலே வெகுநஷ்டிய தாகும்.
ஓடிப் போனவன் உடனே வருவான்.

இ. முற்குறிப்பு

வைத்தியம் புருஷோத்தம செட்டி நவக்கிரக சிந்தாமணி. சுப்பிரமணியர் கிருபை உண்டாகவும்.

749. தன்வந்திரி வைத்திய சிந்தாமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 572-1
ஆ. ல/150

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தன்வந்திரி
ஆ. தன்வந்திரி வைத்திய சிந்தாமணி
இ மருத்துவம்
ஈ. செய்யுள் 506

3. தோற்றக் கூறுகள்

அ. 83 ஏடு ; 166 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவான எழுத்துகள்.
ஊ. மிகச் சிதிலமான நிலை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திரைகட லுலகிலுள்ள செனங்க ளுக்கு .. ல்லாமல்
உரைமறைப்பு களுக்கு மீசன் உமைதனக் குபதே சித்த
விரைதமிழ் வடநூ லுள்ள விருத்திய நூலுந் தோய்த்து
வரகவி யதனாற் செய்த வாகடம் அருளு வாமே. (1)

ஆ. முடிவு

மோத்தை மூத்திரம் வார்த்த ரைத்து
முன்ன முண்டை தான்செய்து
மேத்துந் தேனி லிடுவீராய்
விழியிற் குருடு பூத்திரும்
வைத்த மருந்து தவிராதே
மாறுங் கண்டாய் மடமயிலே
அத்தர் மேலே ஆணைசொன்னோம்
ஆறு முகவர் தன்னாணை. (506)

5. பிற செய்திகள்

இதன் பிறகுள்ள 84-90 வரையான ஏடுகளில் மருந்து செய் முறைகள் சில கூறப்படுகின்றன. அதனையடுத்து ஏடு 90 முதல் 96 வரையுள்ள ஏடுகளில் வேறு நூல் (அகத்திய நாயனார் அருளிச் செய்த சூத்திரம்) உள்ளது

750. அகத்தியர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 572 - 2
ஆ. ல/150

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 25

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு ; 13 பக்கம். (ஏடு 90 முதல் 96 வரை)
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.
உ. சுமாரான எழுத்துகள்.
ஊ. மிகவும் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவருளும் தென்பொதிகை தன்னில் வாழும்
தட்சிணா மூர்த்தியுட சீஷ னான
குருமுனிவன் பாலனென்னும் புலத்தியனாம் அடியேன்
கூறுகிறேன் வைத்தியசூத் திரத்தைத் தானும்
பருவமுட னெந்தெந்த நாதாக்கள் சொன்ன
பாடலெல்லாந் தேர்ந்துமொரு மாலை யாக
உறுதியுடன் மனமுறைந்து பலநூல் பார்த்த
உத்தமர்க்கு வைத்திபத்தைச் சொல்லு றேனே. (1)

ஆ. முடிவு

சட்டிக்கு மேலே சட்டி கொண்டு மூடிச்
சாதகமாய்ச் சீலைமண் செய்துலர வைத்து
திட்டமுடன் சாணிப தங்கமாய்த் தப்பி
தீயெரிக்க சாமத்தில் மேலே பற்றும்
திட்டமுடன் வழித்தெடுத்துச் சிமிழில் வைத்து
இலங்கிய பொன்வெள்ளி தாப்பிரந் தன்னில்
தட்டுதக டினில்ரசித பற்பந் தன்னைத்
தடவிரவி தனிற்போட பற்பமாமே. (25)

751. அகத்தியர் பச்சை

1. நூலகக் குறிப்புகள்

அ. 573 - 1

ஆ. ல/151

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் பச்சை 16

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம். (ஏடு 97 முதல் 100 வரை)

ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.

ஊ. மிகச் சிதிலமான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 566 காண்க

ஆ. முடிவு

ஏற்றிடில் சன்னி தோஷம்
எழும்பிடு குட்ட ரோகம்
பார்த்திடில் பறங்கி சூலை
பலகடி முதலாயுள்ள
தீற்றிடும் வைத்தி யோரே
செகத்தினில் மானிடரை மேய்க்க
போற்றிடத் தீரு மென்று
பொருப்பின்மே லிருந்தோர் சொன்னார். (16)

752. அகத்தியர் பச்சைக் குழம்பு

1. நூலகக் குறிப்புகள்

அ. 573 - 2
ஆ. ல/151

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பச்சைக் குழம்பு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 1^1, பின்னால் உரைநடை.

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 14 பக்கம். (ஏடு 100 முதல் 107 வரை)
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பருவதத் தன்னில் வாழும்
பராபரத் தருளி னாலே
பெருமையா யுலகில் வாழும்
புண்ணிய சனங்க ளுக்குத்
திருபல வியாதி வந்தால்
தீருமென் றுண்மை யாகப்
பெருபல முனிவன் தானும்
பேசிய மருந்து கேளாய்.

பேசிய மருந்து கேளாய்
பெருங்காயங் கடுகிந் துப்பு
வீசிய ரசபொரி காரம்
விஷமனோ சிலையுங் கூட்டி
ஆசிலா திப்பிலி தகட்டு
அரிதாரம் ... ...
மாசிலா கருஞ்சீ ரகமும்
வகை வகை கழஞ்சு வாங்கே. (1)

ஆ. முடிவு

பேதியெண்ணெய் : கடுக்காய் 2, களிப்பாக்கு 2, வேப்பம் ஈர்ய்க்கு 2, இந்த மூணும் நறுக்கிப் பிரண்டைச் சாற்றில் பிசறி ஒரு படி எண்ணெய் விட்டு, எட்டு நாள் ஊற வைத்து எடுத்துக் கொள்ளவும். புளி, புகையிலை தவிரவும்.

5. பிற செய்திகள்

அகத்தியர் குழம்பு என்பதுவும் இதுவே.

753. அகத்தியர் கருத்த குழம்பு

1 நூலகக் குறிப்புகள்

அ. 573 — 3

ஆ. ல/151

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் கருத்த குழம்பு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 5

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 3 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவளர் பொதிகைவளர் முனிவர் கூடி
செகமதிலே வாழுகின்ற மனுஷர்க் கெல்லாம்
மருவினையாய்ப் பலருபல விஷங்கள் தீர
வகுத்துரைத்தார் கருத்தநல்ல குழம்பு கேளாய்
பருவமுடன் சூதமரி தாரங் கெந்தி
பாங்கான நெறிவிஷமு நாவி காரம்
இருளியுடன் காயமனோ சிலையிந் துப்பு
இசைந்தபத்து வகைகழஞ் சா யெடுத்துக்
கொள்ளே. (1)

ஆ. முடிவு

தணிந்துபோம் மருந்தினுட விபரங் கேளு
சார்வாகக் குன்றியெடை யருந்த நன்றாம்
பணிந்துபோம் வியாதியெல்லா மனுபா னத்தில்
பாய்ச்சவே தீர்ந்துவி டும்பண் டிதரே

துணிந்திந்த முறை செய்ய மயங்க வேண்டாம்
சொற்பெரிய தேவியென்றே யீசன் சொல்ல
அணிந்துநந்தி பெற்றவரம் அகத்தி யருக்கு
அருளினா ருலகத்தி லருளினாரே. (5)

754. மருந்து அட்டவணை

1. நூலகக் குறிப்புகள்

அ. 573 - 4
ஆ. ல/151

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. மருந்து அட்டவணை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு ; 62 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விக்கல், வாந்தி கிழாயம் : திரிபலை, சுக்கு, வெண்காரம், எலுமிச்சம் பழமும் தேனும் அனுபானம் பண்ணிக் கொள்ளவும், வாந்தி, விக்கல் தீரும்.

ஆ. முடிவு

நேர்வாளம் சுத்தி: நேர்வாளக் கொட்டையைச் சாணிப்பாலில் முப்பது நாழி ஊறவைத்து, ரவிக்கு அடுப்பில் வைத்து, ஒருகொதி வந்த பிற்பாடு இறக்கி வைத்து, பொழுது விடிந்து, அடுப்பில் வைத்து, ரெண்டு கொதி வந்த பிற்பாடு யெடுத்து ஆற வைத்து, சலம் விட்டு அலசி, ஓடு போக்கி, நஞ்சுயெடுத்து மருந்தில் சேர்க்கவும்.

755. மருத்துவ நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 574
ஆ. ல/152

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நிகண்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 166

3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு ; 62 பக்கம்.
ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிடந்தீர்ந் தெடுத்திட பேரான தங்கமாம்
கடந்தீர்ந்த சுண்ணமாம் கடுவேக மாயூதுந்
தடந்தீர்ந்த வேதைக்குத் தானாகுந் தாமிரம்
இடந்தீர்ந்த வேதைக்கு இலக்கும் மில்லையே. (1043)

ஆ. முடிவு

நாட்டினேன் சிலசரியும் வாத வித்தை
நலமான வுப்போடு உதகஞ் சொன்னேன்
ஆட்டினேன் வாதத்திற் பூநாகஞ் சொன்னேன்
புகழான இருபத் தஞ்சுநூ றங்கம்
ஆட்டினேன் பலநூ லில்லை யில்லை
ஆச்சரிய நிகண்டினுட தொகையைக் கேளு
நீட்டினே னாயிரத் திருநூ றுந்தான்
நேராக நிகண்டினுட கடைதான் முற்றே. (1209)

(இதன் பிறகு 1210 ஆம் பாடலின் முதலிரண்டு அடிகள் மட்டுமே எழுதப்பட்டுள்ளன.)

756. போகர் இரணவாகட சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 575
ஆ. ல/153

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. போகர்
ஆ. போகர் இரணவாகட சூத்திரம் 16-வரலாறு.
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு ; 10 பக்கம்.
ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. சற்றே சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற கணபதியென் குருவைப் போற்றி
அருளான சூத்திரத்தின் விபரந் தன்னை
நீதியென்ற பலரினங்கள் பிறந்த வாறும்
நேரான சாத்தியம் அசாத்தியம் கூறும்
சோதித்த மருந்துவிடா செடத்தின் நேர்மை
சொல்லுவது ரினத்தின்பேர் சூட்சமெல்லாம்
வாதித்த நோய்தீர்க்க வகுத்த மார்க்கம்
மகத்தான சிகிச்சைகளு மிந்நூல் பாரே. (1)

ஆ. முடிவு

பாரப்பா புண்மருந்து வகையைக் கேளு
பாங்கான பூரணம்நா னூறில் பாரு
நேரப்பா ரசமடியப் பதங்களஞ் சொன்னேன்
நிகராக யினம்வெகு பாகஞ் சொன்னோம்
காரப்பா பெரியோர்க்குத் தண்டு செய்தால்
காட்டுவார் பூரணத்தைக் கண்டு பாரு
சீரப்பா இரணநூலின் வகையைச் சொன்னேன்
திரமான பதினாறுஞ் சிறக்க முற்றே.
முற்றுப் பெற்றது.

இ. பிற்குறிப்பு

இஃது காஞ்சா ..... பெருமாள் நாயகர் வர்களுக்குச் சொந்தமாக எழுதியது.

1818 ஆம் வருடம், சூன் மாதம், 30 ஆம் தேதி எழுதி நிறைவேறிற்று. இப்படிக்கு அ. அருணாசலம் குறிப்பு.

757. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 576
ஆ. ல/154

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ...
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 185 (பாடல். 16 முதல் 200 வரை)

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு ; 28 பக்கம். (ஏடு 75 முதல் 88 வரை)
ஆ. நீளம் 29 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9 வரி
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

புதுமா நிலத்தில் புவிகள் பத்தாது
அதுதான் குறிப்பு அடிமுடி இரண்டுக்கு
மதுவா நிறம் போல வளரடி மூலம்
கதிர்கண் டுலாவக் கங்கையின் பேரே. (16)

ஆ. முடிவு

சொல்லும் ரவிதான் திறமான சத்தி
சொல்லு மீந்தப்பர சிவமான ரூபம்
சொல்லுந் தளிர்தான் சிறுநீர் சிவகங்கை
செல்லமுப் பூவுஞ் சேர்ந்த குருவே. (199)

குருவான தந்தையே நந்தி யப்பா
திருமூல னானேன் செய்தொழிற் சொன்னேன்
கருவூரன் கொங்கணன் பேர னிவர்கள்
தருபோக னென்செய் தமிழடி யெண்ணே. (200)

முற்றும்

758. அகத்தியர் ரணவாகடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 577-1
ஆ. ல/155

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ரணவாகடம் 100
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 98

3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு ; 50 பக்கம்
ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9 வரி
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காப்பு

ஆதியாம் மனோன்மணியைத் தொழுது போற்றி
அன்பாக உலகுதன் னிலவ தரித்த
நீதியில்லா மானிடர்கள் செய்த காமம்
நிணங்களுக்குச் சாந்தியொடு களிம்பு சீலை
ஓதியதோர் வாகடங்கள் முழுதும் பார்த்து
உரைக்கிறேன் வாகடமாம் நூறி னுள்ளே
பாதிமதி தனையணிந்த சிவன்மால் வேதன்
பரையீன்ற வாரணத்தோன் காப்பு தானே.

ஆ. முடிவு

சகல ரணங்களுக்கு உள்ளுக்கு எண்ணெய்.

சதுரக் கள்ளி கொடிவேலி
சாணா யெருக்கு கொடிகள்ளி
அதுரும் வேலி யமுக்குராவும்
ஆதண்டை வேரும் வகையொன்று
சூதங் கெந்தி செந்தூரம்
சுகமா யேரண்டத் தெண்ணெயொடு
போத வெரித்து வுள் கொள் வீர்
போகா ரணங்கள் போய் விடுமே. (98)

இ. பிற்குறிப்பு

1889 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 26 ஆம் தேதிக்குச் சரியான தமிழ் சாலிவாகன சகாப்தம் வருஷம் 812 நிகழும் விக்குராதி வருஷம் ஐப்பசி மாதம் 12 ஆம் தேதி, ஆதிவாரம், திரிதிகை, அனுஷ நட்சத்திரம், திரிலோச்சன கௌரி விரதம், பகல் 2 மணிக்கு, பெங்களூர் சிவிலன் மில்டோரிடேசன் பிளாக்கி பள்ளி, சாத்தினி சவுக் ரோட்டில் அபினிகஞ்சா சூத்தகை வியாபாரஞ் செய்யும் திருச் சிராப்பள்ளி. தி வி. பெருமாள் நாயக்கரவர்களுக்கு, சேயூர் தருமலிங்க உபாத்தியாயர் எழுதிய ரணவாகடம் 100. எழுதி முடிந்தது.

759. கனகனாதி சூரணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 577-2
ஆ. ல/155

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...
ஆ. கனகனாதி சூரணம் : ஏலப்பாட்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் (சந்தப் பாடல்)

3. தோற்றக் கூறுகள்

அ 2 ஏடு ; 3 பக்கம்.

ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 9 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சற்றே சிதைந்துள்ளது.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரோங்கு பொதிகைமுனி பாதஞ்
சென்னி தனிலே யணிந்து
பேரோங்குங் கனகனாதி சூரணம்
பேசுங் கப்பற்பாட் டுடனே
ஏரோங்கும் வெண்காரம் கெந்திமனோ சிலையும்
யிதமாய்க் கலகாரம் வகைதுலா மொன்று
நேரோங்கு சூதமொடு வெள்ளைபா ஷாணம்
நிலையுற்ற கருநாவி சுக்கரிசி திப்பிலி
காரோங்கு மிளகதுவு மொன்பது துலாமுங்
கருதியாய் சுத்தி செய்து கல்வமதிலிடுவாய்
ஏலேலோ (1)

ஆ. முடிவு

கூடுஞ்சுரம் அறுபத்தி னாலு தீரும்
குருங்கருணைக் கிழங்கு தூளில்
வாடிடும் வள்மூல மொடுபவுத் திரமும்
மாறாட்ட மாகாமல் தீருமடா தீட்டம்
சூடியதேள் விஷமாற வெற்றிலைச் சார்நசியம்
சுந்தரமே செய்தவுட னின்றுவிழு முண்மை
நீடிரவு விஷமாற நொச்சிச்சார் தன்னில்
நீபிழிந் தஞ்சனமிட தீரும் பாரே ஏலேலே. (3)

760. திருமூலர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 578
ஆ. ல/156

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருமூலர்
ஆ. திருமூலர் சூத்திரம் 200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 181

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு ; 40 பக்கம்.
ஆ. நீளம் 20·5 செ.மீ. ; அகலம் 3·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. சற்றே சீதைவுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எண்ணா யிரத்தில் பிறக்கு மந்திரம்
அண்ணாவி சொன்னா ரடியே னறிந்தேன்
சொன்னான் சிவப்பு சேர்பச்சை நீலம்
வண்ணா னறிவான் வகாரத் திரையுமே. (1)

ஆ. முடிவு

வகையாய்ப் படித்தான் கருவூரா னப்பன்
வகைகள் பிறக்கும் மகத்தான சொல்லா
சுகமான கொங்கணர் நூல்பார்க் கக்கேள்
தகைதான் பொருளை தடைவிடை யில்லையே. (181)

(இதற்கு மேல் 182 ஆம் பாடலின் முதல் மூன்று அடிகளே உள்ளன. பிற இல்லை.)

761. சட்டைமுனி சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 579
ஆ. ல/157

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி சூத்திரம் 200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 201

3. தோற்றக் கூறுகள்

அ 42 ஏடு ; 84 பக்கம்.
ஆ. நீளம் 25 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

தொடர் எண் : 503 காண்க.

ஆ முடிவு

தானான சூத்திரத்தை யெழுதி மக்காள்
சாதகமாய்க் கடாட்சத்தை வைத்துக் கொண்டு
வானான கேசரத்தி லாடும் போது
வார்த்தை .... சாத்திரமுங்

கோனான சின்மயத்தின் பிள்ளை நாங்கள்
குறியேது கயிலாச மூர்த்தி வர்க்கம்
வேனான சூத்திரந்தா னிருநூற் றொன்றும்
வேதாந்தக் கருணையினால் விளங்க முற்றே. (201)

சட்டைமுனி நயினரருளிச் செய்த இருநூற்றொன்று முற்றும்.

762. கொங்கணர் சைதன்னியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 580
ஆ. ட/98

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் சைதன்னியம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 113

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு ; 48 பக்கம்.
ஆ. நீளம் 28 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 11 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. முற்றும்

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அகண்டபரி பூர்ணமான மூல நாயன்
அடிதொழுது காலங்கி பாதம் போற்றி
புகண்டுநின்ற போகருட பதத்தைப் போற்றி
புகழ்பெரிய வல்லோர்கள் பதத்தைப் போற்றி

தகண்டுநின்ற சரிதையொடு கிரிகை யோகந்
தனிப்பெரிய ஞானமொடு நாலுஞ் சொல்வேன்
நிகண்டுநின்ற படிசொல்ல யென்னால் கூடா
நேரான பூரணந்தா னிறைந்த காப்பே. (1)

ஆ. முடிவு

சொல்லுறேன் மூலகுரு ... பேரன்
சொற்தவறாக் கொங்கணர்க்குப் பிள்ளையா
னென்று
சொல்லுகிறோ முனையழைத்து அனைத்துக் கொள் ...
சூழுலகி லறுபத்து னாலுபா தினோருஞ்
சொல்லுகிறோ மென்னாலே அறிந்த மட்டுஞ்
சொன்னேன் துடி யானநாதாக் கள்தாளுக்குப்
பற்றேன்
சொல்லுகிறோ மூலகுரு போகர் பதம் போற்றி
சுத்தசைதன் னியமென்ற வேதாந்த முற்றே. (130)

763. மாட்டு வாகடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 581
ஆ. ல/158

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. மாட்டு வாகடம்
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 22 பக்கம்.
ஆ. நீளம் 32 செ.மீ ; அகலம் 2·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாட்டு நோவுக்குப் புல்லு தண்ணி ஓதிக் கொடுக்கிற மந்திரம்
ஆம் ஓங் கணபதியே அடியேன் நின்னை தன்னை
நாளும் மலர் கொண்டு நாம் பணிவோமே.
ஓம் தங்கி ஓடும் பரமேஸ்பரர் பார்வதி, லஷ்மி கோமமே
யோடே வந்த குமரி அழல் வெக்கை தோன்றும்
எப்போர்ப்பட்ட வியாதியும் நான் ஓதின புல்லோடுந்
தண்ணீரோடும் போக சுவாக. திருச்சிற்றம்பலம்.

ஆ. முடிவு

பணமூக்கு சிலந்தி கொண்ட மாட்டுக்கு முககட்டை வீங்கும். வாய் வழக்கும். இதுக்கு மருந்து:

இலுப்பைப் புண்ணாக்கு சுட்டு, இலுப்பை இலையும் காயும் வில்வப்பட்டையும் கொடுப்பது. இதுக்கு சுடுதாலக் கட்ட முக்காணியாகச் சுடுவது; நீரிலரைத்துச் சொரிவது.

764. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 582

ஆ. ல/159

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ மருத்துவம்

ஈ. செய்யுள் 750

3. தோற்றக் கூறுகள்

அ. 139 ஏடு ; 278 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ. ; அகலம் 3·5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. கிறுக்கலான எழுத்து.

ஊ. முதல் 8 ஏடுகளும் 140 க்குப் பின் இருக்க வேண்டிய ஏடுகளும் காணப்படவில்லை. இடையிடையே சிற்சில ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பருவமா திரதன்னில் நாகந் தன்னை
பதினொருக்கால் யிலுப்பைநெய்யி லுருக்கிக்
கொண்டு
துருவமாம் நீரதனில்பதி னொருக்கால் சாய்க்கப்
சுப்புரமாயி வெள்ளிபொன் போலேகண் விட்டாமே
அருவமாம் யிருவங்கம் கட்டிப் போகும்
அறுபத்து நாலான பாஷாணஞ் சாகும்
உருவமாம் பாசங்கள் நூற்றுரெண்டோ மற்றும்
சத்தாம்ஒரு நொடிக்குள் சுற்றுகிற
குளிகை யாமே. (51)

(பாடலில் சீர் ஒழுங்கு இல்லை.)

ஆ. முடிவு

ஏழுதரந் தோச்சுமே ரவியில் போட்டு
ஏற்றமாங் கல்வத்தில் கரியுப் புத்தான்
சூழுமே பொடிபண்ணி வேறே வைத்து
சூட்சந்தான் சார்த்துக் கொண்ணுக் காறு
வேழுமே வெடியுப்பு ஒண்ணுக்கு நாலு
மிக்காகப் பொடிபண்ணி வேறே வைப்பாய்
தாழுமே வெங்காரம் ஒண்ணுக்கு ரெண்டு
தாக்கியரைத் தேபொடியாய் வைத்துக்
கொள்ளே. (803)

765. உண்ணாமுலை சதகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 583
ஆ. ள/7

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. உண்ணாமுலை சதகம்
இ. நீதி நூல்
ஈ. செய்யுள் 60

3. தோற்றக் கூறுகள்

அ. 61 ஏடு ; 122 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 3, 4 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலையிலுள்ளது.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உண்ணா முலை மாய னோங்கு தங்கை சங் கரிமேல்
உண்ணா முலைச் சதக மோதுதற்குக் — கண்மூன் று
வேளை முகத்தானை வேளை முகத்தானை
வேளை முகத்தானை வேண்டும்.

ஆ. முடிவு

கற்புவனி தைக்குமொரு தப்பிதஞ் சொல்வதும்
கள்ளுண்டடஞ் சொல்வதும்
களித்தொருவர் தேடரும் பொருளப கரிப்பதும்
கடுங்கொலைத் தொழில் புரிவதும்

செப்புகுர வைத்துஷ ணிப்பதும் சிவனடியார்
சிந்தைநலி யச்செய்வதும்
தியாகமேற் பவர்தமைக் கீய்வரை விலக்கிடும்
தீமையும்வாய் வலுமையால்
ஒப்பிவழக் கழிவுசெய்து கைக்கூலி வாங்குவனும்
மருமனை யாட்டிபா
லுய்யவேசை யோகமிது செய்வதிது வேலா
முறுநரகில் வீழ்வதற்குத்
தப்பிதமெ னச்சொலு தடமென் றறிந்திலார்
தானிதை விரும்பு மனிதர்
தாரமேயண் ணாமுலையீஸ் வரர்பாலே
யெண்ணாமுலாவிய
தாயேயுண் ணாமுலை நாயகியே. (60

766. துரௌபதையம்மானை

1. நூலகக் குறிப்புகள்

அ. 584
ஆ. ர/7

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. துரௌபதை யம்மானை
இ. நாட்டுப்பாடல்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 96 ஏடு ; 192 பக்கம்.
ஆ. நீளம் 40 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு பலவிதவரி
உ. சுமாரான எழுத்து.

ஊ. இடையிடையே பல ஏடுகள் ; காணப்படவில்லை.
பல சிதைந்தும் முறிந்துமுள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முந்திமுந்தி விநாயகனே முருகா சரஸ்வதியே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்நடவாய்
தொந்திவயிற் றோனே தோகைசே வகனே
ஆனையடிப் பிள்ளையாரே அடிபணிந்து
நான்மற வேன்
வேறுவினை வாராமல் விநாயகனே முன்நடவாய்.

ஆ. முடிவு

இன்ன சொல்லுமென்று யின்ப முற்றுக் கேட்டாலும்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
மூங்கில் போலச்சுற்ற முசியாமல் வாழ்ந்திருப்பார்
பின்னைப் பதம்பெறுவார் பெருமாள் போல்
வாழ்ந்திருப்பார்.

இ. பிற்குறிப்பு

சோமவார நாள் உத்தர நட்சத்திரத்தில், திதி தசமியில் சிங்க லக்கணமுங் கூடின சுபதினத்திலே துரௌபதை அம்மானை எழுதி நிறைவேறினது. முற்றும். திருச்செங்கோட்டுத் தாலுக்காவைச் சேர்ந்த பிடாரக் கிராமம் கோவிந்தம் பாளையத்திலே இருக்கிற ஏழூரு நாடு கவனிய கோத்திரத்திலே ஸ்ரீ கருணபச்சையன் பிள்ளை குமாரன், இளையனா பிள்ளை குமாரன், வெங்கடாசலம் பிள்ளை, இராசிபுரந் தாலுக்காவுக்குச் சேர்ந்த சிராப்பள்ளசாரும் வெள்ளைக் கல்லுப்பட்டியிலே பள்ளிக்கூடம் போட்டு இருக்கிறபோது எழுதினது. திரௌபதை அம்மானை. இதை ஆருவொருவர் எடுத்துப் படித்த பேரும் இந்தச் சுவடியிலே பிழைகள் இருந்த விடத்திலே திருத்தவும். இந்தச் சுவடி படித்த பேரும் சுவடிக்காரன் கையிலே ஒப்புவிக்கவும். கொடுக்காமல் போனால் கர்ப்பத்திலே இருக்கிற சிசுவைக் கொன்ற தோஷத்திலே போவானென்றவாறு.

767. இரேகை சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 585
ஆ. வ/31

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. இரேகை சாக்திரம்
இ. சோதிடம்
ஈ. செய்யுள் 685

3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு ; 58 பக்கம்.
ஆ நீளம் 27 செ.மீ. ; அகலம் 2 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. 1, 3, 4, 20 ஆக 4 ஏடுகள் இல்லை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

என்னவென்று உலகிலுள்ள ரேகையின்விபரங் கேளீர்
இக்குறிக ளறிந்து சொல்வோர்க் குறுதி யாகும்
மன்னவனே வருகுமிடர் அறிய வேண்டி
மாநிலத்தி லுரைப்பவர்க்கு வகுத்துச் சொல்வேன்
இன்னபடி வகைவகையாய்ப் பிரித்துச் சொல்வேன்
இந்நிலத்திற் குறிப்பறிந்தால் இயம்ப லாகும்
சொன்னபடி யேநன்றாய்க் குணித்து பாரும்
சுத்தமுடன் இக்குறிகள் தோற்றும் தோற்றும். (3)

ஆ. முடிவு

அம்மொழியி லடிவரையி லிருக்கும் போது
அருமையுடன் மேவுகின்ற யோகங் கேளீர்
உம்மனையி லத்துயர முண்டுசெல்வ முண்டாம்
உத்தமனே யக்குறிப்புக் கடனுஞ் செல்வம்
செம்மையுட னவ்விரண்டுஞ் சரியாய் நிற்கும்
தெரிந்துசொல்வோ மிக்குறிகள் பொய்யே அல்ல
வண்மையுட நல்வரைக்கு ளடங்கி நின்றால்
வறுமையது தோன்றுமிது வழுத்தி னோமே. (85)

768. திருக்குறள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 586
ஆ. ங/10

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருவள்ளுவர்
ஆ. திருக்குறள் : பரிமேலழகர் உரை
இ. கீழ்க்கணக்கு நூல்
ஈ. செய்யுளும் உரையும். அச்சில் ஏறத்தாழ 400 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 234 ஏடு ; 468 பக்கம்.
ஆ. நீளம் 38 செ. மீ. ; அகலம் 2·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. மிகச் சிதைந்த நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் 628 காண்க.

ஆ. முடிவு

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

(என்னும் இப்பாடலுக்கான உரையுடன் நூல் முடிவடைகிறது. ஏட்டின் பல பகுதிகள் மிகவும் சிதைந்துள்ளன.)

இ. பிற்குறிப்பு

898 ஆம் வருடம் தை மாதம் 25 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையும் ஏகாதேசியும் அரிசன நாம யோகமுஞ் சுப கரணமும் பெற்ற மூல நாள் திருவள்ளுவருரை எழுதி முகிந்தது.

5. பிற செய்திகள்

சுவடியின் பின்னால், திருவள்ளுவர் அதிகாரத்துக்கு அடி வரை என 2 ஏடுகளும், திருவள்ளுவர் பேரிற் சங்கத்தார் பாடிய கவிதை என 4 ஏடுகளும் உள்ளன.

769. திருக்குறள்

1 நூலகக் குறிப்புகள்

அ. 587
ஆ. ங/11

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருவள்ளுவர்
ஆ. திருக்குறள் : பரிமேலழகர் உரை
இ. கீழ்க்கணக்கு நூல்
ஈ. செய்யுளும் உரையும்

3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு ; 100 பக்கம்.
ஆ. நீளம் 36 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 12 வரி.

உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் 673 காண்க.

ஆ. முடிவு

இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல். (எ. து.) மக்கட் .....

770. மனோன்மணி தோத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 588-1
ஆ. த/14

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. மனோன்மணி தோத்திரம்
இ. தோத்திரம்
ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீராருங் காலைத் திருத்திச் சுழிமுனைக்குள்
பேராக நாட்டப் பெறும் வகை நீபார்த் தருள்வாய்
வேரான மூலவட்ட வித்தே விளக்கொளியே
வாராக வமுதே மனோன்மணிப் பெண்ணா ரமுதே. (க)

ஆ. முடிவு

ஆட்சியென்னும் வீட்டிலமர்ந் திருந்தபே ரொளிநீ
காட்சிதந்த தால்நாயேன் கடைத்தேற மாட்டேனோ
சூட்சியென்னுஞ் சூட்சிச்சு ரூபமே நால்வேத
வாட்சியே யென்னம்மை மனோன்மணிப்
பெண்ணா ரமுதே. (12)

மனோன்மணி தோத்திரம் முற்றும்.

771. அங்கயற்கண்ணம்மை அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 588-2
ஆ. த/14

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. அங்கயற்கண்ணம்மை அகவல்
இ. தோத்திரம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 16 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான எழுத்து.

இ. சிதிலமான நிலை.
ஈ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆடகமா மன்றுறையு மன்னமே நின்னுடைய
பாடகமுஞ் சீரடியும் பற்றினேன் — தேடரிய
அற்புதமே அம்மே யணங்கே மண்ணாறுங்
கற்பகமே நீயிதற்குக் காப்பு

ஆ. முடிவு

நல்லசிவ பாக்கி யத்தை நல்கியே
வல்ல பத்தா லாசு மதுரஞ்
சித்திர வித்தார மென்று உலகில்
பேசுகின்ற உண்மைப்பெரு வாக்கு
நேச முடன்தந் தென்னையாட் கொண்டு
சற்குரு வரயென் னிடத்தில் வந்திருந்து
புத்திமதி விளைத்து சந்ததமு நீயே
துணையாக நின்று ரெட்சியுங்
கருணைத் தாயே நின்தாளே சரணம்.

772. திருவிசைப்பா

1. நூலகக் குறிப்புகள்

அ. 589
ஆ. ண/27

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சேந்தனார் முதலியோர்
ஆ. திருவிசைப்பா
இ. சைவத் திருமுறை
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 47 ஏடு ; 94 பக்கம்.
ஆ. நீளம் 17 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண், 444 காண்க.

773. பரதேவதை அகவல்

1 நூலகக் குறிப்புகள்

அ. 590
ஆ. த/15

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. பரதேவதை அகவல்
இ. தோத்திரம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 22 பக்கம்
ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

4 சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூங்கமல யோனிமுதற் புத்தேளீ ரைவருக்கும்
ஆங்கவர்க்குஞ் செய்கை அனைத்தினுக்கும்—ஓங்கிவளர்
வித்தாய்ப் பரையாய் விரிந்தபடை யட்சரக்
கொத்தாய் மனோன்மணியாய் கூறத்தாய் – உற்றதுவும்
....

ஆ. முடிவு

மூன்றுமுக் கோணமூர்த்தி யாயைந் துருவாயம்
மூன்றெழுத் தின்வடி வாயினாள் தம்மை
அகலா திருப்பாள் அனவரத மெல்லாஞ்
சகலாதி பத்தியமும் தந்து.

774. திருவாசகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 591
ஆ. ண/28

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மாணிக்கவாசகர்
ஆ. திருவாசகம்
இ. சைவத் திருமுறை
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 126 ஏடு ; 252 பக்கம்.
ஆ. நீளம் 17 செ.மீ. ; அகலம் 2·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 427 காண்க.

ஆ. முடிவு

மிகச் சிதிலமான நிலையானதால் படிக்க இயலவில்லை.

775. வாக்கிய சம்பிரதாயம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 592

ஆ. ற/35

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....

ஆ. வாக்கிய சம்பிரதாயம்

இ. பல்வகை நூல்கள் (வைணவ நூல்)

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 58 ஏடு ; 116 பக்கம்.

ஆ. நீளம் 30 செ.மீ. ; அகலம் 4 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 10, 11 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆ. முடிவு

பல ஏடுகள் சிதைந்துள்ளதால் படிக்க இயலவில்லை.

5. பிற செய்திகள்

இதே சுவடியில், சாஸ்திர வரலாறு குருபாரம்பரியம் பற்றிய செய்திகளும் எழுதப்பட்டுள்ளன.

776. சித்தரந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 593
ஆ. ய/38

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. சித்தரந்தாதி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 22

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு ; 20 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குத்தரந் தாதிப் பிறவிக் கடலைக் குலைத்து நெஞ்சே
முத்தரந்தாதி ... பெறலா முதி ரா முலையாள்
அத்தரந் தாதி யகிலாண்ட நாயகி யம்மையுமை
சித்தரந்தாதி யிருபத் திரண் டடையுஞ் செப்புதற்கே. (1)

முடிவு

வேணுங் கதியென் றிருப்பார் மனத்துள் விரும்புமவர்
நாணுங் கொடுமையும் நல்குரவுஞ் செற்ற நாயகியே
சேணுங் கலமுந் திகழொளி யாய்ச்சிவ சத்தியே
பாணு மறையும் பரவநின் றாயென் பாரபரையே. (22)

சித்தரந்தாதி முற்றும்.

777. சிதம்பரச் செய்யுட் கோவை

1. நூலகக் குறிப்புகள்

அ. 594
ஆ. – ச/27

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. குமரகுருபரர்
ஆ. சிதம்பரச் செய்யுட் கோவை
இ. இலக்கணம்
ஈ. செய்யுளும் உரையும், அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு : 38 பக்கம்.
ஆ. நீளம் 39 செ.மீ. ; அகலம் 4 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 11 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூங்கொன் றைக்கண் ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
வாங்கொன் றைக்கண் ணி யவர். (இ.து.)

ஆ. முடிவு

வாழ்த்துமின் வாழ்த்துமின்தில் லைநிணைமின்
மணிமன்றத்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு — வீழ்த்த
பரநெறியா..... நெறிபோற்றி நெறிநின்றெழுத்திர
மன்றத்துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே.

இது செவியறிவுறூஉ மருட்பா. மருட்பா முற்றும். செய்யுட் கோவை முற்றும்.

இ. பிற்குறிப்பு

1058 ஆம் வருடம் கார்த்திகை மாதம் 19 ஆம் நேதி தாய வலந்தீர்த்தான் கவிராயன் எழுதி முற்றினது.

'திருச்சிற்றம்பலத்துக்குச் செய்யுட்கோவையிது' என முதல் ஏட்டில் நூலின் பெயர் எழுதப்பட்டுள்ளது.

778. சிவகாமியம்மன் அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 595
ஆ. த/16

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. சிவகாமியம்மன் அகவல்
இ. தோத்திரம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு ; 18 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 2·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9 வரி.

உ. சுமாரான ஏழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தன்றிதகு மெஞ்ஞான நாவவிழ்த மாகிவிடுஞ்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பெய்து — மென்று
மவகா மியமறுக்கு மானந்தத் தில்லைச்
சிவகாமி யென்றொருக்காற் செப்பு.

ஆ. முடிவு

உம்பர்க ளறியா உயர்ந்த மலர்த்தாள்
நம்பி யிருக்கு நாயடியேன் காண
துவலோ துயிலோ சொன்னேன் சொன்னேன்
கவலரி யெந்தன் கவலையை யொழித்து
காத்தது காத்தாய் கடைபோக வென்னைப்
பார்த்தெனக் குள்ளே பரிப்பதுன் பரமே.

779. இருபா இருபஃது

1. நூலகக் குறிப்புகள்

அ. 596
ஆ. ஞ/14

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அருணந்தியார்
ஆ. இருபா இருபஃது : மூலமும் உரையும்
இ. மெய்கண்ட நூல்கள்
ஈ. செய்யுளும் உரையும், அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு ; 58 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 12 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. 9, 10, 22, 31, 32 ஆகிய ஏடுகளும் 34 க்கு மேல் இருக்க வேண்டிய ஏடுகளும் காணப்படவில்லை. மிகவும் சிதைவுற்றநிலை.
எ. குறை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

ஆ. முடிவு

(ஏடுகள் மிகவும் சிதைத்துள்ளன. படிக்க இயலவில்லை.)

780. கனவின் நூல்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 597
ஆ. வ/32

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. போசராசன்
ஆ. கனவின் நூல்
இ. சோதிடம்
ஈ. செய்யுள் 33

3. *தோற்றக் கூறுகள்*

அ. 4 ஏடு ; 8 பக்கம்.
ஆ. நீளம் 26 செ.மீ. ; அகலம் 4 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சுமாரான எழுத்து.

ஊ. சற்றே சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கூன்மதி நதியும் பன்றிக்
கோடுநீ ரரவந் தும்பை
மான்மழு சூலங் கொன்றை
மாலிகை யாக்க ராகி
தேன்மலி கரந்தை வேணித்
திகழர னுமைய ளித்த
நான்மறை வழுத்தும் வேழ
நாயகன் பதமேற் கொள்வாம். (1)

ஆ. முடிவு

கனவிற்குற்ற மொழிதற் குரியவை

அரசுறு பூசை செய்தல்
அந்தணர்க் கமுது நல்கல்
கருதிய தானம் பண்ணல்
கங்கையிற் தீர்த்த மாடல்
வரமுறு சுரபி தொட்டு
வணங்கற் பாரதநூல் கேட்டல்
புரையுறு கனாவிற் குற்றம்
போமென மொழிவா னன்றே. 33

இ. பிற்குறிப்பு

இந்நூலாசிரியர்

தாராபு ரீசன் தனிக்குடைப் போச ராசன்
சீரார்க னாநூற் செப்பினன் சிந்தை கூர்ந்தே
காரார் கடல்சூழ் புவியோர்க ளுள்யாவ ரேனும்
ஓரா துணர்வுறு மேபெரு வாழ்வ தன்றே.

கனவினால் முற்றுப் பெற்றது.

781. ருது சாந்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 598
ஆ. வ/33

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. ருது சாந்திரம்
இ. சோதிடம்
ஈ. செய்யுளும் உரையும் அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 12 பக்கம்.
ஆ. நீளம் 26 செ.மீ. ; அகலம் 4 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சுமாரான எழுத்து. மைக்காப்பில்லை.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாச பலன்

முந்தினதோர் சித்திரையிற் திரண்டா ளானால்
மோசமில்லை வறுமைவந்து மூடிக் கொள்ளும்
பிந்தினதோர் வைகாசி ருதுவா னாக்காற்
பிரியமுடன் கணவனையே பேணிக் கொண்டு
அந்திசந்தி சவுரியமா யிருப்பாள் மெத்த
அவளிடத்தில் நிதிமிகுந்து யணுகிச் சேரும்
கொந்தலருங் குழலணங்கே ஆனி யானாற்
கூறுகேள் போகமிச்சங் கொடுக்கும் பாரே. (1)

ஆ. முடிவு

அ-ஆ - வல்லூறு	வியாழன் -	சனி -	கோழி -	சாவு
இ-ஈ - ஆந்தை	வெள்ளி -	புதன் -	மயில் -	சாவு
உ-ஊ - காகம்	செவ்வாய் -		- வல்லூறு -	சாவு
எ-ஏ - கோழி	திங்கள் -		- ஆந்தை -	சாவு
ஒ-ஓ - மயில்	ஞாயிறு -		- காகம் -	சாவு

இவை பட்சியறிய

இ. முற்குறிப்பு

எவனாசாரியரார் திருவுளம் பற்றியதில் 67 ஆம் அத்தியாயத்தில் உள்ள ருது சாஸ்திரம்.

5. .....

6. *மாற்றுச் சுவடிகள் காணுமிடம்*

தொடர் எண் : 686 காண்க.

782. கபிலர் வரலாறு

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 599-1

ஆ. ற/36

2. *உள்ளீடு: நூல் விவரம்*

அ .....

ஆ. கபிலர் வரலாறு

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. *தோற்றக் கூறுகள்*

அ. 2 ஏடு ; 3 பக்கம்.

ஆ. நீளம் 26 செ.மீ. ; அகலம் 4 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 9 வரி.

சு. வி. 23

உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகச் சிதைந்த நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நயமிகு புகழ்ச்சோ ணாட்டுளோ ரந்தணன்
உயர்மனைக் கிழத்தியங் குயிர்த்தவோர் மைந்தர்க்கு
யாணா சாலபகவ னெனப்பெய ரீந்துபின்
கோணிலை நாணிலை குறித்தசா தகத்தால்
புன்குல மாதுதோள் புணருமென் றோத்தி
தென்குலக் கிழுரக தாமெஸவுளங் குழுமிய
....

ஆ. முடிவு

வாக்குப நயனச் சடங்கியற்றப் பட்டே
வாக்குங் களிப்பு எய்திய தாதலின்
கூறிய விந்நூற் கொண்டு உள்ளந்
தேறின ... னெலாஞ் சேர்ந்துவாழ் குவரே.

கபிலர் வரலாறு முற்றிற்று.

783. கபிலர் அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 599-2
ஆ. ற/36

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கபிலர்
ஆ. கபிலர் அகவல்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 5 பக்கம்.
ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகச் சிதைந்த நிலை.
எ. முழுமை

4 சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நான்முகன் படைத்த நானா வகையுலகில்
ஆன்றசி றப்பி னரும்பொருள் கூறுங்கால்
ஆண்முதிதோ பெண்முதிதோ வன்றியலி முதிதோ
நாண்முதிதோ கோண்முதிதோ நல்வினை முதிதோ

ஆ. முடிவு

புலையுங் கொலையுங் களவுந் தவிர்ந்து
நிலைபெற வறத்தின் நிற்பவை யறிந்து
ஆணும் பெண்ணு மாணும் புணர்ந்து
பேணிய ... பிழையெனப் படாது
சிறப்புஞ் சீலமு மல்லாது
பிறப்பு நலந்தரு மோ பே தையீரே.

கபிலரகவல் முற்றிற்று.

இ. பிற்குறிப்பு

இதன்பின் சொல்லப்பட்ட பெண்பான் நால்வரும் ஆண்பான் மூவருமாகிய ஏழு பிள்ளைகளையும் பிறந்தவிடங்களிலே வைத்து விட்டு ஆதியும் பகவானும் அப்புறம் போகிற போது தாதியானவள் பிள்ளைகளை நோக்கி, இந்தப் பிள்ளைகளை யாவர் காப்பாற்று வாரென்று இரங்கிக் காலெழாது நிற்க, அப்போது அவள் மனவருத்தந் தீருப்படி குழந்தைகள் கடவுளருளினாலே தெரிந்து சொல்லிய பாடல்கள்;

5. பிற செய்திகள்

இச்சுவடியின் இறுதி ஏட்டில் 'ஏழு பாடல்கள்' ஒரு பக்கத்தில் எழுதப்பட்டுள்ளன. மிகவும் சிதிலமாயுள்ளன.

784. சரசுவதியந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 600
ஆ. ய/39

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கம்பர்
ஆ. சரசுவதி யந்தாதி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 80

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 12 பக்கம்.
ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகச்சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்தந்த வெள்ளிதட் பூங்க மலாசனத் தேவிசெஞ் சொற்
தார்தந்த வெண்பின் தாமரை யாட்டிச ரோருகமே
பார்தந்த நாதன் திசைதந்த வாணிதன் .....த்தாள்
வார்தந்த சோதியம் போருகத் தாளை வணங்குதுமே. (1)

ஆ. முடிவு

பெருந்திரு வுஞ்செயம் நூகையு மாகியென்
பேதைநெஞ்சில்
இருந்தரு ளுஞ்செஞ்சொல் வல்லியைப்
போற்றிலெல் லாக்கலையும்
பொருந்திடும் ஞானந் தருமிக யோகம் பொருதுதருந்
திருந்திய செல்வந் தருமழி யாப்பெருஞ் சீர்தருமே. (30)

785. திதிசோடச மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 601—1
ஆ. த/17

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...
ஆ. திதி சோடச மாலை
இ. தோத்திரம்
ஈ. செய்யுள் 15

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு ; 10 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகவும் சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அப்மாவா சி தானாரண அரூபத் தாயே
அகண்டபரி பூரணியே அமல சத்தி
நம்மாலே பாடறியேன் நினது பேரில்
நாவிலே வந்தருள்செய் நாயே னுக்குத்

தம்மாலே சோடச தோத்திரம் விளங்கத்
தயவுசெய்து நின்பதத்தி லாதரிப்பாய் தேவி
சும்மாநீ யிருக்காதே கண்பார்த் தாள்வாய்
சோதியே மனோன்மணியே சுழினை வாழ்வே. (1)

ஆ. முடிவு

சதுர்த்தசீ யானஒரு நான்காய் நின்ற
தற்பரையே சிற்பரையே சட்கோ ணத்தி
குதித்தோடிப் போகாமல் யெட்டில் சேர்ந்து
கும்பகத்திற் தம்பன மாய்க் கூடி யென்னைப்
பதித்ததிலே சேர்த்துனது பாதஞ் சேர்ப்பாய்ப்
பராபரையே அம்பரையே ... ...
துதிக்கறியாப் பாலகனைக் காக்கப் பாரம்
சோதியே மனோன்மணியே சுழிமுனை
வாழ்வே (15)

786. அருளானந்தக் கும்மி

1. நூலகக் குறிப்புகள்

அ. 601-2
ஆ. த/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. அருளானந்தக் கும்மி
இ. தோத்திரம்
ஈ. செய்யுள் 148 கண்ணி.

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு ; 28 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகவும் சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

சீர்மேவு ஞானவடி வான — பர
தேசிகன் தன்னருளால்
பார்மீதில் ஞானக்கும்மி பாடச் —
சிவன் பாலன் கணபதி காப்பாமே.
வாலையானந்த சுவாமிகள்.
அம்பிகை வாலைபதம் போற்றி
அருளானந்தக் கும்மித் தமிழ் பாடத்
தும்பி முகனுக் கிளையவனாஞ்
சிவசுப்பிர மணியனுங் காப்பாமே.

ஆ முடிவு

தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி — வேக
சாத்திரப் பீத்தலை மூடுங்கடி
சித்திதருஞ் ஞான வஸ்த்துவை — வாவென்று
சேர்த்துக் கும்மியடி யுங்கோடி.. (147)

ஆறா தாரமுந் தொல்லையடி
அதுக்கப்பாலே யொன்று மில்லையடி
சீராய் நின்றநிலை பார்த்துப் பெண்காள்
சேர்த்துக் கும்மியடி யுங்கோடி. (148)

787. புவனேஸ்வரி அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 602
ஆ. த/18

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. புவனேஸ்வரி அகவல்
இ. தோத்திரம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலத்தில் நின்றகுஞ் சரத்தைப் போற்றி
முளரிநான் முகன்றனை முறையாய்ப் போற்றி
ஞாலத்தில் நின்றமா லடியை வாழ்த்தி
நலஞ்சிறந்த ருத்திரனை நயந்து போற்றி
சீலத்தால் நின்றமையே சுரத்தைதரி சித்தப்பால்
சிறந்தசதா சிவன்தன்னைச் சிந்தை செய்து
கோலத்தில் நின்றபார் மகளை யன்பால்
குப்பிட்டேன் குருவின ருள்உற வென்றே.

ஆ. முடிவு

உன்னையு மல்லா தொருபொரு ளில்லையே
அன்னையே யுந்தன் அடைக்கல மம்மா
போற்றி போற்றி புவனையேபோற்றி
காத்தெனை யாளக் கடனுனக் கேபரம்
ஆட்சி யானவளே அம்பிகையே யுந்தன்
காட்சி கொடுக்குங் கருணையே ரெட்சி.

புவனேசுவரி அகவல் முற்றும்.

788. திரிபுரையந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 603
ஆ. ய/40

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. திரிபுரை யந்தாதி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 11

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அவ்வா யருவெளி யாயகி லாண்டத்தை யாக்கி யொரு
வவ்வா யொருவேயோ யோங்கார மாகிய உட்பொருளாய்
மவ்வா லுலகம் பதிநாலு மீன்றருள் மாதங்கியே
சவ்வாகி சவ்வின் ஒலியாகி நின்றருள் தற்பரையே. (1)

ஆ. முடிவு

சுடரே பிருவிழி நாதாந்த விந்து .....
அடரே கருவிக ளாறாறுந் தாண்டிய கண்டத்தப்பாற்
படரே நிறைந்த பரிபூ ரணசுடர்ப் பைங்கொடியே
இடரே தவிர்த்தென் னை யீடேற்றி
அவ்வி லிருப்பவளே. (11)

789. பிள்ளையார் அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 604
ஆ. த/19

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... .
ஆ. பிள்ளையார் அகவல்
இ. தோத்திரம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைந்த நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அருள்சேர் விநாயக னகவலைக் கற்றோதப்
பொருள்சிவ லோகமும் புகழு முண்டாமே.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாட
பொன்னரை நாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
... ...

ஆ முடிவு

அணுவுக் கணுவா யப்பாலுக் கப்பாலாய்
கணுமுத்தி நின்ற கரும்புள்ளே நாட்டி
வேடமும் நீறும் விளங்கவே நிறுத்தி
கூடமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

அஞ்சக் கரத்தி னரும்பொரு ளுணர்த்தி
நெஞ்சக் கரத்தி னிலமை தெளிவித்து
தத்துவ நிலையுந் தந்தெனை யாண்ட
வித்தக விநாயகன் மெய்பதந் துணையே.

790. 108 திருப்பதிக் கலிவெண்பா

1. நூலகக் குறிப்புகள்

அ. 605 - 1
ஆ. த/20

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. நூற்றெட்டுத் திருப்பதிக் கலிவெண்பா
இ. தோத்திரம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 12 பக்கம்.
ஆ. நீளம் 27 செ. மீ ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. சிதிலமான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பூத்த சோணாட்டுத் தென்னரங்க மாநகரில்
பார்பூத்த கோவிலுக்குட் பாம்பணையே — வேர்பூத்த
செப்பதுமம் கண்வளருந் தென்னரங்க நாயகரை
வம்பவிழ்பூஞ் சோலை வளருறையூர் — நம்பர்

ஆ. முடிவு

சீரா ரரங்கற் திருப்பட்டம் வேங்கடத் தென்வதரி
நாராய ணத்திகழ் சாளக் கிராமம்நெடி சாரணிய
மோராரும் கரத்தோ த ரஷ்த்திகிரி யிவையெண்டலமும்
பாரா யணம் பண்ணு வார்க்கல்ல வினைகட் டாமே.

நூற்றெட்டுத் திருப்பதிக் கலிவெண்பா முற்றும்.

இ. பிற்குறிப்பு

தெய்வசிகாமணி கவிராசன் சுவடி.

791. கருடத்தியானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 605 - 2

ஆ. த/20

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. கருடத்தியானம்

இ. தோத்திரம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சீதிலமான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வேதியர்குல திலகன் காசிபர்க்கு
விநதை பயந்தெடுத்த கனயோகன்
சாதியிற் பட்சி ராசன் சண்ணுக்குத்
தம்பியென வுதித்த கம்பீரன்
... ...

ஆ. முடிவு

மாலோனைப் புயத்தில் வைத்துக் கருணைநீர்
வழிந்தொழுகி ..... நயனமும்
மேலான விண்ணிற் பறந்து — திசையெட்டும்
விளங்கவே யிருளெனுங் களங்கம் ...
வருபவ ராக நினைந்து — கருடனை
மனத்திற் தியானஞ் செய்ய — வல்லவிடங்கள்
பருதியை யேகண்ட பனிப்போற்
பறந்திடு மேயுயிர் சிறந்திடுமே.

கருடத்தியானம் முற்றும்.

792. புறநானூறு

1. நூலகக் குறிப்புகள்

அ. 606
ஆ. க/2

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. புறநானூறு
இ. பாட்டும் தொகையும்
ஈ. செய்யுள் 96

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு ; 64 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான கையெழுத்து. வெவ்வேறு மூன்று கையெழுத்திலுள்ளது.

ஊ. மிகவும் சிதிலமான நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கண்ணி கார்நறுங் கொன்றை சரமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைதவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
எல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடை பொலிந்த வருந்தவத் தோற்கே.
பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்து. (1)

ஆ. முடிவு

அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவ ..... வாய் போல
ஓடி யுப்தலுங் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே,
பொதுவியல் – துறை பொருண் மொழிக் காஞ்சி
ஓரேருழவர் பாட்டு. (96)

(இதனையடுத்து 97 ஆம் பாடலின் முதல் அடிகள் சிலவே உள்ளன. பிற இல்லை.)

5. பிற செய்திகள்

சுவடியின் முற்பகுதியில், 'சங்கச் செய்யுள்' என்ற குறிப்பு மட்டுமே எழுதப்பட்டுள்ளது.

பதிப்பில் வெளிவந்துள்ள 400 பாடல்களில் 96 பாடல்கள் மட்டுமே இச்சுவடியில் உள்ளன. அவையாவன :

பா. எண் : 1, 2, 3, 8, 10, 12, 13, 15, 18, 23, 25, 26, 27, 32, 33, 36, 37, 38, 41, 43, 45, 46, 47, 48, 49, 51, 52, 55, 65, 67, 69, 71, 73, 77, 74, 82, 89, 90, 91, 92, 95, 101, 102, 103, 106, 107, 109, 110, 112, 113, 118, 120, 124, 129, 130, 131, 132, 134, 140, 141, 142, 150, 159, 162, 163, 164, 167, 168, 171, 172, 173, 175, 178, 180, 181, 182, 183, 184, 277, 186, 188, 189, 190, 191, 194, 195, 196, 199, 203, 204, 193.

என இவ்வரிசையிலேயே பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

793. குமார எட்டேந்திரன் கோவை

1. நூலகக் குறிப்புகள்

அ. 607
ஆ. ய/41

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. குமார எட்டேந்திரன் கோவை
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 44

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு ; 20 பக்கம்.
ஆ. நீளம் 18 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6, 7, 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. ஏடுகளில் ஆங்காங்குத்தொளைகள்.எனினும் பொதுவாக நல்லநிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாட்டைப் புரக்குங் குமாரயெட் டேந்திர
நன்னாட் டிலைக்கன்னி
வேட்டைக் கெழுந்து தனித்துவந் தேமத வேளிருந்த
கோட்டைப் பிடித்து மருங்கஅங் கைவசங்
கொண்டுகுழற்
காட்டைக் கலக்கிக் கலைபற்றி மானடிக்
கண்டனனே. (1)

ஆ. முடிவு

மேலான வர்க்கிடர் செய்தாலும் தன்றிவி ளைப்பாரப்பா
கோவான நன்றிசெய் தாலிட ரேசெய்வ ரென்பதெல்லா
மாலா யுலகளந்தோன் வல்லைக்கா ளத்திமா
வையன்னார்
காலா னதிலும் விழிவேல்கள் ரெண்டினுங்
கண்டனமே. (44)

794. சிங்கை வெண்பா

1. நூலகக் குறிப்புகள்

அ. 608
ஆ. ய/42

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. நமச்சிவாயக் கவிராயர்
ஆ. சிங்கை வெண்பா
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 16 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. சிறிய, அழகான எழுத்து.
ஊ. மிகச்சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காப்பு

கங்கைவெண்பா மாலை முடிக்கல்யாண சுந்தரனார்
சிங்கைவெண்பா மாலை சிறப்பாகத்—தங்கியதென்
கற்பகத்தின் கான்மலர்க் கட்டின்னார்க்
கற்பகத்தின் கான்மலர்க் கால். [கொண்டொருகைக்

பூங்கழனி மங்கையரும் புண்டரிகப் பொய்கைகளுந்
தேங்கம லங்களையுஞ் சிங்கையே—யோங்கல்
வரிசிலைஆ ரன்னத்தான் வாணிவர்ந்து காணும்
பரிசிலை யாணனத்தான் பற்று. (1)

ஆ. முடிவு

பாண்டிக் குலவலையிற் பலகடவு ளாலையத்தில்
சேண்டிக் குரநவிலுஞ் சிங்கையே . வேண்டியெனை
யாழி ... ... தாண்டு கொண்ட
வாழி மலையவெற்பார் வாழ்வு. (100)

சிங்கை வெண்பா முற்றும்.

5. பிற செய்திகள்

100 ஆம் பாடலை எழுதிய பின், 99 ஆம் கவி ஒன்று இன்று எழுத வேண்டும் என எழுதப்பட்டுள்ளது, சுவடியில் வேற்றிடம் விடப்பட்டுள்ளது.

இறுதி ஏட்டின் பிற்பகுதியில் திருஞானசம்பந்தர் பதிகம், 'உண்ணாமுலை யுமையாளொடும்' என்னும் பாடல் தொடங்கி எழுதப்பட்டுள்ளது.

795. சிங்கார சதகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 609
ஆ. ய/43

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. சிங்கார் சதகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் (16 ஆம் பாடல் முதல் 106 ஆம் பாடல் முடிய)

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு ; 32 பக்கம்.
ஆ. நீளம் 18 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. முதல் 3 ஏடுகள் இல்லை. சில ஏடுகள் சிதைவு.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முதிரா முலையிளகு வடமுத்தி
முயங்கி விளியு மநுராக
விதமு முன்து நலமெண்ணி
மெலிவேன் றன்னை நினையாமற்

புதிய குமிர்த மலர்நெகிழ்ந்து
பொழியுநறை போற்றுவரிக் களவ்வாய்
மதுர மொழியா லுளமுருக்கு
மானே யெனைநீ மறந்தாயே. (17)

(இதற்குமுன் 16 ஆம் பாடலின் பின்னிரு அடிகளே உள்ளன.)

ஆ. முடிவு

பழகப் பழகப் பிரியாளைப்
பவள நாசி ரந்தாளைத்
தழுவத் தழுவக் குழைவாளைத்
தானே யமிர்தந் தருவாளை
இளகிக் கலவி புரிவாளை
என்நெஞ் சிடத்தே யிருப்பாளை
... விக்கினிய செந்தேனைக்
கண்ணா லெந்நாட் காண்பேனோ. (106)

796. தொல்காப்பியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 610
ஆ. ச/28

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தொல்காப்பியர்
ஆ. தொல்காப்பியம் - மரபியல் உரையாசிரியர் உரையுடன்
இ. இலக்கணம்
ஈ. செய்யுளும் உரையும். அச்சில் சுமார் 75 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு ; 38 பக்கம்.
ஆ. நீளம் 49 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7; 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. 1, 3, 7, 15 ஆகிய ஏடுகள் உடைந்துள்ளன. மிக மிகச் சிதிலமான நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங்
கன்றும் பிள்ளையு மகவு மறியு
மென் ... ...
சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின்
மரபிய லென்னும் பெயர்த்து.

ஆ. முடிவு

ஆதி விளக்காவது சூத்திரத்தினாதியின் மைத்த
பொருள் தலத்தளவு மோடுதல் ...
மத்திம தீபமாவது — இடைநின்ற பொருண் முன்னும்
பின்னும் நோக்குதல்.
இறுதி விளக்காவது — இறுதிநின்ற பொருள் இடையும்
முதலும் நோக்குதல். இச் சூத்திர .....

797. பொருத்தப் பாட்டியல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 611

ஆ. ச/29

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. பொருத்தப் பாட்டியல்

இ. இலக்கணம்

ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 3 பக்கம்.
ஆ நீளம் 37 செ. மீ. ; அகலம் 3 செ. மீ
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. சிதிலமான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பார்கொண்ட சோதியன் சம்பந்த மாமுனி பாதமலர்
நேர்கொண் டிறைஞ்சி நிகழ்த்துகின் றேம்நெடு
நூல்சுருக்கி
ஏர்கொண்ட சொற்புல வோர்செய்த பாட்டியல்
கற்கமிக்க
சீர்கொண்ட மாமதி யில்லாத வர்க்குத் தெரிவுறவே. (1)

ஆ. முடிவு

வாளா வுரைப்பில் தொன் நூலோர் ... ... வருணமுண்டி
கேளாய் நல்லகதி கணமாய்த் துடன்கேழ் கிளர்
தாளார் கமலமு நீலமு ... ... தரு கதிமுட்டி
நீளா மதர்த்தரி சிந்திய வாட்கண் ணிரை வளையே. (10)

பொருத்தப் பாட்டியல் முற்றும்.
பொருத்தப் பாட்டியல் கலித்துறை

இ. பிற்குறிப்பு
'தேவர்பிரான் எழுதினது.'

798. பெரிய திருமொழி

1. நூலகக் குறிப்புகள்

அ. 612
ஆ. ன/1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருமங்கையாழ்வார்
ஆ. பெரிய திருமொழி
இ. திவ்யப் பிரபந்தம்
ஈ. செய்யுள் 38

3. தோற்றக் கூறுகள்

அ. 63 ஏடு ; 126 பக்கம்.
ஆ. நீளம் 32 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கறையார் நெடுவேல் மறமன்னர் வீய
விசயன் தேர்கடவி
இறையாங்கே ... ...
... ... எந்தையிடம்
மறையோல முற்றீய வைவளர்க்கும்
மன்னு புகழால வனமேயால்
பொறையான் மிக்கவர் ... ...
புள்ளம் பூதங் குடிதானே. (8)

(இது, 5 ஆம் பத்து முதல் திருமொழி 8 ஆம் பாடல்)

ஆ. முடிவு

சிலையால் இலங்கை செற்றான் மற்றோர் சினவேழம்
குலையார் கொம்பே றித்தான் .....
கலையார் பனுவல் வல்லான் கலியன் ஒலிமாலை
நிலையார் பாடல் பாடப் பாவம் நில்லாவே. (10)

(இது, 9 ஆம் பத்தின் 7 ஆம் திருமொழி)

799. விறலிவிடு தூது

1 நூலகக் குறிப்புகள்

அ. 613
ஆ. ய/44

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. விறலிவிடு தூது
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 34 ஏடு ; 68 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. மிகமிகச் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம் ஆ. முடிவு

(ஏடுகள் மிகமிகச் சிதிலமாயுள்ளதால் முதலும் முடிவும் படித்து எழுதும் நிலையில் இல்லை.)

800. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 614
ஆ. ந/64

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கம்பர்

ஆ. கம்பராமாயணம் : பாலகாண்டம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 1415

3. தோற்றக் கூறுகள்

அ. 128 ஏடு ; 256 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகச் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே. (1)

ஆ. முடிவு

ஆனவன் போனபின் னரசர் கோமகன்
ஊனமில் பேரர சுய்க்கு நாளிடை
வானவர் செய்தமா தவமுண் டாதலால்
மேனிகழ்ந் ததுதனை விளம்பு வாமரோ. (49)
மீட்சி பரசுராமப் படலம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

832 ஆம் வருடம் ஆடி மாதம் 13 ஆம் தேதி எழுதி முடிந்தது. முற்றும். ஆக விருத்தம் 1415 முதலாவது பாலகாண்டம் முற்றும்.

5. பிற செய்திகள்

இச்சுவடி சுமார் 330 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்டுள்ளது. (அதாவது கி. பி. 1657 ஆகஸ்ட் மாதம்)

801. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 615
ஆ. ந/65

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கம்பர்
ஆ. கம்பராமாயணம் : அயோத்தியா காண்டம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 1205

3. தோற்றக் கூறுகள்

அ. 87 ஏடு ; 174 பக்கம்.
ஆ. நீளம் 48 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போல்
உள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங்
கொடுமையு ரைப்பக் கோத்துறந்து
கானுங் கடலுங் கடந்திமையோர்
நிடுக்கண் டீர்த்த கழல்வேந்தே. (1)

ஆ. முடிவு

குன்றினி லிருந்தன னென்னுங் கொள்கைதான்
நின்றதி னலிவரால் நேசத்த .....
தன்றுணைத் தம்பியுந் தானுந் தையலுந்
தென்திசை நெறியினைச் சேரல் மேயினான், (141)

திருவடி தொழுத படலம் முற்றும்.
படலம் 12. விருத்தம் 1205
அயோத்தியா காண்டம் முற்றும்.

802. கம்பராமாயணம்

1 நூலகக் குறிப்புகள்

அ. 616
ஆ. ந/66

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சம்பர்
ஆ. கம்பராமாயணம் : ஆரணிய காண்டம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 1192

3. தோற்றக் கூறுகள்

அ. 87 ஏடு ; 174 பக்கம்.
ஆ. நீளம் 49 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.
உ. எழுத்துநிலை சுமாராக உள்ளது.
ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விராத வதைப் படலம்

பேதியாது நிமிர் பேத வுருவம் பிறங்கிவர
தாதி யோதி யுணருந்தொறு முணர்ச்சி யுதவும்
வேதவேதியர் விரிஞ்சன் முதலோர் வேழியிடர்
வாதிநாதன் வன்ம மறிவினுக் கறிவனோ. (1)

ஆ. முடிவு

தண்ணுறுங் கானுங் குன்றுந் நதிகளுந் தவிரப் போனார்
மண்ணிடை வைகல் தோறும் வரம்பிலா தாகு மாக்கள்
கண்ணிய வினைக ளென்னுங் கனல்களை
யவிக்கை யாலே
புண்ணிய வுருவிற் றன்னப் பம்பையாம்
பொய்கை கண்டார். (10)

ஆரணிய காண்டம் முற்றும்.

803. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 617
ஆ. ந/67

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கம்பர்
ஆ. கம்பராமாயணம் ; கிட்கிந்தா காண்டம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 1053

3. தோற்றக் கூறுகள்

அ. 77 ஏடு ; 154 பக்கம்.
ஆ. நீளம் 49 செ.மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாட்டைப் படலம்

மூன்றுரு வெனக்குண மும்மை யான்முதற்
தோன்றுரு வெவை யும் முதல் சொல்லுதற்
கேன்றுரு வமைந்தவு மிடையி னின்றவர்
சான்றுரு வுணர்வினுக் குவந்த தாயினார். (1)

ஆ முடிவு

மின்னொடுங் கொண்ட தாளின் வீக்கிய கல்லோ டார்ப்பத்
தன்னெடுந் தோற்றம் வானோர் கட்புலத் தெல்லை தாவ
வன்னெடுஞ் சிகர கோடி மகேந்திர மண்டபந் தாங்கும்
பொன்னெடுந் தூணிற் பாத சிலையெனப் பொலிந்து
நின்றான். (29)

804. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 618
ஆ. ந/68

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கம்பர்
ஆ. கம்பராமாயணம் : சுந்தர காண்டம்.
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 1366

3. தோற்றக் கூறுகள்

அ. 103 ஏடு ; 206 பக்கம்.
ஆ. நீளம் 49 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை. சில ஏடுகள் முறிந்துள்ளன.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கடல்தாவு படலம்

அலங்கலிற் றோன்றும் பொய்மை
ஆமெனப் பூத மைந்தும்
வீலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கங்
கலங்குவ தெவரைக் கண்டால்
கைவி லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே
மறைகளுக் கிறுதி யாவார். (1)

ஆ. முடிவு

அன்னெறி யிரண்டு நாளில்
அங்கதன் முதலி னோர்கள்
பொன்னடி வணங்கி னாரைப்
புகழ்ந்துடன் பொருந்திப் போவார்
இன்னெடும் பவளக் குன்றில்
இன்னுழி யிறுத்த பின்னர்
பன்னிரு பகலிற் சென்று
தென்றிசைப் பரவை கண்டார். (92)

திருவடி தொழுத படலம் முற்றும்.
சுந்தர காண்டம் முற்றும்.

805. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 619

ஆ. ந/69

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கம்பர்

ஆ கம்ப ராமாயணம் : யுத்த காண்டம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 222 ஏடு ; 444 பக்கம்.

ஆ. நீளம் 46 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 11, 12, 13 வரி.

உ. எழுத்து நிலை சுமாராக உள்ளது.

ஊ. பல ஏடுகள் சிதைவு. 156, 171, 192, 194, 195, 200, 201 ஆகிய ஏடுகள் முறிந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கடல் கான் படலம்

ஒன்றே யென்னி லொன்றேயாம்
பலவே யென்னிற் பலவேயாம்
அன்றே யென்னி லன்றேயாம்
மெ..... ...கிலா மேயாம்
இன்றே யென்னி லின்றேயாம்
உளதென் றுரைக்கிலு ளதேயாம்
நன்றே நம்பிகுடி வாட்கை
நமக்கிங் கன்னா ..... (1)

ஆ. முடிவு

உம்பரோ டிம்ப ராறும் உலகமோ ரேழு மேழும்
எம்பெரு மானென் றேத்தி இறைஞ்சிநின்
றேவல் செய்யத்
தம்பிய ரோடு தானுந் தருமமுந் தரணி காத்தான்
அம்பரத் தனந்தர் நீக்கி அயோத்தி
வந் திருந்த வண்ணம். (39)

விடை கொடுத்த படலம் முற்றும்.
யுத்த காண்டம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

(சுவடியின் பிற்குறிப்பாக, 'வ ா ன் வ ள ஞ் சுரக்க' எனத் தொடங்கும் பாடல் முதலாக 5 பாடல்கள் (பாயிரம்) எழுதப் பட்டுள்ளன. அவற்றுள் ஈற்றுப் பாடல் வருமாறு.)

எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற்
செல்லா நின்ற
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங்
கேற்றி னானே. (5)

806. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 620
ஆ. ந/70

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கம்பர்
ஆ. கம்பராமாயணம் : பாலகாண்டம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 1399

3. தோற்றக் கூறுகள்

அ. 85 ஏடு ; 170 பக்கம்
ஆ. நீளம் 41 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ; பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. பல ஏடுகள் மிகவும் சிதிலமடைந்துள்ளன.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண் : 614 காண்க.

807. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 621
ஆ நா/71

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கம்பர்
ஆ கம்பராமாயணம் : அயோத்தியா காண்டம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 1227

3. தோற்றக் கூறுகள்

அ. 69 ஏடு ; 138 பக்கம்
ஆ நீளம் 41 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளன.
ஈ. பக்கத்திற்கு 8, 9, 10 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. மிகமிகச் சிதிலமான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 615 காண்க.

808. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 622

ஆ. ந/72

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கம்பர்

ஆ. கம்பராமாயணம் : ஆரணிய காண்டம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 1291

3. தோற்றக் கூறுகள்

அ. 67 ஏடு ; 134 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9, 10 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. மிகமிகச் சிதிலமான நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ முடிவு.

(சுவடி மிகமிகச் சிதிலமாயுள்ளதால் தொடக்கமும் முடிவும் படித்தறியும் நிலையிலில்லை.)

809. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 623

ஆ. ந/73

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கம்பர்

ஆ. கம்பராமாயணம் : கிட்கிந்தா காண்டம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 1027

3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு ; 104 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9, 10 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகமிகச் சிதைந்த நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(முதற் பாடல் மிகவும் சிதைந்துள்ளது, படித்தறிய இயலவில்லை.)

ஆ. முடிவு

தொடர் எண் : 617 காண்க.

810. கம்பராமாயணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 624

ஆ. ந/74

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கம்பர்

ஆ. கம்பராமாயணம் : சுந்தர காண்டம் (வந்தனைப்படலம் 63 ஆம் பாடல் வரை)

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு ; 38 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9, 10 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகமிகச் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 618 காண்க.

811. திவாகர நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 625

ஆ. ச/30

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திவாகரர்

ஆ. திவாகர நிகண்டு : முதல் 9 தொகுதி

இ. இலக்கணம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 62 ஏடு ; 124 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முதலாவது தெய்வப் பெயர்த் தொகுதி : அருகன் பெயர்

அனக னசலன் அதிகுண னபயன்
அமைவ னறிவ னதிசய னமலன்
பூரணன் புங்கவன் புணர்முக் குடையோன்
அசோகுடைச் செல்வன ணணறத்துவன்
ஆதியங் கடவு ளறவாழி யந்தணன்
அரியணைச் செல்வ னருளாழி வேந்தன்

ஆ. முடிவு

உவம வகையின் பெயர்

வினையுவமம்-பயனுவமம்-மெய்யுவமம்-உருவுவமம்
என நான்கு வகைத்தே உவமத்தியல்பே. (195)

உவமம்-ஒன்றோடு ஒன்றை யொப்புறுத்தல். (196)

இ. பிற்குறிப்பு

திருவைகுந்தை நாராயணன் கவிராசரவர்கள் குமாரன் வெங்கடாசலங் கவிராயன் ஏடு.

812. சூடாமணி நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 626

ஆ. ச/31

2. உள்ளீடு : நூல் விவரம்

அ மண்டல புருடர்

ஆ. சூடாமணி நிகண்டு : 11 ஆம் தொகுதி

இ. இலக்கணம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு; 56 பக்கம்.

ஆ. நீளம் 35 செ மீ ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 11, 12, 13 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. மிகமிகச் சிதிலம். பல ஏடுகள் முறிவு.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒரு சொற் பல பொருட் பெயர்த் தொகுதி
முடிவி லின்பத் துமூவா முதல்வனைப் போற்றி செய்தே
அடிதொறு மிரண்டு மொன்று மாதியிற் பொருள டக்கி
நடைபெறு ககரமா தினகர வீறெ துகை யாகப்
படியிலோர் சொற்பொருட் பல்பெயர்த்
தொகை பகர்வுற்றாம்.

பகவனே யீசன் மாயோன்
பங்கயன் சினனே புத்தன்
பகலே நாளொரு முகிழ்த்தம்
பகலவ னடுவே ...
மகரமே சுறாப்பூந் தாதாம்
வசிகூர்மை வசிய மவாளே
யகமன மனையே பாவம்
அகலிய மிடமோ டுள்ளாம். (1)

ஆ. முடிவு

சாகஞ் சாகினி வெள்ளாடு பதக்கெனுந் தருவே தேனிப்
பாகலே கார வல்லி பலாவென்றும் பகர லாமே
ஊகமே பெண்கு ரங்கு ... ...
தாகவ்விண் குரங்கு புன்னை நற்றீசு
மலைபரம்பு யானை. (4)

813. நூற்றெட்டுத் திருப்பதிக் கலித்துறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 627

ஆ. த/21

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. நூற்றெட்டுத் திருப்பதிக் கலித்துறை

இ. தோத்திரம்

ஈ. செய்யுள் : 105 (இடையிடை யில்லாமல் உள்ளன)

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு ; 20 பக்கம்.

ஆ. நீளம் 43 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகச் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4 சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரரங் கத்துறை நித்தர்தத் தச்சிரம் பத்துதிர்த்த
வீரரங் கத்துறை தந்தபொற் றாளர் வெறித்துளபத்
தாரரங் கத்துறை போகிய வேதியர் தாந்துதிக்கும்
பேரரங் கத்துறை யாகுமெப் போதும் பெருந்திருவே. (1)

ஆ. முடிவு

அன்பருக் கப்பத மீந்தருள் வோயென
வாய்ந்து நெஞ்சே
முன்பருக்க ... ... தலை வன்பொருட் டாள்முது
வாலியைக்கொல்
வன்பருக் கப்பதிக் கய்யமிட் டோர்தம் மழிசையுளே
துன்பருக் கப்பல துய்த்துநில ..... துவக்குனக்கே. (105)

814. திருப்பதி வெண்பா

1. நூலகக் குறிப்புகள்

அ. 628
ஆ. த/22

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...
ஆ. திருப்பதி வெண்பா
இ. தோத்திரம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு ; 32 பக்கம்.
ஆ. நீளம் 36 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5, 6 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகமிகச் சிதைந்த நிலை. 2 ஆம் ஏடு இல்லை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு.

(ஏடுகள் மிகவும் சிதைந்தும் முறிந்தும் உள்ளதால் படித்தறியும் நிலையில் இல்லை.)

815. சிவஞான போதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 629

ஆ. ங/15

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மெய்கண்டதேவ நாயனார்

ஆ. சிவஞான போதம் : உரையுடன்.

இ. மெய்கண்ட சாத்திரம்

ஈ. செய்யுளும் உரையும். அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு ; 26 பக்கம்.

ஆ. நீளம் 24 செ.மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கல்லா னிழன்மலை யில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே.
நல்லார் சிவஞானத்தைப் பொருந்தின நாதாக்கள் ;
புனைவர் — யாமுமது செய்வோ மென்பது கருத்து.

ஆ. முடிவு

(இறுதி ஏடு மிகவும் முறிந்துள்ளதால் படித்தறியும் நிலையில் இல்லை.)

816. அகத்தியர் குணவாகடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 630
ஆ. ல/160

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் குணவாகடம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 214

3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு ; 80 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. பொதுவாக் நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பெறு வாக டத்தின் தெளிந்துரை வகுத்த நாடி-
ஓர்பெரு சரீரந் தன்னில் லங்குவ லக்க ணத்தில்
பேர்பெறு வாத பித்தம் சிலேட்டுமம் பேத மாகும்
கார்பெரு மந்திவண்ணன் கணபதி வணக்கஞ் செய்வார்.

ஆ. முடிவு

பெருத்த நரம்பு பிடரிதன்னைப்
பேரப் பிரிய ஓட்டாது
வருத்த மிகுந்து தாள்குத்தி
வருத்திக் குத்தித் திமிரத்தின்
திருத்த முடனே யீடாடித்
திரியும் திரிய ஓட்டாது
கருத்தைக் கொடுத்து திமிர்ந்துபெருங்
கபாலச் சன்னி யெனக்கருதே. (214)

அகத்தியர் சொன்ன குணவாகடம் முற்றும்.

இ. முற்குறிப்பு

இந்த சாஸ்திரம் நெல்லித்தோப்பு வெங்கடாசலத்துக்குச் சொந்தம். இதில் எழுதியிருக்கும் பலவிதமான சித்தர்கள் பேர் விவரம் : அகத்தியர், தேரையர், கொங்கணர், புலிப்பாணியார் சட்டைமா முனிவர், தட்சிணாமூர்த்தியார் இன்னும் பலவிதமான பேர்கள் சொன்ன வைத்திய வாகடத்தில் பொறுக்கி எழுதினது. அகத்தியர் துணை யுண்டாகவும்.

பிற்குறிப்பு

... ... வைகாசி மாதம் 2 ஆம் தேதி வெள்ளிக்கிழமை எழுதி முடிந்தது. முற்றும்.

817. அகத்தியர்1000

1. நூலகக் குறிப்புகள்

அ. 631

ஆ. ல/161

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் 1000

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் சுமார் 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 111 ஏடு ; 222 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுரத்துக்குப் பேர் விபரம்

வாதசுரம், பித்த சுரம், சிலேட்டும சுரம், வாதத்தில் வாதசுரம் வாதத்தில் பித்த சுரம், வாதத்தில் சிலேட்டும் சுரம், பித்தத்தில் பித்தசுரம், பித்தத்தில் சிலேட்டும சுரம், பித்தத்தில் வாத சுரம் .....

ஆ. முடிவு

ராய சஞ்சீவி மாத்திரை

திரிகடுகு, அசமதாகம், வாய் விளங்கம், வசம்பு, திப்பிலி மூலம், கருஞ்சீரகம், வட்டத் திப்பிலி வேர்,காட்டுச் சீரகம், முட்கா வேளை வகைக்கு 3 வராகன் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து,குண்டு மணிப்பிரமாணம் உண்டை செய்து, நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். வியாதி அறிந்து கொடுக்கவும். இச்சாபத்தியம். ரெட்டிபாளையம் - சவரிமுத்து பாடமுறை.

இ. முற்குறிப்பு

ஆயிரத்தில் எடுத்துப் பொறுக்கி எழுதத் தொடங்கினது. இதை யாராகிலும் பார்த்து எடுத்தவர்கள் சுவாமி முகத்தைப் பார்த்துக் கொடுத்து விடவும்.

818. வால்மீகர் சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 632 – 1

ஆ. வ/34

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வால்மீகர்

ஆ. வால்மீகர் சாத்திரம்

இ. சோதிடம்

ஈ. செய்யுள் 19

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 10, 11 வரி.

உ. தெளிவான எழுத்து.

ஊ. பொதுவாக நல்லநிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மீன மிதுனங் கன்னியுடன்
விளங்குந் தனுசு கர்ப்பமதாம்
ஈன துலாமே மகரம்நண்டு
ஈடது வார மாமென்பர்
கான மேவுஞ் சிங்கமுடன்
கதித்த ரிஷபந் தேள்கும்பம்
வானோர் புகழும் வான்மீகம்
மடவா யன்பர் வாக்கியமே.

ஆ. முடிவு

கற்பனைக் கன்று காலி
கணக்குடன் கேட்பா னாகில்
அற்பமாங் கர்ப்பந் தன்னில்
அங்கவை ஒன்றும் வாரா

நிற்பன துவார மாகில்
நிறைபட வருமென் றோது
பற்பன வான்மீ கந்தான்
பகர்வது அற்ப மென்றே. (19)

819. சோதிடநூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 632 - 2
ஆ. வ/34

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. கெவுளி தும்மலுக்குச் சரம் பார்க்கிறது
இ. சோதிடம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு ; 2 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10, 11 வரி,
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சரிநேர் கிழக்கு நிருதியும் வாயுவுந் தான்பலனாம்
எரியோனு மீசனும் தம்பின மைந்தனுக் கேபலனாம்
வருணனி லேதான் பழகின மைந்தனுக் கேபலனாம்
பூரிவேந்தர்க் கானது தெற்கு வடக்குப் பலனிதுவே.

ஆ முடிவு

சித்தமிக மகிழ்ச்சியுண்டாம் நாலோ டைந்து
சேர்ந்துவரும் பயம்வசர்த்தை தெரியும் பத்துக்கு
அத்தமிக ஆதிரையோ டாறோ டைந்து
அறமகிழ்ச்சி கலியாணம் ஆறோ டாறு
பத்திவருங் காணிக்கை பதின்மூன் றாகும்
பறந்துவரும் யளவோவில் பதினாலுக் கேற்ற
மெத்தமகிழ்ச் சியுமுண்டுபதினைந் துக்கு
மென்மேலும் போகமுண்டாம் பதினா லுக்கே.

820. விக்கிரமாதித்தன் கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 633
ஆ. ம/8

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. விக்கிரமாதித்தன் கதை
இ. உரைநடை இலக்கியம்
ஈ. உரைநடை. அச்சில் சுமார் 500 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 220 ஏடு ; 440 பக்கம்.
ஆ. நீளம் 45 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன.
சுவடி 247 ஆவது ஏட்டில்தான் தொடங்குகிறது.
252, 255, 256, 270, 272 - 276, 283, 284, 290, 297, 306, 313 - 316, 318, 319, 321 - 324, 340, 344, 432 - 435 ஆக 30 ஏடுகள் இடையிடையே இல்லை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஏழாம்பதுமை

அன்றைக்குப் போக மற்ற நாளுதையத்திலே போச ராசாவும் சுதனென்கிற மந்திரியுமாக மிதுன லக்கனத்தில் மிதுன நட்சத்திரத்தில் நாளிட்டு அந்தச் சிங்காசனத்தில் வந்து தூபதீப நைவேத்தியஞ் செய்து சோடச உபசாரம் பண்ணி அந்தப் பதுமை மேலே ஏற நேமித்தான். அப்போது ... ...

ஆ. முடிவு

... பட்டணப் பிரவேசம் வந்து, கண்ணாடியைத் தனது அருகே நிற்கிற பேர்கிட்ட கொடுத்து விட்டுக் கோவிலுக்குள்ளாக வந்து, சுவாமியைத் தோத்திரம் பண்ணி அனுப்பிக் கொண்டு, கோவிற் பிரகாரஞ் சுற்றி லாகு சாரிகள் மகர வீச்சு வாள்வீச்சுகள் இப்படிக் கொத்த பரத வித்தை பழகத்தான் கற்றிருக்கிற வித்தைகளெல்லாம் ஆடிக்கொண்டு, அரிநாராயணா, கோவிந்தா, என்கிற சத்தமுஞ் சகல சனங்களுஞ் கேட்கச் சுற்றி ஆடிக் கொண்டு வந்தாளிப்படி ஒருச்சரம் பரியந்திர மாட்டுச் சனங்களும் அந்த வேனலுக்குள்ளே நின்று தவித்துப் பொன்னியும் நாலு பிரகாரம் ஆறு பிரகாரமும் சுற்றித் திரிந்து அவளுந் தகையெடுத்துக் கப்பத்தருகே வந்து சாய்ந்து கொண்டு நின்றாளிப்படி யிருக்கிறது.....

821. மகாபாரதப்போர் அம்மானை

1. நூலகக் குறிப்புகள்

அ. 634

ஆ. ர/8

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. மகாபாரதப் போர் அம்மானை

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 39 ஏடு ; 78 பக்கம்.

ஆ. நீளம் 54 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. வாரீப் பதப்படுத்தாத இரட்டை ஓலைகள்.
சில ஏடுகள் முறிந்துள்ளன. 34 ஆவது ஏடு இல்லை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அத்திமுகத் தோனே ஐங்கரனே உன்பாதம்
நித்தந் தொழுதடியேன் நீதியுடன் நான்பணிவேன்
சத்தி கணபதியே சண்முகனுக்கு மூத்தோனே
பத்தியுடன் உன்னைப் பணிந்தேன் விநாயகமே.

ஆ. முடிவு

கண்டிருந்து வீம ராசனங்கு
கருதிஏதோ வார்த்தை சொல்வார்
ஏனோஎந்தன் பொய்மையை யிப்போ
உலக்கை கொண்டு வருவானே
கேடில்லையோ பாண்டவரே கீர்த்திக்
கழகான வார்த்தை யெல்லாம்
இந்த நல்லக் கடவதிலே
ஆள் விழுங்கி முதலையுண்டு
உங்கள் மேலே தீண்டிச் சென்று
உலக்கை கொண்டு வந்தே னென்றான்
அந்த வாக்கை கேட்டபோது
அழகால் வீமராசன் ஏது சொல்வார்.

822. அந்தாலந் தீர்த்த செழியன் மஞ்சரி

I நூலகக் குறிப்புகள்

அ. 635

ஆ. ய/45

2. உள்ளீடு : தூல் விவரம்

அ. ... ...
ஆ. அந்தாலந் தீர்த்த செழியன் மஞ்சரி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு ; 64 பக்கம்.
ஆ. நீளம் 35 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5, 6 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. முதல் மற்றும் இறுதி ஏடு தவிர மற்றவை நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தேமாலை அந்தாலந் தீர்த்தசெழி யன்மீதில்
மாமாலை யேபுகழும் மஞ்சரிக்குப் — பூமாலை
தளித்தானைத் தானைமுகன் ஆதரித்த வானைக்
களித்தானை யானைமுகன் காப்பு.

பூமேவு தெய்வப் பொலன்கமலப் பொன்பொகுட்டின்
மாமேவு தண்துளப மார்பினான் — நாமேவு
எழுத்தும் பொருளும் எனவே உலகம்
வழுத்தும் படிகாத்த மாயோன் — முழுத்திங்கிரிக்
... ...

ஆ. முடிவு

ஆனந்தம் எய்தினார் அந்தக் கரணம்அமைந்து
ஊனம் தராச்சிறப்பும் ஓங்கினார் — மேனைந்தும்
இவ்வகைசெய்து ஊழிநாள் இவ்வுலகை ஆண்டுபல
செல்வமொடு வாழ்ந்தார் திகழ்ந்து.

இ. பிற்குறிப்பு

சாதாரண வருஷமும் பங்குனி மாதமும் சுக்கிர வாரமும் சஷ்டியும் பூர்வ பட்சமும் ரோகணி நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் சாயங்காலம் ஆமிர்தகடிகை 29 நாழிகையில் சேலத்துத் துரந்தரனான ராசவிசய மன்மத பஞ்ச பாணாவதாரனான செழியதர நயினாரவர்கள் துரையவர்கள் பேரில் மஞ்சரி சேலத்தில் சம்பிரதி சாமுண்டியா பிள்ளையவர்கள் குமாரன் செல்லு முத்தா பிள்ளை குமாரன் வைத்தியலிங்கம் மஞ்சரி எழுதி நிறைவேறினது முற்றும்.

ஆறு முகந்துணை. கங்காதரேசுவரர்துணை.
காமாட்சியம்மன் துணை முனியீசுவரர் துணை.
சரவணோற்பவன் துணை.

இந்த மஞ்சரி வாசிக்க வைச்சது ஆரென்னில் செறுவேங்கை புரியிலிருக்கும் கம்பள சுவாமியார் குமாரன் சித்தலிங்க சுவாமியார் குமாரன் சென்னபஸவையர் குமாரன் சுப்பராயன் கையெழுத்து. நம்முடைய தீட்சையில் வாசிச்சது.

5. .....

6. .....

7. *வெளியீட்டுச் செய்திகள்*

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

823. தனிப்பாடல்கள்

1. *நூல்கக் குறிப்புகள்*

அ. 636

ஆ. ற/37

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. .....

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 59

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு ; 42 பக்கம்.
ஆ. நீளம் 25 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. முதல் இரண்டு ஏடுகள் மூறிவு; பிற நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கொந்துலாவு தடஞ்சூழ முக்கிரனை
கொட்டை யுக்ர மாபாடையன் தன்னீலே
சிந்தை கூர்ந்தருள் மதுரையில் நித்திய
சிவதரி சனம்செய்து கண்டு ருக்கு
வந்துபோ சனம்செய்ய அறிந்தருள் ..
வந்து காட்சி கொடுத்தது னாலருள்
புந்தி கூர்ந்தருள் கோட்டூர்க் குடிகொண்ட
புற்றில் வாழ்சிவ சங்கர லிங்கமே.

ஆ. முடிவு

மதிதனைச் சடையிற் தரிக்க விலையோ ரகாண்
மதகரி உரிக்க விலையோ
வன்பான் முப்புரம் எரிக்கு விலையோ
இலகுமாலையன் வானிர் மாற
பதிவுடன் வாழ்கவே காக்க விலையோ
கானவன் பழியைநீக்க வில்லையோ
பண்டுவரு சண்டனை உதைத்துமார்க் கண்டனை
யடிதனில் காக்க விலையோ
அதிகமுள ஆவுடைய நாயகி உன்னிடம்
அதிக்க யிடமு மிலையோ
அடியேனென் விண்ணெலாம் நீக்கியெல் லாப்பதம்
அருளி ஆட் கொள்ளொணாதோ

தகிகணந் தோந்தோந் தோதிமென பொற்சபையில்
நிர்த்தமிடு தாணுபதி பூரண்ாதி
தண்ணுலவு புன்னையங் காவினிற் குடிகொண்ட
சங்கரக் கடவு ளாரே. (50)

இ. முற்குறிப்பு

... ... ஆறுமுக முதலியார் மகன் சங்காரமையன் சுவடி.

824. அருணகிரிப் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 637
ஆ. ப/32

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மறைஞான தேசிகர்
ஆ. அருணகிரிப் புராணம்
இ. தலபுராணம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 69 ஏடு ; 138 பக்கம்.
ஆ. நீளம் 27 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. மிகச் சிதிலமான நிலை.
1 - 13, 62, 63, 69 - 74, 79 ஆகிய ஏடுகள் இல்லை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாதமிறு காலவழ லூழியிலை யேழுபுயல்
வாதைபுரி யாத நகரம்
சீதமுத லானபிணி தீமையிடை யூறுபசி
சேரவரி தான நகர்ம்

மாதவர்க ளாதவர்கள் பூசைபுரி மாநகரம்
மாதவர்க ணாபிமலரும்
போதிலுறை வேதியர்தொண் ணூறுபெய ரோடதுவர்
பூசைபுரி மாநகரமே (48)

ஆ. முடிவு

காசியினுஞ் சிறப்புடைய தலங்களிலே
யிருந்திறையைக் கற்ப காலம்
பூசைசெயு மொருபலனும் நெடுங்கால
மரியதவம் புரிகை தானுந்
தேசிகனா ருரைத்தபடி சமாதியிலே
யிருந்துபெறுஞ் சித்தி தானும்
நேசமுட னருணகிரி வலம்வர வென்
றுரைப்பதற்கு நிகர தாமோ. (4)

5. ....

6. *மாற்றுச் சுவடிகள் காணுமிடம்*

பல நூலகங்களிலும் உள்ளன.

7. *வெளியிட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

825. தலபுராணம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 638
ஆ. ப/33

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. .....
ஆ. பெயர் தெரியாத ஒரு தலபுராணம்
இ. தல புராணம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு ; 40 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. 1 - 23, 28, 33 - 38, 50 ஆகிய ஏடுகள் இல்லை. மிகமிகச் சிதிலமான நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அலைவிலா அமரரெலாம் ஆள ... எனக்களித்த
விலையிலா மாணிக்கம் வேய்ந்தமூக் கணியென்னச்
சிலைநுதலார் திகைத்திருப்பச் சிச்சிலியும் தனையெடுத்து
உலைவிலா மரத்திருந்து உணவென்னக்.
கொத்துதலும். (7)

(இது விபசித்து சருக்கத்தின் ஏழாம் பாடல்)

ஆ. முடிவு

வானளவு அடைத்த பஞ்சில் தீப்பொறி மானும் ஈசன்
மேனியைப் பிரதோ டத்தின் மிகத்தெரி சித்தார் பாவம்
பான்மையாம் பதின்மூன் றாநாள் பானுவத்
தமன முப்பின்
ஆனதோர் யாமம் தானே பிரதோடம் ஆவது அம்மா (17)

(இது சிவபூசை விதிச் சருக்கத்தின் 17 ஆம் பாடல்)

826. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 639

ஆ. ல/162

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ மருத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு ; 48 பக்கம்.
ஆ. நீளம் 28 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன. 1, 6 ஏடுகள் இல்லை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாடி நிதானம்

விளம்பக்கேள் நாடியுட பரிட்சை தின்னை
மெய்நிறைந்த நாடியெல்லா மொன்றே கூட்டம்
வளம்பெறவே விரலைந்து நெட்டி வாங்கி
மணிக்கட்டில் மூன்றுவிரல் வைத்துப் பாரு
குளம்பாமல் முன்னங்கால் தன்னைப் பாரு
குதிக்காலில் நரம்பசைவைக் குறும்பாய்ப் பாரு
களங்கமன்றி ஆணுக்கு வலது பக்கம்
கன்னியருக் கிடது பக்கம் கருதிப் பாரே. (4)

ஆ முடிவு

கொள்ளடா லிங்கம்நாற் களஞ்சிக் கப்பா
கொடுக்கஒரு சாமமட்டுஞ் சுருக்குத் தாக்க
விள்ளடா அதன்பின்பு கெந்தி சூதம்
விருக்கிடை ரெண்டுதனில் துருசுச் சுண்ணம்

அள்ளடா பணவெடையொன்றதனிற் போட்டு
அரைத்தொன்றாய்ச் சேர்த்தபின்பு வதனைக் கேளு
துள்ளடா குட்டியவன் மாண்டு போவான்
சொல்லாதே யிக்கருவைச் சூட்டொண் ணாதே. (94)

827. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 640
ஆ. ல/163

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் சுமார் 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு ; 38 பக்கம்.
ஆ. நீளம் 27 செ. மீ ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்குப் பல வித வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. சில ஏடுகள் சிதைந்துள்ளன.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கிராணி ஆறு வகையும் அதிசாரம் பன்னிரெண்டு வகையும் வயிறுகடுப்பு பத்து வகையும், பிள்ளை பிறந்து வயித்திலிருந்து சீவிக்கிற கிராணியும் இதுகள் தீரும். மேற்படி செந்தூரம் அரைப்பண எடை காந்த செந்தூரம் பணவெடை, திரிகடுகு வறுத்துப் பொடி செய்து, மூணுவிரல் கொண்டது தேனிற் கலந்து

இரண்டு வேளையும் முப்பது நாள் கொள்ள, வரட்காமாலை, பித்தப்பாண்டுரோகம், விடப்பாண்டு ரோகம் சோகை, இளைப்பு, உப்பிசம், ஈளையென்கிற இருமல், எலிவிஷம், மந்தாரகாசம், வாத காசம், சுவாச காசம், உள்மாந்தம், சுரமாந்தம் இதுகளெல்லாம் தீரும்.

ஆ. முடிவு

பாம்பு விஷத்துக்கு மருந்து

இரசம் 1 வராகன், பால்துத்தம் 1 வராகன், மயில்துத்தம் 1 வராகன், சுத்தித்த நேர்வாளம் 1 வராகன், தேங்காய்க் கொட்டாங்கச்சி சுட்டகரி 1 வராகன் இதுகளெல்லாம் கல்வத்தில் போட்டு குப்பைமேனி இலைச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து, வேப்பெண்ணெயில் இரண்டு சாமம் அரைத்து, வழித்து, தாமிரப்பியில் வைத்துக் கொண்டு, பாம்பு கடித்தவாளுக்கு, தேளு நீங்கலாக மற்ற விஷங்களுக்கு எல்லாமும், பேய் நரி, பேய் நாய், எலிக்கடி, பூச்சிக் கடிகள், இது முதலான விஷங்களுக்கு வெற்றிலைக்குள் துவரைப்பிரமாணம் கொடுக்கவும். நாலு நாழிகைக்குமேல் துவரைப்பிரமாணம் நாக்கில் தேய்க்கவும். சுத்த ஜலம் நாக்கில் விடவும்.

828. மருத்துவ நூல்

1 நூலகக் குறிப்புகள்

அ. 641

ஆ. ல/164

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. மருத்துவச் செய்திகள்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை அச்சில் சுமார் 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு ; 30 பக்கம்.

ஆ. நீளம் 26 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.
உ. இறுக்கலுடன் கூடிய கையெழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இலிங்கக் குழம்பு

இலிங்கம் 4 வராகன் சுத்தி பண்ணிக் கொண்டு, இந்துப்பு 2 வராகன் சுத்தி செய்து, நேர்வாளம் 2 வராகன் சித்தாமணக்குப் பருப்பு 8 வராகன் இதுகளெல்லாம் கல்வத்தில் போட்டு அரைத்து ரெண்டுசாமம் மெழுகு போலே ஆன உடனே பீங்கான் டப்பியில் அல்லது மாட்டுக் கொம்பு டப்பியில் வைத்துக்கொண்டு குண்டு மணிப் பிரமாணம் இஞ்சிச் சாற்றில் அல்லது மிளகுக் கசாயத்தில் அல்லது பணை வெல்லத்தில் கொடுக்கவும். நாலுநாழிகழித்து வெந்நீர் சப்பிடவும்.

ஆ. முடிவு

விக்கலுக்கு

அத்தித்திப்பிலி, கட்டுபாரங்கி இது கசாயம் வைத்துக் கொடுக்கவும். அஞ்சுவித விக்கல் தீரும் விக்கலுக்குச் சுக்கு, பூண்டு, காயம், சைந்தலவணம் இது கசாயம் வைத்துக் கொடுக்கவும். விக்கல், சுவாசம், சளி இதுகள் தீரும்.

829. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 642
ஆ. ல/165

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் சுமார் 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 39 ஏடு ; 78 பக்கம்.

ஆ. நீளம் 28 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. 1 - 9. 31, 46, ஆகிய ஏடுகள் இல்லை! பொதுவாக நல்லநிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

... எட்டு நாள் வெயிலிலே வைத்துப் பின்னெடுத்து ரொட்டி பண்ணிப் புடமாகப் புடமிட்டு எடுத்து எல்லாங் கூட்டி அரைத்துச் செப்பிலிட்டுக்கொண்டு நெஞ்சடைத்தபேருக்கு ஒரு பெண்பிடி மாத்திரம் தேசிக்காய்ப் புளியில் இடவும். கட்டுப்படும் நேரத்து, ஒரு நாசியில் விட்டு ஒரு நாசியைப் பொத்திக் கொண்டு ஊதவும். தொண்டை திறக்கும்.

ஆ. முடிவு

மசர நோய்க்கு எண்ணெய்

பொடுதலை வேரும் இலையும், வெலிப்பருத்தி வேரும் இலையும், இவை சாறெடுத்து, சிற்றாமணக் கெண்ணெயும் விட்டுக் காய்ச்சி, கடுகு திரண்டால் இறக்கி வைத்து, நற்சீரகம், கருஞ்சீரகம், திப்பிலி, வசம்பு, வெளுத்த பிசின் எல்லாம் இவை ஒரு நிறை கொண்டு போட்டு, எண்ணெய் காய்ந்து மத்தால் போட்டுக் கொதிப்பித்து இறக்கி வைக்கவும், கொடுக்க மசர நோய் தீரும்.

830. மாட்டு வாகடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 643

ஆ. ல/166

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. மாட்டு வாகடம்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் சுமார் 150 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 72 ஏடு ; 144 பக்கம்.

ஆ. நீளம் 16 செ. மீ ; அகலம் 3 செ மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சர்வ மாட்டுக்கும் நோவு தாவாத படிக்கு மருந்து

வசம்பு, காயம், சீரகம், நொச்சிக் கொழுந்து, தைவேளை, குப்பைமேனி இது வெல்லாம் இடித்துச் சாறு பிழிந்து, அதன் பிறகு பெருங்காயமும் எருமை வெண்ணெயும் எடுத்து, சாறிலே போட்டு மத்தித்து, சர்வ மாட்டுக்கும் நச்சமிடவேணும். மாடுகளுக்கு நோவு தாவாது.

ஆ. முடிவு

உதவி எடுக்க

வாழை இளங்குருத்து கொண்டுவந்து, அதில் மேலும் கீழும் காற்படி வெண்ணெயை மாறி மாறி விட்டு தான் வாயின் வழி விட்டு எடுக்கவும்.

831. வில்லிபாரதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 644

ஆ. ந/75

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரர்

ஆ. வில்லிபாரதம் : ஆதி பருவம்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரையும். (741 பாடல்) அச்சில் சுமார் 700 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 260 ஏடு ; 520 பக்கம்.

ஆ. நீளம் 45 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது,

ஈ. பக்கத்திற்கு 7, 8, 9 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கலியுக வியாசர் சொல்ல கணபதி எழுதும் பாடல்
பொலிவுறு தமிழா லாயிர மெனும் விருத்தம் போற்றிச்
சலிவுறு வில்லிபுத் தூரார் ... சார்வ பூ மன்
ஒலிகெழு மறையோர் கோமான் உயர்ந்தவ ருவப்பச்
சொன்னார். (1)

ஆ. முடிவு

தைரியத்திலும் அழகிலும் சத்திய வசனத்திலும் மற்றும் நிகரில்லாத நரனாகிய அர்ச்சுனனும் நாரணனாகிய ஸ்ரீ கிருஷ்ண தேவர்க்கும், இவர்கள் இருவருஞ் சந்தோஷப்படத் தக்கதாகப் பிரியமாய் இருக்கையில் அரனாகிய ஈஸ்வரன் நெற்றிக் கண்ணில் வெந்து சாம்பலான அனங்கனாகிய மன்மதனுக்கும் பக்குவ நாளான வசந்த காலம் வந்து தோன்றியது என்றவாறு. (317)

தீர்த்தயாத்திரைச் சருக்கம் முற்றும். ஆகச் சருக்கம் 80 க்குத் திரு விருத்தம். 741.

இ. பிற்குறிப்பு

சுபகிருது வருஷம் மாசி மாதம் 6 ம் தேதி பிரகஸ்பதி வாரம், திதி திரிதியை, நட்சத்திரம் உத்திரம் இந்த சுபதினத்தில் வேலூருக்குத் தென் மேற்கான உசேனாபாது பேட்டைக்கு மேற்கு கயிலாசகெடிக்கு வடமேற்கான கெங்கபத்துக்குடியில் சேர்ந்த யினாம் கிராமம் புலிமேடு மணியம் தாண்டவக் கவுண்டன் குமாரன் சின்னாண்டி தனக்கு ஆதிபருவம் எழுதி நிறைந்தது. முற்றும். இந்தப் புஸ்தகத்தை எடுத்தவர்கள் படித்து, சுவடிக்காரர் வசத்தில் சேர்க்கவும். சேராமல் அபகரிக்க நினைத்தால் துரியோதனனாதி யர்கள் பெற்ற பலன் பெறுவார்கள் என்றவாறு. பூதூர்புலி மேடு, எலவம்பாடி வகையரா கிராமம் அருகணரு பெரிய முத்து வீரப்பாளை குமாரன் ஆறாவது புலிமேட்டிலிருக்கும் ராமய்யப்பிள்ளை சின்னாண்டி கவுண்டருக்கு எழுதிக் கொடுத்தது.

832. வில்லிபாரதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 645

ஆ. ந/76

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. விஷ்ணுபுத்தூரார்

ஆ. வில்லி பாரதம் : சபாபருவம். உரையுடன்.

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரையும். அச்சில் ஏறத்தாழ 250 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 144 ஏடு ; 288 பக்கம்.

ஆ. நீளம் 43 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.

ஊ. நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சபா பருவம் காண்டவவனச் சருக்கம்.

நனியாட நற்கடவு ளின்நிருதி
நன்றுதிசை நாள்க டோறும்
முனியாமல் நடந்திளைத்து முன்னையினும்
பரிதாப முதிர்ந்த தாகத்
தனியாழித் தனிநெடுந்தேர்த் தனிப்பச்சை
நிறப்பரியைச் சயில ராசன்
பனியாலவ் விடாய்தவிர்ப்பான் பணிப்பகைவன்
பணிசெய்வோன் பக்கஞ் சேர்ந்தான். (1)

ஆ முடிவு

தர்மராயர் தன்னையும் தம்பிமார் நாலு பேரையும் வென்று தன்னுடைய குமாரர்களோடும் துரோபதையுடனும் மற்றுமுள்ள பேர்களையும் வென்று மீட்டுக் கொண்டு தங்களுடைய சூரவரான பெரியோர்களான துரோணாசாரியார், அசுவத்தாமன், கிருபாச்சரியார், பீஷ்மாச் சாரியார், விதுரமகாராசன், மற்றுமுள்ள பெரியோர்கள் பாதம் வணங்கி அன்புடன் துதி செய்து விடை பெற்று நாடு விட்டு ஆரணியமே போனார்கள் பூலோக முழுதுக்கும் நாயகரான, பஞ்ச பாண்டவர்களும் துரோபதையு மென்றவாறு. (170)

சூது சருக்கம் முற்றும்.

5. ... ...

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

தொடர் எண் : 624 காண்க.

833. வில்லி பாரதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 646

ஆ. ந/77

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரர்

ஆ. வில்லிபாரதம் : ஆரணிய பருவம் - உரையுடன்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரையும். அச்சில் ஏறத்தாழ 350 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 144 ஏடு ; 288 பக்கம்.

ஆ. நீளம் 43 கெ. மீ ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அருச்சுனன் தவசுப் பயணச் சருக்கம்

பணமுடி யரவுண படர்சடை முடியினன்
மணமலி குழல்பயில் மயல்மக ளுமைதரு
குணமுடை யருளினன் குளிர்பிறை யெயிறினை
கணபதி கழல்பணிந் திடவினை கழலுமே. (1)

ஆ. முடிவு

சேற்றினிடமாய் முளைத்து எழுந்து பரவிய தாமரைப் பூவின் அரும்பு போலப் பரிமளிக்கும் முகின்முலையுடைய இடைக்குலப் பெண்களினுடைய வளைத்தழும்பு அகலாத மரகத மலைபோல வடிவழகுடைய எங்கள் பிரானாகிய மாயவன் அடிக்கடி அலைமோதுந் திருப்பாற்கடலை மறவாதபடிபோல திருப்பாற் கடலுக்கு நிகராயழகுடைய துவாரகா புரியை நோக்கி இளைத்தவர்கள் துயரத்தை யொழித்து அய்வர்க்கும் ஆபத்பந்து வாகிய ஸ்ரீ கிருஷ்ண தேவரும் போனார். அய்வரும் ஸ்ரீ கிருஷ்ண தேவரை வணங்கி அந்த வனத்திலே துரோபதையுடனே சுகமா யிருந்தார்கள் அறுவரும் என்றவாறு. (34)

பழம் பொருந்தின சருக்கம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

ஆகச் சருக்கம் 17 க்குக் கூடிய திருவிருத்தம் 618. ஆரணிய பருவமும் முற்றும். இப்பால் விராடபருவம் காந்துறை சருக்கம்.

சபா பருவமும் ஆரணிய பருவமும் கூடிய சருக்கம் 20 க்குத் திருவிருத்தம் 1128. இது சரி.

புலிமேடு மணியம் ஆண்டி கவுண்டன் சுவடி.

சபா பருவமும் ஆரணிய பருவமும் இதில் இருக்கிறதென்று அறியவும்.

834. வில்லி பாரதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 647

ஆ. ந/78

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரர்

ஆ. வில்லிபாரதம் : உரையுடன் (பனடயெழுச்சிச் சருக்கம் முதல் பதினாலாம்போர்ச் சருக்கம் முடிய)

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரையும். அச்சில் சுமார் 600 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 286 ஏடு ; 572 பக்கம்.

ஆ. நீளம் 43 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன. 27-30, 258-262, 279, 280 ஆக 11 ஏடுகள் இல்லை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

படர்ந்த கானகந் திரிந்துமீண் டன்புடன்
பணிந்தபஞ் சவர்க்காகக்
கடந்த ஞானியர் கடவுளர் காண்கிலாக்
கழலிணை சிவப்பேறத்
தொடர்ந்து நான்மறை பின்செலப் பன்னகத்
துவசமா னகர்த்தூது
நடந்த நாயகன் கருமுகில் வண்ணமென்
நயனம்விட் டகலாதே. (1)

ஆ. முடிவு

அவ்வளவில் முன் சக்கரத்தினாலே மறைப்புண்ட ஆயிரஞ் சோதியுள்ள சூரியன் ஆயிரங்கிரணமும் பத்துநூறாயிரங் கிரணமாய் இன்றைக்கு நன்றாய் விடிந்ததென்று, இது நல்ல நாளென்று சகலருஞ் சொல்லப் பார்த்தாள். லோகத்தில் வலம் வந்து எங்கே எங்கே என்று தேடி வருகிறவனைப் போலே சூரியனும் உதயகிரி பருவதத்தில் வந்தார் தர்ம சாட்சியான ஆதி மூர்த்தி. அவ்வளவில் பொழுது விடிந்தது என்றவாறு. (224)

பதினாலாம் நாள் யுத்தம் முற்றும். ஆக விருத்தம் 1085. இப்பால் பதினைந்தாம் நாள் இயற்றிய யுத்தம் வேறே யிருக்கிறது அறியவும்.

இ. முற்குறிப்பு

சாலிவாகன சதாப்தம் 1761 க்குக் கலியுக சகாப்தம் 4941 க்குப் பிரபவாதி சகாப்தம் 33 க்கு மேல் செல்லா நின்ற சனவரி மாதம் மார்கழி 6 ம் தேதி, புலிமேடு மணியம் தாண்டவ கவுண்டர் குமாரன் ஆண்டி கவுண்டர் வில்லிபுத்தூராழ்வார் பாடல் பாரதம் உரையுடன் எழுதத் தொடங்கினது.

பிற்குறிப்பு

சார்வரி வருஷம் பங்குனி மாதம் 10 ம் தேதி, ஆதி வார நாள் திதி சதுர்த்தசி, பூரட்டாதி நட்சத்திரம், இந்த சுபதினத்தில் புலி மேடு மணியம் தாண்டவக் கவுண்டர் குமாரன் ஆண்டிக் கவுண்டர் வில்லிபுத்தூராழ்வார் பாடல் பாரதம் உரையுடன் முதல் நாள் முதல் பதினாலாம் நாள் யுத்தம் வரைக்கும் மேற்படி ஆண்டி கவுண்டர்

கையெழுத்துப்பட எழுதி நிறைந்தது. முற்றும். இந்தப் பாரதக் கதையை எடுத்துப் படித்தவர்கள் சுவடிக்காரர் வசத்தில் ஒப்புவிக்கவும். ஒப்புவிக்காமல் அபகரித்தால் கர்சியிலே கோவத்தி பண்ண தோஷத்திலே போவார்கள். இது அறிந்து உடமைக் காரன் வசத்திலே சேர்க்க வேண்டியது. பதினைந்தாம் நாள் யுத்தமும் பதினெட்டாம் நாள் யுத்தம் வரையும் வேறே புஸ்தகமா யிருக்கிறது.

835. தருமர் அசுவமேத யாகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 648
ஆ. ம/9

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...
ஆ. தருமர் அசுவமேத யாகம்
இ. உரைநடை இலக்கியம்
ஈ. உரைநடை. அச்சில் சுமார் 500 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 234 ஏடு ; 468 பக்கம்.
ஆ. நீளம் 43 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வேதவியாசரைத் தோத்திரம் பண்ணி பாரதக் கதையைச் சொல்லுகிறோம். அது எப்படி என்றால் : பூர்வ காலத்துச் சந்திர வங்கிச ராசாவாகிய செனமேசெய மகாராசா கொலுவாயிருக்கிற

போது அவரண்டைக்குப் பரம பாகவத சிகாமணியாகிய ஸ்ரீ வேதவியாசர் சிஷ்யராகிய சைமினி என்கிறவர் வந்தார்.

ஆ. முடிவு

மகாராசாவே, நீர் தம்மாலே இந்த வேத சாரமான அசுவமேத பருவத்தைச் சாங்கமாய்க் கேட்டுப் புண்ணிய தேகனாய் உமக்குப் புண்ணியகதி சகலசுபங்களும் உண்டாகுமென்று சைமினி முனிந்திரர் சனமேசெய மகாராசாவுக்கு அசுவமேத பருவத்தைச் சொன்னார் என்று சொல்லி, சூத புராணிகர் சவுனகாதி மகா ரிஷிகளுக்குச் சொன்னார் என்றவாறு

இ. முற்குறிப்பு

1. சித்தார்த்தி வருஷம், வைகாசி மாதம் 20 ஆம் தேதி புஸிமேடு மணியம் தாண்டவக் கவுண்டர், அசுவமேத யாகம் எழுதத் தொடங்கினது.

2. சித்தார்த்தி வருஷம் வைகாசி மாதம் 20 ஆம் தேதி வெள்ளிக்கிழமை சுவாதி நட்சத்திரம், திரயோதசி திதி 25 நாழிக்குமேல் எழுத ஆரம்பம். தொடங்கினது யார் என்றால் மேற்படி ஊரிலிருக்கும் கணக்கு ராயப்பிள்ளை குமாரன் முத்துவீரப்பிள்ளை எழுதத் தொடங்கினது என்று அறியவும்.

பிற்குறிப்பு

ரௌத்திரி வருஷம் கார்த்திகை மாதம் 23 ம் தேதி வியாழக்கிழமை, அஷ்டமி திதியில், சுமார் 24 நாழி. இந்த சுபதினத்தில் வேலூருக்குத் தென்மேற்கான உசிலம்பாடு பேட்டைக்கு மேற்கு கைலாசகடிக்கு வடமேற்கான கங்கைபத்துக் குடியில் சேர்ந்த இனாம் கிராமம் புஸிமேடு மணியம் சின்னாண்டி-கவுண்டன் குமாரன் தாண்டவக் கவுண்டன் அசுவமேத யாகம் எழுதி நிறைத்தது. முற்றும். இந்தப் புஸ்தகத்தை யார் யார் எழுதினது என்றால் மேற்படி தாண்டவக் கவுண்டனுடைய தம்பி கந்தசாமியும் கணக்கு முத்துவீரப்பப் பிள்ளையும், இவர்கள் கைப்பட எழுதியபடியால் இந்தப் புஸ்தகத்தில் என்ன தப்பு, பிழை இருந்த போதிலும் பெரியோர்கள் அங்கீகரிக்க வேண்டியது. இந்த புஸ்தகத்தை யாராவது எடுத்தவர் படித்துச் சுவடிக்காரன் வசத்திலே சேர்க்கவும். அப்படிச் சேர்க்காமல் அபகரிக்க நினைத்தால் துரியோதனாதியர்கள் பெற்ற பலன் பெறுவார்கள் என்று அறிந்து சேர்க்கவும்.

பகவானுடைய திருப்பாதாம்புஜம் துணையாகவும்.

836. இராம நாடகக் கீர்த்தனை

1. நூலகக் குறிப்புகள்

அ. 649

ஆ. ற/38

2. உள்ளீடு : நூல் விவரம்

அ அருணாசலக் கவிராயர்-சீர்காழி

ஆ. இராம நாடகக் கீர்த்தனை

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 273 ஏடு ; 546 பக்கம்.

ஆ. நீளம் 43 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6, 7, 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிபால காண்டம்

ஆனை முகனே அரனார் திருமகனே
சேனையர்கோ னாகவளஞ் செய்வோனே — ஞானமே
நாடகத்தைக் கொண்டுத்தன் நல்லருளா லேராம
நாடகத்தைச் சொல்லுவேன் நான்.

ஆ. முடிவு

ஞானநா யகராம் ராம நாடக மிதையார் சொல்லும்
கான பாகவத ருள்ளங் களித்திட யிதனைக் கேட்டுத்
தானமா யுலகி லுள்ள சவுபாக்கிய முத்தந் தோர்கள்
வான நாட்டரசன் போலே வசிகரம் பெற்று வாழி.

இ. பிற்குறிப்பு

விளம்பி வருஷம், ஆடி மாதம், 4 ம் தேதி, மங்கள வார நாள், ரோகிணி நட்சத்திரம், இந்தச் சுபதினத்தில் வேலூர் தாலுக்காவைச் சேர்ந்த புலிமேடு கிராமமணியம் தாண்டவக் கவுண்டன் குமாரன் ஆண்டிக் கவுண்டன் தான் சுதாவாய்க் கைபடிய எழுதின ராமாயணக் கீர்த்தனை எழுதி நிறைந்தது. முற்றும். இந்தப் புஸ்தகத்தையாராவது எடுத்துப் படித்தால் படித்த பின்பு சுவடிக் காரன் வசம் சேர்க்கவும். சேராமல் அபகரித்தால் இதனாலே வரப் பட்ட தோஷம் காசியிலே கங்கைக்கரையிலே கோவத்தி பண்ண தோஷத்திலே போவார்கள். ஆகையால் அது அறிந்து மேல் எழுதிய படிக்கு யதாஸ்தானம் சேர்த்துப் போடுகிறது.

5. ....

6. மாற்றுச் சுவடிகள்காணுமிடம்

பல நூலகங்களிலும் உள்ளன.

7. வெளியீட்டுச் செய்திகள்

வெளியிடப்பட்டுள்ளது.

837. மருத்துவச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 650
ஆ. ல/167

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. உரைநடை

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 22 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; 3·5 செ மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வியாதிகளின் அகராதி

அகதகச் சன்னி — 17
அபன்னியா சன்னி — 20
அசீரண சுரம் — 24
அஸ்தி சுரம் — 25
அதி சாரம் — 25
அதிசார லக்ஷணம் — 26
அசீரணம் — 29

ஆ. முடிவு

நிருதியில் வந்த ழைக்கில் நிச்சயஞ் சாவு சொல்லும்
வருணனில் வந்தால் போதும் மத்திபம் வாய்வு மூலை
திரமொடு வந்து சொல்லத் தீராதரோக மென்க
இருமைசேர் மேற்கு நன்மை ஈசானம் நல்ல தாமே.
தண்ணீர்க் குடமும் மாங்கிஷ்முந்
தயிர்பால் மீன்சந்தனம் பூவும்
வண்ணப் படியே தான்காண
வருவார் சாத்திய மென்றே சொல்.

5. பிற செய்திகள்

இச் சுவடியில், வியாதிகளின் அகராதி (3 ஏடு), மருந்து விவரங்களின் அகராதி (4 ஏடு), பரஷாண்கட்டு (3 ஏடு),

வைத்தியனை அழைக்க வருபவனின் திக்குப் பார்க்கும் சகுனம் (1 ஏடு) ஆகியன உள்ளன. இது சுவடிகளின் உதிரி ஏட்டுத் தொகுப்பாகத் தோன்றுகிறது.

838. முமுட்சுப் பிரகரணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 651
ஆ. ட/99

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. முமுட்சுப் பிரகரணம் ; தமிழ் மொழிபெயர்ப்பு
இ. தத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் சுமார் 300 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 162 ஏடு ; 324 பக்கம்.
ஆ. நீளம் 42 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நித்தியமாயுஞ் சரையில்லாமலும் சகலத்துக்கும் முதன்மையாயும் ஒன்றாயுஞ் சொரூபானந்த லேசத்தினால் அலங்கரிக்கப்பட்ட விஷயானந்த முதலான ஆனந்தத்தை யுடைத்தானதையும் மகத்துக்களாற் சித்தத்திற் தியானிக்கப் பட்டும், வேதாந்தங்களால் தெரியப்பட்ட மோட்சத்துக்கு இருப்பிடமாயும் இருக்கின்ற ஆத்ம சொரூபத்தை நமஸ்காரஞ் செய்கின்றேன்.

ஆ முடிவு

..... இந்தப்படி மகாபுருஷாளிடங்களில் பிரசித்தமாய் இருக்கின்றது. தேகமே ஆத்மா வென்கிற ஞானத்தை நாசப் படுத்துகிறதாயிருக்கிற ஞானமானது, தேகமே ஆத்மா வென்கிற ஞானம் போல, ஆத்மாவினிடத்திலே உண்டாயிருக்கிற புருஷன் மோட்ச இச்சை யில்லாதவனாயிருந்தாலும் மோட்சத்தை யடைகிறான். (15)

ஸ்ரீ வால்மீகியினாற் சொல்லப்பட்ட மோட்சோபாயமான மூப்பத்தீராயிரங் கிரந்தத்திலிரண்டாவதாகிய முமூட்சுப் பிரகரணத்தில் இருபதாவது சருக்கம் முற்றிற்று.

இ. பிற்குறிப்பு

குரோதி வருஷம் ஆவணி மாதம் 4 ஆம் தேதி எழுதி நிறைவேறிற்று.

839. பாகவதபுராண வசனம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 652
ஆ. ம/10

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. பாகவத புராண வசனம். (முதல் 7 ஸ்கந்தங்கள்)
இ. உரைநடை இலக்கியம்
ஈ. உரைநடை

3. தோற்றக் கூறுகள்

அ. 258 ஏடு ; 516 பக்கம்.
ஆ. நீளம் 42 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ பக்கத்திற்கு 5, 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஸ்ரீவேதவியாசருடைய பாதபத்மங்களுக்கு நமஸ்காரம் பண்ணி ஸ்ரீமகா பாகவதம் பன்னிரண்டு முகூர்த்தங்களும் தமிழ் வசனத்தினாலே தெளிவாக எழுதுகிறோம். இந்தப் புராண கதைக்கு ஒரு விக்கினமும் வாராமல் ரட்சிக்கச் சொல்லி விக்கினேஸ்வரனை முந்தித் தோத்திரம் பண்ணி, சரஸ்வதியம்மையைக் கீர்த்தனை பண்ணி, வித்துவான்களை நினைத்து ஸ்கந்தம் பாரம்பரிய முதற் கொண்டு எழுதுகிறோம்.

ஆ. முடிவு

... உம்முண்டாய்வீடிலே ஸ்ரீ லட்சுமி நாயகன் இருக்கிறான். நீயிருதார்த்தனென்று சொல்லி நாரதன் தர்மராசா முதலானபேர்கள் கையிலேயும் ஸ்ரீ கிருஷ்ணசுவாமி கையிலேயும் பூசிதனா அனுப்பி விச்சுக்கொண்டு தம்முட ஆச்சிரமத்துக்குப் போனார். இப்படியென்று சுகயோகி பரிட்சித்து மகாராசாவுக்குச் சொன்னாரென்று சூதர்சவுனகர் முதலான ரிஷிகளுக்குச் சொன்னார்.

இ. பிற்குறிப்பு

இந்த ஏழாவது ஸ்கந்தத்தைத் தெலுங்கு வசனத்தினாலே கவி திம்மப்பன் எழுதினதைப் பார்த்து எம்மார் வாத்தியார் சின்னய்யன் தமிழ் வசனத்தினாலே கவி திம்மப்பன் எழுதினது. இது பெரியோர்கள் சித்தத்திலே தயவு பண்ணவும். ஏழாவது ஸ்கந்தம் முற்றும்.

840. பாகவத புராண வசனம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 653

ஆ. ம/11

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ பாகவத புராண வசனம் (8 - 12 ஸ்கந்தம் முடிய)

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 500 பக்கம் வரும்.

தோற்றக் கூறுகள்

அ. 339 ஏடு ; 678 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ. ; அகலம் 3 செ மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. தெளிவான எழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை. மேற்புறம் சற்றே சிதைந்துள்ளது.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எட்டாவது ஸ்கந்தம்

வேதவியாசர் நமகாவென்று நமஸ்காரம் பண்ணிச் சூதர் சவுனகர் முதலான பேர்களுடனே சொல்லுகிறார். அப்படி சகயோகி பரிட்சித்து மகாராசாவுக்குச் சத்தமகந்தம்மட்டாய்ப் பாகவதத்தைச் சொல்லக் கேட்டுச் சந்தோஷப்பட்டுப் பின்னையும் ஒரு வசனஞ் சொல்லுகிறான். ஓகோ சுவாமி உம்முடைய வசன விசேஷத்தினாலே சுவாயம்புமனுவுண்டயவங்கிஷமும், வர்ணாச் சிரமதர்மங்களும் பின்னையுஞ் சிறிதுரகசியங்களும் மெச்சிக் கொண்டேன்.

ஆ. முடிவு

இது வேதாந்த சாரம். இது வேதத்துக்குச் சமானம். இது அஞ்சாம் வேதம். இது விஷ்ணு சொரூபம். இந்தப் பாகவதம் பதினெண் புராணங்களுக்குள்ளேயும் பெரியது. மாணிக்கங்களிலே கவுஸ்த்துவ மணியைப் போலே இந்தப் பாகவத புராணம் மகா உத்தமமென்று சூதர் சொல்லக் கேட்டுச் சவுனகர் முதலான ரிஷிகள் சந்தோஷப்பட்டுச் சூதரைப் பூசை பண்ணினார்கள்.

இ. பிற்குறிப்பு

இந்தப் பாகவதபுராணம் பனிரெண்டு ஸ்கந்தமும் கவிதிம்மப்பன் தெலுங்கிலே யிருந்ததை எம்மார்வாத்தியார் சின்னய்யன் தமிழினாலே உண்டாக்கினான். இந்தப் பாகவதம் எழுதி நிறைவேறினது.

சர்வசித்து வருஷம், கார்த்திகை மாதம் 17 ஆம் தேதி. சுக்கிர வாரமும் திரியோதசியும் அசுவனி நட்சத்திரமும் சுபதாம யோகமும் பாலவா கரணமும் ராசத வேளையும் மேஷ ராசியும் சூரியனோரையும் புத அமிசையும் கூடின சுபதினத்திலே கூத்தலூர் இடைக்கல்லில் இருக்கும் சின்னத்தம்பி உடையாரவர்களுக்குச் சிறுபத்தூரிலிருக்கும் வாத்தியார் நல்லதாக அம்பர் இடைக் கல்லிற் பள்ளிக்கூடம் வைத்திருந்த போது எழுதின பாகவதம். இந்தப் பாகவதம் எழுதின நன்மைக்குக் குருவிருப்பு உண்டாகவும். ஸ்ரீ விஷ்ணுவே நமகா.

841. பெரிய திருமொழி

1. நூலகக் குறிப்புகள்

அ. 654

ஆ. 42

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருமங்கையாழ்வார்

ஆ. பெரிய திருமொழி

இ. திவ்யப் பிரபந்தம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 143 ஏடு ; 286 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாழி பகலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

ஆ. முடிவு

மின்னுமா தவழும் மேக வண்ணா
விண்ணவர்தம் பெருமானே யருளா யென்று
அன்னமாய் முனிவரோ டமர ரேத்த
அருமறையை வெளிப்படுத்த வம்மான் றன்னை
மன்னுமா மணிமாட மங்கை வேந்தன்
மானவேற்பர காலன் கலியன் சொன்ன
பன்னியநூற் றமிழ்மாலை வல்லார் தொல்லைப்
பழவினையை முதலரிய வல்லார் தாமே. (30)

5. பிற செய்திகள்

ஏட்டின் பிற்பகுதியில் இராமாநுச நூற்றந்தாதியில் முதல் எட்டுப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

முதல் நான்கு ஏடுகளில் 'திருமொழியில் திருப்பதிப் பெயர்த் தொகை' என்ற ஓர் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

842. ரிபு கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 655

ஆ. ட/100

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. ரிபு கீதை

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 1925

3. தோற்றக் கூறுகள்

அ. 218 ஏடு ; 436 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 12, 13, 14 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆனைமுக னாறுமுக னருளாற் தேவி
அனந்தகனம் அளவற்ற முனிவர் தேவர்
ஏனையுள நல்லன்பரி யாவ ராலும்
எப்பயனும் பெறவேண்டி யிதயத் தின்கண்
ஊனமற வுபாசிக்கப் படன்னோர்க்கிங்
குவந்தபய னருளுமொரு மூர்த்தி யாகி
வானமென வகண்டசிதா காசமான
வஸ்துவதாம் பரசிவனை வணங்கல் செய்வாம். (1)

ஆ. முடிவு

தேசி கன் தெரி வித்த திறப்படி
தீர மாய் நிதித் யாசம் புரிந்ததால்
ஈச னல் லருள் பெற்றவர் முத்தியை
எய்த லாமென முன்பு விளம்பீமற்

றேசி லாவிந்த நூலின் மகத்துவம்
யாவுமோதி யிவற்றை முடித்திட
வாசி லானந்தத் தாண்டவமாடும்
அம்பி கேசன் கண்டசொ ரூபமே (53)

இ. பிற்குறிப்பு

இப்படி மகேதிகாசமான சிவரகசியத்தினாறாம் அம்சத்திலுள்ள ரிபு கீதையில் நாற்பத்தி நான்காவது அத்தியாயம் முற்றிற்று. ஆக அத்தியாயம் நாற்பத்தி நாலுக்குத் திருவிருத்தம் 1925

5. பிற செய்திகள்

நூல் முடிந்த பிறகு மறுபடியும் 53, 62, 104, 112, 189, 210 ஆகிய 6 ஏடுகள் இரண்டாவதாக எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

தொடர் எண் : 416, 417 காண்க.

7. வெளியிட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

843. சீவன் முக்திப் பிரகரணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 656
ஆ. ட/101

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. சீவன் முக்திப் பிரகரணம் : தமிழ் உரைநடை
இ. தத்துவம்
ஈ. உரைநடை

3. தோற்றக் கூறுகள்

அ. 82 ஏடு ; 164 பக்கம்.
ஆ. நீளம் 28 செ. மீ. ; அகலம் 4·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 14 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சத்தியஞானானந்த பரிபூரண பரமார்த்து மாவதாரரா யிருக்கிற யாதொரு பரமசிவனானவர் சுத்த சத்துவப் பிரதானமாய்ச் சொரூபமாய்ச் சூட்சுமமாய்ச் சொரூபானாவர்ணமாய்ச் சுவாதீனமாய் இருக்கிற தன்னுடைய மாயா சக்தி வசத்தினாலே நாம ரூப பிரபஞ்ச முழுவதுஞ் சிவசக்தியாத்துமக மென்கிறத்தை எல்லாருக்கும் தெரியப் படுத்துகிறதற்காகச் சாம்பநடேச ரூபத்தைத் தரித்துக் கொண்டு தன்னுடைய எதார்த்த ரூபஞ் சிதாகாசமென்று போதிக்கிறதாயிருக்கிற சிதம்பரச் சேத்திரத்திற் சனகாதி ரிஷீசுவராளுக்கும் பின்னும் ... ...

ஆ. முடிவு

... இந்தப் பிரகாரம் ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமிகளினாலே சிவன் முத்தியினுடைய சொரூபம் பிரமாணஞ் சாதனம் பிரயோசனம் நாலுகளோடேயுங் கூடின சீவன் முத்திப் பிரகரணஞ் சொல்லப் பட்டது அவாள் சொன்ன பிரகாரம் அந்தப் பிரகரணத்தினுடைய அர்த்தத்தை ஸ்ரீ சாம்ப நடேசருடைய பிரசாத லேசத்தினாலேயுஞ் சற்குருவினுட கிருபையினாலேயும் புத்திக்கித் தோணின மட்டும் நானுந் தமிழினாலே சொன்னேன். அப்படிச் சொல்லப்பட்ட இந்தத் தமிழ்மொழி ரூபமான சீவன் முத்திப் பிரகரணம் ஸ்ரீ சாம்ப நடேசருக்கே அற்பணஞ் செய்யப்பட்டது. ஆனதாலிதிலிருக்கப்பட்ட பிழைகளை ஸ்ரீ சாம்பசிவ பத்தாளாயிருக்கிற சாதுக்கள் சகித்துக் கொள்ள வேண்டியது.

5. .....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்
தொடர் எண் : 434 - 436 காண்க

7. வெளியீட்டுச் செய்திகள்
அச்சிடப் பட்டுள்ளது.

844. சிவ கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 657
ஆ. ட/102

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. சிவ கீதை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 337

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு ; 44 பக்கம்.
ஆ. நீளம் 28 செ. மீ. ; அகலம் 4·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூதமைந் தோடி ரவி மதிப்
புருட னாகிப் புணர்ந்தென்றும்
பேதமி லாவறி வுருவாய்ப்
பிறங்கு கின்றபே ரொளியோன்
ஆதி மூவர்க் கறிவரியோன்
அரிவை பாகனா மமலன்
பாத பங்கயங் கடலை
வைத்தே பணியும் பரிசின்னால். (1)

ஆ. முடிவு

மூவர் தேடிறை சனற்குமாரன்
முதன்முனி வர்கட்கு மெய்ப்பிகீதை யிங்கீ
யாவ ரோதின ரிதன்பொருட் டுணிவரி
யாவர் கேட்பவ ரியாவர்தம்
பாவம் வேரொடு பறிந்து நல்ல
பரம பதம் பெறுவ ராதலான்
மேவு மன்பினொடு மீளுதலில்
வீடு வேண்டின்ன விருப்புவான். (87)

ஆக அத்தியாயம் 11க்குத் திருவிருத்தம் 337.

845. பகவத் கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 658
ஆ. ட/103

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. பகவத் கீதை
இ. தக்துவம்
ஈ. செய்யுள் 566

3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு ; 62 பக்கம்.
ஆ. நீளம் 28 செ. மீ.; அகலம் 4·5 செ. மீ
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஐவகைப் பொருளும் நான்கு கரணமுங்
குணங்கள் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யி ருளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவ ளராழிச் செங்கட் கண்ணனைக்
கண்ணுள் வைப்பாம். (1)

ஆ. முடிவு

கட்டார் மயலிருட் காத பச்சோதி கலைநிரம்பி
எட்டாத் துயராத் தினம்மாக் கலின் மாமதி
யெவ்வினையும்
விட்டார் கள்விட்ட பின் வேதச் சுடரொளி மெய்யுணர்ந்த
பட்டா கரனருளாம் பரமார்த்த தரிசனமே. (87)

இ. பிற்குறிப்பு

சகல உபநிஷத்துப் பிரதிபந்தன மோக்ஷ யோக வத்தியாயம் முற்றும். ஆக அத்தியாயம் 18க்குக் கூடிய செய்யுள் 566.

846. முதல் வாக்கிய உரை கூறல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 659

ஆ. ட/104

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. முதல் வாக்கிய உரை கூறல்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரையும். அச்சில் சுமார் 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 16 பக்கம்.
ஆ. நீளம் 28 செ.மீ. ; அகலம் 4·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 12, 13 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஞானமே பிரமமென்ற முதன்மொழியின் பயன்கேள்
நாச்செவிகண் மெய்மூக்கு நயந்த பொறி யதனால்
ஆனசுவை யோசையொளி பரிசம்வா
சனையா லறிவதுவே
ஞானமதன் பிரகாசமு ரைக்கில்
வானிரவி திங்களங்கி பிரகாச மனமதிற்பிர காசந்
தானமுறு சீவனதிற் பிரகாசமதி லுந்தன்
அறிவேபிர காசத்தான மெனவறியே.

ஆ. முடிவு

.....நித்தியமாயு மூன்றுப் பரிச்சேதமுமற்று சருவத்திலுஞ் சம்மந்தித்து இருப்பதால் பூரணமாயுஞ் சகலமுந் தன்னிடத்தில் விவாீத மாகையாற் சுத்தமாயும் என்று மொரு படியா யிருத்தலால் விகாரமற்றதாயும் தன்னையறிய திருக்கு வேறொன்றில்லாத படியால் திரிசியமாயு மிருக்கின்ற யுத்தி யிருப்பதாலும் நான் சருவ விலட்சன்ன நான் சர்வ சானுபவ மிருப்பதாலுஞ் சுயம் பிரகாசமான தானே அறிவென்பார். அதைப் பகுத்தறிய வந்த வறிவறிவே யெனவுங் கூறினார். இதனம்—உடலாதி வறிவல்ல வென்றுணர் சுருதி யுத்தி யனுபவங் கூறி யறிவின்னதென தெரிவித்ததாம்.

847. பிரம கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 660
ஆ. ட/105

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. பிரம கீதை
இ. தத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.
ஆ. நீளம் 28 செ மீ. ; அகலம் 8 பக்கம்
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 15 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அத்தி முகவனை மத்தன் மதலையை
நித்தம் நினைபவர் முத்தி பெறுவரே. (1)

ஆனை முகவனை மேனை வினைகெடத்
தானை நினைய வருணை யொழிவரே. (2)

ஆ. முடிவு

போதக் கண்ணிற் பூதம் பொய்யே மெய்யேயாம்
பேதக் கட்குட் டிரமா நிகழ்விற் பேதந்தான்
ஓதப் படுசுத்திகை வெள்ளியின் மெய்யுணர் காலந்
சேதப் படுமக் கனவிற் பெரிதுந் திடமுண்டோ (13)

848. ஞான வாசிட்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 661
ஆ. ட/106

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஆளவந்தார், வீரை.
ஆ. ஞான வாசிட்டம் : மூலம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 225 ஏடு ; 450 பக்கம்.
ஆ. நீளம் 38 செ. மீ. ; அகலம் 4·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ, பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை மிகச்சில ஏடுகள் சிதைவு
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பண்மை பாதியன் பெற்ற களிற்றினை
அண்மை தூர மறவகத் துன்னுவர்த்
திண்மை ஞானச் சிறப்புயர் வாசிட்டம்
உண்மை யாக வொருங்குரை செய்யவே. (1)

ஆ. முடிவு

தாளவந்தா மலரோன்றன் மனத்துதித்த
வசிட்ட னயன்றன் பாற்கேட்டு
நாளவந்தான் போகாத ராமனுக்கங்
குபதேசம் நல்கி யிங்கே
ஆளவந்தான் வீரையில் மாதவப்
பட்டனங் கிசத்திறவ் வதார மாகி
மீளவந்தான் வந்துதமிழ் வசிட்ட
ராமாயணமும் விளப்பி னானே.

(பாடல் அடிகள் பிழையாக உள்ளன.)

849. ஒழிவிலொடுக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 662

ஆ. ட/107

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. ஒழிவிலொடுக்கம் : மூலமும் உரையும்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரையும். அச்சில் சுமார் 500 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 254 ஏடு ; 508 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 9 வரி.

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 532 காண்க.

ஆ. முடிவு

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளமலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா — னுள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண
ஒழிவிலொ டுக்கநூ லோர்ந்து.

ஆக அதிகாரம் பத்துக்குத் திருவெண்பா 253.

850. ஒழிவிலொடுக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 663
ஆ. ட/108

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. ஒழிவிலொடுக்கம்: மூலம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 253

3. தோற்றக் கூறுகள்

அ. 41 ஏடு ; 82 பக்கம்.
ஆ. நீளம் 29 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண் : 532 காண்க.

851. ஞான வாசிட்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 664
ஆ. ட/109

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஆளவந்தார் – வீரை.

ஆ. ஞானவாசிட்டம்; மூலபாடம் இல்லாத உரை மட்டும். (செய்யுள் எண் கொடுத்து) காதி கதை முடிய.

இ. தத்துவம்

ஈ. உரை நடை. அச்சில் சுமார் 400 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 164 ஏடு; 328 பக்கம்.

ஆ. நீளம் 23 செ.மீ ; அகலம் 4 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 11 வரி.

உ. அழகிய, தெளிவான கையெழுத்து.

ஊ. மிக நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இனி வடநூலாசிரியராகிய வான்மீக பகவானியற்ற தகிச்சித்த கிரந்த நிர்விக்கினமாக நிறைவேறவும் குருசீட பாரம்பரியமாக யாவருஞ் சிரவணஞ் செய்யவுஞ் சிட்டா சாரத்தாற் பெற்ற இட்ட தெய்வ நமஸ்கார இலக்கணமான மங்களத்தை அங்கீகரிக்கின்றார்.

ஆ முடிவு

கவி 33 ஞான பூரணமே-இ. ள். ஞான பூரண மெய்தாமையால் ஆதி மதத்துவக்ஞானம் பரிச்சின்ன விஷயமாயிருத்தலின் இந்த நெடிய மோகத்திகிரிக்கு - சக்சரம் போற் சுழலுமியல்புள்ள விச்செகத்து மூடமாகிய மாயா விலாசத்திற்கு ; மானதந் தானே யச்சதாம்– சக்கரபமா விருத்திக்கு யேது வாதலி னென்க. அதனை-அத்தன்மையுள்ள மாயா சக்கரத்துக் கச்சான சித்தத்தை — விலிந்தடர் வுறில் — எவ்விதமு நிரோதஞ் செய்து நிருவிகாரனாய் இருக்கின் — அது — அம்மாயாசக்கரம் ; நலியா — அற்பமும் வாதியாது. கவி 34 எழுதி நீ கிரியிற்கவி 35; வருடமோர்பத இ-ள். பொருவில்சற்பாவம்—பரிபூரணமான மகாசத்தையை.

காதிகதை முற்றிற்று. ஆகக்கதை 23 க்குக் கவி 1012.

852. ஞான வாசிட்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 665
ஆ ட/110

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஆனவந்தார்—வீரை.
ஆ. ஞான வாசிட்டம் : மூலம்
இ. தத்துவம்
ஈ செய்யுள் 2055

3. தோற்றக் கூறுகள்

அ. 296 ஏடு; 592 பக்கம்.
ஆ. நீளம் 33 செ மீ ; அகலம் 3 செ.மீ.
இ இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.
உ. தெளிவான எழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 661 காண்க.

இ. பிற்குறிப்பு

ஆகக்கதை 45க்குத் திருவிருத்தம் 2055, திருச்சிற்றம்பலம். அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாய் இருக்கின்ற பரம சற்குருவே நமகர. அருணாசல ஈசுபரன் பாதார விந்தமே கதி. பிரம்மமே சத்தியம். சிவோகம்.

853. ஞான வாசிட்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 666

ஆ. ட/111

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஆளவந்தார் — வீரை.

ஆ. ஞான வாசிட்டம்

இ. தத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் சுமார் 350 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 185 ஏடு ; 370 பக்கம்.

ஆ. நீளம் 29 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 120 ஆம் ஏட்டிற்கு மேலுள்ள ஏடுகள் வலப்புறம் மேல் பாகம் சிதைந்துள்ளன.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வைராக்கியப் பிரகரணம்

பிரமமே சத்தியஞ் சொரூக்கத்திலேயும் பூமியிலேயும் உள்ளும் புறம்பும் பார்க்கிறதும் பார்க்கப்பட்டதுமாய் எல்லாந்தானாய் இருக்கிற ஆத்மாவுக்கு நமஸ்காரம். வாசிட்ட கதை யாவதே தென்றால் வைராக்கியமும் சத்தும் உற்பத்தி திதி உபசமனம் நிர்வாணமென்று ஆறு பிரகரணமாக இருக்கும். இதில் வைராக்கியப் பிரகரண முதல் ராமசாமிக்குச் சொல்லுகிற பிரகாரம்.

ஆ. முடிவு

இராமசுவாமி சீதனா யிச்சாந்தனா யிச்சீவன் முத்தனாய் ராச்சிய சுகத்தை அனுபவிச்சுக் கொண்டு இருந்தார். நீயும் இந்த

அறத்தை மறவாமல் சித்தத்திலே நிறுத்திக் கொண்டு சுகமாய் இருமென்று உபதேசித்தது கேட்டுப் பரத்துவாசர் வால்மீக முனீந்திரனுக்கு நமஸ்காரம் பண்ணி அனுப்பிவித்துக் கொண்டு பரமக்கியான சம்பன்னனாய்ச் சீவன் முத்தனாய்த் தன்னிச்சை யினாலே விவகரித்துக் கொண்டு இருந்தார். ஞான வாசிட்டம் முற்றும்.

854. பகவத் கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 667
ஆ. ட/112

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. பகவத் கீதை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 549

3. தோற்றக் கூறுகள்

அ. 102 ஏடு ; 204 பக்கம்.
ஆ. நீளம் 28 செ மீ ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுவடியின் மேற்புறம் நடுப்பாகம் சிதைவு

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 658 காண்க.

ஆ. முடிவு

சேயமா மதுரை நின்றுஞ் செம்மையாய்ப் பாடி தேடி
யாய னாய்மாய னார்தா மவதரித் தருளி னாலே
போயநான் மொழிந்த கீதை புலன்கட லடைத்தார்க் கன்றித்
தூய மாதவர்க்கு யிந்தச் சுருதிநூல் கருதொ ணாதே.(71)

இ. பிற்குறிப்பு

சகல உபநிடத்துப் பிரிதிவாதன மோட்ச யோக அத்தியாயம் முற்றும். ஆக அத்தியாயம் 18 க்குத் திருவிருத்தம் 549. சப் பூரணம்

5. .....

6. *மாற்றுச் சுவடிகள் காணுமிடம்*

தொடர் எண் : 448, 449 காண்க.

855. சசிவர்ணபோதம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 668

ஆ. ட/113

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ தத்துவராயர்

ஆ. சசிவர்ண போதம் : மூலமும் உரையும்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரையும். அச்சில் சுமார் 60 பக்கம் வரும்.

3. *தோற்றக் கூறுகள்*

அ. 33 ஏடு ; 66 பக்கம்.

ஆ. நீளம் 34 செ.மீ. ; அகலம் 2·5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. தெளிவான எழுத்து
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நல்லசொற் பொருள் நாடி நடத்தவும்
எல்லைகா ணரும்பே ரின்ப மெய்தவும்
வெல்லுமா னைமுகத் தினை மேவி வாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்து வாம்.

(எ. து) சசிவன்ன போதகம் உரையிட வேண்டியதுக்கு மகா கணேசுரனைத் தோத்திரம் பண்ணி; சரசுபதி கிருபையினாலே அமிர்தம் பொருந்திய நல்லவர்க்கு நடக்கத் தக்கதாகவும் பிரமானுபவ நித்திய சுயம் பிரகாசம் வெளியாகவும் ஞானமத யானையான மும்மதங்களும் பொழிந்து குணத்திறையங்களிலே யுண்டான தேகங்களுக்குள்ள பஞ்சேந்திரியங்களைச் செயித்து மோட்சமான மவுன முத்திரை அடைய வேண்டி வல்லபை கணேசுரனை மூலதாரத்திலே எழுந்தருளப் பண்ணி அறிவின் கண்ணாலே பூசை பண்ணிச் சுயம் பிரகாச நித்தியத்தை அடைவா ரென்றவாறு. விநாயக தோத்திரம் முற்றும்.

ஆ. முடிவு

ஞானியைத்தான் தான்தான் தேவதைகள்தான் இவர்களுக் கெல்லா மெனப்பாடாய்ப் பெற்றது. குருவினுடைய கிருபையி னாலே பெற்ற பேறு அந்தச் சிவன்தான் மானிட ரூபமாய் வந்து சசிவன்னனைத் தடுத்தாட்கொண்டு அந்தச் சீவ ரூபத்தை யடைந்தானென்று இருக்கு வேதம், யசுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் இந்த நாலுஞ் சாஸ்திரமான மந்திர வியாகரணம் நிகண்டு சந்தோபிசித்தி நிருத்தஞ் சோதிச மென்கின்ற ஆறு சாஸ்திரமும் பதினெண் புராணமும் மற்ற லோகத்தில் உண்டான சகல சமஷ்தமானது முறையிடுகிறதென்றவாறு. (19)

சசிவர்ண போதகம் முற்றும்.

856. அறிவானந்த சித்தியார்

1. நூலகக் குறிப்புகள்

அ. 669
ஆ: ட/114

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .. ..
ஆ. அறிவானந்த சித்தியார் : மூலம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 320

3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு ; 100 பக்கம்.
ஆ. நீளம் 30 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நிரவய நிர்மல நிர்க்குண
நித்திய நிரஞ்ச னன்மெய்
பரவிய நிறத்தே ரந்தன
பற்றிலி சுத்தன் பரமனந்தன்
விரவிய பூரண னேகநற்
பேரின்பன் வியாபக நேரன்
கரவுளங் கோயில்கொண் டானெழிற்
போற்றுவன் காத லித்தே. (1)

ஆ. முடிவு

வெளியாகி வேதாந்த மெய்ப்பொருளு மாகி
ஒளியாகி நின்றமுத லொன்றைத் — தெளிவாக
வந்து பரமானந்த வாழ்வெல்லா மின்றெனக்குத்தீ
தந்தபிரான் தாளே சரண். (320)

அறிவானந்த சித்தியார் முற்றும்.

இ. பிற்குறிப்பு

தப்பாதே மெய்யடியார் தம்பிரான் தன்கருணை
அப்பாதென் பெருமங்கை யப்பனே—ஒப்பிலாச்
சுத்தனே யெங்குஞ் சுருதிப் பொருளான
அத்தனே கண்பார்த் தருள்.

திருச்சிற்றம்பலம்.

857. சிவானந்த மாலை

1 நூலகக் குறிப்புகள்

அ. 670
ஆ. ட/115

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. சிவானந்த மாலை : மூலம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 410

3. தோற்றக் கூறுகள்

அ. 45 ஏடு ; 90 பக்கம்.
ஆ. நீளம் 30 செ.மீ. அகலம் 3 செ மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிடுதருங் காளத்தி பேணுங் கடகளிறே
தேடுமிடம் வாடுமிடஞ் செல்லுமிட — நீடுபகர்
துஞ்சந்தி யானேதுந் தோன்றாத முத்திவர
வஞ்சந்தி யானே யருள். (1)

ஆ. முடிவு

ஆண்ட வியல்பை யறிந்து நினைந்துருகி
வேண்டிமிக மெய்யன்பை மென்மேலு — மீண்ட
வழியாதே லுண்டமைவா மாரமுதை நெஞ்சே
யொழியாதே நீயுண் டிரு. (410)

திருச்சிற்றம்பலம். சிவானந்த மாலை முற்றும்.

இ. பிற்குறிப்பு

விக்கிரம வருஷம், பங்குனி மாதம், 21 ஆம் தேதி, ஆதி வாரம், பூரட்டாதி நட்சத்திரம், சதுர்த்தசி திதி, இந்தச் சுபதினத்தில் எழுதி நிறைவேறினது.

858. பிரபுலிங்க லீலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 671

ஆ. ந/79

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சிவப்பிரகாசர்–துணைமங்கலம்

ஆ. பிரபுலிங்க லீலை

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 1155

உ. வி. 29

3. தோற்றக் கூறுகள்

அ. 141 ஏடு ; 282 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூவாய் ... ... பசுந்தேன்
கைகான் முடங்கு பொறியிலிதன்
நாவா யொழுகிற் றெனஉலக
மளந்த மாலும் நான்முகனுங்
காவா யெனநின் றேத்தெடுப்பத்
தானே யுவந்தெங்கரதலத்தின்
மேவா வமர்ந்த மாமணியைத்
தொழுது வினைக்கு விடைகொடுப்பாம் (1)

ஆ. முடிவு

புண்ணிய ருலகில் வாழ்க புலன்செறு நோன்பு வாழ்கப்
பெண்ணொரு பாகன் பூசை பேணிய வடியார் வாழ்க
கண்ணுத லொருவர்ச் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க
வண்ணல் லமன்சீர் கேட்கு மாதர வாளர் வாழ்க. (243)

பிரபு தேவர் மான்மிய கதி முற்றும். ஆகக் கதி 25 க்குத் திருவிருத்தம் 1155.

இருபத்தைந்தாவது கதி முற்றும்.

இ. பிற்குறிப்பு

ஸ்ரீ குரு கமலம் ஸ்ரீ வாலை மெஞ்ஞானகுருசுவாமிகளினது கிருபா கடாக்ஷத்தினாலே, விய வருஷம், ஆவணி மாதம் 12 ஆம் தேதி, சனிவாரம், நக்ஷத்திரம் பூசம், திதி திரியோதசீ இந்தச்

சுபதினத்தில் ஸ்ரீ வாலை மெஞ்ஞான குரு சுவாமிகளுடைய அடிமையாகிய ராமலிங்கம் பிரபுலிங்க லீலை எழுதி நிறைவேறினது. முற்றும். ஸ்ரீ ஈசான மூர்த்திகளினது திருவடிக் கமலங்கள் நீடூழி காலம் வாழ்க.

5. ... ...

6. *மாற்றுச் சுவடிகள் காணுமிடம்*

தொடர் எண் : 297-, 299, 315, 317, 357 காண்க.

859. சோணசைல மாலை

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 672
ஆ. ய/46

2. *உள்ளீடு: நூல் விவரம்*

அ. சிவப்பிரகாசர் - துறைமங்கலம்
ஆ. சோணசைல மாலை
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 101

3. *தோற்றக் கூறுகள்*

அ. 18 ஏடு ; 36 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ
இ' இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்ணன்மா புகழ்மூ வரும்புனை தமிழ்ப்பா
வன்றியென் கவியுநின் றனக்காம்
பண்ணுலா மிரு வரிசைகொணின் செவியிற்
... ... னொலியுமேற் றிலையோ
விண்ணுலா முடியின் மேருவின் வடபால்
வெயிலொரு புடையுற வொருபாற்
தண்ணிலா வெறிப்ப வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கயிலைநா யகனே. (1)

ஆ முடிவு

ஏணாருஞ் சோண சயிலத்துக் கெஞ்ஞான்றும்
பூணார மாலை புனைந்தணிந்தான் — மாணா
பவப்புணரி நீந்தயிந்தப் பாரதிநூல் செய்தான்
சிவப்பிரகா சையன்றான் தேர்ந்து. (101)

சோணசைல மாலை முற்றும்.

860. திருக்குறள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 673
ஆ. ங/12

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருவள்ளுவர்
ஆ. திருக்குறள் : அறத்துப்பால் ; பரிமேலழகர் உரையுடன்.
இ. கீழ்க்கணக்கு
ஈ. செய்யுளும் உரையும். அச்சில் சுமார் 250 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 160 ஏடு ; 320 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 5 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இந்திரன் முதலாகிய தலைவர்களுடைய பதங்களையும், முடிவில்லாத இன்பத்தையுடைய அழிவில்லாத வீட்டையும் வழியறிந்து அடைதற்குஉரிய மனிதர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவையாவன அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம்.

ஆ. முடிவு

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

(இ. ள்) ஆரவியற்கை (ஒருபோது) நிரம்பாத இயல்புடைய; அவா-அவாவை; நீப்பின் (ஒருவன்) விடுவானாயின் (அவ்விடுகை அவனுக்கு) - அந்நிலையே - அப்போதே - பேராவியற்கை; - தரும் எப்போதும் ஒரு நிலைமையனாந் தன்மையைத் தரும். (எ. று) (10)

துறவறம் முற்றுப் பெற்றது.
ஆக அதிகாரம் 37க்குத் திருக்குறள் 370.

5. பிற செய்திகள்

முதல் 2 ஏட்டில் திருவள்ளுவ நாயனார் சரித்திரமும், மூன்றாவது ஏட்டில், உரையில் குறிக்கப் பெற்றுள்ள நிறுத்தக் குறிகள் விளக்கமும் எழுதப்பட்டுள்ளன.

861. அருணாசலபுராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 674

ஆ. ப/34

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்

ஆ. அருணாசல புராணம், : மூலமும் உரையும்

இ. தலபுராணம்

ஈ. செய்யுளும் உரையும். அச்சில் சுமார் 500 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 255 ஏடு ; 510 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முதிருஞ்சுவை மதுரம்பெற மொழியுந்தமிழ் விரகன்புகழ்
பதிகப்புனை பவனப்பின பவபஞ்ச னரமலன்
கதிரும்பழ பகிரண்டமு முடையும்படி யிலகும்படி
அதிரும்படி நடனம்புரி யதிருங்கழ லதிருங்கழல்.

ஆ. முடிவு

அண்ணா மேலைகண்டே னப்பொழுதே
தெண்டனிட்டேன்
உண்ணா முலை பாதம் உட்கொண்டேனன் -கண்ணாரக்
கோபுரங்கள் கண்டேன் குமரகுரு தாள்பணிந்தேன்
பாவங்களெல்லாம் பறந்து போச்சுதே.

(ஈற்றடி யாப்பிற்குச் சரியாக இல்லை).

862. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 675
ஆ. ற/39

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. தனிப்பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 6

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு ; 26 பக்கம்.
ஆ. நீளம் 40 செ. மீ ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.
உ தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(திருவண்ணாமலை செல்வவினாயகர் பேரில்)
மனமே நான் சொன்னபடி மறவா திருந்தா யானால்
வருமே யநேக பாக்கியம்
தினமும் கயிலைவாழ் செழிக்கும் அரகரனான்
செல்வ விநாயகர்தன் சேவடி தனையன்பாய்
திடமுடன் எண்ணி எண்ணி அடவுடன் துதிசெய்தால்
தேட்டமாய் நினைத்ததும் எதேட்டமாக
வருஞ்சொன்னேன். (மனமே நான்)

ஆ. முடிவு

இறக்கும் போது யென்மே லருளீச்
சிறக்கும் பாசம் சேரா வண்ணம்
அஞ்சா தஞ்சவன் அருளுவப் பரமே
என்முன்னே நண்ணி யிருபத மளித்துக்
கண்முன் வந்தெனைக் காத்தருள் வாயே.

5. பிற செய்திகள்

இச்சுவடியில், திருவண்ணாமலைச் செல்வ விநாயகர் பேரில், அண்ணாமலையார் பேரில், விருத்தம், திருவண்ணாமலை சுப்பிரமணியசுவாமி பேரில், அருணாசல ஈசர் பேரில், உண்ணா முலையம்மன் பேரில், திருவண்ணாமலை துர்க்கையம்மன் பேரில், ஸ்ரீரங்க நாயகர் போன்ற தலைப்புகளில் தனித்தனிப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

863. அருணாசல புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 676
ஆ. ப/35

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்
ஆ. அருணாசல புராணம் : மூலமும் உரையும்
இ. தலபுராணம்
ஈ. செய்யுளும் உரையும். அச்சில் சுமார் 400 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 169 ஏடு ; 338 பக்கம்.
ஆ. நீளம் 40 செ. மீ ; அகலம் 3 செ மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி
உ. சுமாரான எழுத்து.

ஊ. சில ஏடுகள் சிதைந்துள்ளன. எனினும், பொதுவாக நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 674 காண்க.

ஆ. முடிவு

இக்கதை படித்தோர் கேட்டோர்
எழுதினோர் எழுதி வைத்தோர்
மைக்கடற் சூழ்ந்த இந்த
வையகம் முழுவது மாண்டு
தக்கசந் தான முண்டாய்ச்
சவுக்கியந் தணிய வாழ்ந்து
திக்கரு அன்பாய்ச்
சிவபதம் பெறுவர் தாமே.

இந்த அருணாசல புராணம் ஆதி அந்தமாய்ப் படித்த பேரும் கேட்ட பேரும், எழுதின பேரும், எழுதி வைத்த பேரும் மைக் கடலாகிய சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகம் முழுவதும் ஒரு குடைக் கீழே அரசாட்சியாகி ஆண்டு, சந்தான பாக்கியமுங் கனியும்படி வாழ்ந்திருந்து பின்பு திக்காகியரட்ச கர்த்தனாகிய அருணாசல ஈஸ்வரருட அன்பினாலே சிவபதவி பெறுவார்க ளென்றவாறு
வாழ்த்துகைச் சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 589.

இ பிற்குறிப்பு

துந்துபி வருஷம் தை மாதம் 15 ஆம் தேதி ஏகாம்பரநல்லூர் கிராமத்தாராகிய எல்லப்ப முதலியார் உடன் பிறந்தாள் மூக்குறக் காமாட்சியாகியவளுடைய குமாரனான சிவவண்ணன் சேர்வைக் காரனானவன் குமாரன் முனியன் எழுதி முடிக்கின்ற அருணகிரி புராணம் முற்றும். இந்தப் புராணத்திலே எழுத்துப் பிழைகள் இருந்த போதைக்கும் பெரியோர்களாகியவர்கள் கொண்டு பொறுத்து, தீர்ப்பாடு பண்ணிக் கொள்ள வேண்டியது.

864. சீடாசாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 677
ஆ. ட/116

2. உள்ளீடு : நூல் விவரம்

அ .....
ஆ. சீடாசாரம்
இ தத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 12 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ ; அகலம் 4·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 13, 14, 15 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சற்றே சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

தந்தை தாயுமெய்த் தகவுடை யுறவுஞ்
சாலுங் கல்வியுந் தகுமுயிர்த் துணையுஞ்
சிந்தை யாருநற் சீலமும் வலியுந்
திருவு மின்பமுஞ் சிதைவிலா வறிவு
முந்தை யாமுளத் துவகையு முயிரு
மூல முத்தியு மொழிவருஞ் சமைவும்
எந்தை யாகிவந் தேழை யேனையாள்
இறைவ னார்கழ லாகுமென் றனக்கே. (1)

ஆ. முடிவு

..... முமுட்சுகளும் இதிற் சொன்ன பிரகாரம் ஞானாசாரியபாரைப் பரமசிவமாகப் பாவித்துத் தேகமுள்ள பரியந்தமும் அவரை நீங்காமற் திரிவித கரணங்களாலும் பணிவிடை செய்துநின்று அவர் கிருபையால் உண்டாக வேண்டியது. சருவமுங் குருமயம்.

865. ரிபுகீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 678
ஆ. ட/117

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. ரிபுகீதை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 1925

3. தோற்றக் கூறுகள்

அ. 212 ஏடு ; 424 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ பக்கத்திற்கு 13, 14, 15 வரி.
உ. சிறிய கையெழுத்து.
ஊ. சில ஏடுகள் சற்றே சிதைந்திருப்பினும் பொதுவாக நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண் : 655 காண்க.

866. நாநாசீவ வாதக் கட்டளை

1. நூலகக் குறிப்புகள்

அ. 679 - 1

ஆ. ட/118

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. நாநாசீவவாதக் கட்டளை

இ. தத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் சுமார் 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு ; 46 பக்கம். (ஏடு 1 முதல் 23 வரை)

ஆ நீளம் 24 செ. மீ ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து

ஊ. நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுத்தப் பிரமமாயிருக்கின்ற சர்வ சாட்சியினிடத்திலே அக்கினியிற் சூடுபோல வபின்னமாக வொரு சத்தியுண்டு. அந்தச் சத்தியதீதப் பிரமத்தில் அடங்கியிருக்கும்போது சுத்தப் பிரமமென்று பெயர். இந்தச் சத்தி விசிறிவிம்பிச்சு, சுத்தப் பிரம்மத்தை வியாபிக்கும்போது, பரை வியாபகத்துக்குள்ளிருந்தபடியினாலே, பரப்பிரம்மமென்று பெயராச்சுது.

ஆ. முடிவு

..... இந்த இருபத்தெட்டினாலும் அர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களிலும் விடுபட்டுக் கன்மமில்லாதபடியினாற் சென்ன மரணாதி சங்காரமில்லாமல் முத்தனாகிப் பிரம மாத்திரமாகவே

யிருப்பன். இவனைச் சீவன் முத்தனென்றும், திடப் பிரக்ஞன் என்றும், அதிவன்னாச்சிரமியென்றும், குணாதீதனென்றும், பகவத் பக்தனென்றும், பிராமணனென்றும், ஆறு சாத்திரமு முறையிடுகிறது. சகலருமிந்தத் தத்துவத்தை விசாரம் பண்ணி மோட்சமடையக் கடவர்.

இ. பிற்குறிப்பு

சேஷாத்திரி சிவனாரால் சொல்லப்பட்ட தத்துவக் கட்டளை முற்றும்.

867. உபதேசப் பிரகரணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 679 - 2

ஆ. ட/118

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. உபதேசப் பிரகரணம்

இ தத்துவம்

ஈ. உரைதடை, அச்சில் சுமார் 25 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு ; 20 பக்கம். (ஏடு 24 முதல் 33 வரை)

ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சாதன சதுட்டயமாவது, நித்தியாநித்திய வஸ்த்து விவேகம், இகமுத்தார்த்த பரபோக விராகம், சமதமாதி சட்க

சம்பத்தி, முமூட்சுத்துவம் என்னும் 4. இதில் நித்தியாவநித்திய வஸ்த்து விவேகமாவது, பிரமமொன்றுமே நித்தியமற்றதெல்லாம் அநித்தியம்.

ஆ. முடிவு

சொரூப விட் டகல மோகமாம் வேறு
சொல்லிட முன்புபின் பில்லை
ஒருபொரு ணினவை யொளித்து வேற்பால்
ஒருபொரு ணினைவுறி லந்த
இருபொரு ணடுவே நினைவற விருக்கு
மிதுசொரூ பத்தியல் பிதுதான்
மருவுகற் பனைமாண் டசை வில்கல்ப போலாய்
வருவன யாவும்சு ழுத்தியே.

868. உபதேச சித்தாந்தக் கட்டளை

1. நூலகக் குறிப்புகள்

அ. 679 – 3
ஆ. ட/118

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. உபதேச சித்தாந்தக் கட்டளை
இ. தத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் சுமார் 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 12 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆர மாக்களை முத்தியிலே விடவேண்டி, வாக்கு மனாதீத கோசரமாகிய அருட்சத்திதானே, பாசவயிராகம், சீவகாருண்ணியம், ஈசுரபத்தி, பிரம்ம ஞானமென்கின்ற நான்குமே திருமேனியெனக் கொண்டருளிய, ஞானாசாரியாயினிப் பிறவாத முடிந்த பிறப்பில், நித்தியா நித்திய வஸ்து விவேக மிக முத்தார்த்த பரபோக விராகம், சதமமாதி சட்க சம்பத்தியம் .....

ஆ. முடிவு

... நல்லது, நம்முடைய அனுபவமும் இதுவே. சுருதியினுடைய முடிவிலே சொல்லுவதும் இதுவே. உன்னுடைய அனுபவமிப்படியே யாகில் இதுவே உபதேச சித்தாந்த மென்றும் இதிற் கலக்க மில்லாமல் வாழ்வாயாக வென்று ஆசீர்வாதம் பண்ணினா ரென்றவாறு

869. தத்வமசி வாக்கியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 679 - 4

ஆ. ட/118

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. தத்துவமசி வாக்கியம்

இ. தத்துவம்

ஈ. உரைநடை, அச்சில் சுமார் 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு ; 36 பக்கம். (ஏடு 39 முதல் 57 வரை)

ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொம்பத மென்றும் தற்பத மென்றும், அசிபத மென்றும் மூன்று பதமாயிருக்கும். அதிற் தொம்பத லட்சணம் சொல்லுகிறோம் அவத்தை நாலிலொவ்வொன்றுக்கு மூன்றுடலுண்டு அதிற் சாக்கிர. அவத்தையான தூல தேகத்தில் தூல தேகமாவது, பிருதிவி, அப்பு தேயு, வாயு, ஆகாசம் ஆக ஐந்து. ஓ திலொவ்வொன்றுக்கும் அஞ்சு குணமுண்டு.

ஆ. முடிவு

..... அந்தரத்திலே யொரு பானையை நிறுத்தினால் அதிலே உள்ளும் வெளியடியும் வெளி மேலும் வெளி பானை சுற்றிலும் வெளியாக இருக்கும். அப்படிப் போல, பரமாகின்ற பரப்பிரமம் உள்ளும் புறம்புமாய் எங்கும் பரிபூரணமாயிருப்பர். இது குரு கடாக்ஷத்தினாலும் அனுபவத்தினாலும் அறிய வேணும். தத்வமசி வாக்கியம் சம்பூரணம். முற்றும்.

870. நிர்விகாரி ஞானவடிவு மகா வாக்கியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 679

ஆ. ட/118

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. நிர்விகாரி ஞானவடிவு மகா வாக்கியம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 51

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு ; 46 பக்கம். (ஏடு 58 முதல் 80 வரை)

ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உலகமுதற் பொருளை யும்பர்க் குணர்வரிதாம் பொருளை
ஓதியவே தாகமத்தின் உச்சியினுட் பொருளைப்
பலகலையின் பொருண்முடி வின்முடி வான பொருளைப்
பற்றறப் பற்றிய பெரியோர் பரவிய வான்பொருளை
ஆலைதிவலை நுரைகடலி லுதித்தொ டுங்குமா போல
அகிலாண்ட முதித்தொடுங்கு மதன்மூலப்
பொருளை
இலகியசற் குருவா கியனாகும் பொருளை
எங்குமாண் பரம்பொருளை யாமும்
வணங்குதுமே. (1)

ஆ. முடிவு

வைப்பா மிதயகம லத்தில்
மகத்தா மிலிங்கம் பூசிப்பாய்
செப்பாப் பொருளாந் திருவடியைச்
சிரமேற் கொள்ளச் சிக்கிவிடு
முப்பாழ் கடந்தமுதல் மூல
முதிர்ந்த தலமையென வறிவாம்
அப்பா சூதமா ரிஷியே
அகண்டங் கடந்ததது சிவமே. (51)
அகண்ட வாக்கியம் முற்றும்.

871. தத்துவநூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 679 - 6

ஆ. ட/118

சு. வி. 30

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. தத்தாத்ரேயர் 24 குருவைப் புத்தியினால் அடைந்த அத்தியாயம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 48

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு ; 18 பக்கம். (ஏடு 81 முதல் 89 வரை)

ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்லநிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தீதிலன் மகிழுந் தத்தாத்
திரேய னென்றுல கெல்லாம்
ஓதவ தூத வேடத்
தொருவனை யேதுமுன் கண்டு
நீதிசெ யறம்போ னகரம்
நினைத்திலை சிறிது மின்பம்
ஏதினி லடைகின் றாய்நீ
எனமுனி யிசைக்க லுற்றான். (1)

அ. முடிவு

இத்திறமேது வென்பாம்
எழிற்குலத் திறைவன் கேட்ப
வத்திரி புதல்வ னென்ன
வறைதருந் தவத்தின் மிக்கான்

சித்துரு வான தத்தாத்
திரேயன்முன் செப்பினா னென்று
உத்தவர்க் காழி மாயன்
உவந்துரை யாடி னானே. (48)

872. பகவத் கீதைத் தாலாட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 680
ஆ. டl119

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. பகவத் கீதைத் தாலாட்டு
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 108 கண்ணி

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு ; 20 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீராரும் பரமாறம் தரிசனத்தி னருள்செய்ய
பேராருந் தேசிகனாம் பெருமானே சொன்னாரோ. (1)

செஞ்சமிற் பந்துசனம் சேதம்வரு மென்றிகழ்ந்தே
அஞ்சினான் பயந்தீர்ந் தமர் செய்துய்
யச்சொன்னாரோ. (2)

ஆ. முடிவு

அருச்சுனன்தன் பொருட்டாக அனைவருக்கு
ஞானம்வர
பொருந்திய தேசிகவடிவாம் புண்ணியனே
கண்வளரீர் (101)

ஆயக்குல மாதர் அளவிலோரைப் புணர்ந்து
தூயபதி னாயிரம் பேருடனே தோய்ந்திருந்து
பரம முனிவர் முன்னே பரிசித்ததைத் தீண்டியன்று
பிரம சாரியஞ் செலுத்தும் பேரொளியே
கண்வளரீர். (102)

873. மகாராசா துறவு

1. நூலகக் குறிப்புகள்

அ. 681
ஆ. ட/120

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. குமார தேவர்
ஆ. மகாராசா துறவு
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 125

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு ; 52 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாராக உள்ளது.
ஊ. தல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொய்யின் முலைக்கொடி ரன்றுகாவான்
துதிக்கை மூன்று விழிக்குரிசிற்
துய்ய சைவ முதன்ப தமுந்
துலங்க வருமொண் பிடியுலகம்
உய்ய வுதவு மொருகளிற்றை
உலவா விருத்த சயிலத்தில்
வையம் பரவு மாழ்த்து
வாழைங் கரனை மனநினைவாம்.

ஆ. முடிவு

இந்தமா ராசன் சென்ற விதிக்காசந் தன்னைப்
பர்ர்ப்போர்
சிந்தனை யொன்று மின்றித் தீரவே துறவ ராகி
அந்தமு மாதி யில்லா அமலமே வடிவ மாவர்
எந்தமை யருளி லாண்ட எழிற்குரு பரையே வாழி (125)
மகாராசா துறவு முற்றும்.

இ. பிற்குறிப்பு

அரியது துறவற மல்ல தில்லையால்
மருவிய துறவற மொருவிம ன்னனர்ய்
உருகெழு முடிகவித் துல்க மாள்வது
பெருவிலை மணியினைப் பிண்டிக் கீய்தலே.

5. .....

6. .....

7. வெளியிட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

874. ஔவை குறள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 682

ஆ. ட/121

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஔவையார்
ஆ. ஔவை குறள்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 310

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு ; 42 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ ; அகலம் 3 செ. மீ
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன். (1)

பரமா யசத்தி யுள்பஞ்ச மாபூதத்
தாமாகத் தோன்றும் பிறப்பு. (2)

ஆ. முடிவு

அடைத்திட்ட வாசலின் மேல்மனம் வைத்துப்
படைத்தவன் றன்னையே பார். (100)

முத்திக் கவையார்சொல் முந்நூற்றுப் பத்துமுன்
சித்தத்தில் வைத்துத் தெளி. (101)

ஆக 310

இ. பிற்குறிப்பு

வீடுநெறிப் பாலும் விரிந்துமகிழ்ந் தன்பாலும்
நாடி யுளந்தே நல்முத்தால் — வாடும்
பிறப்பிறப் பொன்றில்லாப் பேசா மவுன
முறப்பெற்று வீற்றிருக்க லாம்.

வீடு நெறிப்பால் முற்றும். திருச்சிற்றம்பலம்.

5. .....

6. .....

7. *வெளியீட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

875. தியானக் குறிப்பு

1. *நூலகக் குறிப்புகள்*

அ 683 - 1

ஆ. ட/122

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. .. ..

ஆ. தியானக்குறிப்பு

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 30

3. *தோற்றக் கூறுகள்*

அ. 6 ஏடு ; 11 பக்கம்

ஆ நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. நன்றாக உள்ளது.

ஊ. நல்ல நிலை

எ முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

நயன மிரண்டும் நாசிமேல் வைத்திட்டங்
கயர்விலா வாயுவை யுள்ளே யடக்கித்
துயரற நாடியிற் தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயனிலை நாட்டே. (1)

ஆ. முடிவு

ஆங்கார மாண்டுது புத்திமன மொன்றாய்
சாங்கால மனாய்வீட்டிற் சட்டையத் தேறும்போல
ஓங்கார மூலம் விட்டு உச்சியிடங் கொண்டு
நீங்கா மலங்கென்று நிற்கும் நயனமே. (30)

876. திருமந்திர வாசி மகிமை

1. நூலகக் குறிப்புகள்

அ. 683-2
ஆ. ட/122

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. திருமந்திர வாசி மகிமை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 11 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. நல்ல கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாசி வாவென்று வாசியை வாங்கி
வாசி யையுண்ண வகையறி வாரில்லை
வாசி யையுண்ண வகையறி வாளர்க்கு
வாசி யோடீசனீ மகிழ்ந்திருந் தானே.

ஆ. முடிவு

ஏற்றி யிறக்கி இருகாலும் பூரித்துக்
காற்றை நிறுத்தக் கணக்கறி வாரில்லைக்
காற்றை நிறுத்தக் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைத்த குறிப்பிது வாமே. (30)

877. திருமந்திரம்-பலதிரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 683-3
ஆ. ட/122

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. திருமந்திரம்-பல திரட்டு
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 32

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 11 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகல ம்3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான எழுத்து
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலர் மொழிந்தது மூவாயி ரந்தமிழ்
மூலர் மொழிந்தது முந்நூ று மந்திரம்
மூலர் மொழிந்தது முப்பதுப தேசம்
மூலர் மொழிந்தது மூணுமா ன் றாமே. (1)

ஆ. முடிவு

கண்ட யெச்சில் கழுவப் பொறுக்கிலீர்
உண்ட யெச்சிலு உடம்பா னதுவல்லோ
பிண்ட மெச்சில் பிறந்திட மெச்சிலாம்
அண்ட மெச்சீல் அகண்டமு மெச்சிலே. (32)

878. அறிவானந்த சித்தியார்

1. நூலகக் குறிப்புகள்

அ. 684
ஆ. ட/123

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. அறிவானந்த சித்தியார். மூலம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 306

3. தோற்றக் கூறுகள்

அ. 72 ஏடு ; 144 பக்கம்.
ஆ, நீளம் 24 செ. மீ, ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உற்ற முறமை ஒருநூலாற் செய்தவர்க்குக்
கற்பகத்தின் தாளிணையைக் காப்பெண்ணிங்
— குற்றவர்கள்

பாதமலர் மேற்கொண்டு பாடவொருப் பாடுகுரு
நாதனிரு தாளெனது நா. (1)

ஆ. முடிவு

குறியா வடிவுடைக் கோமள வல்லி குடியிருந்த
மறையா கமத்தைத் தமிழாக மண்ணினில் வாழ்த்திடவே
அறிவா னதன்னுரை யாமறிவானந்தச் சித்திதன்னை
நெறியாகக் கற்றுணர் வார்க்குப் பரகதி நிச்சயமே. (306)

இ. பிற்குறிப்பு

அத்தன் அருணேச னஞ்செழுத்து மக்குமணி
நித்தன் விபூதி நிறைவேடஞ் — சித்த
மலையாமல் யோக மருண்ஞான போத
நிலைகாணு மெங்க ணிலை.

5. .....

6. .....

7. *வெளியீட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

879. அவிரோத உந்தியார்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 685
ஆ. ட/124

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. சாந்தலிங்க சுவாமிகள் - பேரூர்
ஆ. அவிரோத உந்தியார் : மூலம்
இ. தத்துவம்
ஈ செய்யுள் 99 தாழிசை

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு ; 20 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரி
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எல்லா முடையான் குருவாகி யீங்கெமது
அல்ல றுத்தா னென்றுந் தீபற
அவன்தாள் தொழுவோமென் றுந்தீபற (1)

ஆ. முடிவு

ஓங்கரு ளீசனோ டொன்றி யேநின்று
ஓருமீங் கருணீங் காரென் றுந்தீபற
எல்லா வுபிர்க்குமென் றுந்தீபற. (99)

5. .....

6. .....

7. வெளியீட்டுச் செய்திள்

அச்சிடப்பட்டுள்ளது.

880. சுருதி சாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 686 - 1
ஆ. ட/125

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சாத்தலிங்க சுவாமிகள் : பேரூர்

ஆ. சுருதி சாரம்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரை நடையும். அச்சில் ஏறத்தாழ 15 பக்கம். வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு ; 15 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. தெளிவுடன் கூடிய எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தேசிகன்ற னடிவணங்கிச் சுருதி சாரத்
திறனுரைப்பஞ் சுகர்க்குபதே சித்திடும் வாக்கியங்கள்
மாசில்பிர.பஞ்சமதே பிறமோக மேகமே
வாத்தோ யிதம்பிற மோக மதற்கப்பாலாகப்
பேசிய பரவாதுர வாதிதம் பிறமோகம்
பேசரிய சுபானுப வாதீதம் பிறமோகம்
நாசமிலா திவைநான்கு வாக்கியங்க டன்னை
நாரதாதி யர்நால்வர் நவின்றா ரன்றே. (1)

ஆ. முடிவு

நாலாம் வாக்கியத்துக்கு அர்த்தம். அதிட்டான மும் ஆரோபமும் மற்றிருக்கிறது சுபாவக்கிஞானமானபடியினாலே சுபானுபவாதீதமென்பது – சுபாவ நீதரனாயிருக்கிற நிச்சயமும் போறதே நிலையென்றது. அதே குற்றமற்ற நிலை. அதெங்ங னென்னிற் சுபாவமே தானானே னென்றார் சங்கற்பமாம், சங்கற்பஞ் ஞானியமல்லோ நிலையென்ற படியினாலும் சுபாவமே தானாக

விருந்தால் நினைவாமது விகாரமானபடியினாலும் சுபாவமே தானாயிருந்தாற் சமாதியாம். அது சாதனையாகையாலும் அதிட்டானத்தைத் தள்ளின் சுபாவமே தானானே னென்றாற் தள்ளுகிறதுந் தள்ளப்படுகிற பொருளுமாக விரண்டாம் ஆகையாலும் சும்மா இருக்கிறதே நிலை யென்றால் மூடமாம் ஆகையினாலும் சுபானுபவாதீதம் பிரம்மமென்றது. (4)

இது கேட்டுத் திருப்தி அடைந்த பிறர் சுருதிசாரம் சம்பூரணம். சற்குருந்த நமாமீ.

881. சித்தாந்த சாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 686 - 2
ஆ. ட/125

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. சித்தாந்த சாரம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 32

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 21 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 , 8 வரி.
உ, தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூவாத முத்திநெறி முப்ப தவதரமுந்
தேவாக மத்தின் வழிசெப்பவே — மேவித்
தெரியவனத் தான்தனக்குஞ் சீதரர்க்கு மெட்டாக்
கரியவனத் தான்சரணங் காப்பு. (1)

ஆ. முடிவு

சொல்லியவிந் நிலைகலங்கி லஞ்செழுத் தைவிதியாற்
சொருபசு பா பந்தெரிந்து சாரணத்தின் வழியே
புல்லியஞா னச்சுடரைத் தூண்டி நேயத்தாற்
பொருந்தியந்த ஞானப்பிர காசத்தின் முதிர்வாய்
எல்லலொ ளியாம் பரைநிறைவின் விகற்மற வேசிவமாம்
இந்த நிட்டை யந்த நிட்டை யா மிதுவுங் காணார்
செல்வமெ னக் குருலிங்க சங் கமத்தைப் பொருளாய்ச்
சிந்தையில் வைத் துருவெல்லாச்
சித்தியுண் டாமே. (32)

சித்தாந்த சாரம் முற்றும்.

882. சிவானுபோக விளக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 686 - 3
ஆ. ட/125

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. சிவானுபோக விளக்கம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 37

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு ; 14 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ ; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஞ்செழுத்தும் வெண்ணீறும் அண்ண லருமறையும்
வஞ்சமற்ற கூற்றின் மறைமுடிவும் — விஞ்சுதிறல்
ஆசான் அருள்வடிவும் ஆதரித்த பத்தருக்குத்
தேசாகுங் கற்பகத்தாள் சீர். (1)

ஆ. முடிவு

உறுக்குறு வோர் வாய்மை யொழிதல் மொழிதல்
பிறர்க்குண வர் மாங்கின்றாம் பேதாய்
— வெறுப்பு விருப்பு
புன்ன லுரை தொழிலுண் டாகாச சிவஞானந்
தன்னுணர்வார் பாலவைபோற் றான். (37)

சிவானுபோக விளக்கம் முற்றும்.

883. திருவருட் பயன்

1. நூலகக் குறிப்புகள்

அ. 687
ஆ. ஞ/16

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. உமாபதி சிவாசாரியர்
ஆ. திருவருட் பயன் : மூலமும் உரையும்
இ. மெய்கண்ட சாத்திரம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு ; 72 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8, 10 வரி.

உ. சுமாரான எழுத்து

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காப்பு

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்,
அகர உயிர்போல் அறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து. (1)

ஆ. முடிவு

விடையங்களை நீங்காரோ வென்னில், கள்ளத் தலைவர் துயர் கருதி என்பது, இந்திரியங்களுடனே கூடினால் உண்டான கிலேசத்தை உணர்ந்து, தங்கருணை வெள்ளத் தலைவர் மிக என்பது, சிவனுடைய கிருபா சமுத்திரத்திலே மிகவும் பத்தி பண்ணுவார்களென்றவாறு. (10)

அணைந்தோர் தன்மை முற்றும்
திருவருட்பயன் சம்பூரணம்

5. .....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

தொடர் எண் : 72, 152, 170 காண்க.

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

884. பஞ்சதசப் பிரகரணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 688

ஆ. ட/126

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வித்தியாரண்ணிய சுவாமி

ஆ. பஞ்சதசப் பிரகரணம் : தமிழாக்கம்

இ. தத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 400 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 179 ஏடு ; 358 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. முதல் 60 ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன, மற்றவை நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 704-1 காண்க.

ஆ. முடிவு

இப்படி பிரம்மானந்தத்திற்கு வழிபாட்டாகத்தானே விஷயானந்தத்தை நிரூபிச்சோம். இது வழியே சகலரும் மோட்சமடையக் கடவார்.

பதினைந்தாவது விஷயானந்தம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

வித்தியாரண்ணிய சுவாமிகளாற் சொல்லப்பட்டப் பஞ்சதசப் பிரகரணம் எழுதி முற்றுப் பெற்று நிறைந்தது.

5. .....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

தொடர் எண் : 442, 479 காண்க.

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

885. அட்டாவக்ர கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 689
ஆ. ட/127

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. அட்டாவக்ர கீதை
இ. தத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 45 ஏடு ; 90 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஷ்டாவக்கிர ரிஷியானவர் பதரிகா வனத்திலே இருக்கச்சே பார்க்கனென்கிற முனியேத்திரன், அவருக்குத் தண்டம் பண்ணி, சுவாமி எனக்குத் தத்துவ சொரூபம் அறியச் சொல்லுமையய்யா வென்று கேட்கத் தயவுண்டானவராய்ச் சமுசயமில்லாத படிக்குத் தெரியச் சொல்லுகிறார்.

ஆ. முடிவு

அமவாரமாவா யிருக்கிற எனக்கு உண்டென்கிறதெங்கே இல்லையென்கிறதெங்கே. ஒன்றெங்கே, இரண்டெங்கே, இந்த வெகு பேச்சுயென் சொல்ல வேணும் (14)

சிவன் முத்தி சதுர்தேசம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

இந்தப்படி சகல உபநிடதமுந் தோந்து ஆத்ம சுகமனுடந்தார். இந்த சாஸ்த்திரத்தைத் தமிழினாலே விவகரித்து அனுக்கிரகித்து சுப்பிரமணியருட சரணாரவிந்தமேகதி. குருப்பியோநமா. பிரமமே சத்தியம், சிவகுருநாதன் திருவடி வாழ்க.

886. உத்தர கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 690

ஆ. ட/128

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. உத்தர கீதை

இ. தத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 42 ஏடு ; 84 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஐவகைப் பொருளும் நான்குக ரணமூங்
குணங்கள் மூன்றுந்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருத்
திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர்
விரித்த புத்தேள்
கைவள ராழி செங்கட் கண்ணனைக்
கண்ணுள் வைப்பாம். (1)

ஆ. முடிவு

யோகியானவன் மோட்சத்தை எவ்வளவு காலம் சிந்திக்கிறானோ அவ்வளவுக்கும் தேக லக்ஷணார்த்தம் பிஷசானனஞ் சிந்திக்குமேயல்லாமல் இந்திரியங்கள் பலக்க வேண்டியல்ல. சீதனிவரானமாக வஸ்த்திரஞ் சிந்திக்கிறதே அல்லாமல், அலங்கார நிமித்தியமல்ல. அவருக்குப் பொன்னும் ஓடுஞ் சரி. வெறுங் கீரையுங் கறியுமுண்டான அன்னமுஞ்சரி. போக வஸ்த்துக்கள் வந்ததினாலே சந்தோஷமுமில்லை. வாரதினாலே விசாரமுமில்லை. இப்படிக் கொத்த யோகீசுரனே சீவன் முத்தன். (14)

மூன்றாம் அத்தியாயம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

இந்த உத்தர கீதை மூன்றத்தியாயமும் எவன் மனனம் பண்ணி அனுபவித்துக் கொள்ளுகிறானோ அவன் உடனே கிருதார்த்தனாய்ச் சீவன் முத்தனாவன். சம்பூர்ணம்.

887. வாசுதேவ மனனம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 691
ஆ. ட-/129

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. வாசுதேவ மனனம்
இ. தத்துவம்
ஈ உரைநடை அச்சில் ஏறத்தாழ 500 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 265 ஏடு ; 530 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10, 11 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அன்னை யாகியு மத்தனு மாகிய
மென்னை யாளு மெழிற்குரு வாகியு
மன்னு மாபதியீன்ற மதகயந்
தன்னையேத்தி யிந் நூலினைச் சாற்றுவாம்.

ஆ. முடிவு

... அபிமான மாதீ பௌதிகம் ருத்திரன் ஆதி தெய்வீகம் சித்தமாதி, ஆத்மீகம் அவதான மாதி பௌதிகம், க்ஷேத்திரக்ஞன் ஆதி தெய்வீகம், தமசு ஆதிஆத்மீகம், விகாரமாதி பௌதிகம், ஈசுவரன் ஆதி தெய்வீகம் இதெல்லாங் கூடிச் சாக்ஷிர சொற்பன

சுழுத்தியவத்தைகளாச்சுது. ஆகையாலே இந்த அவத்தாத் திறையத்துக்குச் சாட்சியாய் நித்தியனாய் நிருவிகாரனாய். ஆனந்த சொருபனான ஆத்மாவே நானென்று எவன் அறிகிறானோ அவனே முத்தனென்று சாஸ்திர சித்தாந்தம். ஆதி ஆத்மீகஞ் சம்பூரணம்.

விவேகசாரம் முற்றிற்று.

5. .....

6. *மாற்றுச் சுவடிகள் காணுமிடம்*

தொடர் எண் : 461 காண்க.

7. *வெளியிட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

888. பகவத் கீதை

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 692
ஆ. ட/130

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. ... ...
ஆ. பகவத் கீதை : தமிழ்ப் பெழிப்புரை
இ. தத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 500 பக்கம் வரும்.

3. *தோற்றக் கூறுகள்*

அ. 243 ஏடு ; 486 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ ; அகலம் 3·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பரமேஸ்வராவதார ரூபராகிய யாதொரு ஆசாரியரார் சகலோபநிஷத்துக்களுஞ் சகல கீதாதிஸ்மிருதிகளு முபுக்கிர மாதிலிங்கங்களால் நிர்ச்சந்தேகமாயிருக்கும்படி முழுட்சு செனங்கள் கிருதார்த்தாளாக வேண்டுமென்றுள்ள கருணையினால் வியாக்கியானிக்கப்பட்டதுகளோ சகல பூதங்கட்கு மந்தராறி மாவாய்ப் பரம குருவாய்ப் பிரகாசிக்காநின்ற அந்த சங்கராசாரிய சுவாமிகளின் பொருட்டு நமஸ்காரம் பண்ணுகிறேன்.

ஆ. முடிவு

சகல புருஷார்த்தமும் பக்வதாதீன மாகையால் பகவானையே சரணமடைந்த வாமகர் சௌக்கியத்தையடைவாரெனல். எந்தப் பட்சத்திற் சர்வ காரணராய் சர்வக்ஞராய் சர்வ சத்தி சம்பன்னரா யிருக்கிற ஸ்ரீ கிருஷ்ணரிருக்கிறாரோ அந்தப்பட்சத்திற் காண்டீப தனுசைத் தரித்த அருச்சுனனிருக்கின்றானோ அந்தப்பட்சத்திற் தானே ராச்சியலெட்சுமியும் சத்துரு செயமு முத்திரோத் தாரபி விர்த்தியுந் திட நியாயமுமிருக்கிற தென்றெனது நிச்சயமென் றறிவாய்.

சபுத்திர பரிவாரனாகிப் பகவானைச் சரணமடைந்து தற்புத்தராதிகட்கு ராட்சியாதிகளையுஞ் சமர்பித்தாயாகில் உனக்குச் செயம் வருமெனக் கூறியதாம். (78)

5. .....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

தொடர் எண் : 408, 411, 412 காண்க.

7. வெளியிட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

889. பிரமகீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 693
ஆ. ட/131

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தத்துவராயர்
ஆ. பிரமகீதை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 547

3. தோற்றக் கூறுகள்

அ. 65 ஏடு ; 130 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.
உ சுமாரான எழுத்து.
ஊ. நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 660 காண்க.

ஆ. முடிவு

இனியனா யெல்லாந் தன்பால் இறைவனின் னருளாற் பெற்ற
முனிவனை முனிவ ரெல்லா முடியுற வணங்கி யேத்தி
நனிமிக நானென் கின்ற பதப்பொரு ணாடி வேறே
அனியமில் பிரம மாக வறிந்ததி சயித்தி ருந்தார். (37)

பனிரெண்டாவது சுவேதா சுவேதாவுபநிடத அத்தியாயம் முற்றும். ஆக அத்தியாயம் பனிரெண்டுக்குத் திருவிருத்தம் 547.

5. .....

6. .....

7. வெளியிட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

890. இலட்சணா விருத்தி

1. நூலகக் குறிப்புகள்

அ. 694

ஆ. ட/132

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. இலட்சணா விருத்தி

இ. தத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 41 ஏடு ; 82 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நிர்விகாரி ஞான வடிவு, அன்னமய கோசம் நாமல்லாத படியினால் பிறப்பிறப்பு நரைதிரை வாலிபம் எவ்வன மென்கிற விகாரம் நமக்கில்லை. பிராணமயகோசம் நாமல்லாதபடியினால்,

பலவான், பலயீனன், பசி, தாகம், சொன்னவன், சொல்லாதவன், கொடுத்தவன், வாங்கினவன், போனவன், வந்தவன் என்கிற விகாரம் நமக்கில்லை.

ஆ. முடிவு

வெய்யிலுக்கு சுபாவ வடிவு வெய்யிலுக்கு முன் சொன்ன விசேஷ வேற்றுமைகளுந் தொழில்களுமில்லை. வெய்யிலொன்று தானே யென்று சகலரு மறிகின்றாப்போல அகண்ட சச்சிதானந்தமா யிருக்கின்ற பரம் முன் சொன்ன விசேஷங் களுடனே கூடி அந்தந்தத் தொழில் பொருந்தினாப்போல் இருந்தாலும் மற்றவைகளுடனுந் துடக்கத்து அசங்கசித்து ரூபமாய் நிர்விசேஷமாகவே யிருக்கும் பிரம மகமன்று சொன்னபடிக்கு ஞானிகளும் கண்ட விசேஷ பதார்த்தங்களை யெல்லா மொன்றுடனுந் துடக்கத்திருக்கின்ற தன்னிடத்திலே விளங்கு கின்றதாகவே நினைத்து அனுபவிக்கின்ற படியினாலே நாம் நிர்விசேஷ னென்றறிக. (11)

இ. பிற்குறிப்பு

சாட்சாரகார யுத்தி முற்றும். ஆக யுத்தித் திரையம் 3 க்கு சேஷாத்திரி சிவனார் சொல்லப்பட்ட லட்சணாவிருத்தி சுலோக வாக்கியம் 95. குறை பதிமூன்று விருத்தி. பிரமமே சத்தியம். சற்குரு சரணார விந்தமே கதி.

5. .....

6. *மாற்றுச் சுவடிகள் காணுமிடம்*

தொடர் எண் : 466 காண்க.

7. *வெளியீட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

891. சிவ கீதை

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 695

ஆ ட/133

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. சிவ கீதை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 337

3. தோற்றக் கூறுகள்

அ. 43 ஏடு ; 86 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொட்டகம் ஆ. முடிவு
தொடர் எண் : 657 காண்க.

892. உத்தர கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 696
ஆ. ட/134

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. உத்தர கீதை
இ. தத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்.

3. *தோற்றக் கூறுகள்*

அ. 28 ஏடு ; 56 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒருபக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண் : 690 காண்க.

893. அத்துவித உண்மை

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 697
ஆ. ட/135

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. .....
ஆ. அத்துவித உண்மை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 100

3. *தோற்றக் கூறுகள்*

அ. 12 ஏடு ; 24 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. தெளிவான எழுத்து.
உ. ஒருபக்கத்திற்கு 9 வரி.
ஊ. நல்லநிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொங்கர வதனு பிந்தும் புரிசடை யதனிற் சேர்த்தி
ஆங்கரந் தனிலீ டத்தில் அழகிய மானை யேந்துஞ்
சங்கரன் சேயென்பார் சந்தகரத் தைதந்து மொருங் கறுக்க
ஐங்கரங் கொண்ட வாழத் தையனை வணக்கஞ்
செய்வாம். (1)

ஆ. முடிவு

எழிலார் விருத்தா சலம்வடிவாம்
எந்தை வாழ்கவெனை யாளும்
எழிலார் விருத்த வம்பிகையும்
என்றும் வாழ்க வெனக்கருளும்
எழிலார் பிரணவ மும்வாழ்க
எந்தா யருளை நோக்கியிடும்
எழிலார் அடியார்க ளும்வாழ்க
எனைப்போ லெல்லோர் களும் வாழ்க. (100)
அத்துவித உண்மை முற்றும்

894. விஞ்ஞானசாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 698
ஆ. ட/136

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. விஞ்ஞானசாரம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு ; 24 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.
உ. தெளிவாக உள்ளது.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஞ்சு கரமுடைக் குஞ்ச ரத்தனைத்
தஞ்ச மென்றுணிற் கொஞ்ச மொன்றுமில்.

திருச்சிற்றம்பலம்

அமலன்பஞ்ச கிருத்தி யங்கண்டத்து மதற்கா
தாரமாகி னாளை
விமலருட் டகலாளை யெனையும்பொருளா யாண்ட
விஞ்சை யாளை
நிமலமுது கிரியில் மாபெரிய நாயகியை யொருநிமலை
தன்னை
முமலவிருட் கிரவியையென் கண்மணியைப்
பணிந்திடுவர் மூன்று போதும்.

கடவுள் வணக்கம்.

ஆ. முடிவு

விருத்தகிரி வடிவான விறையவனும் வாழ்க
வினையனெனக் கருள்விருத்த வம்பிகையும் வாழ்கக்
கருத்திலுற வெனக்கருளும் பிரணவமும் வாழ்க
காருணியை யடையுமடி யாருநனி வாழ்கத்

திருத்தமுடன் தலமுமிகச் சிறப்புதாய் வாழ்கச்
சேர்ந்துறையு மியாவைகளுஞ் செல்வமுடன் வாழ்க
விருத்தியெனை யுமையருள யானுணர்ந்த படியே
யெல்லோரு முணர்ந்துவாடு தலறவே வாழ்க. (100)
விஞ்ஞான சாரம் முற்றும்.

895. சசிவர்ண போதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 699
ஆ. ட/137

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தத்துவராயர்
ஆ. சசிவர்ண போதம் : மூலமும் உரையும்
இ. தத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 37 ஏடு ; 74 பக்கம்.
ஆ. 30 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 3, 9 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நல்ல சொற்பொருள் நாடி நடத்தவும்
மெல்ல சூணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தனை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.

எ-து சசிவர்ண போதகம் உரையிட வேண்டியதுக்கு மகா கணேசுரனைத் தோத்திரம் பண்ணிச் சரசுவதி கிருபையினாலே அமிர்தம் பொருந்திய நல்ல வாக்கு நடக்கத் தக்கதாகவும் பிரமானுபவ நித்திய சுயம் பிரகாசம் வெளியாகவும் ஞானமத யான மும்மதங்களும் பொழிந்து குணத்திரையங்களிலேயுண்டான தேகங்களுக்குள்ள பஞ்சேந்திரியங்களைச் செயித்து மோட்சமான மவுன முத்திரையடைய வேண்டி வல்லபை கணேசுரனை மூலாதாரத்திலே எழுந்தருளப் பண்ணி அறிவின் கண்ணாலே பூசை பண்ணிச் சுயம்பிரகாச நித்தியத்தை அடைவாரென்றவாறு.

விநாயக தோத்திரம் முற்றும்

ஆ. முடிவு

ஞானியைத்தான் நான்தான் தேவதைகள்தான் இவர்களுக்கெல்லாமென் பாடாய்ப் பெற்றது. குருவினுடைய கிருபையினாலே பெற்றபேறு. அந்தச் சிவன்தானே மானிட ரூபமாய் வந்து சசிவர்ணனைத் தடுத்தாட்கொண்டு அந்தச் சிவ ரூபத்தையடைந்தானென்று இருக்கு வேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் இந்த நாலும் சாஸ்திரமான மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோபிசிதி நிருத்தஞ் சோதிசமென் கின்ற ஆறு சாஸ்திரமும் பதினெண் புராணமும் மற்ற லோகத்தில் உண்டான சகல சமஸ்தம்மான்றும் முன்றியிடுகிற்தென்றவாறு. (109)

சசிவர்ணபோதகம் முற்றும்.

896. ஈசுர கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 700
ஆ. ட/138

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தத்துவராயர்
ஆ. ஈசுரகீதை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 338

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு ; 64 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
சு. வி. 32

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 13, 14 வரி.
உ. தெளிவாக உள்ளது.
ஊ. நல்லநிலை-
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 695 காண்க.

5. பிற செய்திகள்

இதே நூல் 'சிவகீதை' என்ற பெயரிலும் காணப் பெறுகிறது.

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

தொடர் எண் : 426, 427, 451 காண்க.

897. பகவத் கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 701
ஆ. ட/139

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...
ஆ. பகவத் கீதை : மூலம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 564

3. தோற்றக் கூறுகள்

அ 55 ஏடு ; 10 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 13 வரி.

உ. தெளிவான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாதியோர் பெண்மையான் பரிந்து பெற்றதோர்
சோதியாங் களிற்றினைத் தூர மண்மையிற்
பேதியா துளம்பெறப் பேணிப் பாகவற்
கீதையான் மொழிகுவன் ஞானங் கிட்டவே.. (1)

ஆ. முடிவு

ஆற்றியல் வழுவிய புலன்க ளைந்தையும்
பாற்றிய சங்கர பகவற் பாதனென்
றேற்றிய பெயரினா னருளி னாலியான்
சாற்றின னிப்பெருந் தரும நூலையே. (82)

சஞ்சேப வத்தியாயம் முற்றிற்று.
ஆக அத்தியாயம் 18 க்குத் திருவிருத்தம் 564.
பகவத்கீதை முற்றிற்று.

இ. பிற்குறிப்பு

ஸ்ரீமத கண்ட பரிபூரண சச்தசிதானந்தாத்வய சோதிர்லிங்க சொரூப முத்து ராமலிங்க சுவாமிகளது உள்ளங்களிகூரத் திருவருள் பெற்ற நித்த சுத்த புத்த முத்த சத்திய பரமானந்தாத்துவித சொரூபமே நெய் விழுதாகிய வாறொருவா யெழுந்தருளி திருக்கோவிலூரிலுறையுஞ் சிதம்பர தேசிகன் திவ்விய பாதார விந்தங்களுக்கு நமஸ்காரம்.

898. பிரம கீதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 702

ஆ. ட/140

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தத்துவராயர்
ஆ. பிரம கீதை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 547

3. தோற்றக் கூறுகள்

அ. 61 ஏடு ; 122 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 14 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 660 காண்க.

899. தேவிகாலோத்தரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 703-1
ஆ. ட/141

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. தேவிகாலோத்தரம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 69

3 தோற்றக் கூறுகள்

அ 7 ஏடு ; 14 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 13 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

முத்திவி நாயகன் மனத்தின் முரணறவே
முடுகிநில முதல் வினைக்கு
மத்திவி நாயக னெனவத்த வத்தையிய
லனைத்து மத்தறத்தை யாக்குஞ்
சத்திவி நாயக னுணர்த்தத் தாணுவி
நாயகன் றோற்றத் தருமோரட்ட
சித்திவி நாயகன் மதுரைச் சித்திவி
நாயக னிருதாள் சிரத்தில் வைப்பாம். (1)

ஆ. முடிவு

முன்னான ஞானமுட னாசார முடிவெல்லாம்
என்னாலே யிக்கால ஞானத்தை யியம்பினதால்
மின்னாரு துண்ணிடையா யினியுனக்கு மீண்டிதனைச்
சொன்னாலென் சொலத்தகுவ தனைத்தினையுஞ்
சொன்னோமே. (69)

தேவிகாலோத்தரம் முற்றும்.

5. .....

6. .....

7. *வெளியீட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

900. சூத சம்ஹிதை

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 703.2
ஆ. ட/141

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தேவராஜ பிள்ளை
ஆ. சூத சம்ஹிதை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 481

3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு ; 56 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 19 வரி.
உ. சிறிய கையெழுத்து.
ஊ. சற்றே சிதைந்துள்ளது.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுகன நட்ன ராசன் சுத்தமாஞ் சொரூபஞ் சாந்த
அகிலநா யகியா மம்மை அருளிய தனய னாகிச்
சகலமா மிடருந் தீர்த்துச் சச்சிதா னந்த மாகப்
புகலபத மடைவி பமக்கும் பொருளினைப் போற்றல்
செய்வாம். (1)

ஆ. முடிவு

அகில நாயகி யம்பிக்கை பாகனாய்ப்
தகும கானந்த தாண்டவ மாடுவோன்
அகில பூரண மாகி யகண்டமாய்
நிகழு மூர்த்தியை நித்தமும் போற்றுவாம்.

எட்டாவது முன் அத்தியாயங்களில் சொன்ன சாரங்களை
எடுத்துரைக்கும் அத்தியாயம் முற்றிற்று.
ஆக அத்தியாயம் 8 க்குத் திருவிருத்தம் (481)
சூத கீதை முற்றும்.

5. .....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

தொடர் எண் : 457 காண்க.

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

901. பஞ்சதசப் பிரகரணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 704-1
ஆ ட/142

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. பஞ்சதசப்பிரகரணம்
இ. தத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 223 ஏடு ; 446 பக்கம்.
ஆ. நீளம் 20 செ மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

வித்தியாரணிய சுவாமிகள் லோகானுக்கிரக நிமித்தியமாகச் சகல வேதாந்தத்தினுடைய பொருள்களெல்லாம் மன சிலே

சேகரித்துக் கொண்டு சகல வேதாந்தமெல்லாம் அதிகரிக்க மாட்டாத பேருக்கும் சகல வேதாந்தமெல்லாம் படித்தாலும் அதன் தரம் தெளிந்தறிய மாட்டாத பேருக்கும் எளிதாக வேதாந்தத்தினுடைய உண்மைப் பொருள்களைக் கண்டனுபவித்து மோட்சமடையத் தக்கதாகச் சகல வேதாந்தச் சம்மதப்படிக்குத் தம்முடைய மனதிலே இருக்கின்ற பிரமானுபவத்தைப் பஞ்சதசப் பிரகரணத்தினாலே .....

ஆ. முடிவு

... அந்த உபாதிகளேதினாலே துடைபட்டது பிரம்ம நிரூபாதியாய்த் தோற்றுகிற தேதினாலே என்கிற சங்கைக்குச் சாந்த விருத்தி கோரமூட விருத்தி முதலான சடங்களிதுகளெல்லாம் பேதத்துக்குப் பாதி யோகத்தினாலும் விவேகத்தினாலும் இந்த உபாதிகளெல்லாம் தள்ளுப்படும். பின்னைத் திரிபுடியில்லாத படியினாலே நிரூபாதியாய்ச் சுயம் பிரகாச மாயிருக்கிற பிரமத்துவம் அகண்டானந்த வடிவாய்த் தானாகவே விளங்கு மென்றுதாம் இப்படிப் பிரமானந்தத்துக்கு வழி பாடாகத்தானே விடையானந் தத்தை நிரூபித்தோம். இது வழியே எல்லாரும் மோட்சத்தை அடையக்கடவாள். விஷையானந்தம் முற்றும்.

பஞ்சதசப் பிரகரணம் முற்றும்.

902. மகா வாக்கிய தசகாரியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 704-2

ஆ. ட/142

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. மகா வாக்கிய தசகாரியம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 51

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு ; 21 பக்கம்.

ஆ. நீளம் 20 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உலகமுதற் பொருளை யும்பர்க் குணர்வரிதாம் பொருளை
ஓதியவே தாகமத்தின் உச்சியி னுட்பொருளைப்
பலகலையின் போருண் முடிவின் மூடிவரன் பெருளைப்
பற்றறப்பற் றியபெரியோர் பரவிய வான்பொருளை
அலைதிவலை நுரைகடலி லுதித்தொடுங்கு மாபோல்
அகிலாண்ட முதித்தொடுங்கு மதன்மூலப் பொருளை
இலகியசற் குருவாகி யானாகும் பொருளை
எங்குமாம் பரம்பொருளை யானும் வணங்குவனே

ஆ. முடிவு

அற்றை தோறு மாயிர மாயிரம் பிழைகள்
செய்தாலும் அடியேன் தன்பால்
பெற்ற திருவருட் தடலிற் குளிப்பாட்டித்
தான்மலரும் பேராய்ச் சூட்டி.
சொற்ற தெல்லாந் தோத்திரமாய்ப் புனைந்தருளி
யெனைவளர்க்குந் தொட்டி லாகி
உற்ற குருராய னெங்கள் விநாயக பாரதி
தமியே னுள்ளத் தானே (51)

மகாவாக்கிய தசகாரியம் முற்றும்.

903. அதிசூட்சும விளக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 704-3
ஆ. ட/142

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. அதிசூட்சும விளக்கம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 20 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சமசரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலமெனு நடுமூல மறுகோ ணத்தில்
முப்பாழி லாடியபொற் பாத மேலே
சீலமெனுந் தூக்கிநின்ற பாத மொன்று
சிறுவாசல் சித்துவழி மயிர்நுனி போல
ஆலவிட முண்ட அரன்பாதம் தானும்
அங்கென் றிருத்தி வங்கென் றேத்த
ஞானவழி ஒன்பது வாசலை அடைத்து
நடுவழியி லேயிடபின் கலையை யேற்றே. (1)

ஆ. முடிவு

பன்னிரெண்டு மனமகிழ்ச்சி யெல்லாம்
பதினாறும் சிவன்கூறு மனம்உறக்கந் தானும்
உன்னிதமாய்க் கண்டபடி சூத்திரத்தைச் சொன்னோம்
உற்றபிள்ளை கண்டுமனந் தெளிந்து பிறப்பறுப்பாய்

வன்னிநடு வனையுமுச்சி யாக்கிராணமத்தி
யிற்கோயிற் தோட்டத்தி லிருந்து விட்டவிடந்
தன்னில்பன் னி யிருந்திடுவார் பராபரந் தானாகி
பகலிரவு மற்றவிடத் திருப்பர் தாமே. (10)

904. கைவல்லிய நவநீதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 705
ஆ. ட/143

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தாண்டவராய சுவாமி
ஆ. கைவல்லிய நவநீதம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 294

3. தோற்றக் கூறுகள்

அ. 70 ஏடு ; 140 பக்கம்.
ஆ. நீளம் 20 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொன்னிலம் மாதர் ஆசை பொருந்தினர் பொருந்தார் உள்ளம்

தன்னிலந் தரத்தில் சீவ சாட்சிமாத்திரமாய் நிற்கும்
எந்நிலங் களினும் மிக்க எழுநில மதனில் மேலாம்
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி. (1)

ஆ. முடிவு

குலவுசற் குருவின் பாதக் குளிர்புனல் தலைமேற்
கொண்டால்
உலகினிற் தீர்த்த மெல்லாம் உற்றபே றடைவார் போல
நலமை யாங்கை வல்லிய நவநீத நூலைக் கற்றார்
பலகலை ஞான நூல்கள் படித்தஞா னிகளாய்
வாழ்வார். (185)

ஆகப் படலம் இரண்டுக்கும் பாடல் 294. எழுதி நிறைவேறினது.

5. .....

6. *மாற்றுச் சுவடிகள் காணுமிடம்*

தொடர் எண் : 460 காண்க.

7. *வெளியீட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது

905. சீவன் முக்திப் பிரகரணம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 706
ஆ. டா/144

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. .....
ஆ. சீவன் முக்திப் பிரகரணம்
இ. தத்துவம்
ஈ. உரைநடை 300

3. *தோற்றக் கூறுகள்*

அ. 125 ஏடு ; 250 பக்கம்.
ஆ. நீளம் 15 செ. மீ ; அகலம் 4 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 12, 13 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சத்தியக்கிஞ்ஞரனானந்த பரிபூரண பரமாத்துவைதராய் இருக்கிற யாதொரு பரமசிவனானவர், சுத்த சத்துவப் பிரதானமாய்ச் சொச்சமாய்ச் சூட்சுமமாய்ச் சொரூபானாஸ்ரீண்மாய்ச் சுவாதீனமாய் இருக்கிற தன்னுடைய மாயா சத்தி வகுத்தினாலே நாம ரூபப் பிரபஞ்ச முழுவதுஞ் சிவசக்தி யாத்துமக மென்கிறத்தை எல்லாருக்குந் தெரியப்படுத்துகிறதற்காகச் சாம்ப நடேச ரூபத்தைத் தரித்துக் கொண்டு தன்னுடைய யதார்த்த ரூபஞ் சிதாகாச மென்று போதிக்கிறதா யிருக்கிற சிதம்பரச் சேத்திரத்தில் .....

ஆ. முடிவு

..... ஆனபடியினாலே அஞ்சு பிரயோசனங்களோடே கூடின சிவன் முத்தியில் யாதொரு விக்கினமுங் கிடையாதென்று சித்தமாச்சுது. இந்தப் பிரகாரம் ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமிகளினாலே சிவன் முத்தியினுட சொரூபம் பிரமாணஞ் சாதனம் பிரயோசனம் நாலுகளோடேயுங் கூடின சிவன் முத்திப் பிரகரணஞ் சொல்லப்பட்டது. அவாள் சொன்ன பிரகாரம் அந்தப் பிரகரணத்தினுடைய வர்த்தகை ஸ்ரீ சாம்ப நடேசருடைய பிரசாதலேசத்தினாலேயும் சற்குருவினுட கிருபையினாலேயும் புத்திக்குத் தோன்றிய மட்டும் நானும் தமிழினாலே சொன்னேன். அப்படிச் சொல்லப்பட்ட இந்தத் தமிழ் மொழி ரூபமான சிவன் முத்திப் பிரகரணம் ஸ்ரீ சாம்ப நடேசருக்கே அர்ப்பணஞ் செய்யப்பட்டது. ஆனதால் இதிலிருக்கப்பட்ட பிழைகளை ஸ்ரீ சாம்பசிவ பத்தாளா யிருக்கிற சாதுக்கள் சகித்துக் கொள்ள வேண்டியது.

சிவன் முத்திப் பிரகரணம் முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

5. .....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

தொடர் எண் : 434 : 436 காண்க.

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

906. பாகவதத் திரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 707
ஆ. ற/40

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. பாகவதத் திரட்டு
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 718

3. தோற்றக் கூறுகள்

அ. 105 ஏடு ; 210 பக்கம்.
ஆ. நீளம் 37 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒருபக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பூத்த பரஞ்சுடராய்ச் சித்தாகிக் கானலிடை
நீர்பூத்த தெனவுலகம் நிறைந்தொளிதன் பாற்றோன்ற
வேர்பூத்த முத்தொழிலும் மினிதியற்றித் தனிநின்ற
கார்பூத்த திருமேனிக் கடவுள்மல ரடிநினைவாம். (1)

ஆ. முடிவு

கனைந்துவண் டிமிர்துழாய்க் கண்ணன் மாக்கதை
மனத்துற வழங்குநர் மகிழ்ந்து கேழ்க்குநர்
வினைத்திருக் கத்தறு மெய்மை யாதியாய்
நினைத்தன பெற்றிவ ணீடு வாழியே (718)

பாகவதத் திரட்டு முற்றிற்று.

5. .....

தொடர் எண் : 458 காண்க.

907. உலகநீதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 708-1
ஆ. ள/8

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. உலகநாத பண்டிதர்
ஆ. உலகநீதி
இ. நீதி நூல்கள்
ஈ. செய்யுள் 13

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு ; 10 பக்கம்.
ஆ. நீளம் 42 செ. மீ. ; அகலம் 2 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒருபக்கத்திற்கு 4.5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

இடையிருள் தீர்த்தருள் வாய் ஏகமருப் போனே
நடையுரு சொல்மடந்தை நாதர் — விடையேறும்
மைத்தக் கரிமுக்வர் மாயோன் மருகோனே
சித்தக் கவலையெல்லாந் தீர்.

திருச்சிற்றம்பலம்.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்குஞ் சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.

ஆ. முடிவு

ஆதரித்துப் பலவகையாற் பொருளுந் தேடி
அருந்தமிழா லறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தா லுலக நாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோருங் கேட்ட பேரும்
கருத்துடனே நாடோறுங் களிப்பி னோடு
போதமுற்று மிகவாழ்ந்து புகழுந் தேடிப்
பூலோக முள்ளளவும் வாழ்வர் தாமே.

5. .....

6. .....

7. *வெளியிட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

908. கொன்றை வேந்தன்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 708 - 2

ஆ. எ/8

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. கொன்றை வேந்தன்

இ. நீதி நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு ; 12 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ. ; அகலம் 2 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அன்னையும் பிதாவும் முன்னிரு தெய்வம்
ஆலையந் தொழுவது சாலவு நன்று
இல்லற மல்லது நல்லற மல்ல
ஈயார் தேட்டல் தீயார் கொள்வர்
... ...

ஆ. முடிவு

வெள்ளைக் கில்லை கள்ளச் சித்தை
வேந்தன் சிறி னாந்துணை யில்லை
வையத் தோர தெய்வந் தொழு
ஒத்த விடத்து நித்திரை கொள்ளு
ஓதா தார்க்கில்லை உணர்வெரு வொழுக்கம்.

ஔவையார் அருளிச் செய்த நீதிச்சொல் முற்றும்

இ. பிற்குறிப்பு

காங்கேய நல்லூர் வீரராகவ ரெட்டியார் கர்ப்ப சுதாகரனாகிய

சு. வி. 33

வேங்கிடசாமி படிக்கின்ற கொன்றை வேந்தன் முற்றும். இது எழுதி நிறைவேறினது பிரசோபத்தி வருஷம் மார்கழி மாதம் 13 ஆம் தேதி இது எழுதின நன்மைக்காளை முத்துசாமி வாத்தியார் கை சொஸ்த லிகிதம்.

5. .....

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

பல நூலகங்களிலும் உள்ளன.

7. வெளியிட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

909. அருணாசல புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 709
ஆ. ப/36

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்
ஆ. அருணாசல புராணம்
இ. தல புராணம்
ஈ. செய்யுள் 586

3. தோற்றக் கூறுகள்

அ. 163 ஏடு ; 326 பக்கம்.
ஆ. நீளம் 23 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5, 6 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை. 80 ஆம் ஏடு இல்லை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண் ; 674 காண்க.

910. அருணாசல புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 710
ஆ. ப/37

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. எல்லப்பநாவலர்
ஆ. அருணாசல புராணம் : மூலமும் உரையும்
இ. தலபுராணம்
ஈ. செய்யுள் 584

3. தோற்றக் கூறுகள்

அ. 259 ஏடு ; 518 பக்கம்.
ஆ. நீளம் 38 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒருபக்கத்திற்கு 7 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண் : 674 காண்க

இ. முற்குறிப்பு

நந்தன வருஷம் ஆடி மாதம் 10 ம் தேதி சோமவாரம் பகல் நாழிகை 25 க்கு ரோகணி நட்சத்திரத்தில் ஏகாதசி திதியில் இந்த

சுபதினத்தில் வந்தவாசி தாலுக்காவில் சேர்ந்த கஸ்பா விசூரிலுருக்கும் முனியப்ப முதலியார் புத்திரனாகிய அண்ணாமலை முதலியார் எழுதத் தொடங்கின அருணாசல புராணம் சுபமஸ்து

பிற்குறிப்பு

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 19 ஆம் தேதி சுக்கிரவாரம் தசமி அன்று அருணாசல புராணம் நிறைவேறி முகிந்தது. முற்றும்.

911. கைவல்லிய நவநீதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 711
ஆ. ட/145

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தாண்டவராய சுவாமி.
ஆ. கைவல்லிய நவநீதம் : மூலமும் உரையும்.
இ. தத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 127 ஏடு ; 254 பக்கம்.
ஆ. நீளம் 35 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.
உ. சுமாராக உள்ளது.
நல்ல நிலை.
முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

பொன்னிலம் மாதர் ஆசை பொருந்தினர் பொருந்தார் உள்ளம்
தன்னிலந் தரத்தில் சிவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்
எந்நிலங் களினும் மிக்க எழுநில மதனில் மேலாம்
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி. (1)

ஆ. முடிவு

விளக்கம் பொருந்திய சற்குருநாதன் திருவடியில் அபிஷேக மாகிய சீதளம் பொருந்திய தீர்த்தத்தில் நானஞ் செய்தால் பிரபஞ்சத்திலுள்ள கங்கை முதலான தீர்த்தங்களெல்லாந் நானம் பண்ணின பலனுக்கு மேலான பலனுண்டாகும். இப்படிப் போல நன்மை பொருந்திய கைவல்லிய நவநீதமென்னுஞ் சாத்திரத்தை நன்றாய் உணர்ந்த பேர்கள் சகல கலைக்கியான சாத்திரங்களையும் உணர்ந்த மெஞ்ஞானிகளாய்த் திருப்தியடைந்து வாழ்வார்கள் என்றவாறு. (22)

இ. பிற்குறிப்பு

பிறந்ததுண்டானாலென்னும் கவிமுதல் குலவு சற்குருவின் பாதம் என்னும் கவி ஈறாக மகா வாக்கிய விசாரகைவல்லியம் வித்தையானந்தம் பாடல் 22. ஆகக் கொத்து 15 க்கு சங்கை 58 க்குப் பாடல் 185. முன் உபதேச விதிகாரக் கொத்து 1 க்குப் பாடல் 109. ஆகக் கொத்து 16 க்கு சங்கை இத்திரம் 59 க்குத் திருவிருத்தம் 294. இந்தப் பிரகாரநியதி நீயதி வாக்கியங்களினால் விசாரித்து தேடித்து சுபாவ சைதன்னிய சொரூபமாய்க் குருமயமாய் நிற்கின்றதே முக்கிய பலம். சிவஞான தேசிகன் திருவடி வாழ்க.

5. பிற செய்திகள்

முதல் இரண்டு ஏடுகளில் நூலின் அதிகார அட்டவணை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

912. செந்தூரம் முந்நூறு

1. நூலகக் குறிப்புகள்

அ. 712
ஆ. ல/168

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...
ஆ. செந்தூரம் 300
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 301

3. தோற்றக் கூறுகள்

அ. 62 ஏடு ; 124 பக்கம்.
ஆ. நீளம் 29 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூதலத்தில் தென்பொதியை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தால் அட்டசித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வைத்தியநூல் வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானைக் கடைகெட் டானைப்
புழுக்குழியில் விழுந்தானைப் புதல்வன் தன்னைச்
சாதகமாய் மனமடங்கி யறிவிற் கூட்டித்
தற்பரனாய் நின்றகண பதியே காப்பே. (1)

ஆ. முடிவு

மூலத்தி னெழுத்தாலே மவுனங் கொண்டு
மூட்டினால் வடுகனங்கே நிர்த்தஞ் செய்வான்
ஆலத்தின் குண்டலிக்குள் ளேகப் பாரு
ஆசையவன் வைப்பதற்கு வடமாலை சாற்று

சீலத்தின் நந்தியுட பூசை பண்ணு
சேகண்டி நாதவொலி மணியி னோசை
காலத்தின் கருவறிந்து பூசை தீர்ந்தால்
கைக்குள்ளாம் வைத்தியமுந் நூறு முற்றே. (301)
செந்தூரம் முந்நூறு முற்றும்.

913. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 713
ஆ. ல/169

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ மருந்து செய்முறை
இ மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 46 ஏடு ; 92 பக்கம்.
ஆ. நீளம் 29 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒருபக்கத்திற்கு 7, 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அதிசார குளிகை

மாங்கொட்டைப் பருப்பவனி கஞ்சா வித்து
மயக்கிடுஊ மத்தைவித்து பச்சை நாவி
ஆங்கட்டு மதிவிடையஞ் சாதிக் காயும்
ஆகவே சரிநிறைபாய்ந் கூட்டிக் கொண்டு

காங்கொட்டை சீந்திவள்ளிக் கிஷாயந் தன்னில்
கதிக்கவே யரைத்துண்டை அளவு தேற்றாம்
வீங்கிட்ட அதிசார குட்ட ரோகம்
விரும்பிடுநீ அனுபான விசெமந் தன்னில். (1)

ஆ. முடிவு

வேப்பெண்ணெய் நெய் :

வேப்பெண்ணெய் படி 1, மயிற்பீலி பலம் 1, அண்டத்தயிலம் பலம் 1, வெள்ளுள்ளித்தயிலம் பலம் 1.

சுக்கு நாலு கழஞ்சு வாங்கி நாலுபடி தண்ணீர் விட்டுக் காய்ச்சின கசாயம் படி ½, இஞ்சிச்சாறு படி ¼. இதுவெல்லாம் வேப்பெண்ணெயில் விட்டு கசப்பு போகுமட்டும் காய்ச்சி இறக்கிக் கொண்டு, காய்ச்சின நெய் பலம் 1 க்கு ஆகாசத்தூள் விராகன் 1½ போட்டு மத்திச்சுச் சாப்பிடவும். இதற்குத் தீரும் வியாதி குமர கண்டன், முச வலிப்பு, காக்கைவலிப்பு, குதிரை வலிப்பு, உள் குத்து, சன்னிதோஷம் இவை எல்லாம் தீரும்.

914. சாந்தாதி யசுவமகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 714
ஆ. ந/80

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. செய்யிது முகம்மது அண்ணாவியார்
ஆ. சாந்தாதி யசுவமகம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 4104

3. தோற்றக் கூறுகள்

அ. 387 ஏடு ; 762 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சில ஏடுகள் சிதைந்துள்ளன. பல ஏடுகளில் தொளைகள். சுமாரான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

டூமாது வுரம்பொருந்தும் கலைமாது
நாவில்உறும் பொற்பு வீர
மாமாது தயமுறையும் நினைத்ததுஎல்லாம்
கைகூடும் மகிமை ஓங்கும்
சீமானீள் உபயநிதி அதிபதியும்
திறை அளக்கச் செகத்தை ஆண்ட
கோமான்நேர் முரசுஉயர்த்தோன் அசுவமகம்
தனைவிரும்பிக் கூறு வோர்க்கே.

ஆ. முடிவு

தன்னு யிர்க்கதிக மாக நீடரண் அது
ஆக மாநிலம் அதனி லுறும்
மன்னு யிர்க்கருள்சொ ரிந்து மும் மழைகள்
மதிதொ றுஞ்சொரிய வளர்புவி
தன்னி லாறிலொரு கடமை கொண்டுசரண்
அண்டி னோர்கள்குடி தாங்கியே
அன்ன தானம்முத லாக வேயறம்வ
ளர்த்துஇ ருந்தனன்அ றன்சுதன். (187)

இ. பிற்குறிப்பு

கலியுகாதி வருஷம் 4970 சாலீவாகன சகாப்தம் 1791 க்குச் சரியான விய வருஷம் கார்த்திகை மாதம் 14 ஆம் தேதி சுக்கிர வாரம் அசுபதி நட்சத்திரம் கூடிய அமிர்த யோகத்தில் எழுதி நிறைவேறியது. இந்தப் புராணம் படித்த அமிர்தகவி செய்யது முகம்மது அண்ணாவியார் அவர்கள் குமாரர் சீவரத்தின அண்ணாவியாரவர்கள் பரிசோதித்து சுத்தப்படுத்தி எழுதியிருந்த

ஏட்டைப் பார்த்து மேற்படியார் தம்பி நூர்முகம்மது அண்ணாவியர் குமாரர் நவரத்தினக்கவி எ ன் னு ம் காதர் முகையத்தீன் அண்ணாவியார் கை அட்சரம். முற்றிற்று.

915. மாந்திரீக நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 715

ஆ. மு/24

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 219 ஏடு ; 438 பக்கம்.

ஆ. நீளம் 25 செ. மீ ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 134 ஆம் ஏடு காணப்படவில்லை. இருப்பவை நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிசுமில்லா கிற்றகிமா நிற்றகீம்.

இதற்குத் தேவதை மனோமணி சதாசிவம் குரு கருடன் மூலமந்திரம் இது சகலத்துக்கு பார்க்கலாம். மனோமணியை மனதில் [illegible] செபிக்கவும்.

ஓம் ஆம் அகூம் சிவசிவ வா வா. உரு லட்சம். நல்ல மந்திரம். எல்லா விஷமும் சர்வ வியாதியும் தீரும்.

(இதற்குச் சக்கரமும் கொடுக்கப்பட்டுள்ளது)

ஆ. முடிவு

ஆச்சப்பா பதினாலு ஓட்டாஞ் நீட்சை
ஆச்சரியம் சத்தியுட பிரசாத வித்தை
வாச்சப்பத் தாந்தீட்சை மார்க்கம்
மாறியதோர் பதினொன்று மவுன தீட்சை
மூச்சப்பா ஆடாது எட்டில் சேர்க்கும்
மூதண்ட மலத்தைமெள்ள அறிவில் சேரே

5. பிற செய்திகள்

இச் சுவடியில் நிறைய யந்திரங்கள் உள்ளன. இடையிடையே உருது லிபியில் எழுதப்பட்ட ஏடுகளும் உள்ளன. இறுதி ஏட்டில் சீவரத்தினக் கவிராயர் இயற்றிய 13 நூல்களுக்குப் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் மருத்துவச் செய்திகளும் மிகுதியாக உள்ளன.

916. திருமணப் பவனி

1. நூலகக் குறிப்புகள்

அ. 716
ஆ. ந/81

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. செய்யிது முகம்மது அண்ணாவியார்
ஆ. திருமணப் பவனி
இ. காப்பியம்
ஈ. செய்யுள் 640

3. தோற்றக் கூறுகள்

அ. 93 ஏடு ; 186 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒருபக்கத்திற்கு 8, 9 வரி.

உ. சற்றுக்கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை. இடையிடையே சிற்சில ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மருமணம் பிறங்கும் வாகையின் புயத்தார்
மக்கமா முகம்மது நயினார்
பெருமணம் பிறங்கும் சொர்க்கமா நகரில்
பெண்ணமுது இருவரை உவந்து
திருமணம் முடித்த வாறினை யுவந்து
செழுந்தமிழ்ப் பனுவல்செய் திடவே
அருமறைப் பொருளாய் உலகெலாம் நிறைந்த
ஆதியே அநுதினம் காப்பாம்.

ஆ. முடிவு

இக்கதித் தனைக்கொ டுத்தவர் தமக்கும்
இன்பமும் உலகெலாம் விளங்க
மிக்கசெந் தமிழாய்ப் பாடினோர் தமக்கும்
விரும்பியே இபாருள்உரைப் பவர்க்கும்
சக்கற உகந்து கேட்பவர் தமக்கும்
தான்எழு தியேபடிப் பவர்க்கும்
கக்கனே ஈமான் தனைக்கொடுத்து உனது
கருணையின் கிருபைசெய் ஆமீன். (64)

இ. முற்குறிப்பு

சித்திரபானு வருஷம் வைகாசி மாதம் 13 ஆம் தேதி வியாழக் கிழமை மக நட்சத்திரம்.

பிற்குறிப்பு

சித்திரபானு வருஷம் ஆனி மாதம் 20 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை உத்திராட நட்சத்திரம் கூடிய அமிர்த யோகத்தில் எழுதி நிறைவேறியது. ஆமீன்.

917. குமாரசாமியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 717

ஆ. வ/35

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...

ஆ. குமாரசாமியம்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 175 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 133 ஏடு ; 266 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ. ; 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

போதிட மாகிய வேதியர் நாதர்பு
ராதன மாமுதலோர்
ஈதிட மாயவ ரிராசெனில் யாவும்
இடாதுஇயல் பாகநவில்

சோதிட மேதிட மாகந டாவுகு
மாரசு வாமியம்யான்
ஓதிட வேளன்து உள்ளிடம் வாழ்வதுஓர்
யானைச கோதரனே.

ஆ. முடிவு

நன்றாக வந்திடில் அகாரம்அது ஆந்தை
நலமாக வந்திடில் இகாரம்அது வல்லூறு
குன்றாத செல்வம் உகாரம்அது காகம்
குறையாக வந்திடில் எகாரம்அது மயிலாம்
கன்றாத செல்வம் ஓகாரமே கோழி
கரைசேர்அட் சரபட்சிக் கவிதைஅறி வாயே.

5. .....

6. .....

7. *வெளியீட்டுச் செய்திகள்*

அச்சிடப்பட்டுள்ளது.

918. நாவான் சாத்திரம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 718

ஆ. வ/36

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. சீவரத்தினக் கவிராஜர்

ஆ. நாவான் சாத்திரம்

இ. சோதிடம்

ஈ. செய்யுள் 81

3. *தோற்றக் கூறுகள்*

அ. 14 ஏடு ; 28 பக்கம். (ஏட்டெண் 134 முதல் 147 முடிய)

ஆ. நீளம் 33 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒருபக்கத்திற்கு 9 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தன்னமே பரிதி நோக்கித் தான்நினைத்து இருந்த போது
முன்னமே மணல்பரப்பீ முடிப்பதங் கோசிப்பச் ஞண
அன்னதோர் பலகை மூன்றும் ஆகவே அணைத்த பின்னை
மன்னிய நடுவும் கூம்பும் மாத்தலை இரண்டும் சூலம். (1)

ஆ. முடிவு

இரண்டுபத்து ஒன்பான் காலுக்கு
இனியதுஓர் கேட்டை வச்சிரம்
திரண்டுஇரு பத்தொன் றேகால்
தீமைசேர் கண்டம் மூன்று
உரம்பெறும் முப்பான் காலுக்கு
உயர்அனு ஷம்தான் ஆகும்
கரந்தெழு மூன்றுஇ ரண்டு
காலதாம் கண்ட மூன்றே. (81)

ஒரு காலுக்குப் பனிரெண்டு விரல் என்று அறியவும்.

919. மனை யலங்கார சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 719
ஆ. ற/41

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சீவரத்தினக் கவிராஜர்

ஆ. மனையலங்கார சாத்திரம் : மூலமும் உரையும்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு ; 42 பக்கம். (ஏட்டெண் 168 முதல் 188 முடிய)

ஆ. நீளம் 23 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9, 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாமாது மேவும் மனையலங்கா ரம்தனையே
நாமாது அருளால் நவிலவே — தாமாய்
அணுவுக்கு அணுவாய் அவைக்கவையாய் நின்ற
துணிவைத் துணிவாய்த் துதி.

இவை காப்பு தெய்வ வணக்கம் என்றவாறு.

ஆ. முடிவு

சூரிய பத்திக்கும் சந்திர பத்திக்கும் நடுவே சுவர் வாசல் தூண்கள் வரலாகாது ; வந்தால் மிடிமையும் உயிர்ச் சேதங்களும் உண்டாம். சந்திர பத்தி சூரிய பத்தி அளந்து சுறுப்பார்த்து பிறிப்போடும் போது ஈசானிய மூலையாவது கன்னி மூலையிலாவது காற்கோல் சுத்திற் குறையுத்தமம். உள்வீட்டுக் குறுக்கு அகலம் ஏழரையடியாவது ஒன்பதரையடியாவது வைக்க உத்தமம். மேல் கூரை போடுகிறதிற் குள்ளாகவும், கதவு தாழ்ப்பாள் போடுகிறதிற் குள்ளாகவும், தரைகள் சுவர்கள் மணியாசி பண்ணுகிறதுக்கு முன்பாகவும் மறையோர் பெரியோர்களுக்கு போஷணை செய்து நிவிர்த்தி பண்ணுகிறதுக்கு முன்பாகவும் குடிவருகலாகாது என்றவாறு. (49)

920. ஆத்திசூடிப் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 720
ஆ. ந/82

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. ஆத்திசூடிப் புராணம் : மூலமும் உரையும்
இ. காப்பியம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 167 ஏடு ; 334 பக்கம்.
ஆ. நீளம் 37 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை. 1, 165 ஆம் ஏடுகள் இல்லை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நந்திமலை வாழ்பெரிய நாயகியார் ஆதிசத்தி
எந்தைபிரான் மாலை இயம்புதற்குச் — சுந்தரமார்
முப் புரிநூல் ... ... யானை முகக்
கற்பகத்தின் பொற்பதமே காப்பு.

ஆ. முடிவு

இந்தக் கோபருவத மாலையைப் பாடிப்பத்து மாதமாய்த் தேசம் எங்கும் பரவியிருக்க அதனிட ..... வெளியாக்கி உரையிட வேண்டிச் செய்தவன் ஆரோவெண்ணில் இந்த கோபுரா...ஞ் .....

முப்பத்து மூணு ஊரும் போற்றிப் பணியப்ப ..... நாச்சியார் ஆசீர்வாதம் பெற்ற கருத்தங்காணி (யா) ஷ்சியுள்ள முத்தி உடையார் குமாரன் முகப்புடையான் என அழைக்கின்ற ..... டையானுக்குச் ..... மாகிய வைகி ..... பழனி செட்டியார் குமாரன் ஆறுமுகவன் என்னும் பெயருள்ளவன் தன்னால் இயன்ற மாத்திரம் உபசாரம் செய்து உரை விடுவித் ..... புண்ணியத்தைக் கைக்கொண்டான் என்றவாறு

இ. பிற்குறிப்பு

சுபானு வருஷம் கார்த்திகைமாதம் 19 ஆம் தேதி மங்களவார நாள் உத்தராயணம் அமரபட்சம் அமாவாசை திதி மூல நட்சத்திரம் மேஷ லக்னம் இப்படிப்பட்ட சுபதினம் கூடியிருக்கின்ற வேளையிலே மங்கலம் ஆதியப்ப நாயக்கன் குமாரன் முசலைய நாயகன் எழுதின ஆத்திச் சுவடிப் புராணம் ஆகிய கோபருவத மாலை எழுதி நிறைத்தது. முற்றும்.

5. .....

6. ....

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

921. வேதாந்த சூளாமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 721

ஆ. டr146

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சிவப்பிரகாசர் - துறைமங்கலம்

ஆ. வேதாந்த சூளாமணி

இ. தத்துவம்

ஈ. செய்யுள் எண்ணிக்கை 150

3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு ; 104 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ. ; 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. 20, 39, 40, 44 ஆகிய ஏடுகளும் 56 ஆம் ஏட்டிற்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. மிகப் பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 497 காண்க.

922. திருவாசகம்

1. நூலகக் குறிப்புகள்

அ 722
ஆ. ண / 29

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மாணிக்கவாசகர்
ஆ திருவாசகம்
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள் 656

3. தோற்றக் கூறுகள்

அ. 77 ஏடு ; 154 பக்கம்.
ஆ. நீளம் 23 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1 - 23, 26 - 28, 60 - 66, 71, 87 - 89, 107, 114, 117 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. மிகமிகச் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

... லாதன வுவமனி லிறந்தன
வொண்ம ... தாடந்து
நாயி ... கிய குலத்தினுங் கடைப்படும்
என்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய இன்னருள் புரிந்தவென்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே. (39)

(இது திருச்சதகத்தின் 39 ஆம் பாடல்)

ஆ. முடிவு

பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணா ... பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
... னா னுடையானே அடியேனை வருகஎன்று
அஞ்சலென் றருளியவா றார்பெறுவார் அச்சோவே. (5)

(இது அச்சோப்பதிகத்தின் 5 ஆம் பாடல். இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை)

923. தேவாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 723

ஆ. ண/30

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருஞானசம்பந்தர் முதலியோர்

ஆ. தேவாரம்

இ. சைவத் திருமுறை

ஈ செய்யுள் 90

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடுகள் ; 36 பக்கம்.

ஆ நீளம் 23 செ மீ. ; அகலம் 3·5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. பக்கத்திற்கு 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1 - 12, 20 - 23, 25, 30, 36க்குமேல் இருக்க வேண்டியன ஆகிய ஏடுகள் காணப்படவில்லை மிகமிகச் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடித்து நமச்சி வாயவே. (7)

(இது சொற்றுணை வேதியன் பதிகம்)

ஆ. முடிவு

கற்றி லாதானைக் கற்று நல்லனே
காம தேவனை யொக்குமே
முற்றி லாதானை முற்றனே யென்று
மொழியுனும் கொடுப்பா ரிலை
பொத்தி லாத்தைகள் பாட்ட நாப்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்த னாயம ருலகம் ஆள்வ
தற்கியாதும் ஐயுற வில்லையே,

924. தேவாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 724
ஆ. ண/31

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருஞானசம்பந்தர்
ஆ. தேவாரம்
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள். சுமார் 4000

3. தோற்றக் கூறுகள்

அ. 242 ஏடு ; 484 பக்கம்.
ஆ. நீளம் 38 செ.மீ. ; அகலம் 4 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 11 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. 17 - 22, 24, 26, 36 - 44, 47, 53, 56 - 58, 63, 67, 69, 84, 86, 90, 100 - 107, 112, 118 - 135, 139, 140, 155, 157, 195, 243, 271, 299 ஆகிய ஏடுகள் காணப்பட வில்லை. பல ஏடுகள் முறிந்துள்ளன. மிகமிகப் பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தோடுடைய ..... மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் .....
..... முன்நாள் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே. (1)

ஆ. முடிவு

ஏலுந்தண்டா ..... மியல்புடை
மாலுந் தம்மாண் பறிகின் நிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெரு .....
கோயில் புரிசடையார்க்கே. (9)

(இதற்கு மேல் இருக்க வேண்டிய ஓரேடு காணப்படவில்லை)

925. தேவாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 725
ஆ ண / 32

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருநாவுக்கரசர்
ஆ. தேவாரம்
இ சைவத்திருமுறை
ஈ. செய்யுள். சுமார் 3000.

3. தோற்றக் கூறுகள்

அ. 185 ஏடு ; 370 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ ; அகலம் 4 செ. மீ.
இ இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10, 11, 12 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுவடி மிகமிகச் சிதைந்துள்ளதால் ஏட்டெண்களைக் கூடப் பார்க்க இயலவில்லை. பல ஏடுகள் முறிந்துள்ளன, மிகமிகப் பழுதடைந்துவிட்ட சுவடி.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வனபவளவாய் திறந்து ..... என்கின்றாளால்
..... வெண்ணீற்றனென்கின்றாளால்
அனபவள மேகலையோடப் பாலைக்கப்பால
னென்கின்றா ...
..... சிந்தும் கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்
கொல்லோ. (1)

ஆ. முடிவு

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீ ...
... ...
தன்னனையும் தண்மதியும் பாம்பும் நீரும்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்னதடை ... ... தானே
அக்கரவம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூப்புகலூர் மேவிய புண்ணியனே. (9)

(இதற்குமேல் இருக்கவேண்டிய ஓர் ஏடு காணப்பட வில்லை)

926. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 726
ஆ. ல/170

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் சுமார் 300

3. தோற்றக் கூறுகள்

அ. 62 ஏடு ; 124 பக்கம்.

ஆ. நீளம் 20· 5 செ. மீ. ; அகலம் 3· 5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 8, 9, வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1-10, 15-17, 21, 23, 24, 26, 28, 32, 33, 55, 70-72, 79 ஆகிய ஏடுகளும் 87க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. மிகமிகச் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தேக்கான செண்பகம் கடுகுரோ கணியும்
தி...யும் சமுத்திராப் பழமும் கல்நார்
தேக்கான சோலமா ....
சென் ..... பட்டை ஓர்பலந்தான் .....
வாக்கான பெருங்குரும்பை சித்திரை மூலம்
வகைவகைக்கு ஓர்பலம்தான் ....
தாக்கான பு..... ....
தவறாதே எண்ணெயிலே கரைத்தி டாயே. (46)

ஆ. முடிவு

வாறான கருவெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமும் வகையாய்ச் சொன்னேன்
கூறான செந்தூரம் கற்கம் செயநீர்
குருபடிக்கும் குறிப்புஎல்லாம் குறியாய்ச்
சொன்னேன்
....

(இது 371 ஆம் பாடலின் முற்பகுதி. இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை.)

927. அகத்தியர் இரத்தினச் சுருக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 727
ஆ. ல / 171

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் இரத்தினச் சுருக்கம்
இ மருத்துவம்
ஈ. செய்யுள் 199

3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு ; 80 பக்கம் (ஏட்டெண் 63 முதல் 102 வரை)
ஆ. நீளம் 29 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 102 ஆம் ஏட்டிற்குப் பிறகு இருக்க வேண்டியன காணப்படவில்லை உள்ளவை நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் நின்றகுரு பரையைப் போற்றிப்
புகலுகிறேன் வயித்தியரே சுருக்கம் தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்து போற்றி
வயித்தியம்தான் முந்நூற்று அறுப துக்குள்
காரணமாய்ச் செந்தூரம் பற்பம் லேகியம்
கருவான தயிலமொடு கிருதம் எண்ணெய்
சூரணமாக் கிராணமொடு களிக்கம் மாத்திரை
சுளுகுகரு நாடிமுதல் சொன்னோம் பாரே. (1)

ஆ முடிவு

ஆறுமே கூழ்ப்பாண்ட கிருதம் கேளு
அப்பனே பூசணிக்காய் சாறுபடி ரெண்டு
நாறுமே தாமழையுட விழுதுச் சாறு
நன்றாகப் படியொன்று பால்படிதான் ஒன்று
காருமே தென்னம்பூச் சாறுபடி ஒன்று
கலங்காதே குமரிச்சாறு படிதான் ஒன்று
தாறுமே செவ்விளநீர் படிதான் ஒன்று
தளமான ஆவின்நெய் படிதான் ரெண்டே. (199)

928. கோரக்கர் கற்ப விதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 728
ஆ. ல/172

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கோரக்கர்
ஆ. கோரக்கர் கற்பவிதி
இ. மருத்துவம்
ஈ செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம். (ஏட்டெண் 119 முதல் 122 வரை)
ஆ. நீளம் 29 செ மீ. ; அகலம் 3 செ மீ.
இ இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கோரக்கர் மூலிகை குருவின்உப தேசம்
நேரொக்கக் கொண்டு நிலைஅறிவார் இல்லை
நேரொக்கக் கொண்டு நிலை அறிவா ளர்க்குச்
சீரொக்கப் பாயும் சிவபதம் தானே. (1)

ஆ. முடிவு

சித்திதன் மூலியைச் சிந்தையுள் நேசமாய்
நித்தமும் சாதிக்க நினைத்தஎல் லாம்தரும்
பத்திசெய் யாமல் பழித்தே இகழ்ந்தவன்
எத்தனை நாளும் இடைவார்ந் தலைவனே. (30)

கோரக்கர் கற்பம் முற்றும்.

929. அகத்தியர் பஞ்சாட்சரக் கோவை

1. நூலகக் குறிப்புகள்

அ. 729
ஆ. ழ/25

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பஞ்சாட்சரக் கோவை
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 35 ஏடு ; 70 பக்கம்.
ஆ. நீளம் 16·5 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. புலவிதை வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓம், சிங். வங். அங். ஆ ஆ. அர அர. ஐஐ. அம் அனந்த ஆட்டு சுவாகா.

ஆ. முடிவு

மூலம்கம் சிம்டம் நமாமலம் ஓம் உம் ஓம்.

இ முற்குறிப்பு

ஆனந்த வருஷம் ஐப்பசிமாதம் 10 ஆம் தேதி புதவாரம் ஆலக்கிராமம் பகவதி பண்டாரம் எழுதினது. பஞ்சாட்சரக் கோர்வை. அகத்தியர் அருளிச் செய்தது.

5. பிற செய்திகள்

இச் சுவடியில் பல இயந்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

930. கந்தர் அந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 730

ஆ ய/47

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அருணகிரிநாதர்

ஆ. கந்தர் அந்தாதி

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 74

3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு ; 54 பக்கம்.

ஆ. நீளம் 33 செ.மீ. ; அகலம் 2·5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 4 வரி.

உ தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. 7, 18, 20, 27, 28, 30 - 32, 35, 36 - 51 ஆகிய ஏடுகள் இல்லை சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாரணத் தானை அயனைவிண் ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவன் றோமைந் தனைத்துவச
வாரணத் தானைத் துணைநயந் தானை வயல்அருணை
வாரணத் தானைத் திறைகொண்ட யானையை
வாழ்த்துவனே.

ஆ. முடிவு

தீட்டப் படாவினி உன்னால்என் சென்னிக்
கறைப்பிறப்பிற்
தீட்டப் படாவிய வால வயவா னறிக்கு நான் முருப்புத்
தீட்டப் படாவி தமுகா கலன்சிறை விட்டவன் தாள்
தீட்டப் படாவி வினையே நினைவன் திசாமுகனே.

(இரண்டாம் அடி பிழைபட எழுதப்பட்டுள்ளது. இதற்குமேல் ஏடுகள் காணப்பட வில்லை.)

931. முனிமொழி

1. நூலகக் குறிப்புகள்

அ. 731

ஆ. ட/147

2. உள்ளீடு : நூல் விவரம்

அ .....

ஆ. முனிமொழி

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு ; 14 பக்கம். (ஏட்டெண் 20 முதல் 26 முடிய)

ஆ. நீளம் 21 செ.மீ ; அகலம் 2·5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. கிறுக்கலான கைப்பழுத்து.

ஊ. மிகப் பழுதுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதர வதனால் உன்னி த...பதி தீர்வை முன்னோர்
ஓதிய பொருளால் மாந்தர்க்கு உள்ளிருள் அகற்ற
வேண்டிச்
சோதிசேர் விளக்கம் தன்னை சொல்ல ... கள்
கண்டேன்
கோதிலா அறிவு தந்த குறுமுனி அருளைக்
கொள்டே. (1)

ஆ. முடிவு

அருள்உயிர் அடைந்தது என்னில் ஆவுநெய் திரியும்
அற்றால்
தெருளுறு மலங்க டந்த சேதியே போல தாகும்
அருள்உயிர் மலங்கண் டம் ... மன்னுயிர் பத்தில்
ஒன்றும்
பொருளுரை வைத்துஅ டிக்கீழ் போற்றுமா
மதனி னாலே. (30)

932. அத்தியந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 732
ஆ. ய/48

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .. ..
ஆ. அத்தியந்தாதி (வெண்பா வந்தாதி)
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு ; 18 பக்கம். (ஏட்டெண் 6 முதல் 18 முடிய)
ஆ. நீளம் 21 செ.மீ. ; அகலம் 2·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 7, 8 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. மிகப் பழுதுற்ற நிலை. 9 - 12, 19 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குட்டுணியை முக்கணனைக் குன்றனுக்கு மூத்தோனை
மொட்டைத் தவசிபெற்ற முச்சிலியை — முட்ட
வழியில் இருக்கும் மதவார ணத்தைத்
தொழுதுஎடுத்துக் கொண்டேன் துயர்.

ஆ. முடிவு

அத்தியந்த மாலைதனை ஆதரித்து நாள்தோறும்
பத்தியுடன் பேரற்றிப் பணிவார்க்குச் — சுத்த
நெறிகாட்டும் ஞானஒளி காட்டும் நேரே
குறிகாட்டும் அன்பர்உள்ளம் கூர்ந்து. (99)

(இதற்குமேல் ஏடுகள் காணப்பட வில்லை)

5. பிற செய்திகள்

இந்நூலின் தொடக்கத்தில் அத்தியந்தாதி வெண்பா என உள்ளது. மேற்காட்டிய 99 ஆம் பாடலில் இந்நூல் அத்தியந்த மாலை எனச் சுட்டப்படுகிறது. இதுவே பொருத்தமான பெயராகத் தோன்றுகிறது.

933. பஞ்சபுராணத் தொகுப்பு

1. நூலகக் குறிப்புகள்

அ. 733
ஆ. ண/33

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருஞானசம்பந்தர் முதலியோர்
ஆ. பஞ்சபுராணத் தொகுப்பு
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு ; 32 பக்கம். (ஏட்டெண் 120 முதல் 135 முடிய)
ஆ. நீளம் 16 செ.மீ. ; அகலம் 4·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 20, 21 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகப் பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்த ணர்பிரி யாதசிற் றம்பலம்

சு. வி. 35

நரடி னாய் இட மாய்நறுங் கொன்றை நயத்தவனே
பரடி னாய்மறை யொடுபல கீதமும்
பல்ச டைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடி னாய் அரு ளாய்சுருங்க
எமதொல்வி னையே (1)

ஆ. முடிவு

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஒங்கிட
மன்னுளார் அடியார் ... வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

934. சிவப்பிரகாசம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 734
ஆ. ஞ/17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. உமாபதி சிவாசாரியர்
ஆ. சிவப்பிரகாசம் : மூலமும் உரையும்
இ. மெய்கண்ட சாத்திரம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் சுமார் 125 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 99 ஏடு; 198 பக்கம் (ஏட்டெண் 21 முதல் 119 முடிய)
ஆ. நீளம் 16 செ.மீ. ; அகலம் 4·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 17, 18 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகப்பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒளி... ...ருனேி உமிழ்தானம் மிகமேவு
களியார வருமானை கழல்நாளும் மறவாமல்
அளிஆளும் மலர்தூவும் அடியார்கள் உளமான
வெளியாகும் ...தாய விமனகூட ...யாவே.

ஆ. முடிவு

நன்னூல் என்றது இந்த நூலால் சிவம் பிரகாசித்தலின் உண்மை முற்றுப். சிவமயம். சிவப்பிரகாசம் திருவிருத்தம் 100க்கும் உரைஎழுதி முற்றியது.

சிவப்பிரகாசம் திருவிருத்தம் தொகை :- பொது விருத்தம் — பாயிரம் 12, முதற் சூத்திரமான பதியிலக்கணம் 8, இரண்டாம் சூத்திரமான பசு, பாச இலக்கணம் 30 ஆகப்பொதுவிருத்தம் 50 ; உண்மையில் பாயிரம் 1, மூன்றாம் சூத்திரமான வா...லக்கணம் 8, நாலாம் சூத்திரமான அவத்தை இலக்கணம் 3, ஐந்தாம் சூத்திர மான உணர்த்தும் முறைமை 5, ஆறாம் சூத்திரமான ஞான வாய்மை 1, ஏழாம் சூத்திரமான புறநடை 2, எட்டாம் சூத்திரமும் ஒன்பதாம் சூத்திரமும் பத்தாம் சூத்திரமுமான அதன் பயன் 19, ஒன்பதாம் சூத்திரத்தின் பகுதியாகிய அஞ்செழுத்துண்மை 3, பதினொன்றாம் சூத்திரமும் பனிரெண்டாம் சூத்திரமுமாகிய அணைந்தோர் தன்மை, 6, அருளின் மகிமையால் நூல் உரைத்தமை சொன்ன விருத்தம் 1, நூல் கொடுக்கும் முறைமை சொன்ன விருத்தம் 1 ஆக உண்மை விருத்தம் 50. ஆகப் பொது உண்மை இருவகையுமாகத் திருவிருத்தம் 100 எழுதி முடிந்தது.

இ. பிற்குறிப்பு

970 ஆம் வருடம் ஆடி மாதம் 7 ஆம் தேதி சனிவாரம் அசுபதி நட்சத்திரமும் சப்தமியும் கூடின சுபதினத்தில் எழுதி முற்றியது.

5. பிற செய்திகள்

இவ்வுரையாசிரியரின் பெயரை அறியக் கூடவில்லை.

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

தொடர் எண் : 180 காண்க.

7. வெளியிட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

935. புலத்தியர் வைத்தியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 735
ஆ. ல/173

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. புலத்தியர்
ஆ. புலத்தியர் வைத்தியம் 100
இ மருத்துவம்
ஈ. செய்யுள் 34

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு ; 24 பக்கம்.
ஆ. நீளம் 23· 5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. பழுதுற்ற நிலை. 34 பாடல்களே எழுதப்பட்டுள்ளன.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவளரும் தென்பொதிகை தன்னில் வாழும்
தட்சிணா மூர்த்தியுட சீட னான
குறுமுனிவன் பாலகனாம் புலத்தியன் ஆகும் அடியேன்
கூறுகிறேன் வைத்தியசூத் திரம்தான் நூறும்
பருவமுடன் என்தந்தை பாடல் தோய்ந்து
பண்பான நாதாக்கள் அடிபணிந்து போற்றி
உறுதியுடன் மனம்தோய்ந்து பலநூல் பார்த்து
உத்தமர்க்கு வயித்தியத்தைச் சொல்கின் றேனே. (1)

(இரண்டாமடியின் யாப்பமைதி சரியாக இல்லை.)

ஆ. முடிவு

தூரப்போம் குறைநோவு நாசிப் புண்ணு
தொடைவாதம் கழல்வாதம் சூலை மேகம்
நேரொத்த பவுத்திரம் புண்ணு புற்று
நிலையான கண்நோவு கண்ட மாலை
சீர்கெட்ட புற்று அரை யாப்பு பாவை
சேராது சேராது தேகம் கெட்டி
வார்கட்டு மூலைமானார் மாயை ஆகா
மண்டலத்துக்கு அப்பாலே வரிசை பாரே. (34)

(இச்சுவடியில் இதற்குமேல் எழுதப்படவே இல்லை).

936. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ 736
ஆ. ல / 174

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ உரைநடை. அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு ; 38 பக்கம்
ஆ. நீளம் 23.5 செ. மீ ; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பலவித வரி.
உ தெளிவான கையெழுத்து.
ஊ. 1 - 12, 17, 22 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. பழுதுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ரச பஸ்பம் பண்ணும் வகை : இரசம் 10 விராகன் எடையைக் கல்வக் கல்லில் விட்டு ஆகாசத் தாமரை இலைச் சாறு வார்த்து இரண்டு சாமம் அரைத்துப் பிறகு மணத்தக்காளி இலைச் சாறு வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லைபோக்கி அகலில் வைத்து சீலைமண் செய்து கசபுடத்தில் வைக்க பஸ்மமாம். இது கை கண்டது.

ஆ. முடிவு

துருசி குரு : அண்டவோடு கொண்டு வந்து புடம்போட்டு எடுத்துக் கல்வத்தில் போட்டு நவச்சாரம் இரண்டு வராகன் எடை கூடப்போட்டு அரைக்கச் செயநீராகும். அந்த நீரில் துருசி கட்டி யாய் கொண்டுவந்து செயநீரில் துவைத்து அக்கினியில் வாட்ட இந்தப்படி மூன்றுதரம் செயநீரில் துவைத்து வாட்டி அதன் மேலே சீலை சுற்றி மூன்று மண் செய்து மனோசிலை ஒரு பலம் கல்வத்தில் போட்டுத் தண்ணீர்விட்டு அரைத்துச் சாமம் அரைத்து சீலைமண் மேல் பொதிந்து ரவியில் மூன்று நாள் வைக்கவும். அதை எடுத்துக் கொண்டு பதினோரு எருமுட்டையில் புடமிடப் பஸ்பம் ஆகும்.

937. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 737

ஆ ல/175

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள். சுமார் 600

3. தோற்றக் கூறுகள்

அ. 74 ஏடு ; 148 பக்கம்.

ஆ. நீளம் 40 செ.மீ ; அகலம் 3 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1-5, 31-40. 42, 69-76, 83, 92 ஆகிய ஏடுகளும் 100க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. 96.98 ஆம் வரையான ஏடுகள் முறிந்துள்ளன. மிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முனியான அஞ்செழுத்தும் நமசிவயம் ஆகும்
முதன்மையுள்ள அஞ்செழுத்துக்கு உயிரைக் கேளு
தனியான சிதப்பரமே அல்லாது உண்டு
தானவனாய் நின்றதொரு பூரணமே ஆகும்
கனியான பூரணத்தைக் கண்டால் முத்தி
கற்பம்எனக் கொண்டாக்கால் காய சித்தி
மணியான மனோன்மணியாம் நமசிவய என்று
மைந்தனே மாறினதால் சித்தி ஆமே (26)

ஆ. முடிவு

கேளப்பா இடதுகையில் விபூதி வைத்துக்
கணிதமுடன் பரத்தி அதில் சுழியும் நாட்டி
ஆளப்பா ச...னம.....து ....
அன்பாகச் சிவ ..... அறிந்து மாறில்
கோளப்டா ஒன்றுமில்லை பகைதான் வெல்லும்
கூர்மையுடன் விபூதியைநீ குறியாய்ப் பூசி
வாளப்பா மீதமுள்ள ....
.. .. (643)

5. பிற செய்திகள்

இச் சுவடியில் மாந்திரீகம், இரசவாதம் பற்றிய செய்திகளே மிகுதியாக உள்ளன.

938. சிவஞான போதம்

1. நூலகக் குறிப்புகள்.

அ. 738

ஆ. ஞ / 18

2. உள்ளீடு ; நூல் விவரம்

அ. மெய்கண்டதேவநாயனார்

ஆ சிவஞானபோதம் ; அம்பலவாண தேசிகர் சிந்தனை உரை

இ. மெய்கண்டசாத்திரம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடுகள் ; 44 பக்கம்.

ஆ. நீளம் 29·5 செ. மீ. அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 14, 15, 16 வரி.

உ. தெளிவான கையெழுத்து

ஊ. மிகச் சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கல்லால் நிழல்மலை வில்லான் ஆருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் பணிவரே.

ஆ. முடிவு

முன்னவனே-முன்னவனாகிய கத்தர் தானே;தானே தானாய்ச் செய்து-தன்னைத் தானாகச் செய்தும் — தெய்வம் என்றும் அடிமை என்றும் அடிமையே ; பானே - பெண்ணே; தொழுகை வலி வழிபாடு பண்ணிகிறதே உனக்கு உறுதி என்றவாறு. (6) சிவமயம். பன்னிரண்டாம் சூத்திரம் முற்றும். திருச்சிற்றம்பல தேசிகன் துணை

இ. பிற்குறிப்பு

இந்தச் சிவஞான போத சாத்திரம் சுப்பிரமணியத் தம்பிரானது

5. பிற செய்திகள்

இச்சிந்தனை உரையின் ஆசிரியர் துறைசை அம்பலவாண தேசிகர் அவர்கள் ஆவார்.

939. கந்த புராணச் சுருக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 739

ஆ நா/83

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சம்பந்த சரணாலயர்

ஆ. கந்த புராணச் சுருக்கம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 1648

3. தோற்றக் கூறுகள்

அ 68 ஏடு ; 136 பக்கம்

ஆ நீளம் 33·5 செ.மீ. ; அகலம் 4 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ பக்கத்திற்கு 12 வரி

உ. தெளிவான கையெழுத்து.

ஊ பல ஏடுகள் சிதைந்துள்ளன. பழுதுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொங்கு கந்தப் புராணச் சுருக்கநூல்
இங்கு இசைத்திட இன்பொடு முற்றுவான்
மங்கை பாலகன் மாதங்க மாமுகப்
புங்க வன்துணைப் பொற்பதம் போற்றுவாம்.

ஆ. முடிவு

கந்தன் எந்தை கதைக்கடல் யாவரும்
சிந்தை செய்யச் சிலசில செப்பினேன்
இந்த நூலின் இரும்பிழை சேரினும்
புந்தி யோர்கள் பொறமின் பொறுமினே. (5)

கந்தபுராணச் சுருக்கம் முற்றியது. ஆகத்திருவிருத்தம் 1048

இ. பிற்குறிப்பு

1023 கீலகவருஷம் சித்திரை மாதம் 8 ஆம் தேதி மங்கள வாரமும் பவுர்ணமையும் சித்திரை நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் எழுதி முற்றுப்பெற்றது.

940. அகத்தியர் வைத்திய காவியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 740-1
ஆ. ல/176

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வைத்திய காவியம் 1500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 1500

3. தோற்றக் கூறுகள்

அ. 190 ஏடு ; 380 பக்கம்.
ஆ. நீளம் 30 செ.மீ ; அகலம் 4 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10, 11 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாகுடன் கணேசன் பாதம்
பணிந்துமுக் குணங்கள் ஆய்ந்து
வாகடத் தொகுதி எல்லாம்
வகுத்தசூத் திரம்அது ஆக்கி
ஆசம விதியின் ஞாலத்து
அடர்ந்திடும் நோய்கள் எல்லாம்
போகநல் மருந்து சொல்வோம்
புலத்தியா பொருந்திக் கேளே. (1)

ஆ முடிவு

ஆமப்பா வாகடத்தில் சூத்திரத்தை எல்லாம்
அறைந்திட்டேன் அணுவொன்றும் அடக்கம் இல்லை
வேமப்பா நோய்எல்லாம் படுதீப் பற்றும்
வேறுள்ள நோய்க்கெல்லாம் விபரம் இல்லை
சோமப்பா இந்தநூல் தொகையது என்றால்
சொல்லுகிறேன் ஆயிரத்தைஞ் ஞூறுஞ் சொல்லும்
நாமப்பா உள்ளபடி சொல்லி வைத்தோம்
நாதாக்கள் கடாட்சத்தால் சூத்திரம்தான்
முற்றே. (1500)

அகத்திய முனிவர் அருளிச்செய்த வைத்திய காவியம் முற்றிற்று.

5. பிற செய்திகள்

சுவடியின் தொடக்கத்தில் நூல் நுதலும் பொருளின் அட்டவணை 5 ஏடுகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

941. சிவனார்வேம்புத்தயிலம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 740-2

ஆ. ல / 176

2. உள்ளீடு : நூல் விவரம்

அ ரோமரிஷி

ஆ. சிவனார் வேம்புத்தயிலம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 18

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம் (ஏட்டெண் 185 மு 187 வரை)

ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 187 ஆம் ஏடு காணப்படவில்லை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீதமுடன் ரோமரிஷி பூதலத்தில்
நேர்கெட்ட மானிடர்க்கு மருந்து சொல்வேன்
காதலுடன் கணபதியைத் தியானம் செய்து
கார்மேகக் கிருதமுடன் தயிலப் போக்கு
ஆதரவாய் மருந்துவகை சொல்லக் கேளு
அப்பனே நிலவாகை சிவனார் வேம்பு
போதமுடன் விராலியுட மூலம் தானும்
புகழ்பெறவே கொண்டுவந்து உலர்த்திக்
கொள்ளே. (1)

ஆ. முடிவு

... ...
... ...
ஆச்சப்பா இம்மருந்து செய்தேன் ஆனால்
அப்பனே உலகத்தில் சித்தன் ஆச்சு
போச்சப்பா வாயினாலே சொன்னால் ஆமோ
பொய்யான மானிடர்கள் வணங்க வேணும்

நீச்சப்பா கடுநீச்சு உரைத்துச் செய்தால்
நிலைகெட்டு ஓடும்பார் ரோகம் தானே. (18)

(187 ஆம் ஏடு இல்லாததால் 12 ஆம் பாட்டின் பிற்பாதி முதல் 18 ஆம் பாட்டின் முதலடி வரை காணப்படவில்லை.)

942. நஞ்சு முறிவு நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 740 — 3
ஆ. ல/176

2. உள்ளீடு : நூல் விவரம்

அ .....
ஆ நஞ்சு பதினெட்டுக்கும் முறிவு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள். ஒரு கலிவெண்பா, 7 கண்ணிகள்

3. தோற்றக் கூறுகள்

அ. ஒருபக்கம் மட்டும் (188 ஆம் ஏட்டின் முதல் பக்கம்)
ஆ. நீளம் 30 செ. மீ. ; அகலம் 4 செ. மீ.
இ. ஒருபக்கம்.
ஈ. பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

நஞ்சுக்கு முறிவு :

எட்டிக்கு நவ்வல் எழுதோணி தான்றிக்காய்
வட்டமுள்ள தாமரை ஊமத்தைக்கு — ஒட்டியதோர்
ஆவரைக் கள்ளி அரளிக்கும் கடுக்காய்
மேவியநெய் தேனுக்கு வெந்தகரி — பாவையரே

எள்ளுக்குச் சர்க்கரை என்றால் எருக்கிலைக்கு
வள்ளல்சங்கம் பழம்கழுதை வண்டுக்கு
— நல்லோர்கேள்

நீற்றுக்கு மஞ்சள் நேர்வாளம் நல்வசப்பு
வேற்றைச் சிவதைக்கு வெள்வேலா போற்றியதோர்
நெல்லேறும் சர்க்கரையும் நேராகக் கொள்வோர்க்கு
எல்லோரும் சொல்வர்இலா மிச்சம்வேர் — சொல்லரிய
தாவி சிறுகீரை நன்குன்றி வெண்காரம்
தாவியபா ஷாணம் தனிமிளகு — ஓவியமாய்
நீலிக்குத் தீரும்என்று நிச்சயமாய் மாமுனிவன்
பாலித்துச் சொன்னார் பரிந்து.

943. சித்திரவல்லாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 740-4
ஆ. ல / 76

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. சித்திரவல்லாதி உண்டை
இ மருத்துவம்
ஈ. செய்யுள். ஆச்சில் ஏறத்தாழ 2 பக்கம் வரும் (ஆனந்தக் களிப்பு)

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம் (ஏட்டெண் 188, 89)
ஆ நீளம் 30 செ. மீ ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 9 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

அத்தி முகனைத் துதித்தே — நல்ல
அன்பான வல்லாதி இன்பமாய்ச் சொல்வேன்
சித்திர மூலம் வெள்ளறுகு — நல்ல
சிவனார் வேம்புசங்கு சங்கங்குப்பி வேரு

ஆ. முடிவு

இத்தனையும் தீரும்என்று நாதன்
இன்பமாய்த் தீரும்என்று அன்பாய் உரைத்தார்
முத்தியாய் எந்தனுக்கு அருளிநல்ல
முதன்மையாய் உலகத்தில் வகுந்துரைத் தேனே.
சித்திர வல்லாதி முற்றும்.

5. பிற செய்திகள்

இதனையடுத்து இடிமருந்து ராமபாணம், பவளபற்பம், குக்கிலாதி வடகம், மேகத்துக்கு அமிர்த சர்க்கரைப் பிரயோகம் ஆகியன மூன்று ஏடுகளில் கூறப்பட்டுள்ளன.

944. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 741
ஆ. ல/177

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 104

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு ; 38 பக்கம். (ஏட்டெண் 238 முதல் 256 முடிய)

ஆ. நீளம் 31 செ.மீ ; அகலம் 3 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பழுதுற்றநிலை

எ, முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாம் மும்மூலப் பொறியில் சூடாம்
புகைதழுப்பில் மேகம்தாம் சிரசில் சூடாம்
காரணமாம் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனல்எழுப்பி வாயுவினால் சூலை ரோகம்
ஆரணமாம் வாதத்தில் எழுந்த ரோகம்
அதிகதொரு பித்தத்தால் கிராணி ஆச்சு
தாரணமாம் வாயுவினாற் குறமாச்சு
சார்ந்தசிலேற் பனப்கூடில் சயம்அது ஆச்சே.

ஆ. முடிவு

வித்தைஎன்ற வித்தைஎல்லாம் நூற்றுக்குள்ளே
விருதிட்டு வெட்டுமடா வெகுசு ருக்குச்
சுத் ... சுற்றெல்லாம் விட்டுப் போட்டுச்
சுருக்கான வித்தைதனை ஆடித் தேறு
பத்தென்ற நூறும்அது முகிந்த வாறு
பாடினேன் இன்னமொரு நூறு பாரு
முத்தென்ற முத்துப்போல் மூலிகையின் போக்கு
முக்கியமாய்ச் சொல்லுகிறேன்
முறையைப் பாரே. (104)

5. பிற செய்திகள்

நூலில் தலைப்பில் 104 பாட்டு என்று மட்டுமே உள்ளது நூற்பெயர் முதலிலோ கடைசியிலோ காணப்படவில்லை.

945. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 742

ஆ. ல/178

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு ; 40 பக்கம்.

ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ 2, 4 - 6, 10 - 12, 27, 29 ஆகிய ஏடுகள் காணப் படவில்லை பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

பித்தம் : சம்பா அமுது படி வாங்கி நற்சீரகம் சுத்திசெய்து இரண்டும் ஒன்றாய் அமுது சமைத்து வெல்லம் தொட்டுக்கொண்டு சாப்பிட்டால் பித்தம் எல்லாம் தணித்து போகும்.

ஆ. முடிவு

மங்கு விழுந்தால் : சிற்றாமணக்கம்பருப்பும் புங்கம் விரையும் வெள்ளாட்டு மோர் விட்டு அரைத்து வெய்யிலில் வைக்கப் பொங்கும். இது பூசத்தீரும். அரிதாரம், கடுக்காய், வெள்ளைச் சாரணை வேர் காடியில் உரைத்துப் பூசவும். கச்ச நாரத்தம் பழச்சாறும் எருமைச் சாணிச் சாறும் பூச மங்கு வடுத் தீரும்.

946. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 743

ஆ. ல/179

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ... ...

ஆ. மருந்து செய்முறை

இ மருத்துவம்

ஈ. உரைநடை, அச்சில் ஏறத்தாழ 45 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 45 ஏடு; 90 பக்கம் (ஏட்டெண் 26 முதல் 30 முடிய)

ஆ. நீளம் 22.5 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 5,6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ முதல் 25 ஏடுகள் காணப்படவில்லை. பல ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ரச செந்தூரம் : ரசம் விராகன் எடை 10, நெல்லிக்காய்க் கந்தகம் விராகன் எடை 20, நவாச்சாரம் விராகன் எடை 5 இவை எல்லாம் சுத்தி செய்து பின் சிறு செருப்படைச் சாற்றினாலே மூன்று சாமம் அரைத்து மிளகுப் பிரமாணமாக உண்டை செய்து காசுக் குப்பியில் நிறைய அடைத்து விளிம்புக்குக் கற்பொடியும் மண்ணும் அரைத்துக் குப்பி வாய்க்கு நன்றாய் அடைத்து ... ...

ஆ. முடிவு

சீப்பிரமியத்துக்கு மருந்து : ஒரு சேரை வெந்தயம் நனையப் போட்டு அரைத்து இதனுடன் சீரகம் 1 விராகன், ஏலம் 1 விராகன்

நல்ல வெல்லம் கூடப் போட்டு, இவை எல்லாம் சேர்த்துப் பசுவின் வெண்ணெய் இதற்குச் சரி கூட்டிச் சேர்த்து, மூன்று நாள் விழுங்கச் சீப்பிரமியம் தீரும்.

947. அகத்தியர் வாகடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 744

ஆ. ல/180

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. அகத்தியர் வாகடம்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் சுமார் 30 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு ; 56 பக்கம்.

ஆ. நீளம் 23 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மகா அக்கினி குமாரன் சொன்னது : ஒரு படி நேர்வாளம் கொண்டு வந்து அந்தப் பருப்பில் முளை வாங்கி எடுத்துப் புசுவின் பால் விட்டு ஆட்டி ஒரு தாளிச் சட்டியில் போட்டு ஆறுபடி பால் விட்டு ஒன்று ..... காய்ச்சின பால் ஆறவிட்டுப் பிறகு மோர் விட்டுப் பிரை குத்தி இரவு முப்பது நாழிகை இறுக்கவிட்டுக் காலையில் கடைந்து வெண்ணெய் எடுத்து ஒரு சிமிழிலே அடைத்து இட குளிகை அரைத்திட்டு தலை முழுகினால் கபால நோவு எல்லாம் தீரும்.

ஆ. முடிவு

பிள்ளை விழுக்காட்ட மருந்து :

நெல் வேகவைத்த தண்ணீர் கால் படியில் கடுகு, வெள் வெங்காயம் இந்த இரண்டையும் அரைத்துக் கொடுக்கப் பிள்ளை விழுந்து விடும். இது கைகண்ட முறை.

948. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 745

ஆ. ல/181

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 100 ஏடுகள் ; 200 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 2·5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து. விடுபாடுகள் அதிகம்.

ஊ. 1, 2, 17, 19, 20, 43 – 47, 97, 99 ஆகிய ஏடுகள் காணப்பட வில்லை. பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சூலைமுடக்குடன் வாதம் இனிச் சொல்வேன். உதிரத்திரட்சி, வெண்குட்டம், ஓய்ந்த கை கால், ஊறல், வெடிப்பு, தடிப்புடன் குட்டம், வெடிசூலை, பவுத்திரம், மூலமுளை, கிருமி, பித்த ...,

கபரோகம், வரட்சி, நல்ல பெரும்பாடு, சூனியம், முகவாத சன்னி,... சத்திற் கடுப்பு, அரையாப்பு. நல்ல தகை நெஞ்சடைப்புடன் மார்பிலே குத்தல், குதிரை வலிப்புடன் ஆறும் நல்ல ... ... என்று கூக்குரலிட்டோடும்.

ஆ. முடிவு

ஈளை, இருமல், இரைப்பு இதுகளுக்கு எண்ணெய் :

மனோசிலை	3	வராகன்.	பூரம்	3	வராகன்.
சூடம்	3	,,	மிருதார்சிங்கி	3	வராகன்.
லிங்கம்	3	,,	கௌரி	3	,,
வாளம்	6	,,	அபினி	3	,,

வேப்பெண்ணெயாவது நெய்யாவது காய்ச்சிக் கொடுக்கத் தீரும். வியாதி பதம். மயிலிறகு எண்ணெயில் போட ... அந்தப் பதத்தில் இறக்கவும். காசெடை கொடுக்கவும். ஈளை, இருமல், இரைப்பு இதுகள் தீரும். கை கண்ட முறை.

949. இராசாங்கம் 500

1. நூலகக் குறிப்புகள்

அ. 746
ஆ. ல/182

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. இராசாங்கம் 500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் சுமார் 200

3. தோற்றக் கூறுகள்

அ. 89 ஏடு ; 178 பக்கம்.
ஆ. நீளம் 20 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 5, 6, 7 வரி,

உ. மிகக்கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ராசசங்கர் தன்னைப் பார்த்து நவில்கிறேன் அகஸ்தி
யன்தான்

ராசசங்க ஐநூற் றுள்ளே நாடியே இசைந்து பார்த்து
ராசசங்கற்கு உரைத்தார் அந்த வாதமரத் திரைரெண்டு
ஆகில்

ராசசங்க பித்த மூன்றும் நடத்திடும் குணம்சொல்
என்றான். (1)

ஆ. முடிவு

குளிர்ந்திருக்கும் அம்மியது சக்தி ஆகும்
கூடாடும் குழவியது லிங்கம் ஆகும்
தெளிந்து அரைக்கும் விரல்ஐந்து பஞ்ச பூதம்
தேகமுறும் மருந்துஎல்லாம் சிவமே ஆகும்
நளிந்திருக்கும் அடைப்புமுதல் செயமாய அரிஎன்னும்
பேரும்

நியயெ குளித்திருக்கும் அம்மிக்குப் பேர்தான் என்ன
தெளிந்து அரைக்கும் விரலுக்கும் பேர்தான் என்ன
தேகமுறும் மருந்தெல்லாம் பேர்தான் என்ன
நளிந்திருக்கும் செப்புமுதல் அடைப்புத் தானும்
நன்றாகத் தெரிந்துரைத்து வயணம் சொல்வீர். (84)

(இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை இப்பாட்டில் யாப்பமைதி விளங்கவில்லை.)

5. பிற செய்திகள்

சுவடி ஏட்டெண் 112 இல் தொடங்குகிறது 159 வரைதான் ஏட்டெண் எழுதப்பட்டுள்ளது. அவ்வாறே 139 ஆம் பாடல் வரைதான் செய்யுள் எண் கொடுக்கப்பட்டுள்ளது.

950. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 747
ஊ. ல/183

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ உரைநடை. அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு ; 18 பக்கம் (ஏட்டெண் 31 முதல் 39 முடிய)
ஆ. நீளம் 22 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பலவித வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

கல்லடைப்புக்கு : பூநாகம் எலுமிச்சங்காயளவு அரைத்துப் பாலில் கலக்கிக் குடிக்கக் கல்லடைப்புத் தீரும்.

ஆ. முடிவு

பாசாணக்கட்டு : ஆமை கொண்டு வந்து பாசாணக் கட்டியை ஆமை வாய்க்குள் வைத்து மத்தஞ்சாறும் வஷ்த்தும் ஒன்றாய் விட்டு ஆமையைப் போட்டுச் சா ... ...

951. சோதிட நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 748
ஆ. வ/37

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. சோதிடச் செய்திகள்
இ. சோதிடம்
ஈ. செய்யுள் 27

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு ; 32 பக்கம்.
ஆ. நீளம் 23 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பெரும்பாலும் பக்கத்திற்கு 4 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சு	சே	சோ	ல	அசுவனி
லீ	லூ	லே	லோ	பரணி
ஆ	ஈ	ஊ	ஏ	கார்த்திகை
ஓ	வா	வீ	ஓ	ரோகணி

ஆ. முடிவு

ரேவதி பெட்டை யானை நிகழ்பட்சி வல்லூறு ஆகும் தூபதி கணமும் தேவர் துணிமரம் இலுப்பைப் பாலாம் பூபதி காலில் நூலாம் பொருள்மீனம் வியாழன் வாரம் மாபதி வடகி ழக்கு வாசலாம் கழுத்து நூலே.

952. சத்தியாரூடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 749

ஆ ல/184

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. சத்தியாரூடம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 234

தோற்றக் கூறுகள்

அ. 38 ஏடு ; 76 பக்கம்.

ஆ. நீளம் 33 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. 1 - 5, 13, 32, 34, 35, 43, 46 - 49 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. பழுதுற்றநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கூறுவது தூதுகுறி அறியக் கேளு
கோணமாம் அருக்கனிலே தூதன் நின்றால்
வாறான நாகமது தந்தம் ரெண்டு
அதற்கடுத்த வீடாகில் தேளே காலீ
ஏறான திங்களிலே வழலைச் சாதி
இதற்கடுத்த வீடென்னில் நீரின் பாம்பு
சேறான செவ்வாயில் தர்க்கன் ஆகும்
செம்மமாகத் தந்தகுறி மூன்று .. .. (30)

(ஈற்றுச்சீர் எழுதப்படாமல் விடுபட்டது)

ஆ. முடிவு

சாதிப்பட்டை, ஏலக்காய் எருக்கம் பாலில் ஊறப்போட்டுக் காயவைத்துக் கொண்டு, ஒரு பாக்களவு அரைத்து, இள வெந்நீரில் கொடுக்கவும். துவளை, செருப்படி, பொடுதலை, கோழியவரை, குப்பைமேனி, தும்பை, மணித்தக்காளி, சின்னி இலை இதுவெல்லாம் உள்ளி, வசம்பு கூட்டித் துவைத்துத் துவாலை இடவும் அஞ்சுநாள் துவாலை இடவும், தீரும். ஆருடம் எழுதி முற்றும்.

இ. பிற்குறிப்பு

ஆங்கீரசவருஷம் ஐப்பசி மாதம் 16 ஆம் தேதி அதிவீரராமன் பட்டினத்தில் இருக்கும் காதர் முகையத்தீன் அண்ணாவியார் மகன் நெயினா முகம்மதுலெப்பை எழுதி முகிந்தது. முற்றும்.

953. சோதிட நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 750

ஆ. வ/38

2. உள்ளீடு ; நூல் விவரம்

அ. .. ..

ஆ. சோதிடச் செய்திகள்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் சுமார் 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ 30 ஏடு ; 60 பக்கம்

ஆ. நீளம் 22·5 செ. மீ. ; அகலம் 3 செ. மீ.

இ இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பலவகை வரி.

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. முதல் ஏடு காணப்படவில்லை,

எ, குறை

அ. தொடக்கம்

..... பக நாழிகை அறியும்படி : அடி அளக்கும் போது மேட மாதமும் ஆவணி மாதமும் முன்பத்து அடி 1, நடுப்பத்து அடி ½, பிற்பத்து அடி சுன். ; இடபமும் கன்னியும் முற்பத்து அடி சுன் ; நடுப்பத்து அடி ½ ; பிற்பத்து அடி 1.

ஆ. முடிவு

சூல நாள் வெண்பா

அத்தப்உத் திரம்வடக்காம் அசுபதிஓ ணம்தெற்காம்
குற்றமாம் ரோகிணிபூ சப்குடக்காம் — உத்தமிகேள்
கேட்டை அவிட்டம் கீழ்த்திசையாம் சூலநாள்
வீட்டைவிட்டுச் செல்லாமல் விள்.

954. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 751

ஆ. ற/42

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.

ஆ. நீளம் 22 செ. மீ ; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ பக்கத்திற்கு 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பராபர புராதன புராரிகு மாரகுரு
பராகுமர வேலைவருக
கராவிற மாறவெய்த முராரிமரு காகருணை
பார்சண்முக வாலைமுருகா
சுராரிகு லம்நீறிடும் மனோகர வசீகர
சுசீகர சுவாமிகுரவா
வராகிகௌ மாரிகரு ணாகரிசு தாநகிர
வாகனவை யாஅருள்செய்வாய். (1)

ஆ. ஈறு

பூவடியும் நில்லாதி சேடசெயல் நான்போற்ற
மாவடிவே லால்ஈறிந்த மாபழனி வேலவற்கே
காவடிகொண் டாடிஇரு கண்கழியன் பாற்கருளும்
சேவடிதந்து ஆளும்ஐயா சிவகிரியின் வேலவனே. (12)

955. வருட பலன்

1. நூலகக் குறிப்புகள்

அ. 752

ஆ. வ/39

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...

ஆ. வருட பலன்

இ. சோதிடம்

ஈ உரைநடை. அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு ; 64 பக்கம்

ஆ. நீளம் 30 செ மீ. ; அகலம் 3·5 செ மீ,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பலவித வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிரபவ வருடத்துப்பலன் : பங்குனி அமாவாசை கழித்து மறுநாள் யுகாதி என்று பேர்பெற்று அது முதலாக 12 மாதத்திற்கும் பலன் இல்லை என்று சொல்வான். எப்படி என்றால் அற்பமழை பெய்யும். விளைவு அற்பமாக விளையும். ராஜா வியாதியாகி மரணமாவான். தேசத்துக்கும் வியாதி உண்டு விலை அதிகரிக்கும். ஐப்பசி, கார்த்திகையில் மழை இல்லாததால் கொட்டை, பருத்தி, உப்பு இம்மூன்றும் அற்பம். பிசரனம் குறையும். மற்ற பயிர் எல்லாம் நன்றாய் விளையும்.

ஆ. முடிவு

அட்சய வருஷ பலன் : மழை அற்பம். பூமியிலே விளைவு அற்பம். கார்நெல், சம்பா, பிசரனம், கேவர், எள், கொள்ளு, அவரை, துவரை, பயறு, கப்பு, சோளம், பருத்தி, கடுகு, தனியா, உப்பு இதுவெல்லாம் கால் பங்கு விளைவாகும். கன்றுகாலிகள் பலியாது. தானியம் பதக்கு விற்கும். தேசத்தில் சனங்கள் வணக்கமுடன் இருப்பார்கள். பின்பு தேசத்தில் பிராணிகளுக்கு எல்லாம் பழியும் நிந்தையும் ஏற்படும். கோபமும் விரோதமும் உண்டாகும். சுகமும் துக்கமும் காட்டும். தேசம் எல்லாம் செல் காலம் வரும். விசாகப்பட்டணம் குடி போகும்.

இ. பிற்குறிப்பு

இந்த 60 வருஷ பலன்கள் யாவும் எழுதியது பின்னத்துரை கிராமம் மே. தஞ்சிக் கவுண்டர் குமாரர் மே. அய்யாசாமிக் கவுண்டர் எழுதினது.

956. ஞானபூசா காரணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 753 - 1
ஆ. ட/148

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. ஞானபூசா காரணம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம்.
ஆ. நீளம் 26 செ. மீ ; அகலம் 4 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ பக்கத்திற்கு 10 வரி
உ. ஓரளவு தெளிவான கையெழுத்து.
ஊ. மிகப் பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம்

திகழ்சிவப் பிரகா சத்தில் திருந்திய வகையால் உண்மை
நிகழ்பவர் உடற்செய் கன்மம் நேரிடும் அளவும்
முன்போல்
தகவினை புரியார் துய்ப்பும் தவிர்தரா தனுஈ டுத்த
அகம்என மருவி யாவும் மாற்றுமா சாற்றல் உற்றாம். (1)

ஆ. முடிவு

எண்டொகை உரைப்பித் தோர்போல்
இயப்பினர் எண்ணி எண்ணி
மண்டிகழ் அலகு வைத்து
மற்றைய தொகைவ ழாமல்
கண்டுளம் தெளிதல் போன்முன்
கற்றசொற் பொருள்க ருத்துள்
கொண்டுஉணர் பவர்க்கு யாவும்
குறிவழி நடத்த லாமே. (30)

957. ஞான பூசைத் திருவிருத்தம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 753-2
ஆ. ட/48

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ... ...
ஆ. ஞான பூசைத் திருவிருத்தம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 18

3 தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.
ஆ. நீளம் 26 செ மீ ; அகலம் 4 செ.மீ.
இ. ஒரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10 வரி.
உ. ஓரளவு தெளிவான கையெழுத்து.
ஊ. பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்தி

அ. தொடக்கம்

பணித்தவரு ளுடன்சந்தி பண்ணி னோர்கள்
பயில்காலம் தருசந்தி பகாவன் கங்குற்
புணர்த்தியசூக் குமஉடலால் போகம் துய்த்துப்
பூதஉடற் போகத்தில் போத நாதன்
உணர்த்தியபோது உணர்ந்துஉணர்வை உயிரில்
சந்தித்து
ஒண்புனலால் உடற்சுத்தி யோங்கு வித்துக்
கணக்குடன் நீ தீட்சையின்அஞ்சு ஏழுத்தால் குழைத்து
கலந்தொருமைத் திரிமுண்டம் காட்டத் தீட்டே (1)

ஆ. முடிவு

எழுந்து அலர் தூய்ப் பணிந்திருந்து நியாதம் எய்தி
எழிற்குரவர் இறைவன் தாள் எய்த ஏத்தி
மொழிந்து அலர் கோ யிலை அணுகப் பண்ணு வித்து
முன் உதவு பாத்தியாச மனம் அர்க் f யம் முறையே
பொழிந்து அலர் தூய்ப் பீடத்தும் தண்டிலத்தும்
இறைஞ்சிப்
போக்குகவர்க் கியம்ஞான பூசை இது புனிதற்கு
அழுந்துபர குரவர் தரும் உச்சிட்டம் நுகர்தற்கு
ஆமல்ல மாலியம் என்று அறைந்தன ஆ கமமே. (18)
ஞான பூசைத் திருவிருத்தம் முற்றும்.

958. ஞான தீட்சை

1. நூலகக் குறிப்புகள்

அ. 753-3
ஆ. ட/148

2, உள்ளீடு : நூல் விவம்ம்

அ. ... ...
ஆ. ஞான தீட்சை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 8

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம்.
ஆ. நீளம் 26 செ.மீ. ; அகலம் 4 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10 வரி.
உ. ஓரளவு தெளிவான கையெழுத்து
ஊ. மிகப் பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மன்னுபல பிறவிகளின் முன்னே செய்த
வைதிகமா தவவலியான் மருவிச் சைவம்
தன்னில்வளர் சமயவிசே டாதி யான
சரியைகிரி யாயோகம் சரித்து ஞான
நன்னிலைமை பெறச்சத்தி னிபாதம் மேவி
நா ..... இறைவன் அருளால் நண்ணும்
பன்னரிய பரகுருமற் றவனை நாளும்
பணிந்துபணி செய்யவந்து பலிக்கும் அன்றே. (1)

ஆ. முடிவு

தேசுமிகும் அருட்பயன்நற் சிவப்பிரகா சத்தின்
திருந்துபொதுச் சங்கற்ப நிராகரணம் திருத்தி
ஆசில்அருள் வினாவெண்பாச் சார்பு நூலால்
அருள்எளிதில் குறிகூட ..... ஞான
பூசைதக்க காரணம்முன் புகன்றதனில் புரிந்து
புரிவிக்கச் சிவஞான போதசித்தி வழிநூல்
மாசில்சத மணிக்கோவை முன்நூல் சான்று
மருவுதிரு முறைத்திரட்டு வைத்தனம்மன்
னுயிர்க்கே. (8)

ஞான தீட்சை முற்றும்.

959. திருக்குறள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 754
ஆ. ங/13

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. திருவள்ளுவர்
ஆ. திருக்குறள்
சு. வி. 37

இ. பதினெண் கீழ்க்கணக்கு

ஈ. செய்யுள் 1180

3. தோற்றக் கூறுகள்

அ. 116 ஏடு ; 232 பக்கம்.

ஆ. நீளம் 32 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 5, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 79, 92 - 101, 127 க்கு மேல் இருக்க வேண்டியவை ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. 72 ஆம் ஏட்டிலிருந்து சுவடியின் மேற்பாகம் பழுதடைந்துள்ளது.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 493 காண்க.

ஆ. முடிவு

கண்ணில் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று. (1290)

(இது 129 ஆம் அதிகாரத்தின் ஈற்றுப்பாடல். இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

960. பஞ்சதசப் பிரகரணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 755

ஆ. ட/149

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. பஞ்சதசப்பிரகரணம்

இ. தத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 91 ஏடு ; 182 பக்கம்.

ஆ. நீளம் 24·5 செ. மீ. ; அகலம் 3·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 11, 12 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. முதல் 12 ஏடுகள் காணப்படவில்லை. 97 முதல் 103 வரையான ஏடுகள் முறிந்துள்ளன. சுமாரான நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

..... அந்தர்யாமி என்கின்றது எதனாலே ? சர்வேஸ்வரன் என்கின்றது எதனாலே ? என்கின்ற சங்கைக்கு இருவருக்கு உபாதியான மாயையினிடத்திலே சகலமும் இருக்கின்ற படியினாலே சர்வக்ஞன் என்பது. சகலர் புத்திக் குள்ளும் இருந்து ஆட்டுகின்ற படியினாலே அந்தர்யாமி என்பது.

ஆ முடிவு

தொடர் எண் : 704-1 காண்க.

961. முத்தையநாயகர் பிள்ளைத்தமிழ்

1. நூலகக் குறிப்புகள்

அ. 756

ஆ. ய/49

2. உள்ளீடு : நூல் விபரம்

அ. ... ...

ஆ. முத்தையநாயகர் பிள்ளைத்தமிழ்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

3. *தோற்றக் கூறுகள்*

அ. 16 ஏடு ; 32 பக்கம்.

ஆ. நீளம் 41 செ.மீ. ; அகலம் 3 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. *சிறப்புச் செய்திகள்*

அ. தொடக்கம்

பூமேவு புனிதகுறி வார்குல சிரோரத்ன
பொன்னம் பொருப்பை யமுதைப்
புகழ்குந்தி தேசாதி பதியைமழ சைப்பதி
புரந்தசுக் கருணை முகிலை
மாமேவு முத்துமங் கயமுத்த யேந்திரன்
வரத்தினி லுதித்த மணியை
மகுடவர்த்த னர்கள் தொழு கருணைகிரி முத்தய
வரோத யனையினி தருளவே
பாமேவு நான்மறைகள் தேடியுங் காணாப்
பரப்பிரம மான வொன்றைப்
பகருதற் கரிதான ஞான ஆனந்தப்
பயோததியை மௌன வைப்பைத்
தேமேவும் அரிபிரமர் சிந்தைக்கு மெட்டிடாச்
சிற்பரா னந்த வெளியைத்
திகழ்கின்ற வேதாந்த சித்தாந்த புராண
சிரோமணியை யஞ்ச லிப்பாம்.

ஆ. முடிவு

சிறுபறைப் பருவம்
வான்குலவு புரிசைமணி வாயினீங் கா தொலீ
வழங்கு பேரிகை முழக்க

வன்கவுட் குழிதிறந் துறுகலுழி பாய்வபோல்
வடியு மதகரி முழக்க
மான்குலவு குவளைவிழி கோங்கரும் பனயமுலை
மாத ரின்னிசை முழக்க
மனவிரைவி லுங்கடிய சினவேக முற்றிலகி
வருக லினமா முழக்க
கான்குலவு செம்முகைய் விழ்த்துநற வூற்றியறு
காற்குழாத் தொனிமு ழக்கக்
கனபதி யானபூ பால்ர் பராக்கெனக்
கருது கட்டிய முழக்க
....
(இதற்கு மேல் எழுதப் பெறவில்லை)

5. *பிற செய்திகள்*

இந்நூலில் ஒரு பருவத்திற்கு ஆறு பாடல்களே உள.

962. வைத்திய காண்டம்

1. *நூலகக் குறிப்புகள்*

அ. 757
ஆ. ல/185

2. *உள்ளீடு : நூல் விவரம்*

அ. .. ..
ஆ. வைத்திய காண்டம் 300
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 300

3. *தோற்றக் கூறுகள்*

அ. 49 ஏடு ; 98 பக்கம்.
ஆ. நீளம் 36·5 செ. மீ ; அகலம் 3 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. முதல் ஏடு இல்லை 4 ஆம் ஏடு முறிந்துள்ளது. சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காணவே சொல்லிவிட்டேன் இந்நூல் பாரு
கருணையுள்ள பெரியோர்கள் சித்தர்க்கு ஆகும்
தோணவே இந்நூலை வெளியில் போட்டால்
தொலையாத பாவம்வந்து நரகில் வீழ்வாய்
பூணவே இந்நூல்தான் உலகில் கிட்டா
பொன்கோடி ஈந்தாலும் வெளியில் சொல்லார்
ஆணவமாய்ப் பாடிவிட்டேன் இந்த நூலை
ஆருக்கும் தெரியாமல் அடக்கிப் போடே. (6)

ஆ. முடிவு

சிவயோகிக்கு ஆகும்என இந்திர சாலம்
செப்பினேன் சிவன்ஆணை நூல் ஈயாதே
தவயோகம் கிடையாது சலிப்பர் சித்தர்
தலைவெடிக்கும் சத்தியமே தரணி மீது
நவகோடிச் சித்தர்களும் அறிய மாட்டார்
நாதவிந்து வழலைமுறை தீர்ந்து சொன்னேன்
அவயோகிக்கு ஆகாது வெளியே போட்டு
அலையாதே வயித்தியகாண்டம்தான் முற்றே (300)

இ. பிற்குறிப்பு

"புத்தளம் அ. ச. நெயினா மரைக்காயர் முகம்மது காசிம் மரைக்காயன் தனக்கு எழுதியது. சொற் குற்றம் பொறுக்க."

963. அகத்தியர் இரண்டாம் காண்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 758

ஆ. ல/186

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் இரண்டாம் காண்டம் 300

இ. மருத்துவம்

ஈ செய்யுள் 167

3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு ; 54 பக்கம், (ஏட்டெண் 50 முதல் 76 முடிய)

ஆ. நீளம் 36·5 செ.மீ; அகலம் 3செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 7வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ 76 ஆம் ஏட்டிற்கு மேல் இருக்கவேண்டியவை காணப்பட வில்லை. பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தானமுத்தி வைத்தியமுதல் காண்டத் துள்ளே
சகலமருந்து ஆனதெல்லாம் தகுதி யாக
வானமுத்தி பெற்றமுதி யோர்கள் காப்பா
மகத்தான வாதவித்தை இனிமேல் சொல்ல
மானமுத்த குமரகுரு பரனார் பாதம்
மனுயெடுத்து இனியுரைப்பேன் ஆதி யந்த
ஞானமுத்தி அருந்தவத்தோர் துரியா தீதம்
நாதவிந்து மூண்டான பூரணமே கேளே. (1)

ஆ. முடிவு

விபரமென ஒவ்வொண்டிற் கவர்கள் கோடி
விரைதின்றால் சாவில்லை வேதை வேதை
விபரமென ஒருதுள்ளிச் சார்பத்தும் மாற்று
ஏிட்டிடவே நவலோகம் ஏல்லாம் தங்கம்

விபரமென விஷம்எல்லாம் வேரைக் கண்டால்
விரைந்தோடும் அந்தரத்துக்கு அப்பால் தானே
விபரமென விந்துகட்டும் பூத்தின் றாக்கால்
விண்ணாணம் ரொம்பவடா மூலி பாரே. (167)

964. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 759
ஆ. ல/187

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 34 ஏடு ; 68 பக்கம்.
ஆ. நீளம் 15 செ. மீ. ; அகலம் 2·5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பலவித வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அக்கினி மந்தத்துக்குச் சூரணம் :

சுக்கு, மிளகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், சோம்பு, சீரகம், வால்மிளகு, தேற்றாவிரை, தாளிசப்பத்திரி, வெற்பாலை அரிசி, கார்போக அரிசி, கிராம்பு, அதிமதுரம், செருலவங்கப்பட்டை,

கோஷ்டம், அதிவிடையம், குங்குமப்பூ, ஆலவிரை, அத்திவிரை, அரசவிரை, புரசவிரை, நெல்லிவிரை, ஆவாரைஅரிசி ஆக வகைக்குப் பலம் 1. சர்க்கரை சமன்.

ஆ. முடிவு

மூலத்துக்கு :

காடிக்காரம் விராகன் 1, துருசிப்பஸ்ப்பம் விராகன் 1, கோதுமை அரிசி விராகன் 1. இது மூன்றும் கோழி முட்டை வெள்ளைக் கரு விட்டு அரைக்கவும்.

965. வால்மீகர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 760-1

ஆ. ட/150

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வால்மீகர்

ஆ. வால்மீகர் சூத்திரம் 16

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 17

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம்.

ஆ. நீளம் 21 செ.மீ. ; அகலம் 3·5 செ.மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மிகச் சிதைவுற்ற நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இருள்வெளியாய் நிற்றசிவன் பாதம் போற்றி
எழுத்தினுட விபரமதை விரித்துச் சொல்வேன்

அருவுருவாய் நின்றதுவே எழுத்து அது ஆகும்
ஆதியந்தம் அண்ட பிண்டம் அதுவே ஆகும்
திருவுருவாய் ரவிமதியாய் நின்ற ரூபம்
சிவசக்தி திருமாலின் ரூபம் ஆகும்
வரும்உருவே சிவசத்தி வடிவு அது ஆகும்
வந்ததிலும் போனதிலும் மனத்தை வையே. (1)

ஆ. முடிவு

தான .. .. வேணும்
தன்னுக்குள் தானும்நின்ற இடமும் வேணும்
வானவனாய் நின்றவ... ..... சித்தி
வானுக்குள் மனமிருக்கும் தீபோல் காணும்
தேனவனா ....
சிரசப்பா உடலுக்குப் பதியே ஆகும்
கோனவனாய் இருக்கவென்று குறிக்கு ... ...
குவலயத்தில் பதினாறும் குருதான் முற்றே (71)
முற்றும்.

966. சட்டைமுனி சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 760-?
ஆ. ட/150

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சட்டை முனி
ஆ. சட்டை முனி சூத்திரம் 16
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு ; 8 பக்கம். (ஏட்டெண் 5 முதல் 8 வரை)
ஆ. நீளம் 21 செ. மீ. ; அகலம் 3·5 செ மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகப்பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்பு செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமே தெய்வமென்று உரைத்தீர் அய்யா
பூரணத்தை இன்னதென்று ....
காரணத்தைச் சொல்லுகிறேன் நினைவாய்க் கேளும்
கலையான பதினாறும் பூரணமே ஆகும்
மாரணமாய் உலகத்தோர் மதிம யங்கி
மதிகெட்டுப் பூரணத்தை இழந்தார் ஐயோ
வாரணத்தில் மனதைவைத்துப் பூர(ண)த்தைக் காக்கில்
வாசியென்ற சிவயோக வாழ்க்கை ஆச்சே. (1)

ஆ. முடிவு

பிரித்துரைத்தேன் சூத்திரம்ஈர் எட்டுக் குள்ளே
பித்தர்களே நன்றாகத் தெளிந்து பார்க்கில்
விரித்துரைத்த நூலினுட மார்க்கம் தோன்றும்
வில்லாதே இந்தநூல் இருக்கு தென்று
கருத்துடனே அறிந்துகொள்ளு கலைமா றாதே
காரியத்தை நினைவாலே கருதிக் கொள்ளு
சுருதிசொன்ன செய்தியெல்லாம் சுருக்கிச் சொன்னேன்
சூத்திரம்போல் பதினாறும் தொகுத்த முற்றே. (16)

முற்றிற்று.

967. ரோமரிஷி சுருக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 760-3
ஆ. ட/150

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ரோமரிஷி
ஆ. ரோமரிஷி சுருக்கம் 16
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு ; 10 பக்கம். (ஏட்டெண் 9 முதல் 13 வரை)
ஆ. நீளம் 21 செ மீ. ; அகலம் 3·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகப் பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தந்திமுகத் தோன்சதங்கைத் தாளே காப்பு
சகலபொரு ளாய்நிறைத்த தாயார் காப்பு
முந்திஉரைத் தேன்முதல்நூல் ஐம்ப துக்குள்
மூலமுதல் திரிகோண வாசி வாதம்
சந்திரன் போல் அறிவுடைய மக்க ளுக்குத்
தொடுகுறியும் இடுகுறியும் நிலமும் தோணும்
இந்தஉரை பதினாறும் சொன்னேன் ரோம
ரிஷிநூலுக்கு எதிர்நூல்ஒன் றுஇல்லை தானே. (1)

ஆ. முடிவு

ஆகாதோ வேளையிலே கண்டால் இப்பி
ஆக ..... விந்துவல்லோ முத்தாய்ப் போச்சு
சாகாதோ சூயின்னீரில் ஆனைக் கவ்வு
சத்தியு ..... சூடனங்கே சற்றே பட்டால்

வேகாதோ இனம்இனமும் சேர்ந்த தாலே
வேனக்கி... .....ர்ப்பநீர் விட்டோர்க் கெல்லாம்
போகாதோ குருமுடிக்கும் பாகம் எல்லாம்
பூட்டறிந்து பார்த்தவர்க்குப் பொருள்தான்
முற்றே. (16)

முற்றும்.

968. ரோமரிஷி சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 760-4
ஆ. ய/150

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ரோமரிஷி
ஆ. ரோமரிஷி சூத்திரம் 10
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு ; 6 பக்கம். (ஏட்டெண் 14 முதல் 16 வரை)
ஆ. நீளம் 21 செ மீ. ; அகலம் 3·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. பக்கத்திற்கு 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகச் சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பத்தொருகை விநாயகன்தன் பாதம் காப்பு
பரமதிரு வல்லபையாள் பாதம் காப்பு
சித்தமுடன் மனப்தேற்றும் சிவமே காப்பு
சீரான மாலயனும் ருத்திரனும் காப்பு

நித்தமாய் உதித்தெழுந்த வட்டம் காப்பு
நிட்களமாய் நின்றுஅறியும் நினைவே காப்பு
கற்றறிந்த பெரியோர்கள் பாதம் காப்பு
கதிர்முனையும் பிங்கலையும் இடகலையும் காப்பு. (1)

ஆ முடிவு

பாரப்பா வஸ்துக்கள் பார்க்கும் போது
பராபரையாள் ரூபமப்பா அதிலே காணும்
சீரப்பா அங்கென்று அதிலே மூட்டு
சித்தாந்தம் வேதாந்தம் அதிலே காணும்
ஆரப்பா இப்படிஎன்று அறியப் போறார்
ஆகாசக் கயிலைவரை ஏறி னாலும்
ஊரப்பா தோணாது உலகத் தோர்க்கு
உத்தமனாய்ப் பிறப்பனே உண்மை பாரே. (10)

முற்றிற்று.

969. அகத்தியர் ஞானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 760-5
ஆ. ட/150

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞானம் 8
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 8

3.. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு ; 4 பக்கம். (ஏட்டெண்கள் 17, 18.)
ஆ. நீளம் 21 செ.மீ. ; அகலம் 3·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகப் பழுதுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

சோதியென்னும் பராபரையாள் தேவி பாதம்
சொற்பெரிய நாதாக்கள் பாதம் போற்றி
நீதியென்னன ஆண்டநந்தி பாதம் போற்றி
